வரு.75 இல. 15 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

24 பக்கங்கள் 100/-

2023 ஏப்ரல் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

April 09 Sunday, 2023



இலவச இணைப்பு



05 பொருளாதார முன்னேற்றமா அல்லது தேர்தலா அவசியம்?



13 இலங்கையைத் தாக்கும் இன்புளுவென்ஸா H3N2



20 துருக்கியின் புவிநடுக்க அனர்த்தங்கள்



24 இலங்கைக்கு மீண்டுமொரு தொடர் தோல்வி





## இருளை அகற்றி நம்பிக்கை தரும் உன்னதமான தினம்

### உயிர்த்த ஞாயிறு தினச் செய்தியில் ஜனாதிபதி



நாடு எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் சமாளிக்க உறுதியான மனநிலையையும், ஆன்மீக பலத்தையும் பிரதிபலிக்கும் ஒரு ஆசீர்வாதமாக உயிர்த்த ஞாயிறு அமைய வேண்டுமென நான் இன்றைய நாளில் பிரார்த்தனை செய்கிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உயிர்த்த ஞாயிறு தினச் செய்தியில் தெரிவித்துள்ளார். நாட்டைக் கட்டியெழுப்பும், 06

## A/L விடைத்தாள் திருத்தும் பணியில் பேராசிரியர்கள்

### கல்வி அமைச்சு நம்பிக்கை

அனைத்து அரச ஊழியர்களுக்காகவும் பொதுவாக விதிக்கப்பட்டிருக்கும் வரி விடயம் தவிர, ஏனைய கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கல்வி அமைச்சும், நிதி அமைச்சும் இணக்கப்பாட்டுடன் மாற்று தீர்வு வழங்கி இருப்பதால் பல்கலைக்கழக பேராசிரியர் சங்கமும் உயர்தர மாணவரின் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் இணைந்துகொள்வதற்காக விரைவாக பதில் வழங்கும் என்பது இலட்சக்கணக்கான மாணவர்கள், பெற்றோர் மற்றும் கல்வி அமைச்சின் எதிர்பார்ப்பாகுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. 06

## சோபகிருது வருடப்பிறப்பு

● வாக்கிய பஞ்சாங்கத்தின் படி

புது வருடம் பிறக்கும் நேரம்: சித்திரை முதலாம் நாள் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.03க்கு

● **விஷு புண்ணிய காலம்:**
வெள்ளிக்கிழமை முற்பகல் 10.03 இல் இருந்து பிற்பகல் 06.03 வரை

● **மருத்து நீர் வைத்தல்**



பஞ்சாங்கங்களில் குறிப்பிட்ட நேர இடைவெளிக்கு அமைய, சிரசில் கொன்றை இலையும், காலில் புன்னை இலையும் வைத்து ஸ்தானம் செய்க.

● **புத்தாடை**
வாக்கிய பஞ்சாங்கத்தின்படி வெள்ளை நிறம் உள்ள பட்டாடை ஆயினும் வெள்ளை கரை அமைந்த புதிய பட்டாடை ஆயினும் அணிய வேண்டும்

● **புது வருட ஆபரணம்**
வாக்கிய பஞ்சாங்கத்தின் படி முத்து வைரம் இழைத்த ஆபரணம்

● **கைவிசேடம்**
வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 (15.04. 2023) சனிக்கிழமை காலை 07.52 முதல் 09.00 மணி வரை சித்திரை 3 (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 07.49 முதல் 9.48 வரை

● **புதுக்கணக்கு**
வாக்கியத்தின்படி சித்திரை 28 (11.05.2023) வியாழக்கிழமை பகல் 10.24 முதல் நண்பகல் 12.27 வரை

● திருக்கணித பஞ்சாங்கப்படி

சித்திரை மாதம் முதலாம் நாள் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02 .59க்கு

● **விஷு புண்ணிய காலம்:**
வெள்ளிக்கிழமை முற்பகல் 10.59 இல் இருந்து மாலை 06.59 வரை

● **மருத்து நீர் தேய்த்தல்**



விஷு புண்ணிய காலத்தில் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்ட நேர இடைவேளையில் சிரசில் கொன்றை இலையும், காலில் புன்னை இலையும் வைத்து ஸ்தானம் செய்க.

● **புத்தாடை**
வெண்ணிற பட்டாடை ஆயினும் அல்லது மஞ்சள் கரை கொண்ட வெண்ணிற ஆடை அணிவது நல்லது. 06

சட்டத்துக்கு முரணான செயற்பாடு; உறுப்பினர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதில்லை

# மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவி மீது குற்றச்சாட்டு



### ஜனாதிபதி, பிரதமர், மற்றும் நீதி அமைச்சருக்கு கடிதம் மூலம் முறைப்பாடு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி ஓய்வு பெற்ற நீதவான் ரோஹினி மாரசிங்கவுடன் கடமையாற்ற முடியாதென ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் மூவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதி அமைச்சருக்கு கடிதம் மூலம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான கலாநிதி விஜித்த நாணயக்கார, வைத்திய கலாநிதி நிமால் கருணாசிறி, வண. களுபஹன பியரதன தேரர் ஆகியோரே இவ்வாறு கடிதம் மூலம் இந்த முறைப்பாட்டை தெரிவித்துள்ளனர். 06

● உடனடியாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கோரிக்கை

## எங்கள் கருத்து...

### இன ஐக்கியம் வலுப்பெறுவதற்கு ஈஸ்டர் திருநாள் வழிவகுக்கட்டும்!

உலகெங்கும் வாழ்கின்ற கிறிஸ்தவ மக்கள், இயேசுபிரான் உயிர்த்தெழுந்த தினமான ஈஸ்டர் பண்டிகையை இன்று கொண்டாடுகின்றனர். நியாயமும், சத்தியமும் என்றைக்கும் மரிப்பதில்லை என்பதை எடுத்துக்காட்டும் விதமாகவே இயேசு பிரான் உயிர்த்தெழுந்த தினம் உலகெங்கும் நினைவுகூரப்படுகின்றது. உயிர்த்தெழுதல் என்பது மனித இனத்துக்குக் கிடைத்த கடவுளின் அன்பளிப்பு என்பதே கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கை ஆகும்.

எந்தக் குற்றமும் இழைக்காத நிலையிலும், கல்வாரி மலையில் இயேசு பிரானை அன்று சிலுவையில் அறைந்தனர். அந்த துன்பநிலையிலும் தனக்குத் தண்டனை அளித்தவர்களை மன்னிக்குமாறு வேண்டி இறைவனிடம் மன்றாடினார் இயேசு பிரான். பாவம் புரிந்தோரையும் மன்னிக்கின்ற இத்தகைய இறைகுணம் மனிதனுக்கும் வரவேண்டும் என்பதையே கிறிஸ்தவம் உலக மக்களுக்கெல்லாம் போதிக்கின்றது.

சிலுவையில் அறையப்பட்டு மரணித்த இயேசுபிரான் மீண்டும் உயிர்த்தெழுந்த வரவுக்காக உபவாசமிருந்து கொண்டாடும் பண்டிகையாக ஈஸ்டர் திருநாள் அமைந்துள்ளது. 06



## ரணிலின் செயற்பாடுகள் மிக மிக சிறப்பானவை

மக்களால் சான்றளிப்பு என பௌஸி புகழாரம் 06

விடுதலைப்புலிகளின் மீள் எழுச்சிக்கு உதவி வருவதுடன்

## இலங்கை–இந்தியா இடையே சட்டவிரோத ஆயுத கடத்தல்

### சென்னையில் ஒருவர் அதிரடியாக கைது



இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே சட்ட விரோத போதைப்பொருள், ஆயுதக்கடத்தல் என்பவற்றில் ஈடுபட்டதாகவும், விடுதலைப்புலிகளின் மீள் எழுச்சிக்கு பாடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டு சென்னையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 06

## இலஞ்சம் வாங்க மறுத்த பொலிஸ் உத்தியோகத்தர்!

### யாழ் DIG யினால் சன்மானம்



சாவகச்சேரியில் குற்றச் செயலில் ஈடுபட்ட ஒருவர் இலஞ்சமாக கொடுத்த 50,000 ரூபாவை பெற மறுத்து தன் கடமையை சரிவர புரிந்த சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தருக்கு சன்மானம் 06



கொழும்பு–காங்கேசன்துறை

## நேரடி ரயில் சேவை ஜனவரியில் ஆரம்பம்

06



## பருப்புக் கறிக்குள் பூரான்; பேசாலையில் சம்பவம்

06

Your Bank Is Wherever You Are

ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 06-11 |
| --- | --- |
| ஸஹர் முடிவு | 04.35 |
| ஸுபஹ் | 04.50 |
| சூரிய உதயம் | 06.07 |
| ழுஹர் | 12.14 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

Call 0117 756 756
www.amanabank.lk
Amãna Bank
It's Your Bank

அதிதுரித
Dialog HOME BROADBAND
வீட்டிற்கு Wi-Fi ரீலோட்
வீட்டிற்கு Wi-Fi RELOAD
இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-
மாதத்திற்கு 20GB ரூ.540/-
2 வாரங்களுக்கு 10GB ரூ.299/-
செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.



# பத்ர் யுத்தம் தரும் படிப்பினைகள்

**(ரமழான் 17 பத்ர் நினைவு தினமாகும். அதன் நிமித்தம் இன்று இக்கட்டுரை பிரசுரமாகிறது)**

உலக மக்களுக்கான வழிகாட்டியாக அல் குர்ஆன் இந்த ரமழான் மாதத்திலேயே இறக்கியருளப்பட்டது. மக்காவில் பிறந்த முஹம்மத் நபி (ஸல்) என்பவரை இறைவன் தனது தூதராகத் தேர்ந்தெடுத்து அவருக்கு இந்த வழிகாட்டல்களை வழங்கினான். அவர் இதனை கட்டம் கட்டமாக மக்களுக்கு நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள்.

முஹம்மத் நபியவர்கள் தாம் கொண்டுவந்த தூதை அறியாமையில் மூழ்கியிருந்த ஒரு சமூகத்தின் மீதே முன்வைக்க வேண்டியேற்பட்டது. இச்சமூகம் குறித்து தனது "முஹம்மத்" என்ற நூலில் மக்ஸிம் ரொடின்சன் குறிப்பிடுகையில், "பாலைவனத்தில் நிலவிய எழுதப்படாத சட்டங்களின் அடிப்படையில் மனிதக் கொலைக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. அவர்கள் சட்டம், ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கவில்லை. காவல்துறையின் துணையுடன் சட்டங்களை அமுல்படுத்தக்கூடிய எந்த அரசும் அங்கிருக்கவில்லை. இரத்தத்துக்கு இரத்தம், உயிருக்கு உயிர் என்பதே அவர்களது தாரக மந்திரமாக இருந்தது. பழிவாங்குதல் என்பது அச்சமூகத்தைக் கட்டியெழுப்பிய தூண்களில் ஒன்றாகவிருந்தது" எனக் குறிப்பிடுகிறார்.

அறியாமையும் மடமையுமே அவர்களை ஆட்கொண்டிருந்தது. மாவினால் சிலைகள் செய்து அதனையே கடவுளாகவும் வணங்கினார்கள். பசி வரும் போது அதனையே சமைத்தும் சாப்பிடுவார்கள். பெண்கள் வெறும் போகப் பொருட்களாகவே பார்க்கப்பட்டார்கள். பலவீனர்களை அடிமைப்படுத்தி அவர்களை விலங்கிட்டு மிருகங்களை விடவும் இழிவாக நடத்தினார்கள். குல, கோத்திர வெறிகளே அவர்களை ஆட்கொண்டிருந்தன. எதிரிக் கோத்திரத்தவரின் மண்டையோட்டைப் பிளந்து அதிலே இரத்தம் குடிக்குமளவுக்கு அவர்களது பகைமை உணர்வு உச்சம் தொட்டிருந்தது. இது தொடர்பில் வரலாற்றாய்வாளர் வில்லியம் மூர் விரிவாக எழுதியுள்ளார்.

இச்சமூகத்தின் மத்தியில் நபியவர்கள் இறைவனை அறிமுகப்படுத்திய போது அவர்களால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. பெண்களுக்கும் அடிமைகளுக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்று நபியவர்கள் சொன்னபோது அது தங்களது ஆதிபத்தியத்துக்கு எதிரானதாக அவர்கள் கண்டார்கள். கொலையையும் மதுவையும் பாவமான செயல்களாக நபியவர்கள் எடுத்துக் காட்டியபோது தமது ஆசாபாசங்களில் தலையிடுவதாகக் கூறி நபியையும் நபிகளார் கொண்டு வந்த தூதையும் எதிர்க்கத் தொடங்கினார்கள்.

விளைவாக நபியையும் நபியை ஏற்றுக்கொண்டவர்களையும் துன்புறுத்தத் தொடங்கினார்கள். நபிகளார் தொழுகைக்காகச் செல்லும் போது ஒட்டகத்தின் அழுகிய குடலைக் கொண்டு வந்து நபிகளின் மீது கொட்டினார்கள். பைத்தியக்காரன், சூனியக்காரன் என்றெல்லாம் பெயர் சூட்டி சிறுவர்களை ஏவி கற்களால் அடித்தார்கள். நபியவர்களது தூதை ஏற்றுக் கொண்ட காரணத்தால் அவர்களது தோழர்களைச் சித்திரவதை செய்தார்கள். பிலால் எனும் கறுப்பின நபித்தோழரை முதுகு பிளக்கும் வரை சவுக்கினால் அடித்து பின்னர் சுடும் பாலைவன மண்ணில் கிடத்தி அவருக்கு மேல் பாறாங்கற்களை ஏற்றி வைத்தார்கள். சுமையா எனும் பெண்மணியின் பெண்ணுறுப்பில் ஈட்டியை ஏற்றிக் கொன்றார்கள். இன்னும் சிலர் இரு கால்களையும் இரு ஒட்டகங்களில் கட்டி இரு கூறாகக் கிழிக்கப்பட்டார்கள். மற்றுமொரு நபித்தோழரை உயிருடன் சிலுவையிலே அறைந்து பறவைகளுக்கு உணவாக்கினார்கள். நபியவர்களைத் தனிமைப்படுத்தும் நோக்கில் அவரையும் அவர் சார்ந்த பனூஹாஷிம் கோத்திரத்தினர் அனைவரையும் அபூதாலிப் பள்ளத்தாக்கிலே முடக்கி பொருளாதாரத் தடை விதித்தார்கள். யாரும் இவர்களுடன் பேசவோ தொடர்பு கொள்ளவோ கூடாது எனக் கட்டளை பிறப்பித்தார்கள். மூன்று வருடங்கள் தொடர்ந்த வரலாற்றில் பதியப்பட்ட இந்தப் பொருளாதாரத் தடையின் போது அவர்கள் உண்ண வழியின்றி காய்ந்த சருகுகளை தண்ணீரில் ஊற விட்டு சாப்பிடும் நிலைக்கு ஆளானார்கள். இறுதியாக வரலாற்றில் எழுதப்பட்ட இனச் சுத்திகரிப்பு நபியவர்களது தூதை ஏற்றுக்கொண்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டது. சித்திரவதை தாங்க முடியாமல் அவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு மதீனாவுக்கு இடம் பெயர்ந்தார்கள்.

இத்தனையையும் அவர்கள் பொறுமையுடன் சகித்துக் கொண்டார்களே அன்றி எதிர்நடவடிக்கைகளில் இறங்கவில்லை. நபியவர்களிடம் அவர்கள் தங்களது கஷ்டங்களை முறையிட்ட போதெல்லாம் பொறுமையாயிருங்கள் என்பதே அவர்களுக்கு வழங்கப்பட்ட இறை வழிகாட்டலாக இருந்தது. மதீனாவுக்குச் சென்ற பின்னர் நபியவர்களும் அவர்களது தூதை ஏற்றுக்கொண்டவர்களும் பலம் பெற்று வந்த நிலையில் அங்கும் மதீனாவாசிகளை இவர்களுக்கு எதிராகத் தூண்டும் நடவடிக்கைகள் நடந்தேறின. இதனைத் தொடரவிடுவது தமது இருப்புக்கே அச்சுறுத்தலாக அமையும் எனக் கருதிய நபிகளாரின் சமூகம், இக்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான அவகாசத்தை எதிர்பார்த்திருந்தனர். இந்த நிலையிலேயே இறைவன், இவர்களுக்கு போராடுவதற்கான அனுமதியை வழங்கினான்.

"அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் அவர்களுக்கு எதிர்த்துப் போரிடுவதற்கு அனுமதிக்கப்படுகிறது" எனக் கூறிய இறைவசனம், "இவர்கள் நியாயமின்றித் தம் வீடுகளை விட்டும் வெளியேற்றப்பட்டார்கள்" எனவும் கூறுகிறது. போராடுவதிலுள்ள நியாயங்களைப் பற்றி அதே வசனத்தின் தொடர்பில் இறைவன் குறிப்பிடும்போது, "மனிதர்களில் சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் துறவிகளின் ஆசிரமங்களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் யூதர்களின் ஆலயங்களும் பள்ளிவாசல்களும் அழிக்கப்பட்டிருக்கும்" எனக் குறிப்பிடுகிறான். (அல்குர்ஆன் 22:39 41)

இவ்வாறு அனுமதி கிடைத்ததனைத் தொடர்ந்து நபியவர்களும் தோழர்களும் தம்மை எதிர்ப்பதில் முன்னின்ற அபூஸூபியானுடைய வியாபாரக் கூட்டத்தைத் தாக்குவதற்கு திட்டமிட்டார்கள். இதனை அறிந்த அபூஸூபியான் போர்க் கவசமிட்ட 600 வீரர்களுட்பட 1000 பேர் கொண்ட படையை தயார் செய்தான். இவர்கள் கவசமிடப்பட்ட 100 குதிரைகளுட்பட 700 கோவேறு கழுதைகளுடன் போருக்குத் தயாராக வந்தனர். நபியவர்களுடன் 313 பேர் மாத்திரமே இருந்தனர். இவர்கள் 70 ஒட்டகங்களிலும் ஓரிரு குதிரைகளும் மாறி மாறிப் பயணித்து பத்ர் எனும் யுத்த களத்தை வந்து சேர்ந்தனர்.

குறைந்த எண்ணிக்கையாயினும் தலைமை மீதும் தாம் ஏற்றுக் கொண்ட கொள்கை மீதும் அதீத நம்பிக்கை வைத்துள்ள படையினரின் துணையுடன் நபியவர்கள் பத்ர் யுத்தத்தை எதிர்கொண்டார்கள். கடுமையான யுத்தம் நடந்தது. நபியவர்களை எதிர்ப்பதில் முன்னின்ற பல தலைவர்கள் உட்பட எதிர்த்தரப்பில் 70 பேர் கொல்லப்பட்டார்கள். 70 பேர் போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து எதிர்த்தரப்பு பின்வாங்க நபியவர்களின் படை போரிலே வெற்றி கண்டது. இந்த யுத்தம் ஹிஜ்ரி 02 ஆம் ஆண்டு ரமழான் மாதம் 17 ஆம் நாளில் நடைபெற்றது. இதுவே இஸ்லாம் கண்ட முதலாவது யுத்தம். இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட முன்னர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இறைவனிடம் அதிகமதிகம் பிரார்த்தனை செய்தார்கள். அதன் ஊடாக இறையுதவியையும் யுத்தத்தின்போது பெற்றுக்கொண்டார்கள்.

இந்த யுத்தம் பல விடயங்களை நமக்குச் சொல்லித் தருகின்றது. முதலில் முஸ்லிம்கள் தமது கொள்கைச் சுதந்திரத்தை இழந்திருந்தனர். தான் விரும்பிய கொள்கையை ஏற்று வாழ்வது அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த நிலையிலேயே தமது கொள்கைச் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முஸ்லிம்கள் யுத்தம் செய்தார்கள். தமது கொள்கைச் சுதந்திரத்தைப் பறிப்பவர்களைப் பலவீனப்படுத்த வேண்டியது அவர்களது பாதுகாப்பான இருப்புக்குத் தேவையாக இருந்தது.

இந்த யுத்தத்துக்கான அனுமதியை வழங்கிய அல்குர்ஆன் மனிதர்களில் சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் யூதர்களின் ஆலயங்களும் பள்ளிவாசல்களும் அழிக்கப்பட்டிருக்கும் எனக் கூறுவதன் மூலம் மக்களை நேர்வழிப்படுத்த வந்த மதங்கள் அனைத்துமே மக்களை வழிகேட்டில் அழைத்துச் செல்லும் சக்திகளிடம் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் யுத்தம் அனுமதிக்கப்பட்டதன் நோக்கங்களில் ஒன்றாகக் குறிப்பிடுகிறது. முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த அத்துமீறல்களையும் அநியாயங்களையும் தடுத்து நிறுத்தும் நியாயமான நோக்கம் இந்த யுத்தம் அனுமதிக்கப்பட்டதன் பின்னால் இருப்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது. இனச் சுத்திகரிப்பு, பொருளாதாரத் தடை என நாகரிக உலகம் அநியாயமானதெனக் கருதும் அனைத்துமே கட்டவிழ்த்து விடப்பட்டதன் பின்னரும் ஒடுக்கப்பட்ட சமூகமொன்று எதிர்நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பது அவர்களை அழிவுக்குள்ளாக்கிவிடும் என்பதால் அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் போராடுவது இயல்பானது என்பதையும் இந்த யுத்தம் உணர்த்துகிறது. ரமழானில் நோன்பிருந்து பசியாலும் தாகத்தாலும் வாடிய போதிலும் யுத்தத்தில் கடுமையாகப் போராடி வெற்றி பெற்றமையானது உள வலிமை என்பது உடல் வலிமையையும் தாண்டிய சக்தி என்பதையும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

**பியாஸ் முஹம்மத்**






# பேராசான் சோ.சந்திரசேகரம்; இலங்கையின் கல்வித் துறையில் ஒரு வரலாற்று நாயகன்



கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக மலையகக் கல்விக்கும் தேசிய கல்வி முறைமைக்கும் சலிக்காது, களைக்காது, ஓய்வு ஒழிச்சலின்றி தொடர்ந்தேர்ச்சியாக பணிபுரிந்த பெருமக்களில் முதன்மையானவர்களில் ஒருவர் மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் மலையகத்தின் முதலாவது கல்வியியல் பேராசிரியராவார். தனது ஆரம்பக்கல்வியை பதுளை ஊவாக் கல்லூரியிலும், இடை நிலைக் கல்வியை யாழ் மகாஜனாக் கல்லூரியிலும் பெற்று பேராதனைப் பல்கலைக் கழகம் புகுந்த பேராசிரியர் இலங்கையின் முதல் கல்விப் பேராசிரியர் ஜே.ஈ.ஜெயசூரியவின் உழைப்பில் உருவான முதல் கல்விமாணிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த முதல் தொகுதி மாணவர்களில் ஒருவராகவும் விளங்கியவர். இன்றைய எமது நினைவுப் பேருரையாளர் பேராசிரியர் ஹுசைன்மியா அடுத்த தொகுதி மாணவர்களில் ஒருவராவார். "உலகிலேயே கல்வியைத் தமிழில் கற்ற முதலாமவர் நான்தான்" என பேராசிரியர் நகைச்சுவையாகக் கூறுவதுண்டு.

கல்வியியலை பேராசிரியர்கள் என்.முத்துலிங்கம், ப.சந்திரசேகரம், கலாநிதி சுசீலா நைல்ஸ் ஆகியோரிடம் கற்றுத்தேர்ந்த பேராசிரியர், தமிழ், பொருளியல், வரலாறு போன்றவற்றை தமிழுலகில் புகழ்பெற்ற பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், செல்வநாயகம், தனஞ்ஜெயராஜசிங்கம், வேலுப்பிள்ளை, இந்திரபாலா, கணபதிப்பிள்ளை, பத்மநாதன், பாலகிருஷ்ணன், சின்னத்தம்பி, அமீர்அலி முதலான பெருமக்களிடம் பாடங்கற்கும் பேறுபெற்றவர். சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் தன்னை உருவாக்கிய பெருமக்களை மிகவும் நன்றியுடனும் பெருமையுடனும் வாஞ்சையுடனும் கூறிக்கொள்வது பேராசிரியரின் வழமையாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பின்னர் சிறிது காலம் தற்காலிக விரிவுரையாளராக பணியாற்றிய பேராசிரியர் மத்தியகல்வி மொழிபெயர்ப்பாளர், அரபா முஸ்லிம் வித்தியாலய ஆசிரியர், கோப்பாய் ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர் எனப் பல்வேறு பணிகளைப் புரிந்த பின்னர் 1975இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறையில் உதவி விரிவுரையாளராகப் பதவியேற்று சிரேஷ்ட விரிவுரையாளர், பேராசிரியர், பீடாதிபதி என பல பதவிகளை வகித்து 2009 இல் ஓய்வு பெற்றார்.

### மணிவிழா

2004ஆம் ஆண்டு பேராசிரியர் தனது அறுபதாவது பிறந்த நாளை எட்டினார். அத்தருணத்தில் கலாநிதி உலகநாதர் நல்லரெத்தினம் தலைமையில் மாபெரும் மணிவிழா ஒழுங்குசெய்யப்பட்டது. வெள்ளவத்தை இராமக்கிருஷ்ண மண்டபம் நிறைந்து மக்கள் மண்டபத்தின் வெளியிலும் நிற்கவேண்டி இருந்தது. மறைந்த பேராசிரியர் சிவத்தம்பி அண்மையில் மறைந்த முன்னாள் வடக்கு மாகாண கல்விச் செயலாளர் சுந்தரம் திவகலாலா ஆகியோர் உட்பட பலரும் உரையாற்றினர். மணிவிழா மலரும் வெளியிடப்பட்டது. இம்மலரின் பதிப்பாசிரியராகக் கடமையாற்றிய பேராசிரியர் கருணாநிதி பேராசிரியரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து எழுதியிருந்தார். அத்துடன் மலரைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட முப்பத்தியிரண்டு கட்டுரைகள் அலங்கரித்தன. மலருக்குப்

**பேராசிரியர் தை. தனராஜ்**

புறம்பாக பேராசிரியர் பற்றி அறிந்த பலரும் எழுதிய குறிப்புகள், பாராட்டுக்கள், வாழ்த்துரைகள் ஆகியவை தனியொரு நூலாக வெளியிடப்பட்டது. இவ்விரு நூல்களும் குமரன் பதிப்பகத்தால் மிகவும் அழகாகவும், தரமாகவும் அச்சிடப்பட்டன. விழா நிறைவெய்திய பின்னர் இப்படியொரு மணிவிழாவினை கொழும்பு மாநகரம் இதுவரை கண்டதில்லை எனப் பலரும் பாராட்டினர். இம்மணிவிழா பற்றி பேராசிரியர் எப்போதும் பெருமகிழ்ச்சியுடன் கதைப்பதுண்டு.

### ஜப்பானில் உயர்கல்வி

பேராசிரியர் 1977 இல் யப்பானில் கல்வி அமைச்சின் புலைமைப்பரிசில் பெற்று ஜப்பானுக்குப் பயணமானார். ஓவாக்காலினுள்ள அயல்மொழி பல்கலைப்பழகத்திலும் பின்னர் ஹிரோசிமா பல்கலைக்கழகத்திலும் கற்று முதுமாணிப்பட்டத்துடன் இலங்கை திரும்பிய பேராசிரியர் ஜப்பானுடனான தனது தொடர்பினைத் தொடர்ந்து பேணிவந்தார். ஜப்பானில் இருந்த போது இலங்கையின் கல்வி முறைமை பற்றி உரையாற்ற பல பாடசாலைகளும் கல்வி நிறுவனங்களும் அவரை அழைத்திருந்தன. தனது மரணம் வரை பேராசிரியர் ஜப்பானுடன் நெருக்கமான கல்வித் தொடர்புகளை பேணிவந்தார். இலங்கை ஜப்பான் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவராகவும் பேராசிரியர் கடமையாற்றியதுடன் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஜப்பான் சென்றுவரத் தவறுவதில்லை. அத்துடன் ஜப்பானில் அவர் சந்தித்த பலர் பேராசிரியர்களுடன் தொடர்ச்சியான நட்புறவைப் பேணிவந்தார். பேராசிரியரின் ஜப்பானியத் தொடர்பு காரணமாக எனக்கு (கட்டுரையாளர்) ஜப்பான் நாட்டுக்கு ஒரு கல்விச் சுற்றுலா சென்றுவரும் வாய்ப்புக் கிடைத்தமையை இங்கு நன்றியுடன் குறிப்பிட்டுக் கொள்கின்றேன். ஜப்பானில் கல்வி கற்றுத் திரும்பிய பின்னர் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பின்னர் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டார்.

### பேராசிரியரின் படைப்புகள்

பேராசிரியரின் முதலாவது நூல் இலங்கை இந்திய வரலாறு எனும் நூலாகும். காலஞ்சென்ற புவியியல் பேராசிரியர் சோ.செல்வநாயகத்தின் தொடர்ச்சியான வலியுறுத்தல் காரணமாகவே தான் இந்த நூலை எழுதியதாக பேராசிரியர் குறிப்பிடுவதுண்டு. பேராசிரியர் ஆங்கிலத்திலும் தமிழுமாக இறுதிவரை எழுதியிருந்தார். கல்வியின் பல்வேறு அம்சங்கள் மற்றும் கல்விப் பிரச்சினைகள் பற்றி பேராசிரியர் முப்பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அத்துடன் ஐக்கிய அமெரிக்காவில் வருகைதரு பேராசிரியராக தான் நிகழ்த்திய விரிவுரைகளை ஒன்றிணைத்து ஆங்கில நூலையும் பேராசியர் வெளியிட்டார். தனது வாழ்நாளில் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்ட பேராசிரியர் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். இவை தவிர வானொலி, தொலைக்காட்சிகளில் பேராசிரியர் தொடர்ச்சியாக உரையாற்றியுள்ளதோடு கலந்துரையாடல் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியுள்ளார். குறிப்பாக வசந்தம் தொலைக்காட்சியில் "பள்ளிக்கூடம்" என்னும் தொடர் நிகழ்ச்சியில் பேராசிரியருடன் பேராசிரியர் மா.கருணாநிதியும் நானும் (கட்டுரையாளர்) தொடர்ந்து பங்கேற்றுவந்துள்ளோம். தவிர பேராசிரியர் பல அறிஞர்கள், பெருமக்கள் தொடர்பான ஞாபகார்த்த நிகழ்வுகளில் பங்குபற்றி ஆற்றிய நினைவுப் பேருரைகள் நூல்களாக வெளிவந்துள்ளன.

### தேசிய பங்களிப்புகள்

பேராசிரியரின் தேசிய பங்களிப்புகள் அளப்பரியன. தேசிய கல்வி ஆணைக்குழு தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை , தேசிய கல்வி நிறுவகத்தின் பேரவை , நூலக ஆவணமாக்கல் சபை முதலியவற்றில் பேராசிரியர் தொடர்ச்சியாக உறுப்பினராக இருந்து சீரிய பணியாற்றியுள்ளார். யாழ் பல்கலைக்கழம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பேரவை உறுப்பினராகப் பதவி வகித்ததோடு இப்பல்கலைக்கழகங்களின் பேரவை உறுப்பினராகவும் பேராசிரியர் பணியாற்றியுள்ளார்.

இவைதவிர கொழும்புத் தமிழ்ச்சங்கம், ஜப்பானிய சங்கம் ஆகியவற்றில் தலைமைப் பதவியை வகித்துள்ளார். இந்திய தூதுவராலயத்தின் தோட்டத் தொழிலாளர் புலைமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தில் உறுப்பினராகக் கடமையாற்றியிருந்தார்.

### மொழிபெயர்ப்புப் பணிகள்

பேராசிரியர் மொழிபெயர்ப்புத் துறையில் அதீத ஆர்வமும் திறமையும் கொண்டவராவார். இக்கட்டுரையாளர் உட்பட பலர் மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபட பேராசிரியரே அடித்தளமிட்டவராவார். மார்கா நிறுவனத்தின் வெளியீடுகள் தேசிய கல்வி ஆணைக்குழுவின் வெளியீடுகள் என பல ஆவணங்களைப் பேராசிரியர் மொழி பெயர்த்துள்ளார். பேராசிரியர் மிக முக்கியமான மொழிபெயர்ப்பு லண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஏஞ்சலா லிற்றிலின் Born To Labor என்னும் நூலைத் தமிழாக்கம் செய்தமையாகும். பேராசிரியர் ஏஞ்சலா லிற்றில் சீசா செயற்றிட்டத்தின் ஆலோசகராகப் பணி புரிந்தவராவார். மலையகக் கல்வி பற்றி அவர் எழுதிய நூல் மலையகக் கல்வி வரலாறு பற்றிய நூல்களுள் மிகவும் காத்திரமானதாகும். பேராசிரியரின் இப்பணியில் பேராசிரியர் கருணாநிதியுடன் இக்கட்டுரையாளரும் பங்களித்திருந்தார்.

(06 ஆம் பக்கம் பார்க்க)











# எட்டுமாத காலத்தில் அரசு ஈட்டிய சாதனை!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுவதற்கு நாடு தயாராகிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், சமையல் எரிவாயு உள்ளிட்ட எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்ற செய்தி மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் திரவ எரிபொருட்கள் மற்றும் எரிவாயு போன்றவற்றைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில், பல நாட்கள் காத்திருக்கும் நிலைமையே காணப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இன்றைய அரசாங்கம் முன்னெடுத்த பொருளாதார மீட்சி நடவடிக்கைகள் காரணமாக மக்கள் கியூவரிசைகளில் காத்திருக்கின்ற நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, எரிபொருட்களின் இடையறாத விநியோகத்துக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள நாட்டை அதிலிருந்து மீட்கும் பொருட்டு கிடைத்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதியுதவி தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள சாதகமான நிலைமைக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 48 மாதங்களில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியாக இலங்கைக்குக் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியான தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டில் நெருக்கடியைத் தணிக்கும் பொருட்டு அத்தியாவசிய

## அரசியல் இப்போது அவசியமில்லை; அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைத்தால் இலங்கை மீண்டெழுவது உறுதி!



பொருட்கள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்நிதியைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு நாட்டுக்குக் காணப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில், எரிபொருள் மற்றும் எரிவாயுவின் விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் அரசாங்கம் எரிபொருள்களின் விலையைக் குறைத்திருந்தது. இதற்கமைய 92 ஒக்டேன் பெற்றோல் 60 ரூபாவினாலும், 95 ஒக்டேன் பெற்றோல் 135 ரூபாவினாலும், ஒட்டோ டீசல் 80




## எரிவாயுவுக்கும் எரிபொருட்களுக்கும் நீண்ட கியூவரிசையில் மக்கள் நாட்கணக்கில் காத்துக் கிடந்த கொடிய யுகம் ஒழிக்கப்பட்டு, நம்பமுடியாத வகையில் எரிபொருட்கள் பெருமளவு விலைக்குறைப்பு!



ரூபாவினாலும், சுப்பர் டீசல் 45 ரூபாவினாலும், மண்ணெண்ணெய் 10 ரூபாவினாலும் விலைகள் குறைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பஸ் கட்டணம் 12.9 வீதத்தினால் குறைக்கப்பட்டது. இதனுடன் இணைந்ததாக முச்சக்கர வண்டிகளுக்கான வாடகைக் கட்டணம் போன்றவற்றையும் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் எரிபொருள் சில்லறை வியாபாரத்தை முன்னெடுக்க மூன்று சர்வதேச நிறுவனங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. கூடிய விரைவில் இந்த நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கவிருக்கும் நிலையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



தனியார் மயப்படுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கங்கள் கடந்த வாரம் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இருந்தபோதும், இதனால் பாரிய பாதிப்பு நாட்டுக்கு ஏற்படாத அதேவேளை, தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட அதன் முக்கியஸ்தர்களை கட்டாய விடுமுறையில் அனுப்புவதற்கு அமைச்சர் கஞ்சன விஜயசேகர நடவடிக்கை எடுத்திருந்தார்.

எரிபொருள் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் முயற்சிகளை எடுத்திருக்கும் நிலையில், இன்றைய சுமுகமான சூழ்நிலையை சீர்குலைக்கத் தொழிற்சங்கங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு மக்கள் மத்தியில் வரவேற்புக் கிடைக்கவில்லை. இனிமேலும் தொழிற்சங்கங்கள் நாட்டின் சுமுகமான செயற்பாட்டைச் சீர்குலைப்பதற்கு இடமளிக்க முடியாது.

அதேநேரம், வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் கோட்டாவின் அளவையும் அரசாங்கம் அதிகரித்துள்ளது. சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்ட விடுமுறை காலப் பயணங்களைக் கருத்தில் கொண்டு கியூ.ஆர் குறியீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் எரிபொருள் கோட்டாவின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வரையறைகள் படிப்படியாக இலகுபடுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஊடாக மக்களின் சுமுகமான வாழ்க்கைக்கு படிப்படியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது இவ்விதமிருக்க, கடந்த சில நாட்களுக்கு முன்னர் சமையல் எரிவாயுவின் விலை பெருமளவில் குறைக்கப்பட்டது. 12.5 கிலோகிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் 1005 ரூபாவினாலும், 5 கிலோகிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் 402 ரூபாவினாலும் விலை குறைக்கப்பட்டிருப்பதாக லிற்றோ கேஸ் நிறுவனம் அறிவித்தது.

இதற்கமைய 12.5 கிலோ சிலிண்டர் 3,768 ரூபாவுக்கும், 5 கிலோ சிலிண்டர் 1,502 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. சமையல் எரிவாயு விலைக் குறைப்பானது மக்களுக்குப் பெரியதொரு நிவாரணமாக அமைந்துள்ளது. ஏனெனில், எரிவாயு விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி உணவு உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

விசேடமாக பாண் உள்ளிட்ட அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவுகள் கணிசமானளவு அதிகரிக்கப்பட்டன. இந்த நிலையில் எரிவாயு மற்றும் எரிபொருட்களின் விலைக் குறைப்பைத் தொடர்ந்து உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டிருப்பதாக அறிவிப்புக்கள் வெளியாகியுள்ளன.

இருந்தபோதும் விலைக் குறைப்பினால் கிடைக்கக் கூடிய நன்மைகள் நேரடியாக நுகர்வோரான மக்களைச் சென்றடைய வேண்டும். இது விடயத்தில் அரசாங்கத்தின் அதிகாரிகள் விசேடமாக நுகர்வோர் அதிகார சபை முனைப்புடன் செயற்படுவது காலத்தின் தேவையாகும் என்பதே சாதாரண மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களைச் சந்தித்துள்ள இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள நீடித்த நிதியுதவி மீட்சிக்கான ஆரம்பமாக இந்த விலைக்குறைப்புகள் அமைந்துள்ளன. இலங்கை பொருளாதார மீட்சிக்காக நீண்டதூரம் பயணிக்க வேண்டியிருக்கும் சூழ்நிலையில், தற்பொழுது

## அவல நிலையிலிருந்து இலங்கையை மீட்டெடுக்க முடியுமென்பதில் நிபுணர்கள் உறுதியான நம்பிக்கை!

வெறும் ஆரம்ப நிலையில் மாத்திரமே இது இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. உட்புற மற்றும் வெளிப்புற ஏற்றத்தாழ்வுகளின் மூலகாரணங்களை நாடு நிவர்த்தி செய்ய வேண்டியது மிகவும் அவசியமானது என்பதுடன், சீர்திருத்தங்களுக்கு அசைக்க முடியாத அர்ப்பணிப்பு அவசியம் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தேவையான சீர்திருத்தங்களில் உள்நாட்டு வளங்களைத் திரட்டுதல், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் நிதிச்சுமையைக் குறைப்பதற்காக அவற்றின் செயல்திறனை மேம்படுத்துதல், பொதுநிதி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைகளை ஒத்திசைப்பதன் மூலம் தனியார் துறை நடவடிக்கைகளை ஊக்குவித்தல் ஆகியவை இந்த ஆலோசனைகளில் அடங்கும்.

இலங்கையின் பொருளாதார பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு ஊழலுக்கு எதிரான சட்டத்தை வலுப்படுத்துதல், பலமான நிறுவனங்களை கட்டியெழுப்புதல் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பது போன்ற நிர்வாக மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை மேம்படுத்துவதும் இன்றியமையாததாக இருக்கும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிந்திய வெளியீட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மறுசீரமைப்புக்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அதேநேரம், அறிமுகப்படுத்தப்படும் கொள்கைத் திட்டங்களை நடைமுறையில் செயற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பும் அவசியமாகும். இது விடயத்தில் ஜனாதிபதி உறுதியான நிலைப்பாட்டில் இருப்பதாகவே தெரிகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் உதவிக்கான ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அனுமதி பெறப்படும் என அவர் கூறியுள்ளார். உண்மையில் அவ்வாறானதொரு தேவை இல்லை என்றபோதும், அனைத்து விடயங்களையும் பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு உட்பட்ட வகையில் கொண்டு செல்ல வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளமையின் வெளிப்பாடாகவே இதனைப் பார்க்க முடியும்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று எட்டு மாதங்கள் என்ற குறுகிய காலப் பகுதியில் நாட்டில் சுமுகநிலையை ஏற்படுத்தியது மாத்திரமன்றி கணிசமாக அதிகரித்துச் சென்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளையும் குறைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முடிந்துள்ளது.

அதலபாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நாட்டையே தான் பொறுப்பேற்றிருப்பதாகவும், இதனை மீட்சி பெறச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் அவர் கூறியே நாட்டைப் பொறுப்பேற்றிருந்தார். நாடு சரியான பதையில் செல்வதற்கான அனைத்துப் பாராட்டுக்களும் ஜனாதிபதியையே சென்றடைய வேண்டும் என்பதுதான் பொருளாதார நிபுணர்களின் உறுதியான நம்பிக்கையாக உள்ளது.

## நாடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுந்து வருகையில், சில தொழிற்சங்கங்கள் சுமுகநிலைமையை சீரழிக்க திட்டமிட்ட முயற்சி!

இருந்தபோதும் நாட்டுக்கு சரியான பாதையைக் காண்பிக்கும் ஜனாதிபதிக்கு ஏனைய அனைத்துத் தரப்பினரினதும் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும். எனவே அரசியல் தரப்பினர் மாத்திரமன்றி, அரசாங்க ஊழியர்கள் மற்றும் நாட்டின் பொதுமக்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து அரசாங்கத்துக்குக் கைகொடுக்க வேண்டும். அப்போதுதான் இலங்கை மீண்டெழுவதற்கு முடியுமென்பதே நிபுணர்களின் கருத்தாகும்.






# பொருளாதார முன்னேற்றமா அல்லது தேர்தலா அவசியம் என்பதை தீர்மானிக்கும் தருணம் இது!

## தகவல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் பேட்டி

**நாட்டில் பொருளாதார முன்னேற்றம் அவசியமா அல்லது தேர்தல் அவசியமா என்பதைத் தீர்மானிக்கும் தருணம் தற்பொழுது காணப்படுகிறது. நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் என்று தகவல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார். டிஜிட்டல் துறையில் முன்னேறுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமை அவர் எம்முடன் கலந்துரையாடினார்.**

**கே: சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு இலங்கைக்கு ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம் தேவை என அண்மையில் நீங்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தீர்கள். இதனை விளக்கமாகக் கூறமுடியுமா?**

பதில்: தற்போது, எங்களது இணையப் பாதுகாப்புச் சட்டமூல வரைபை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளோம், அவர்களின் பரிந்துரைகளுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். இந்த வருடத்தில் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

**கே: இலங்கை உயர்தொழில்நுட்ப உற்பத்தி ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்தினீர்கள். இதை ஊக்குவிக்க உங்கள் அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?**

பதில்: அனைத்துத் தொழில்களும் பொதுத்துறை, தனியார்துறை மற்றும் பொதுமக்களுடன் இணைந்து செயல்படும் சூழலை நாம் கொண்டிருக்க வேண்டும். நாம் உயர்தொழில்நுட்பத்தைப் பற்றிப் பேசினால், நாம் ஒன்றிணைந்து அதைச் செய்ய வேண்டும். இந்த ஆண்டு இது தொடர்பாக பல நிகழ்வுகளை நடத்தவுள்ளோம்.

**கே: ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ், நாட்டின் தகவல் தொழில்நுட்பத்துறையில் புதிய சீர்திருத்தங்கள் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் டிஜிட்டல் பொருளாதாரத்தை அடைவதற்குத் தேவையான அனைத்து உத்திகளையும் உங்கள் அமைச்சு உருவாக்கியுள்ளது. இந்த விடயத்தில் முன்னேற்றம் எவ்வாறுள்ளது?**

பதில்: தொழில்துறை மற்றும் உலக வங்கியின் உதவியுடன், 2030 ஆம் ஆண்டுக்கான டிஜிட்டல் கட்டமைப்பை உருவாக்க முயற்சிக்கிறோம். 2030 ஆம் ஆண்டுக்கான நாட்டின் டிஜிட்டல் கட்டமைப்பை இந்த ஆண்டு ஒக்டோபர் இறுதிக்குள் ஜனாதிபதி வழங்குவார்.

**கே: இலங்கையின் தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு மூலோபாயத்தில் முன்மொழியப்பட்டுள்ள இணையப் பாதுகாப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு ஏதேனும் குறிப்பிட்ட காலஅவகாசம் உங்களிடம் உள்ளதா?**

பதில்: நிச்சயமாக. இந்த ஆண்டு அதைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அடுத்த ஆண்டு சைபர் பாதுகாப்பு ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான ஒப்புதலைப் பெற முயற்சிக்கிறோம்.

**கே: டிஜிட்டல் மயமாக்கலின் எதிர்மறையான விளைவுகளை ஒழுங்குபடுத்த 2023 இல் தரவுப் பாதுகாப்பு ஆணைக்குழு நிறுவப்படும் என்று நீங்கள் முன்பே கூறியிருந்தீர்கள். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: சட்டக் கட்டமைப்பைப் பற்றி பேசும்போது, அதை விட முக்கியமானது தரவுப் பாதுகாப்பு சட்டம். அது கடந்த ஆண்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. தற்போது, தரவுப் பாதுகாப்பு ஆணைக்குழுவைச் செயல்படுத்த முயற்சித்து வருகிறோம். அநேகமாக, அடுத்த மாதத் தொடக்கத்தில் ஆணைக்குழுவை உருவாக்க முயற்சித்து வருகிறோம். அதன்பிறகு செப்டெம்பர் மாதத்தில் அதிகாரத்தையும் அதன் கட்டமைப்பையும் முழுமையாகச் செயல்படுத்த முடியும்.

உண்மையில், இந்தத் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தை முன்வைப்பதில் பெருமிதம் கொள்கிறோம். நமது பிராந்தியத்தைப் பார்த்தால், இந்தத் தரவுப் பாதுகாப்புச் சட்டம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதல் நாடுகளில் நாங்கள் ஒன்றாகும். எனவே, அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும். இந்தச் சட்டத்தின் நோக்கம் தனிப்பட்ட தரவு மற்றும் தனியார் அல்லது அரச துறையின் தரவுகளைப் பாதுகாப்பதாகும்.

**கே: திறமையான தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது நாடு எதிர்கொள்ளும் பாரியதொரு சவாலாக உள்ளது என்பதை நீங்கள் சமீபத்தில் எடுத்துரைத்திருந்தீர்கள். இது சம்பந்தமாக உங்கள் பார்வை என்ன?**

பதில்: கடந்த ஆண்டு நாம் சந்தித்த நெருக்கடி மற்றும் கடுமையான வரிவிதிப்புக் காரணமாக நாம் எதிர்கொண்ட முக்கிய சவால்களில் இதுவும் ஒன்று. நெருக்கடியால் இலங்கையில் மூளைசாலிகளின் வெளியேற்றம் தொடங்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையைத் தக்கவைக்கக் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால உத்திகளை நாம் கவனிக்க வேண்டும் என்று நம்புகிறோம்.

**கே: புதிய டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி இந்த ஆண்டின் கடைசிக் காலாண்டில் இலங்கையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது பற்றிக் கூறமுடியுமா?**

பதில்: நான் முன்னர் குறிப்பிட்டது போல், இலங்கை டிஜிட்டல் கட்டமைப்பு_2030 இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த ஆண்டு ஒக்டோபர் நடுப்பகுதியிலிருந்து நவம்பர் நடுப்பகுதி வரை கருத்தரங்குகள், கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் உட்பட பல நிகழ்வுகளை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். உண்மையில், இந்த கோரிக்கை தொழில்துறையிலிருந்து வந்தது. அமைச்சு என்ற வகையில், நாங்கள் இந்த நிகழ்வுகளை எளிதாக்க முயற்சிக்கிறோம்.

தற்போது தேர்தலை நடத்துவது அவசியமா அல்லது நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை அவசியமா என்பதை நாம் பார்க்க வேண்டும். சுற்றுலாத் துறையை எடுத்துக் கொண்டால், கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு நமது இலக்குகளை அடைந்து விட்டோம் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு மாதமும் இலங்கைக்கு 100,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இத்தருணத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டாலோ அல்லது போராட்டங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் நடத்தப்பட்டாலோ நாடு கடந்த ஆண்டு இருந்த அதே நிலைக்குத் திரும்பும்.

எனவே, முதலில் தேர்தலை நடத்துவதா அல்லது நாட்டில் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதா என்று பொதுமக்களிடம் கேட்க வேண்டும்.

**கே: இந்த நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் பயப்படுவதாகவும் அதுவே தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பதற்கு உண்மையான காரணம் எனவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. இதில் உங்கள் கருத்து என்ன?**

பதில்: சரியான நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்பது எனது நம்பிக்கை, அதுதான் ஜனநாயகம். எனினும், கடந்த காலங்களில் நாம் எதிர்கொள்ளாத சில சவால்களை தற்போது நாம் எதிர்கொண்டுள்ளோம். எனவே, நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்து பொருளாதாரம் ஸ்திரமாக இருக்கும் போது தேர்தலுக்கு செல்ல வேண்டும்.

**கே: பெட்ரோலிய விற்பனைக்கு மேலும் மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்க அரசு முடிவு செய்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது நாட்டிற்கும் நுகர்வோருக்கும் எவ்வாறு பயனளிக்கும்?**

பதில்: இது தொடர்பில் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. தற்போது, பொதுமக்களிடம் கேட்டால் கண்டிப்பாக இந்த நடவடிக்கையை பரிந்துரைப்பார்கள். மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர என்ன செய்துள்ளார் என்பது தற்போது நாட்டுக்கு மிகவும் முக்கியமானது என நான் கருதுகிறேன். கடந்த ஆண்டு ஏப்ரலில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நீண்ட வரிசைகள் காணப்பட்டன. சிலர் எரிபொருள் வரிசையில் மரணமடைந்தனர்.

அந்த நேரத்தில் நாட்டில் பல பிரச்சினைகள் இருந்தன. அந்த நேரத்தில் சர்வதேச நிறுவனங்கள் நம்மிடம் இருந்திருந்தால், அவர்கள் சொந்தமாக எரிபொருளை இறக்குமதி செய்ய பணத்துக்குப் பஞ்சம் இருந்திருக்காது. எனவே, இதை அரசதுறை நிறுவனமாக வைத்திருக்க வேண்டுமா அல்லது மற்றைய வெளிநாட்டு நிறுவனங்கள் இங்கு வந்து தொழில் செய்ய சந்தையை திறக்க வேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

**கே: நாடு தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டு வரும்போது, தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் வேலைநிறுத்தம் என்ற சாக்குப்போக்கில் சில பிரிவினர் வேண்டுமென்றே நாட்டை சீர்குலைக்க முயற்சிப்பதாகக் கருதுகின்றீர்களா?**

பதில்: கண்டிப்பாக. இப்போது நாட்டில் திறமையான அரசுத் துறை இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சாரசபை ஆகியவற்றைப் பார்க்கும்போது, எதிர்பார்த்த அளவுக்கு செயல்திறன் இல்லை. இந்த நிறுவனங்களின் வீண்விரயம், ஊழல் மற்றும் திறமையின்மை குறித்தும் நாம் தீவிரமாக ஆராய வேண்டும். மற்றைய தனியார் துறை நிறுவனங்களுடன் அவற்றை வகைப்படுத்த முடிந்தால், வித்தியாசத்தைக் காண முடியும். சில சமயங்களில் கொள்கைகள் முன்பு இருந்ததை விட வித்தியாசமாக இருக்கலாம். எவ்வாறாயினும், நாட்டின் ஸ்திரத்தன்மையைக் கருத்தில் கொண்டு, அரசாங்கத் துறையில் நன்கு வளர்ந்த மற்றும் கட்டமைப்புத் திட்டத்தைக் கொண்டிருப்பதே தற்போது சிறந்த வழி.

**எரிபொருள் விநியோகத்துறையை அரசதுறை நிறுவனமாக வைத்திருக்க வேண்டுமா அல்லது மற்றைய வெளிநாட்டு நிறுவனங்கள் இங்கு வந்து தொழில் செய்வதற்கு சந்தையை திறக்க வேண்டுமா என்பதை நாம் முடிவு செய்ய வேண்டும்!**



---



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# பாரம்பரிய இயற்கை விவசாயத்தை நோக்கி புத்தாண்டில் பயணத்தை ஆரம்பிப்போம்!

விவசாயம் மீதான ஈடுபாடு குறைந்து வருகின்றது. அதிக செலவு ஒரு புறம். மறுபுறத்தில் இளைஞர்கள் உயர்வருமானம் கிடைக்கும் தொழில்துறைகளில் பணியாற்றுவதில் அக்கறை கொண்டுள்ளார்கள். பாரியளவில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் நிலைமைக்கு விவசாயம் மாறியுள்ளது. சிறிய காணிச் சொந்தக்காரர்களுக்கு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

பயிர்ச் செய்கையில் மனித உழைப்பு குறைவடைந்துள்ளது. உழைப்புக்காக பெருமளவு கூலி வழங்க வேண்டியுள்ளது. உபகரணங்களை வாடகைக்குப் பெறுவதும் இலாபகரமானதல்ல. அறுவடையை சந்தைப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகள் நிலைமையை மேலும் சிக்கலாக்குகின்றன.

இந்தியாவின் பல பகுதிகளில் சேதன விவசாயம், இயற்கைவிவசாயம் மற்றும் பாரியளவில் இரசாயனம் பயன்படுத்தி செய்யப்படும் விவசாயம் என பல்வேறு விதமான விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஹரியானா விவசாயத்துறை குறித்து கூடுதல் கவனம் செலுத்துகிறது. விவசாயக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் பாடசாலையாக ஹரியானாவில் குருகுல குருஷேஸ்திர கல்லூரி உள்ளது. அக்கல்லூரி இயற்கை விவசாயத்தை பிரபல்யப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

விவசாயத்தில் தற்போது இரசாயனத் திரவங்களைப் பயன்படுத்தாததோடு மண்ணை வளப்படுத்துவதற்காக நுண்ணங்கிகளை அதிகப்படுத்தும் இயற்கை முறையை கையாள்கிறார்கள். குஜராத்தில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை 1912 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சம்பிரதாய குருகுலக் கல்வியே இங்கு கற்பிக்கப்படுகிறது. குருஷேத்திரம் ஆரியர்களின் எழுச்சி ஏற்பட்ட இடமென குறிப்பிடப்பட்டுள்ளது. பகவத் கீதை முதன்முதலாக உபதேசிக்கப்பட்ட இடம் இதற்கு அண்மையில் உள்ளதோடு, மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் யுத்தம் இடம்பெற்ற குருஷேத்திரமும் இவ்விடத்திற்கு அண்மையிலேயே அமைந்துள்ளது.

கடந்த பத்து வருடங்களில் இந்தியாவில் வேகமாக வளர்ச்சி அடைந்த இடம் குஜராத் ஆகும். பருத்தி, நிலக்கடலை, கரும்பு, பேரிச்சம் பழம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதோடு பால் மற்றும் பால் உற்பத்தி பொருட்களும் பாரியளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. வேலை வாய்ப்பு பற்றாக்குறை அங்கு மிகக்குறைவு. அரசு மற்றும் தனியார் பிரிவுக்கு சொந்தமான பல துறைமுகங்கள் குஜராத்தில் அமைந்துள்ளதோடு, இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் உள்ளிட்ட கொள்கலன்களில் 100க்கு 40 வீதம் இந்த பிராந்தியத்தில் உள்ள துறைமுகங்கள் மூலமாகவே கையாளப்படுகின்றன. வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கொண்ட குஜராத்தில் அதிகளவானோர் தமது அன்றாட தேவைகளுக்காக இயற்கை முறையில் தானியங்கள், மரக்கறிகள் மற்றும் பழங்களை உற்பத்தி செய்கின்றார்கள்.

குருகுல குருஷேஸ்த்திர கல்லூரி இயற்கை விவசாயத்தை பிரபல்யப்படுத்தும்,அதன் நெறிமுறைகளை பாதுகாக்கும் இடமாகும். குருகுல குருசேஷ்த்திரதுக்கு பாடசாலை மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதோடு அங்கு நடத்தப்படும் பாடநெறியில் இந்திய வைதீகம் சார்பான விசேட பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன. இந்தியாவில் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் இராணுவ அகடமிகளுக்கு விண்ணப்பிக்கும் போது இந்த பாடசாலையில் கல்வி கற்றவர்களை தெரிவு செய்வது சாதாரணமாக இடம்பெறுகிறது.

பல தசாப்தங்களாக இரசாயன உரம் பயன்படுத்தப்படாத 180 ஏக்கர் விவசாயப்பண்ணை குருகுல குருஷேத்திரத்துக்கு சொந்தமாகவுள்ளது. சோளம், நெல், கரும்பு, உருளைக்கிழங்கு உள்ளிட்ட அநேகமான பயிர்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுவதோடு, குருகுல விடுதி மாணவர்களின் உணவுக்காக பண்ணையின் உற்பத்திப் பொருட்களே பயன்படுத்தபடுகின்றன.

கோமயம், கோசலம் போன்றவற்றைப் பயன்படுத்தி உரம் உற்பத்தி செய்யும் தளமும் காணப்படுகின்றது. அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒரு ஏக்கர் விவசாயக் காணிக்கு உரமாக ஒரு பசுவின் சாணம் மற்றும் கோசலம் போதுமானதாகும் எனத் தெரிவிக்கின்றார்கள். அவை சரியான விகிதத்தில் கலக்கப்பட்டு தூயநீர் பயன்படுத்தி சாதகமான நுண்ணங்கிகளை வளர்க்க வழி செய்வதோடு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் திரவம் மற்றும் காய்ந்த சாணமாக விவசாயக் காணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட பழங்கள் மற்றும் தாவர இலைகள் மூலம் பங்கஸ் மற்றும் கிருமிகளுக்கு எதிரான பீடைநாசினிகள் தயாரிக்கப்படுகின்றன. இயற்கை விவசாயத்தின் மூலம் பயிர்ச் செய்கைக்கான செலவு பூச்சியமாகியுள்ளது. விவசாயிகளின் வருமானம் அதிகரித்ததோடு பாதிப்பை ஏற்படுத்தும் இரசாயனத்தை பயன்படுத்தாமையால் உணவு மூலம் சுகாதார மற்றும் ஆரோக்கியத்தை உறுதி செய்ய முடிந்துள்ளது.

குருகுல குருஷேத்திர மற்றும் அதற்குச் சமமான இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளும் நிபுணர்களை இலங்கையிலும் சந்திக்கலாம். மிகவும் அர்ப்பணிப்புடன் நெறிமுறைகளை பாதுகாத்து விவசாயத்தில் ஈடுபட அவர்கள் முயற்சி செய்கிறார்கள். வர்த்தக சந்தையின் தேவைக்காக பாரியளவில் உற்பத்தி செய்தல் மற்றும் வருமானத்துக்காக செய்கை பண்ணப்படும் விவசாயத்திற்கு இயற்கை விவசாயம் பொருத்தமானதல்ல. இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையேயான இயற்கை விவசாயம் தொடர்பான அறிவை பரிமாறிக் கொள்வது குறித்து கவனம் செலுத்த முடியும். இயற்கை விவசாயத்திற்கு அதிகளவு அறுவடையை பெறக்கூடிய பயிர் நெல் என்பது நிபுணர்களுடன் கலந்துரையாடியபோது தெரியவந்தது.

சித்திரைமாதம் என்பது அதிர்ஷ்டமான காலமாகும். ஜோதிடத்தில் கூறுவது போன்று சூரியன் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு மாறுவது சித்திரை மாதத்திலாகும். அறுவடையைப் பெற்று திருப்தியுடன் நடத்தும் கலாசார விழாவாக சிங்கள_தமிழ் புது வருடத்தைக் குறிப்பிடலாம். செழுமை சித்திரை மாதத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். சுபநேரத்தில் மரக்கன்று ஒன்றை நடுவது புதுவருட சடங்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விவசாயம் இலங்கையர்களுக்கு மிகவும் பழக்கப்பட்ட ஒன்று. நகரமயமாக்கல் காரணமாக காணிகள் குறைவடைந்துள்ளதுடன் நேரம் போதாமையால் எம்மிடையே சிலர் மரம் நடுவதை சிரமமாகக் கருதுகின்றார்கள். எல்லா மாவட்டங்களிலும் இயற்கை விவசாயத்தில் அக்கறை காட்டுபவர்களை இணைத்து அவர்களை ஒரு அமைப்பாக உருவாக்கும் முறையை இவ்வருடத்திலிருந்து ஆரம்பிக்கலாம். அரசாங்கமும் அதிகாரிகளும் செய்வார்கள் என காத்திருப்பதை விட அர்ப்பணிப்புடன் செயல்படும் நிபுணர்கள் இதனை ஆரம்பிக்கும் நடவடிக்கையை தொடங்குவது நல்லது.

இயற்கை விவசாயத்தில் நாட்டமுள்ளோர் தங்களுடைய அனுபவங்கள் மற்றும் முறைகளை மக்களிடையே பரப்ப வேண்டும். அது பாரிய சமூகப் பணியாகும். வீட்டுத் தோட்டங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் சாதாரண மக்களுக்கும் பொறுப்புகள் உள்ளன. இரசாயனம் விற்பனை செய்யும் இடங்களுக்கு சென்று உரம் மற்றும் கிருமிநாசினிகளை விலைக்கு வாங்குவதற்கு முன்னர் இலங்கையில் பாட்டன் முப்பாட்டன் பின்பற்றிய முறைகளை பற்றி ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது. தங்களுடைய வீடுகளில் இயற்கை விவசாயத்தை ஆரம்பிக்க எதிர்வரும் புதுவருடத்தில் உறுதிமொழி எடுத்துக் கொள்வது நல்லது.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

## ரமழான் சிந்தனை

# படிப்பினைகள் நிறைந்த 'பத்ர்' நிகழ்வு

இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற முதலாவது போராட்டமே 'பத்ர்' நிகழ்வாகும். நபியவர்களும் தோழர்களும் மதீனாவை சென்றடைந்த பின்னரும் மக்காவாசிகளின் தொல்லைகள் தொடர்வே செய்தன. தோழர்கள் சலிப்படைந்த போதெல்லாம் பொறுமையாக இருக்குமாறு கூறப்பட்டது. பின்னர் போராட்டத்துக்கான அனுமதி கிடைக்கிறது.

நபியவர்களும் தோழர்களும் மக்காவிலிருந்து சிரியா நோக்கி செல்லும் வியாபார குழுக்களை மறிப்பதற்கான ஏற்பாடுகளை செய்தார்கள். இதன் ஒரு தொடரில்தான் மக்காவிலிருந்த இறைநிராகரிப்பாளர்கள் மதீனாவில் இருக்கும் நபிகளாருக்கும் அன்னாரது தோழர்களுக்கும் எதிராக படை திரட்டி வந்தார்கள். அப்படையினருடன் நபிகளாரும் அவரது தோழர்களும் நேருக்கு நேர் மோதி வெற்றிபெற்ற இடமே 'பத்ர்' ஆகும். இதுவே இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற முதலாவது போராகும். இப்போர் ரமழான் 17 ஆம் நாளில் நடைபெற்றது.

இப்போர் ஆரம்பமாக முன்னர் தொடக்கம் போர் முடிவுற்ற பின்னரும் கூட மனித சமூகத்திற்கான நிறைய படிப்பினைகளையும் முன்னுதாரணங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது பத்ர் நிகழ்வு. குறிப்பாக இப்போரின் போது கைதிகளாகப் பிடிபட்டவர்கள் விடயத்தில் நபியவர்கள் மிகவும் தாராளத் தன்மையோடு நடந்துகொண்டார்கள். மதீனத்து சிறுவர்களுக்கு கற்பித்தால் விடுதலை கிடைக்கும் என்று அறிவித்தார்கள். இது வரலாற்றில் இடம்பெற்ற ஆச்சரியமான ஒரு விடயமாகும். இதற்கு முன்னரோ பின்னரோ இப்படியான ஒரு விடயம் நடைபெறவில்லை என்று குறிப்பிடப்படுகிறது. இஸ்லாத்தை பற்றி எதுவும் தெரிந்திராத கைதிகள் இஸ்லாம் பற்றி பேசுவதற்கு மாட்டார்கள். இது நபியவர்கள் அறிவுக்கு கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. அறிவும் அறிஞர்களும் மதிக்கப்பட வேண்டும் என்பதை இது எமக்கு உணர்த்துகிறது. கற்பிக்கத் தெரியாதவர்களை அன்னார் மன்னித்து விடுவித்தார்கள். இது இஸ்லாத்தின் தாராளத் தன்மையையும் நபி (ஸல்) அவர்களின் அன்புணர்வையும் எடுத்துக்காட்டுகிறது. இது வெற்றியில் மமதை கொள்ளாது தோல்வியில் துவண்டுபோகாத ஒரு நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்... எம்.ஏ. (சமூகவியல்)

## எங்கள் கருத்து

# இன ஐக்கியம் வலுப்பெறுவதற்கு ஈஸ்டர் திருநாள் வழிவகுக்கட்டும்!

உலகெங்கும் வாழ்கின்ற கிறிஸ்தவ மக்களுக்கு ஈஸ்டர் பண்டிகை மிகுந்த எதிர்பார்ப்பு மிகுந்ததாக உள்ள போதிலும், இலங்கையில் ஈஸ்டர் பண்டிகை நெருங்குகின்ற வேளையில் மக்கள் மத்தியில் ஒருவித அச்சம் குடி கொள்வது தவிர்க்க இயலாததாக உள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் இதே ஈஸ்டர் திருநாளில் கிறிஸ்தவ மக்களை இலக்கு வைத்து பயங்கரவாதக் குழுவொன்று மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலின் பின்னர் ஒவ்வொரு வருடமும் ஈஸ்டர் திருநாளன்று கிறிஸ்தவ மக்கள் மத்தியில் இனம்புரியாத அச்சம் உருவெடுப்பது வழமையாகின்றது.

சர்வதேசரீதியில் செயற்படுகின்ற பயங்கரவாதக் குழுவொன்றின் கோட்பாடுகளில் ஈர்க்கப்பட்டு, இலங்கையில் உருவெடுத்த பயங்கரவாதக் கும்பலொன்று நான்கு வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதல்களில் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உள்ளடங்கலாக உயிரிழந்த அப்பாவி மக்களின் எண்ணிக்கை 277 ஆகும். இக்கொடிய தாக்குதல்களில் 400 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். காயமுற்றோரில் பலர் இன்றும் அங்கவீனமுற்றவர்களாகவே நடமாடுகின்றனர். உறவினர்களைப் பலிகொடுத்தோரின் கண்ணீர் இன்றுமே வற்றவில்லை.

பயங்கரவாதம் ஒருபோதுமே மனிதாபிமானம் பார்ப்பதில்லை. உயிர்களை அழித்தொழிப்பதே பயங்கரவாதிகளின் இலக்காகும். ஈஸ்டர் தாக்குதல் சம்பவங்களில் பலியானோருக்கோ அல்லது பாதிப்புற்றோருக்கோ பயங்கரவாதிகளின் பழிவாங்கலுக்கான குறிக்கோள் என்னவென்பதே தெரிந்திருக்கவில்லை.

முப்பது வருட காலம் நிலவிய உள்நாட்டுப் போர் காரணமாக எமது நாடும் மக்களும் அனுபவித்த துன்பதுயரங்கள் விபரிக்க இயலாதவையாகும். கொடிய யுத்தத்தில் இருந்து நாடு மீட்சிபெற்றதும், மற்றொரு பயங்கரவாத கொடூரத்தை எமது நாடு சந்திக்க வேண்டியிருந்தது. மரணத்தின் வலியும், உறவினர்களின் துயரமும் அந்த அவலங்களைச் சந்தித்தவர்களுக்கு மாத்திரமே புரியும்.

பயங்கரவாதக் காட்டுமிராண்டித்தனங்களுக்கு பல்வேறு தரப்பினரும் பல்வேறு விதமான காரணங்களைக் கூறுவதுண்டு. ஆனாலும் ஈஸ்டர் தினத்தன்று இடம்பெற்றது பயங்கரவாதத் தாக்குதலென்பது வெளிப்படையானது. மனிதநேயத்துக்கு எதிரான கொடுஞ்செயலில் ஈடுபடுவோர் எவருமே மன்னிக்கப்பட முடியாதவர்களாவர். பயங்கரவாதம் எவ்வடிவில் வந்தாலும் அது முறியடிக்கப்பட வேண்டுமென்பதே அமைதியை விரும்புகின்ற மக்களின் விருப்பமாகும்.

மதங்கள் அத்தனையும் மனிதநேயத்தையே போதிக்கின்றன. தனது மதம் மீது மாத்திரம் நம்பிக்கை கொள்வதோ, மற்றைய மதங்கள் மீது வெறுப்பை வெளிப்படுத்துவதோ எந்தவொரு மதத்துக்கும் உரிய கொள்கையல்ல. மதத்தின் பேரில் சமூகங்களிடையே வேற்றுமை பாராட்டுவதும் மனிதப்பண்பு அல்ல.

பாவம் இழைத்தவர்களையும் மன்னித்து அரவணைக்கின்ற மானுடநேயத்தை உலகுக்குப் போதித்த இயேசுபிரான் உயிர்த்தெழுந்த தினமான இன்றைய புனித நன்னாளில் இலங்கைத் தேசத்தின் மக்கள் அனைவரும் இனமத பேதங்களைக் கடந்து, இனநல்லிணக்கத்தையும், ஐக்கியத்தையும் தங்களது வாழ்வில் பிரதான கோட்பாடாகக் கொள்ள வேண்டுமென்பதே ஈஸ்டர் செய்தியாக அமையட்டும்!

## சோபகிருது வருடப்பிறப்பு

● **புது வருட ஆபரணம்**

திருக் கணித பஞ்சாங்கத்தின் படி வைரம் பதிக்கப்பட்ட ஆபரணம்.

● **கைவிசேடம்**

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 (15.04.2023) சனிக்கிழமை காலை 06.45 முதல் 07.30 வரை. சித்திரை 2 (15.4.2023) காலை 08.00 மணியில் இருந்து 8.55 வரை சித்திரை 3 (16.04.2023) ஞாயிறு காலை 08.00 மணி முதல் 09.30 வரை. சித்திரை 3 (16.04.2023) ஞாயிறு பகல் 12.10 முதல் 1.15 வரை.

● **புதுக்கணக்கு**

திருக்கணிதத்தின் படி சித்திரை 13 (26.04.2023) புதன்கிழமை காலை 07.32 முதல் 09.05 வரைசித்திரை 20 (03.05. 2023) புதன் காலை 07.30 முதல் 08.40 வரை சித்திரை 22 (05.05.2023) வெள்ளிக்கிழமை காலை 07.15 முதல் 08. 28 வரை

கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா



கொழும்பு விவேகானந்த கல்லூரியில் தரம் 11இல் கல்வி பயிலும் சசாதேவன் சுகஹர்ஷன் இளம் வயதிலேயே தெய்வ திருவுருவச்சிலைகளை வடிப்பதில் வல்லவராகத் திகழ்கிறார். இவரது இந்தத் திறமையை பாராட்டி ஸ்ரீ பத்ரகாளி தேவஸ்தானம் இவரை கௌரவித்தது.

# பெண் வெட்டிக் கொலை



ஹிரிபிட்டியாகம, இப்பலோகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விவின் வீதியில் பெண்ணொருவர் நேற்று (08) அதிகாலை வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹிரிபிட்டியாகம, இபலோகம, மைலகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த ஏ.எம்.சமந்திகா அதிகாரி என்ற 45 வயது இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (08) அதிகாலை 05.00 மணியளவில் ஹிரிபிட்டியாகம பிரதேசத்திலுள்ள தென்னை உற்பத்தி தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிவதற்காக ஹிரிபிட்டியகம, விவின் வீதியூடாக பயணித்த போதே பெண் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் படுகொலையை அவரது கணவர் செய்திருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர். உயிரிழந்த பெண்ணுக்கும் அவரது கணவருக்குமிடையில் சில காலமாக குடும்பத் தகராறு இருந்து வந்ததாகவும், இதன் காரணமாக இப்பலோகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் இருப்பதாகவும் இப்பலோகம பொலிஸார் தெரிவிக்கின்றனர். கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கணவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக மைலகஸ்வெவ பிரதேசத்திலுள்ள தனது வீட்டிலிருந்து தனது இளைய பிள்ளையுடன் விவின் வீதியிலுள்ள தனது சகோதரரின் வீட்டுக்கு வந்து, அங்கிருந்து தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ் வீதியில் வைத்தே கணவர் பெண்ணை கொலை செய்திருக்கலாமென்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இப் பெண்ணும் இவரின் மகளும் தேங்காய் உற்பத்தி தொழிற்சாலையில் பணிபுரிகிறார்கள். நேற்றுக் (08) காலை 05:00 மணியளவில் மைலகஸ்வெவவிலுள்ள தனது வாடகை வீட்டிலிருந்து மகள் வேலைக்குச் செல்வதற்காக வந்தபோது, வீதியில் ஒருவர் வீழ்ந்து கிடப்பதை கண்டுள்ளார். அருகில் சென்று பார்த்த போது தனது தாய் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை கண்டு அலறியடித்து அக்கம் பக்கத்தினருக்கு அறிவித்துள்ளார்.

## மனித உரிமைகள் ஆணைக்குழு...

ஆணைக்குழுவின் தலைவி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்துக்கு முரணாக செயற்படுவதாகவும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு செவிமடுப்பதில்லையென்றும் தனது தனிப்பட்ட விருப்புக்கமைய செயற்படுவதாகவும் தங்களது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் எடுக்கும் தீர்மானங்களை கவனத்தில் கொள்ளாது ஆணைக்குழுவின் தலைவி செயற்பட்டு வந்ததால் கடந்த பெப்ரவரி மாதம் எடுக்கப்பட்ட ஆணைக்குழுவின் யோசனைகளை மார்ச் மாதம் அங்கீகரிப்பதற்கு ஆணைக்குழு உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆணைக்குழுவின் தலைவி, ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு செவிமடுக்காத காரணத்தால் அவரது எந்த தீர்மானத்தையும் தாங்கள் அங்கீகரிப்பதில்லையென ஆணையாளர் மூவரும் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே உடனடியாக இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் ஆணையாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் தலைவி உட்பட 05 பேரை உள்ளடக்கியதாக உள்ளதுடன் இதில் 03 பேர் தங்களது கையொப்பத்துடன் இந்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

## இலஞ்சம் வாங்க மறுத்த...

வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார். நேற்று முன்தினம் இரவு (07 ) யாழ்ப்பாணத்திலிருந்து சட்டவிரோதமாக கடத்தி செல்லப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள்ளார். கைது செய்யப்பட்டவர் கடமையிலிருந்த பொலிஸ் சார்ஜனுக்கு 50,000 ரூபாவை இலஞ்சமாக வழங்கி தப்பிக்கமுற்பட்ட போதிலும் இலஞ்சமாக கொடுத்த பணத்தை வாங்க மறுத்த சாவகச்சேரி பொலிஸ் நிலைய சார்ஜன்ட்டுக்கு மதிப்பளித்து சன்மானம் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# ரணிலின் செயற்பாடுகள் மிக மிக சிறப்பானவை

## மக்களால் சான்றளிப்பு என பௌஸி புகழாரம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்பாக செயற்படுகிறாரென பொதுமக்களால் சான்றளிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி (07) தெரிவித்துள்ளார்.

உண்மையைப் பேச வேண்டும் என்ற அடிப்படையில் தமது தனிப்பட்ட கருத்து மட்டுமல்ல, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றி மக்கள் கூறுவது இதுவே என்றும் பௌசி தெரிவித்துள்ளார். எனினும் அரசாங்கக் கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பான திட்டங்கள் தம்மிடம் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜித சேனாரத்ன உள்ளிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி ரணிலுக்கு சார்பாக இதேபோன்ற கருத்துக்களை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பருப்புக் கறிக்குள் பூரான்

## பேசாலையில் சம்பவம்



மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பேசாலை கிராமத்தில் உணவகமொன்றில் நபர் ஒருவர் (07) காலை வாங்கிய உணவில் பூரான் காணப்பட்டுள்ளதால் இவ் விடயம் தொடர்பாக சுகாதார துறை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. விரைந்து செயல்பட்ட மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர்கள் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து உணவகத்துக்குச் சென்று உணவுகள் அனைத்தையும் அழித்ததுடன் கடை உரிமையாளரை கடுமையாக எச்சரித்தனர். இவர்களால் சமையலறையை உடனடியாக திருத்தி அமைப்பதற்குரிய வழிகாட்டலும் வழங்கப்பட்டது.

# கொழும்பு – காங்கேசன்துறை நேரடி ரயில் சேவை ஜனவரியில் ஆரம்பம்



கொழும்பு, கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கான நேரடி ரயில் சேவையை, 2024 ஆண்டு ஜனவரி மாதத்திலேயே மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் வி.எஸ். பொல்வத்தகே தெரிவித்துள்ளார்.

வடக்கு ரயில் பாதையின் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மறு சீரமைப்புப் பணிகளால், ஜனவரி 05ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான நேரடி ரயில் சேவை அநுராதபுரம் ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது, மஹவ முதல் ஓமந்தை வரையிலான ரயில் மார்க்கத்தின் சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது, அதனை, எதிர் வரும் ஜூன் மாதம் நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர், மஹவ முதல், அநுராதபுரம் வரையிலான ரயில்பாதை சீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தப் பணிகள், இந்த ஆண்டு இறுதியில் நிறைவுசெய்யப்படவுள்ளன. அதன் பின்னரே, கொழும்பு கோட்டை முதல், யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வரையிலான நேரடி ரயில் சேவை மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை, திருகோணமலை கந்தளாய் அக்போபுர ரயில் நிலையத்துக்கு அருகில் தடம்புரண்ட பெட்டிகளை, மீள்தடமேற்றும் பணிகள், நேற்றுக் காலை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. ரயில் தடம்புரண்டமையால், கொழும்பிலிருந்து திருகோணமலைக்கான இருவழி இரவு அஞ்சல் ரயில் சேவைகளும் நேற்று முன்தினம் இரவு இரத்துச் செய்யப்பட்டன.

கல் ஓயாவிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயில் பெட்டியொன்று, கித்துல் உதுவ பகுதியில் நேற்று முன்தினம் தடம் புரண்டு ரயில் பாதைக்கு அருகில் விபத்துக்குள்ளானதால், 17 பேர் காயமடைந்து, வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இருளை அகற்றி...

பொது வேலைத்திட்டத்துடன் அனைவரும் கைகோர்ப்பதே இன்றைய தேவையாகுமென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தனது உயிர்த்த ஞாயிறு தினச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறு என்பது இதயங்களிலுள்ள இருளை அகற்றி, நம்பிக்கையை அளித்து வாழ்க்கையை மாற்றும் கிறிஸ்துவின் மகிமையை உலகுக்கு வெளிப்படுத்தும் தினமாகும்.

இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் இந்நாளில், நம்பிக்கை மற்றும் விடுதலை மூலம் இருள் மற்றும் விரக்தியை நீக்கும் செய்தியை உள்வாங்கிக் கொள்ள அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

பெரும் துயர், நிச்சயமற்ற தன்மை, ஏமாற்றம் ஆகியவற்றுடனான கடந்த காலத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஒரு நல்ல நாளை எதிர்பார்த்து அனைவரும் ஆவலுடன் இருக்கிறோம். எனது தலைமையிலான அரசாங்கம் இன, மத, கட்சி அல்லது நிற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இலங்கை மக்கள் அனைவரினதும் அபிலாஷைகளை நனவாக்க, அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் இந்தச் சவால்களை வெற்றிகொள்ள முடியுமென நான் உறுதியாக நம்புகின்றேன். குறுகிய அரசியல் இலக்குகளிலிருந்தும், பின்தங்கிய போக்குகளிலிருந்தும் விலகி நாட்டைக் கட்டியெழுப்பும் பொது வேலைத்திட்டத்துடன் அனைவரும் கைகோர்ப்பதே இன்றைய தேவையாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் வலி உங்கள் மனதில் இன்னும் வடுவாக இருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன். அந்த துரதிஷ்டவசமான சம்பவம் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, அந்தப் பணிகளை எந்தவொரு தலையீடும் இன்றி சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்றதாகவும் முன்னெடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கத் தேவையான பின்னணியை அமைத்துள்ளோம் என்பதையும் நான் நினைவுகூருகின்றேன்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதவாறு, நாட்டின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

நாடு எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் சமாளிக்க உறுதியான மனநிலையையும், ஆன்மீக பலத்தையும் பிரதிபலிக்கும் ஒரு ஆசீர்வாதமாக உயிர்த்த ஞாயிறு அமைய வேண்டுமென நான் பிரார்த்தனை செய்கிறேன். மேலும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் அர்த்தமுள்ள மற்றும் அமைதியான உயிர்த்த ஞாயிறு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## இலங்கை இந்தியா...

இந்த நபர் இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவினால் (NIA) கைதுசெய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இதேவேளை, சென்னையில் இந்த சந்தேக நபருக்கு சொந்தமான பல இடங்களில் இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவு (NIA) சோதனை நடத்தியதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சோதனையின்போது பெருந்தொகை பணம், தங்கக் கட்டிகள், டிஜிட்டல் சாதனங்கள், போதைப்பொருள் மற்றும் சில ஆவணங்கள் உள்ளிட்டவற்றையும் இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவு கைப்பற்றியுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் மோசடி தொடர்பான விசாரணைகளை இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவு ஆரம்பித்தது. இந்நிலையில், இதுவரை 14 சந்தேக நபர்களை இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவு கைதுசெய்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பரில், தமிழகம் முழுவதும் 21 இடங்களில் இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட சோதனையில் 13 பேர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## A/L விடைத்தாள்...

உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு தொடர்பாக வியாழக்கிழமை (6) ஆசிரியர் சங்கம் ஒன்றினால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்து, ஊடகங்களில் பிரசாரமான விடயம் தொடர்பாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உயர்தர பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் விடைத்தாள் மதிப்பீட்டுக்கான விண்ணப்பப்படிவம் கோரும்போது, அதற்காக மொத்த தேவையாக இருந்த 19,000 மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கையில் 12,000 பேரே விண்ணப்பித்திருந்தனர். இந் நிலைமையை உணர்ந்துகொண்ட கல்வி அமைச்சர், ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி, விடைத்தாள் மதிப்பீட்டுக்கு வழங்கப்படுகின்ற கட்டணத்துக்கு மேலதிகமாக நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டுவந்த 500 ரூபா கொடுப்பனவை 2,000 ரூபா வரை அதிகரிப்பதற்கும் 81 கிலோ மீற்றருக்கு அதிக தூரத்திலிருந்து விடைத்தாள் மதிப்பிடுவதற்கு வரும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை 2,900 ரூபா வரை அதிகரிப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தார்.

அதற்காக திறைசேரியிடமிருந்து மேலதிக ஒதுக்கீடுகளையும் பெற்றுக் கொண்டுள்ளோம். அத்துடன் பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் கடந்த மாதம் 03ஆம் திகதி முதலாவது கலந்துரையாடல் பிரதமர் அலுவலகத்தில் ந டைபெற்றது. அதில் திறைசேரி அதிகாரிகள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் கலந்துகொண்டிருந்தனர்.

அதன் பிரகாரம் அனைத்து அரச ஊழியர்களுக்காகவும் பொதுவாக விதிக்கப்பட்டிருக்கும் வரி விடயம் தவிர, ஏனைய கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கல்வி அமைச்சு, நிதி அமைச்சும் இணக்கப்பட்டுடன் மாற்றுத் தீர்வு வழங்கி இருப்பதுடன் அதுதொடர்பாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கத்துக்கும் அறிவுறுத்தியிருக்கிறது.

அத்துடன் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலாக ஊடக அறிக்கை ஊடாகவும் அறிவுறுத்தப்பட்டது. கல்வி அமைச்சு இந்த முக்கியமான பிரச்சினை தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே ஆசிரிய தொழிற்சங்கத்துடனும் பல்கலைக்கழக பேராசிரிய சங்கங்களுடனும் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தி தீர்க்கமான நடவடிக்கைக்கு வந்துள்ளதுடன் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. து தொடர்பாக தற்போது ஆசிரிய தொழிற்சங்கம் முன்னேற்றகரமான பதி லொன்றை வழங்கி இருப்பதுடன் பல்கலைக்கழக பேராசிரியர் சங்கமும் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் இணைந்துகொள்வதற்காக விரைவாக பதில் வழங்கும் என்பது இலட்சக்கணக்கான மாணவர்கள் உட்பட பெற்றோர் மற்றும் கல்வி அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

## பேராசான் சோ.சந்திரசேகரம்;...(03 ஆம் பக்கத் தொடர்)

**நூல் விபரப்பட்டியல்**

பேராசிரியர் மலையகம் தொடர்பில் மிக முக்கிய பங்களிப்புகள் ஒன்று பேராதனைப் பல்கலைக்கழக சிரேட்ட விரிவுரையாளர் ஆர்.இரமேஷுடன் இணைந்து ஆக்கிய இலங்கை மலையகத் தமிழர்கள் நூல் விபரப்பட்டியல் என்னும் நூலாகும். மலையகத்தில் கல்வி, சமூக, பொருளாதார பரிமாணங்களை ஆய்வு செய்பவர்களுக்கு இந்நூல் ஓர் அருங்கொடை எனலாம். இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் சின்னத்தம்பிக்கே பின்னர் இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டது ஒரு துன்பியல் நிகழ்வாகும்.

**மலையகப் பல்கலைக்கழகம்**

பேராசிரியரின் ஆத்மார்த்தமான ஒரு கனவு – அவரது வாழ்நாளில் நிறைவேறாமல் போன கனவு மலையகப் பல்கலைக்கழகம் எனும் கனவாகும். சுமார் பத்து ஆண்டுளுக்கு முன்னர் மலையகத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் எனப் பத்திரிகைக் கட்டுரை ஒன்றைப் பேராசிரியர் எழுதியிருந்தார். அதனைத் தொடர்ந்து இக்கட்டுரையாளரும் பின்னர் மலையகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், கல்வியாளர்கள் பலரும் பேராசிரியரின் கோரிக்கையை ஆதரித்து எழுதினர். இக் கோரிக்கை பல கூட்டங்களிலும் மன்றங்களிலும் பேசுபொருளானது. இதற்கான ஓர் ஆவணமும் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. ஆனால் எதுவுமே நடக்கவில்லை. மலையகத்தின் கல்வி மேம்பாட்டிற்கு அடித்தளமாக அமையக்கூடிய பல்கலைக்கழகக் கோரிக்கை இவ்வாறு உதாசீனம் செய்யப்பட்டமை குறித்து பேராசிரியர் மிகவும் மனம் நொந்து போயிருந்தார். சில வருடங்களுக்கு முன்னர் ஹட்டனில் நடந்த ஒரு கூட்டத்தில் உரையாற்றிய பேராசிரியர் இவ்விடயம் பற்றிக் குறிப்பிட்டு கண்கலங்கினார். பேராசிரியரின் கண்ணீரைக் கண்ட சபையினர் சில நிமிடங்கள் ஸ்தம்பிதமாகிப் போயினர். மலையகப் பல்கலைக்கழகம் குறித்து பிரஸ்தாபம் எழும்போதெல்லாம் பேராசிரியர் நொந்து போய்விடுவதை நான் அவதானித்திருக்கிறேன்.

**விருதுகள்**

பேராசிரியர் பல்துறை விற்பன்னராவார். கல்வியியலாளருக்குப் புறம்பாக கலை இலக்கியங்கள், இசை ஆகியவற்றில் அதீத ஈடுபாடு கொண்டிருந்தார். ஈழத்திலும் தமிழகத்திலும் இலக்கியப் படைப்பாளர்கள் பலருடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். இரு நூறுக்கு மேற்பட்ட சினிமாப் பாடல்களை இனிமையாகப் பாடும் வல்லமை கொண்டிருந்தார். அவருடன் ஏதாவது விழாக்களில் கலந்துவிட்டு வாகனத்தில் திரும்பினால் ஒரே இசை விருந்துதான். அவருடைய இலக்கிய ஈடுபாடு காரணமாக பதுளை, ஹற்றன், கண்டி முதலிய இடங்களில் நடந்த மலையக சாகித்திய விழாக்களில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஊவா மாகாண கல்விமான்களுக்கான ஆளுநர் விருதும் வழங்கப்பட்டது. எல்லாவற்றுக்கும் சிகரமாக சில வருடங்களுக்கு முன்னர் வித்தியாநிதி என்னும் ஜனாதிபதி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். எத்தகைய விருதுகள், பாராட்டுக்கள் கிடைத்தபோதும் தனது தனித்துவத்தையும் எளிமையையும் சற்றேனும் இழந்துவிடாத புதுமையான மனிதராகவே பேராசிரியர் வாழ்ந்து மறைந்தார்.

**முடிவுரை**

இனம், மொழி, மதம், அந்தஸ்து என எவ்வித பாகுபாடுகளையும் காட்டாது சகலருடனும் அன்புடனும், பாசத்துடனும், எளிமையுடனும் பழகிய பேராசிரியர் திடீரென எம்மிடமிருந்து விடைபெற்றுக்கொண்டார். கடந்த வருடம் ஏப்ரல் 4ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு இக்கட்டுரையாளரை சந்திப்பதாகத் தொலைபேசியில் கூறினார். விடியும் வேளையில் இனி எப்போதுமே அவர் சந்திக்கமாட்டார் என்ற சேதி வந்தது. பேராசிரியரின் திடீர் மறைவினால் அவரைத் தெரிந்த, அவருடன் ஊடாடிய சகலரும் அதிர்ச்சி அடைந்து போயினர்.

இன்னுமொரு பேராசிரியர் சந்திரசேகரத்தை நாம் இன்மேல் காணப்போவதில்லை. எனினும் அவரது நூல்களில், கட்டுரைகளில் அவர் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து கொண்டிருக்கத்தான் போகிறார்.

அவர் கல்வி உலகுக்கு குறிப்பாக மலையகக் கல்வி மே;பாட்டுக்கு ஆற்றிய பணிகளுக்கு மலையகம் என்ன செய்யப்போகிறது? செய்வதற்கு முக்கியவிடயம் ஒன்றுள்ளது. மலையகப் பல்கலைக்கழகக் கோரிக்கையை ஒட்டுமொத்த மலையக சமூகத்தின் குரலாக ஒலிக்கச் செய்யலாமே!?

# "ராஸ்டிரபதிபவன் வாசலில் இருப்பதும் புத்தர் சிலைதான்"

## அவர் இந்தியாவில் பிறந்த சிறந்த மகான்



சிங்கள தமிழ் புது வருடமானது இலங்கையர்களுக்கு ஒரு புதிய பண்டிகையாகும். எனினும் கடந்த 2022ம் ஆண்டில், மக்கள் புத்தாண்டு சடங்குகளை எரிவாயு வரிசைகளிலும் அல்லது எரிபொருள் வரிசைகளிலும் இருந்தவாறே கொண்டாட வேண்டியிருந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று 8 மாதங்கள் கடந்துள்ள நிலையில், புத்தாண்டை மக்கள் தங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடன் வீட்டில் இருந்தவாறே கொண்டாடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

முதலில் எரிபொருட்களின் விலை குறைந்தது. பின்னர் எரிவாயு விலை குறைந்ததோடு, எரிபொருளுக்கான வாராந்த கோட்டாவும் அதிகரிக்கப்பட்டது. அன்று வரிசைகளில் நின்றிருந்த மக்களுக்கு இன்று பயம், அச்சமின்றி உறவினர்களின் வீடுகளுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் திறக்கப்பட்டுள்ளன. சிங்களப் புதுவருடத்திற்கு முன்னர் ஐ.எம்.எப் அமைப்பின் கடன் வசதி கிடைக்கக் கூடாது என எதிர்க்கட்சி பிரார்த்தனை செய்த போதிலும் ஜனாதிபதி ரணிலின் அர்ப்பணிப்புக்கு மத்தியில் எதிர்க்கட்சியின் பிரார்த்தனை பலிக்கவில்லை.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் கடந்த வியாழக்கிழமை நிதி அமைச்சில் ஜனாதிபதி ரணிலின் தலைமையில் பேசப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் வஜிர மற்றும் சாகல ஆகியோருக்கு மேலதிகமாக அமைச்சர்கள் ஷெஹான் சேமசிங்க மற்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோருடன் நிதி அமைச்சின் அதிகாரிகளும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

''எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்களிடத்தில் அரசாங்கம் தொடர்பில் புதிய எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன'' என்றார் ஜனாதிபதி ஆலோசகர் கலாநிதி சமரதுங்க.

"கடந்த வருடம் இந்த காலப்பகுதியில் மக்கள் வரிசைகளில் காத்திருந்தார்கள். ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று சில மாதங்களில் அந்த நிலைமையினை மாற்றி இருக்கின்றார்" என்றவாறு சாகலவும் பேச்சுக்களில் இணைந்து கொண்டார். "ஐ.எம்.எப் வேலைத்திட்டங்களோடு பொருளாதாரம் முற்றாகவே மாறியிருக்கின்றது. இதே நிலையில் இன்னும் சில மாதங்களைக் கடந்து செல்ல முடியுமாக இருந்தால் நாட்டின் பொருளாதாரத்தை மிகச் சிறந்த நிலைக்குள் கொண்டு வந்து விட முடியும்" என்றார் அமைச்சர் ஷெஹான்.

"எப்படியும் நாம் ஜூன், ஜூலை மாதங்களைக் கடந்து விட்டதன் பின்னர் புதிய திசையில் பொருளாதாரம் மாற்றமடைவதால் மக்களின் அனேக பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும்" என்றவாறு அமைச்சர் சியம்பலாபிட்டியவும் பேச்சுக்களில் இணைந்து கொண்டார்.

**எம்.எஸ்.முஸப்பிர்**

"இவர் பிரதமராக இருந்த எல்லா சமயத்திலும் மக்கள் சிங்கள புதுவருடத்தை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அவர் இப்போது ஜனாதிபதி. எனவே மக்களுக்கு வெற்றியே தவிர, தோல்வி ஏற்படப் போவதில்லை என்பது மட்டும் உறுதியானதாகும்" என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர கூறிய போது அனைவரும் தலையை ஆட்டினார்கள்.

நாட்டில் மனித உரிமைகள், ஜனநாயகம் போன்ற விடயங்களில் சர்வதேச நாணய நிதியம் கவனம் செலுத்துவதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் இங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதோடு, ஊழல் ஒழிப்புச் சட்டத்தை கொண்டுவருவதே அவர்களின் தேவையே தவிர வேறு காரணங்கள் பற்றி அல்ல என ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி சமரதுங்க விளக்கமளித்தார்.

ஜனாதிபதி ரணில் கடந்த சனிக்கிழமை அநுராதபுரத்தில் இருந்தார்.

அன்றைய தினம் மாலை அநுராதபுரம் விமானப்படை முகாமுக்கு ஜனாதிபதி விஜயம் செய்தது பாதுகாப்பு பிரிவின் பிரதானிகளுக்கு நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதி போன்றன தொடர்பில் விளக்கமளிப்பதற்காகும். அநுராதபுரம் விமானப்படை தளத்தில் கூடியிருந்த சுமார் 2,000 அளவிலான முப்படைகள் மற்றும் பொலிஸாருக்கு முன்னிலையில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரம் மற்றும் சட்டத்தைப் பாதுகாக்கும் முறைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

தனது உரையினை முடித்துக் கொண்ட ஜனாதிபதி ரணில், விமானப் படை மற்றும் கடற்படைகளின் சாதாரண படைவீரர்கள் இருந்த இடத்திற்குச் சென்று அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். ஜனாதிபதி ஒருவர் இவ்வாறு வருகை தந்து தமது கடமை தொடர்பான விடயங்களைப் பற்றிக் கேட்டறியும் முதலாவது சந்தர்ப்பம் இது என்பதால் அனேகமானோர் குறைந்தளவிலேயே பேசினார்கள். மறுநாள் காலையிலேயே ஜனாதிபதி ஸ்ரீமகாபோதிக்கு அருகில் சென்று புதிய அரிசி விழாவில் கலந்து கொண்டார்.

சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதி அங்கு பேச வேண்டிய போதிலும், இந்த முறை அது நடக்கவில்லை. விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அரசாங்கத்தின் சார்பில் உரையாற்றினார். எட்டு பீடங்களின் தேரரான பல்லேகம ஹேமரதன தேரர் தங்க கிண்ணத்தில் அரிசியைப் போட்டு புத்தரிசி விழாவை ஆரம்பித்து வைத்ததுடன் ஜனாதிபதி, விவசாய அமைச்சர் உள்ளிட்ட கலந்து கொண்டிருந்த மக்களும் அதனுள் அரிசியைப் போட்டு அரச சம்பிரதாயத்தினை நிறைவேற்றினார்கள்.

இதன் போது ஆதிவாசிகளின் தலைவர் வன்னில எத்தோவும் சம்பிரதாயத்தினை நிறைவேற்றுவதற்காக கலந்து கொண்டிருந்தார். அதாவது புத்தரிசி விழாவின் போது தேன் பூஜையினை மேற்கொள்வதற்காகும். அவர் அதனை அரச தலைவரிடம் ஒப்படைத்தது சம்பிரதாய முறைப்படி எட்டு பீடங்களின் தேரரிடம் பூஜை செய்வதற்காகும். ஜனாதிபதி ரணில் இம்முறை அந்த வழக்கத்தை மாற்றி எட்டு பீடங்களின் தேரரிடம் ஒப்படைப்பதற்காக அங்கு வருகை தந்திருந்த சிறுவர்களிடம் அதனைக் கையளித்தார்.

"இவர்கள்தான் நாட்டைப் பொறுப்பேற்க காத்திருக்கும் எதிர்காலத் தலைவர்கள்" எனக் கூறியவாறு ஜனாதிபதி சிறுவர்களின் கரங்களினால் எட்டு பீடங்களின் தேரரிடம் தேன் பூஜையினை கையளித்தார். அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் இச்சந்தர்ப்பத்தில் எடுத்த புகைப்படங்களை அச்சிறுவர்களுக்கு அனுப்புமாறும் ஜனாதிபதி, ஜனாதிபதி ஊடகப்பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

ஜய ஸ்ரீ மஹா போதியை தரிசிப்பதற்காக ஜனாதிபதி உடமல்வத்தை நோக்கிச் சென்றபோது, ஒரு சிறுவன் அவரிடம் வந்து, யாரும் எதிர்பார்க்காத வகையில் ஜனாதிபதியுடன் இணைந்து தரிசிக்கச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்தான். "ஆ, நான் இதற்கு முன்னர் அநுராதபுரத்துக்கு வந்த போது என்னோடு செல்ஃபி எடுத்தவர்தானே இவர்?" என்று கூறிய ஜனாதிபதி, இந்தச் சிறுவனை ஜனாதிபதி அலுவலகத்திற்கு வரவழைக்குமாறு தனது பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்கவிடம் கூறினார்.

உடமாலாவயிலிருந்து அட்டமஸ்தானாதிபதிகளின் இல்லத்திற்கு வந்துகொண்டிருந்தபோது வீதியின் இருமருங்கிலும் நின்றிருந்த சிறுவர்கள் குழுவொன்று ஜனாதிபதியுடன் பேச முன்வந்தது. அவர்களின் ஊரைப் பற்றிக் கேட்டறிந்த ஜனாதிபதி, "ஆ... இவர்கள் எங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்தானே" என்று கூறியதுடன் அவர்களுடன் செல்ஃபியும் எடுத்துக் கொண்டார்.

பின்னர் ஜனாதிபதி ரணில் எட்டு பீடங்களின் நாயக்க தேரர்களுடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார். ஸ்ரீமகாபோதிக்குள் பிரவேசிக்கும் வீதியின் நெரிசல் தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டதோடு, மாற்று வழி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொல்பொருள் இடங்களை இனங்கண்டு அதற்குப் பாதிப்பு ஏற்படாதவாறு புதிய மலசல கூட கட்டமைப்பை நிர்மாணிப்பதற்காகச் செய்யப்பட்ட ஹேமரதன தேரரின் கோரிக்கையினை ஜனாதிபதி ரணில் தனது பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்காவிடம் ஒப்படைத்தார். அவர் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொல்பொருள் திணைக்களம் என்பவற்றோடு கலந்துரையாடி இந்த நடவடிக்கையினை மேற்கொள்வதாக இதன் போது உறுதியளித்தார்.

ஜனாதிபதி மீண்டும் கொழும்பு திரும்பிக் கொண்டிருக்கும் போது முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள மறக்கவில்லை. பின்னர் அவர் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்களுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதி குறித்து விளக்கமளிப்பதற்காக நிதி அமைச்சுக்கு சென்றார். அந்த ஒப்பந்தத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக 18வது தடவையாக மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லும் தேவை ஏற்படாது என அவர் சுட்டிக் காட்டினார். ஏப்ரல், ஜூன் மாதத்திற்குள் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மூன்று சட்டமூலங்கள் பற்றியும் அவர் விரிவுரையாளர்கள், பேராசிரியர்களுக்கு விளக்கமளித்தார். கடந்த திங்கட்கிழமை திட்டமிட்டபடி பணிகளில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில், மாலை அமைச்சரவைக் கூட்டத்திலும் கலந்து கொண்டார். மறுநாள் பாதுகாப்பு பிரிவின் பிரதானிகள் பலர் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக வருகை தந்திருந்தோடு, இந்நிகழ்வில் ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடற்படையினரால் கச்சத்தீவில் புத்தர் சிலை ஒன்றை வைத்தமை தொடர்பில் இந்திய பாராளுமன்றத்தினுள்ளும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்து எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளதாக அங்கு வந்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சரின் கருத்தினை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி, அவரிடம் யாரும் எதிர்பார்க்காத பதில் ஒன்றை கூறினார்.

"ராஸ்டிரபதிபவன் உள்ளே நுழையும் போதே இருப்பது புத்தர் சிலையாகும். இந்தியாவில் பிறந்த சிறந்த நபர் என்றேதான் புத்த பெருமான் அறியப்படுகின்றார். இனி நாம் இதனை எதிர்ப்பதற்கு என்ன காரணம் இருக்கின்றது?" என்று ஜனாதிபதி ரணில் கூறிய விடயத்தைக் கேட்ட இராணுவ அதிகாரிகளும் கூட ஆச்சரியமடைந்தனர். அப்போது இந்திய பாராளுமன்றத்தில் இதைப் பற்றி கூறுவதற்கு எவரும் இல்லை என்று அங்கிருந்தவர்கள் பின்னர் பேசிக் கொண்டனர். அன்று மாலை ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழுவைச் சந்தித்து மே தினம் குறித்து கலந்துரையாடினார். ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தை சுகததாச மைதானத்தில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

# புரையோடிய புண்ணாக முஸ்லிம் அரசியல் மாற்றத்திற்கான இறுதிச் சந்தர்ப்பம்;

## ஏமாற்று அரசியல் இனியும் வேண்டாம்



அரசியல் செயற்பாடுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் முஸ்லிம் சமுதாயத்தை படிப்படியாக அரசியல் அநாதைகளாக்கி நடுத்தெருவுக்குக் கொண்டு வந்து நிறுத்துவதிலேயே வெற்றி கண்டு கொண்டிருக்கின்றன. வடக்கு கிழக்கு உட்பட முழு நாட்டிலும் இன்று முஸ்லிம் சிறுபான்மைச் சமூகம் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அதிகாரப் பதவிகளுக்காக இந்தத் தலைமைகள் பேசத் திராணியற்று மௌனிகளாக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் சமுதாயம் கடந்த காலத்தைப் போன்றே எதிர் காலத்திலும் கேட்பாரற்று அனாதைகளாக, எடுப்பார் கைப்பிள்ளைகளாக கேள்விக்குறிக்குள்ளான சமூகமாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இன்று நேற்றல்ல முஸ்லிம் சமூகம் 50 – 60 ஆண்டுகளுக்கும் மேலாக வெறும் சலுகைகளால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகமொன்று இந்த நாட்டில் இருக்குமானால் அது முஸ்லிம் சமூகமாக மட்டுமே இருக்க முடியும். கடந்த காலத்தைப் போன்று சமகாலத்திலும் பல்வேறுபட்ட, ஏன் ஒட்டுமொத்த நெருக்கடிகளையும் எதிர்கொண்ட சமூகமாகவே முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடும் விடயத்தில் எமது அரசியல் தலைமைகள் தொடர்ச்சியாக தோல்விகளையே சந்தித்து வருகின்றது.

முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பட்டியலிட்டால் அது குறித்து பக்கம் பக்கமாக எழுத முடியும். அறிக்கையிட முடியும். காணிப் பிரச்சினை, மீள் குடியேற்றம், இனவாதப் பிரச்சினை, பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள், புதிய சட்டத் திருத்தம், முஸ்லிம் சட்டத்திருத்தம், தொல்பொருள் வலயங்கள் என பல்வேறு நெருக்குவாரங்களுக்குள் முஸ்லிம் சமுதாயம் சிக்குண்டுள்ளது. இந்த விவகாரங்கள் எதிலுமே உரிய தீர்வைப் பெற்றெடுக்கக் கூடிய அரசியல் திராணி தற்போதைய முஸ்லிம் தலைமைகளிடம் இல்லாதிருப்பது கவலைக்குரியதாகும்.

கூட்டங்களிலும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலும் வீராப்புப் பேசுவதால் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டப்போவதில்லை. இத்தகைய வீராப்புகள் யாவும் அரசியல் இலாபம் கொண்டவையாக மட்டுமே இருக்கின்றன. தங்களது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தக் குற்றச்சாட்டு அவர்கள் மீது வீண் பழி சுமத்துவதல்ல. சமூகத்தின் பிரச்சினைகளை அரசியல் கண்கொண்டு நோக்காமல் சமூக உணர்வோடு பார்க்க வேண்டும். குரல் கொடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே இங்கு குறிப்பிடுகின்றோம். யார் மீதும் அபாண்டம் சுமத்துவது எமது நோக்கமல்ல.

பாராளுமன்றத்தில் இன்று 20 முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தேசியக் கட்சிகள் சார்பாகவும், முஸ்லிம் கட்சிகள் சார்பாகவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்கள் முஸ்லிம்களது பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்றத்திலும் சரி வெளியேயும் சரி பேசும் போது மற்றவர்களுக்கு விரல் நீட்டிப் பேசுகின்றார்களே தவிர யதார்த்தமாகப் பேச முற்படுகிறார்கள் இல்லை.

சில தினங்களுக்கு முன்னர் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ரமழான் நெருங்கிவரும் நிலையில் பேரீச்சம் பழத்துக்கு வரிவிதிப்பு குறித்து குரல் எழுப்பியுள்ளார். இந்த எண்ணம் முஸ்லிம் எம்.பீக்களுக்கு வரவில்லையே. முஸ்லிம் எம்.பீக்களில் பலரும் எதிர்த் தரப்பிலேயே இருக்கின்றனர். அவர்கள் தமது தரப்பு விசுவாசியாக மட்டும் இருக்கப் பார்க்கின்றார்களா? என்ற கேள்வியை மக்கள் எழுப்புகின்றனர். இது நியாயமான கேள்விதானே?

**கலாபூஷணம்**
**எம்.ஏ.எம்.நிலாம்**

முஸ்லிம் அரசியல்வாதிகள் மேடை போட்டுப் பேசி மக்களுக்காக தியாகம் செய்வதாக காட்ட முனைகின்றனர். மேடையை விட்டிறங்கியதும், பேச்சு காற்றில் பறந்துவிடுகின்றது. முன்பொரு தடவை நான் எழுதிய கவிதையொன்று இந்த வேளையில் நினைவுக்கு வருகின்றது. அது இதுதான்.

"எரியும் விளக்கின்
கனன்ற சிகப்பில்
சிறு விட்டில்
வீழ்ந்து மாய்கிறது
வீரமும், தியாகமும்
மேடையில் முழங்கி
காரில் பறக்கிறது!"

இக்கவிதை இன்றைக்கும் பொருந்தக் கூடியதாகவே காணப்படுகின்றது.

முசலியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் முன்னாள் ஜனாதிபதியினால் வனப்பகுதியாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த காணிச் சுவீகரிப்பு குறித்து இன்றுவரையில் எமது தலைமைகளினால் ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேசமுடியாத திராணியற்ற நிலையே தொடர்கிறது. இவர்களால் இன்று வரை ஒன்றுபட்டுப் பேசித் தீர்மானம் எடுக்க முடியவில்லை. காரணம் சுயநல அரசியல் கீழிறங்கி ஒன்றிணையத் தயாராக இல்லை. ஒருவர் ஒரு கருத்தை முன்வைத்தால் மற்றவர் அதற்கு நேர்மாற்றமாகப் பேசி குழப்பும் அரசியலையே இவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர். முஸ்லிம் சமூகம் இன்று அரசியலில் சீரழிந்து கொண்டிருக்கின்றது.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் அனைவரும் ஆதாய அரசியல் நடத்திக் கொண்டிருக்கின்றனர். சமுதாய விடியலுக்கான அரசியல் நடத்தவில்லை. கடந்த மஹிந்த ஆட்சியில் போன்றே கோட்டாபய ஆட்சியிலும் கூட முஸ்லிம் சமூகம் கைவிலங்கிடப்பட்ட சமூகமாகவே நடத்தப்பட்டுக் கொண்டிருந்தனர். உரிமைகளுக்குப் பதிலாக சில்லறைச் சலுகைகளுக்காக எமது சமுதாயம் விலை போய்க் கொண்டிருக்கின்றது. இல்லை விலைபேசி விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இப்படி சந்தர்ப்பவாத ஆதாய அரசியலை எத்தனை காலத்துக்குத் இவர்கள் செய்து கொண்டிருக்கப் போகின்றார்கள் என மக்கள் கேட்கத் தொடங்கிவிட்டனர்.

இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படுகின்ற அநியாயங்களை தட்டிக்கேட்க முடியாத அவலத்துக்குள் முஸ்லிம் தலைமைகள் காணப்படுகின்றனர் ஏன்? அவர்களால் குரல் கொடுக்க முடியவில்லை. இதன் பின்னணி என்ன? அதுதான் ஆதாய அரசியல் வியாபாரம் எனச் சொல்லப்படுகின்றது.

இதுவும் கூட ஆதாய அரசியலில் ஒரு அம்சமாகத்தானிருக்க முடியும். இனவாத அரசியல் தலைவிரித்தாடத் தொடங்கிய நிலையில் கூட எமது தலைமைகள் மௌனிகளாகவே காணப்படுகின்றனர். முஸ்லிம் சமுதாயம் எதிர்கொள்ளும் எந்தவொரு பிரச்சினையிலாவது இந்த முஸ்லிம் தலைமைகள் அனைவரும் ஒரு சந்தர்ப்பத்திலாவது ஒன்றுபட முன்வந்துள்ளார்களா? ஒவ்வொருவரும் தனிவழிப்பாதையிலேயே பயணித்துக் கொண்டிருக்கின்றனர். முஸ்லிம் தலைமைகள் ஒன்றுபடத் தவறியதை ஆறாம் தரப்பு அல்லது பேரினவாதம் தமக்குச் சாதகமாகவே பயன்படுத்திக் கொள்ளும்.

ஆரம்பத்தில் முதலாளித்துவ அரசியல், இடதுசாரி அரசியல் என இரண்டு அரசியலே காணப்பட்டது. பிற்பட்ட காலத்தில் சோஷலிச அரசியல் என்றும், இனவாத அரசியலெனவும் புகுந்து கொண்டன. இவற்றில் அனைவரும் பங்குதாரர்கள்தான். ஆனால் இன்று புதியதொரு அரசியல் பாதை திறக்கப்பட்டுள்ளது. அது ஆதாய அரசியல் இதன் உரிமையாளர்கள் வேறுயாருமல்ல முஸ்லிம் தலைமைகள்தான். முஸ்லிம்களுக்கென தனித்துவ அரசியல் பாதை எப்போது திறக்கப்பட்டதோ அந்த நேர்ப் பாதையிலிருந்து இன்றைய தலைவர்கள் விலகி குறுக்கு வழிகளை அமைத்துக் கொண்டனர். இன்று முஸ்லிம் தலைமைகள் அனைத்தும் சோரம்போன அரசியலையே நடத்திக் கொண்டிருக்கின்றன. இதிலிருந்து விலக வேண்டிய கட்டாயத்தை இவர்கள் உணர வேண்டும். முஸ்லிம் அரசியல் இன்று புரையோடிப் போன புண்ணாக மாறியுள்ளது. பிச்சைக்காரன் காலில் ஏற்பட்ட புரையோடிப்போன இந்தப் புண்ணை நாம் உடனடியாக குணப்படுத்த வேண்டும். அதற்கான தருணம் இன்று ஏற்பட்டுள்ளது. அதற்காக மற்றொரு அரசியல் அணி உருவாக வேண்டுமென நாம் சொல்லமாட்டோம்.

இவர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். சமூகம் என்ற நிலையில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதில் தலைவன், தொண்டன் என்ற நிலையிலிருந்து சற்று இறங்கி வந்து சமூகத்தின் விடியலுக்காக முஸ்லிம் சமூகம் அதன் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஓரணியில் திரள வேண்டும். சமூகத்துக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் வேண்டுமானால் தனித்த அரசியல் பயணத்தை முன்னெடுக்கலாம். அதற்கு யாரும் தடையாக இருக்கப்போவதில்லை. இதனைச் செய்ய அவர்களால் முடியாது போனால் முஸ்லிம் சமூக அரசியலிலிருந்து அவர்கள் வெளியேறுவதே சரியான தீர்வாக இருக்கும். முஸ்லிம் தலைமைகள் தமக்குரிய கடமையை சரிவரச் செய்யத் தவறியதன் காரணமாகவே இன்று முஸ்லிம் சமூகம் அதல பாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

# எதிர்கால இலங்கைக்குள் எதிர்க்கட்சிகளின் ஆயுள்?



புதிய பொருளாதாரக் கோட்பாடுகளைப் பலப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகள் அரசியல் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். அடிமட்டத்தில் வீழ்ந்திருந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் அவரது பயணத்துக்கு இந்த மாற்றங்கள்தான் தேவைப்படுகிறது. இதற்காகத்தான் சகல கட்சிகளதும் ஒத்துழைப்பும் கோரப்பட்டிருந்தது.

சர்வதேசத்திடமிருந்து பெறப்பட்டுள்ள கடன்களை மீளச் செலுத்துவதற்கு முதலில் தேவைப்படுவது அரசியல் ஸ்திரம். இந்த ஸ்திரத்தில்தான் அந்நியச் செலாவணிகளின் உள்ளீடுகள் வரவுள்ளன. இதற்காகவே புதிய பொருளாதாரப் போக்குகள் கடைப்பிடிக்கப்படவுள்ளன. இந்தப் போக்குகள் தேசப்பற்றுக்கும் தென்னிலங்கைக்கும் விரோதமாகக் காட்டப்படலாம். நாட்டின் வளங்கள், நிலங்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்படுவதாக அல்லது அடகு வைக்கப்படுவதாக விமர்சிக்கப்படலாம். இவ்வாறான விமர்சனங்களைத் தோற்கடிக்கும் அரசியல் களத்தை உருவாக்குவதுதான் ஜனாதிபதியின் நோக்கம்.

ஒரு காலத்தில் தென்னிலங்கையை உசுப்பேற்றி, தேசப்பற்றைத் தூக்கிப்பிடித்து ஆட்சிக்கு வந்தவர்களால்தான் இந்த நாட்டுக்கு கடன்சுமை ஏற்பட்டது. இதனால், நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றதை இவர்கள் கண்டுகொள்ளவும் இல்லை, கண்டிக்கவும் இல்லை. இதுபோன்றுதான், ஆட்சிக்காக ஆசைப்படும் அணிகள் இந்த சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களை கண்டிக்கலாம், கண்டுகொள்ளலாம். நாடு இன்றுள்ள நிலையில் இந்தச் சூழ்நிலை ஏற்படக்கூடாது. வாங்கிய கடனை ஒன்றிணைந்து உழைத்து திருப்பிச் செலுத்திவிட வேண்டும். செலுத்தும் வரைக்கும் இலங்கையர்கள் பொறிக்குள் அகப்படவுள்ள ஆட்கள்தான். இந்தப் பொறியென்பது இன்றைய நவீன காலனித்துவமாகவே கருதப்படுகிறது. இவ்வாறான காலனித்துவக் கட்டமைப்புக்குள் செல்லப்போவதில்லை என வீரம் பேசியதால் வந்த வினையிலிருந்து நாம் விடுபடுவது எப்போது? இந்த விடுபாட்டுரிமை உணர்வில் எதிர்க்கட்சிகள் செயற்படுமா? ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலர் எடுக்கவுள்ள முயற்சிகளுக்கு அரசியல் சாயம் பூசப்படுமா? பன்னிரண்டு மணி நேர மின்வெட்டு அமுலை இல்லாமலாக்கி, வளைந்து நெளிந்து செல்லும் பாதைகள் போன்றிருந்த வரிசைகளை இல்லாமலாக்கி மற்றும் அரைப்பிடிச் சோறுமின்றி அடி வயிறுகளுடன் அவதியுற்ற அவல நிலையை இல்லாமலாக்கிய வியூகங்களால் உச்சத்திலுள்ளார் ஜனாதிபதி. இதனால் அவரை விஞ்சவும் முடியாமல், வெல்லவும் முடியாமலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை வேட்பாளராக நிறுத்தலாம். இவரைத் தவிர்த்த வேறு தெரிவுகள் இக்கட்சியினருக்கு ஆபத்தாகவே இருக்கும். இவர்களது இரண்டுங்கெட்ட இருதலைக்கொள்ளி நிலை ரணிலுக்கும் புரிகிறது. எனவே, ஏற்கனவே உயர்ந்துள்ள செல்வாக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இயலாமையும் ரணிலை "கிங்மேக்கர்" ஆக்கியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து சிலர் ஐக்கிய தேசிய கட்சிக்குத் தாவினால் நிலைமைகள் இன்னும் சீரியசாகலாம். தாவாமலிருப்பதை தவிர்ப்பதற்காகவே கடன்களைப் பெறுவதற்காக முன்வைத்த நிபந்தனைகளை பட்டியலிடவும் பகிரங்கப்படுத்துமாறும் கோருகின்றனர். இதனால் தென்னிலங்கையையும் தேசப்பற்றையும் உசுப்பிவிடலாம் எனக் கருதுகிறது ஐக்கிய மக்கள் சக்தி. முன்வைக்கப்பட்ட 15 நிபந்தனைகளில், அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் விடயங்களில் அரசுக்கு சில சங்கடங்கள் ஏற்படத்தான் செய்யும். ஆனாலும் இச்சங்கடங்களை உசுப்பிவிடும் சக்திகளை விடவும் பசியால் வாடும் அல்லது பொருளாதாரப் பிடியில் தவிக்கும் சக்திகள் பலமானதாக இருக்கும். ஸ்ரீலங்கன் விமான நிலையம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை என்பனவற்றை முதலில் தனியார் மயப்படுத்தப்படலாம். எரிபொருள் இறக்குமதி, மின்சார உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களின் கொள்வனவு என்பவற்றுக்கு அதிக அந்நியச் செலாவணிகள் வெளிப்பாய்கின்றன. இதைத் தவிர்ப்பதானால் வெளிநாட்டு நிறுவனங்களின் நிர்வாகத்தின் கீழ் இவற்றைக் கொண்டுவர வேண்டும். விமான சேவைகள் கட்டுக்கடங்காமல் வெளிநாட்டு நாணயங்களை விரயமாக்குகிறது. ஆனால், வரவு வைக்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவுற்று நஷ்டத்திலே இயங்குகிறது. இவ்வாறு நாட்டுக்குச் சுமையேற்றும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் புதிய பொருளாதாரச் சிந்தனைகளைப் பலப்படுத்தவே ஜனாதிபதி புறப்படவுள்ளார். இந்தப் பயணம் வெற்றியிலா அல்லது வேறு ஏதாவது விளைவுகளிலா முடிவடையப்போகிறது? இவை தெளிவாகும் வரைக்கும் ரணிலின் "கிங்மேக்கர்" இமேஜுக்கு முன்னால் எவராலும் எதையும் செய்ய இயலாமலே இருக்கும்.

**சுஐப் எம் காசிம்**

# விலைவாசிகள் சரிவடைவதால் அரசு மீது அதிகரிக்கும் ஆதரவு!

**சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நீடிக்கப்பட்ட நிதியுதவித் திட்டம் தொடர்பான அறிவிப்பு வெளியாகியதைத் தொடர்ந்து படிப்படியாக விலைவாசிகள் குறையத் தொடங்கியுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்து குறுகிய காலத்துக்குள் நாட்டை ஓரளவுக்கு சரியான பொருளாதாரப் பாதைக்கு இட்டுச் செல்ல முடிந்திருப்பது மக்களுக்கு மகிழ்ச்சிதரும் செய்தியாக இருக்கின்றபோதும், சில அரசியல் கட்சிகளுக்கு இது நெருக்கடியான சூழலையே ஏற்படுத்தியுள்ளன.**

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு மக்கள் மத்தியில் வரவேற்புக் கிடைக்கப் பெற்று, நாட்டின் எதிர்காலம் குறித்த நம்பிக்கை ஒளிக்கீற்றுத் தென்படத் தொடங்கியிருப்பதால் எதிர்ப்பு அரசியலை மேற்கொள்ளும் எதிர்க்கட்சிகளுக்கு நெருக்கடியான அரசியல் சூழல் ஏற்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

இவ்வாறு உட்கட்சி நெருக்கடியைச் சந்தித்திருப்பதில் பிரதான எதிர்க்கட்சியை விசேடமாகக் குறிப்பிட முடியும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பிரிந்து வந்து தனியான கட்சியை உருவாக்கியவர்களே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்களின் நிலைப்பாடும், ஜனாதிபதி பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடும் ஓரளவுக்கு ஒத்துப்போகக் கூடியவையாகவே எப்பொழுதும் இருந்து வந்தன. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டபோது, பிரதான எதிர்க்கட்சி நேரடியாக அவருக்கு ஆதரவு வழங்கியிருக்கவில்லை. இருந்தபோதும், ஜனாதிபதித் தெரிவுக்கான நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் வெளிப்படுத்தத் தவறியிருக்கவில்லை.

இதுபோன்ற பின்னணியில், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதியுதவி இலங்கைக்குக் கிடைக்கப் பெற்று, அதன் விளைவாக படிப்படியாக விலைவாசிகள் குறையத் தொடங்கியிருப்பதால், ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்ற விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் கருத்தாடல்கள் இடம்பெறுவதாகத் தெரியவந்துள்ளது.






தொடர்ந்தும் எதிர்ப்பு அரசியல் செய்வதால் எதிர்காலத் தேர்தல்களில் பின்னடைவுகளைச் சந்திக்க நேரும் என்பதால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என ஒரு சாரார் கூறி வருவதாகவும் சில ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலும் இவ்விடயம் குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

அதேநேரம், ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் பலர் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளவிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இருந்தபோதும், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இதனை மறுத்துள்ளார்.

எவரும் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென அவர் கூறியுள்ளார். இருந்தபோதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டுக்கும் இடையில் பாரிய வித்தியாசம் இல்லையென்றும், எனவே, நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஒவ்வாறு இணைந்து செயற்படுவது என்பதைச் சிந்திக்க வேண்டிய தருணத்தில் இருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

## நாட்டை மீட்டெடுப்பதற்காக அரசுடன் இணைந்து பணியாற்றுவதில் எதிரணிக்குள் பலர் நாட்டம்!

சுகாதார அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயார் என அவர் கூறியதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. அது மாத்திரமன்றி, பொருளாதாரத்தில் நிபுணத்துவம் கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரும் அரசாங்கத்தின் சிறந்த செயற்றிட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரிகிறது. இதனால் பிரதான எதிர்க்கட்சி பிளவுபடுவதற்கான ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இருந்தபோதும் இதனைத் தடுக்க எதிர்க்கட்சித் தலைவர் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## பொருளாதார நெருக்கடிகளை சாதகமாகப் பயன்படுத்தி மக்களின் ஆதரவைத் திரட்டுவதில் எதிரணிக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல்!

மறுபக்கத்தில், நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக அரசியல் செல்வாக்குச் சரியத் தொடங்கியுள்ள மற்றுமொரு கட்சியாக தேசிய மக்கள் சக்தி காணப்படுகிறது. கடந்த கால அசௌகரியங்கள் காரணமாக அரசியல் கட்சிகள் மீது கடுமையான வெறுப்பைக் கொண்டிருந்த மக்கள் மாற்று அரசியல் சக்தியாக தேசிய மக்கள் சக்தியைக் கருதத் தொடங்கியிருந்தனர்.

இதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அவர்கள் தமக்கே மக்கள் செல்வாக்கு அதிகம் எனக் காண்பிக்க முயற்சித்தனர். இதற்கான பிரசாரங்கள் வெகுவாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. குறிப்பாக சமூக ஊடகங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டு மக்கள் அலை தம்மீது ஏற்பட்டுள்ளது என்ற தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் முன்னேற்றகரமான செயற்பாடுகள் தேசிய மக்கள் சக்தியினருக்கும் சறுக்கலை ஏற்படுத்தியுள்ளது என்றே கூற வேண்டும். மக்கள் மத்தியில் காணப்பட்ட விரக்தியையும், வெறுப்பையுமே அவர்கள் தமக்கான ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தனர். எனினும், தற்பொழுது அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைக்குறைப்பு உள்ளிட்ட பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதால் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. இதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றே கூற வேண்டியுள்ளது.

இருந்தபோதும், மோசடிக்காரர்களைத் தண்டிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவில்லையென்ற பொதுவான குற்றச்சாட்டு இன்னமும் மக்கள் மத்தியில் காணப்படுவதை எவரும் மறுக்க முடியாது. மோசடிக்காரர்களைத் தொடர்ந்தும் பாதுகாக்காது அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுத்து நாட்டை முன்னேற்றிச் செல்ல வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் பட்சத்தில் நிச்சயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதான மக்களின் நம்பிக்கை மென்மேலும் அதிகரிக்கும். அதேநேரம், அரசாங்கம் பல்வேறு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இதில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டமூலமும் உள்ளடங்குகின்றது.

தெற்காசியாவிலேயே சிறந்த ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கூறியிருந்தார். எதிர்வரும் வாரங்களில் இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கமைய குறித்த சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு ஊழல் மோசடி கட்டுப்படுத்தப்படுமாயின் நாடு விரைவிலேயே பொருளாதார மீட்சியை அடைந்து விடும் என்பதே பொருளாதாரத்துறை சார்ந்தவர்களின் நம்பிக்கையாக உள்ளது.

பி.ஹர்ஷன்...

# சீன நாட்டு மக்களால் போற்றி புகழப்படும் பிரதமர் மோடி!




**சீனாவிலுள்ள இளைஞர்கள் சமூக வலைதளங்களில் பிரதமர் நரேந்திர மோடியை செல்லப் பெயர் சூட்டி பாராட்டி வருகின்றனர். இந்தியாவுக்கும் அண்டை நாடான சீனாவுக்கும் பல ஆண்டுகளாக எல்லைப் பிரச்சினையில் மோதல் போக்கு நிலவி வருகிறது. இந்நிலையில், சீனாவிலுள்ள சமூக வலைதளங்களில் இளைஞர்கள், பிரதமர் நரேந்திர மோடியை பாராட்டி கட்டுரைகள் வெளியிட்டு வருகின்றனர்.**

'சீனா வெய்போ' என்ற சமூக ஊடகம், பிரதமர் நரேந்திர மோடிய 'லொக்ஸியன்' என்று செல்லப் பெயரிட்டு அழைத்துள்ளது. இது குறித்து சீனாவின் மூத்த பத்திரிகையாளர் கூறியதாவது:




'லொக்ஸியன்' என்பது சில வித்தியா சமான திறன்களைக் கொண்ட, என்றும் அழியாத ஒருவரை குறிக்கும் சொல். இது, வேறு எந்தவொரு உலகத் தலைவருக்கும் கிடைக்காத புகழ் ஆகும். மற்றைய தலைவர்களை விட பிரதமர் நரேந்திர மோடி வித்தியாசமானவர், ஆச்சரியமானவர் என சீன மக்கள் கருதுகின்றனர்.

அவரது நடையுடை பாவனையை மிகவும் விரும்பும் மக்கள், அவரது கொள்கைகள் முந்திய இந்தியத் தலைவர்களை விட வேறுபட்டு உள்ளதாகக் கூறுகின்றனர்.

இவ்வாறு சீனாவின் மூத்த பத்திரிகையாளர் கூறியுள்ளார்.

இதுஒருபுறமிருக்க, சர்வதேச அளவில் மிகவும் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவர்கள் அடங்கிய பட்டியலை 'மோர்னிங் கன்சல்ட்' என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்தக் கருத்துக்கணிப்பில் பிரதமர் நரேந்திர மோடி வழக்கம் போல ஆதிக்கம் செலுத்தி வருகிறார்.

'மோர்னிங் கன்சல்ட்' என்ற நிறுவனம் தேர்தல்கள், அரசியல்வாதிகள் மற்றும் மக்கள் பிரச்சினைகள் குறித்த தரவுகளை வழங்கும் தளமாகும். மோர்னிங் கன்சல்ட் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மக்கள் செல்வாக்கு மிக்க தலைவர்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அதன்படி இப்போது புதிய பட்டியலை வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டின் முக்கிய தலைவர்களுக்கு எந்தளவு செல்வாக்கு உள்ளது என்பதை இதில் தெரிந்து கொள்ளலாம்.

## உலகில் வேறெந்தவொரு நாட்டின் தலைவருக்கும் கிடைக்காத உயர்ந்த கௌரவப் பெயரை இந்தியப் பிரதமருக்கு சூட்டி பாராட்டும் சீன இளைஞர்கள்!

இந்தப் பட்டியலில் கடந்த காலங்களில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியே ஆதிக்கம் செலுத்தி வந்தார். இந்தியப் பிரதமர் மோடி இந்தாண்டும் அதற்கு விதிவிலக்கு இல்லை. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் ஆகியோரை பின்னுக்குத் தள்ளி இந்தாண்டும் உலகின் பிரபலமான தலைவராக பிரதமர் நரேந்திர மோடி உருவெடுத்துள்ளார்.

'மோர்னிங் கன்சல்ட்' நிறுவனத்தின் இந்த முடிவை தனது ட்விட்டரில் பகிர்ந்துள்ள மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், பிரதமர் நரேந்திர மோடி மிகவும் நேசிக்கப்பட்ட மற்றும் போற்றப்பட்ட தலைவராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் 22 முதல் 28 வரை பெறப்பட்ட தரவுகள் அடிப்படையில் இந்தப் பட்டியலை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் 18 வயதுக்கு மேலானவர்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தி ஏழு நாள் சராசரி அடிப்படையில் இந்தப் பட்டியலை உருவாக்கியுள்ளனர். மோர்னிங் கன்சல்ட் நிறுவனத்தின் இந்த கருத்துக்கணிப்பு முடிவின் அடிப்படையில் பிரதமர் நரேந்திர மோடி 76 வீதம் வாக்குகளுடன் முதல் இடத்தில் உள்ளார்.

இதற்கு முன்னதாக கடந்த வாரம் வெளியான இந்தியாவின் சக்திமிக்க நபர்கள் பட்டியலிலும் பிரதமர் நரேந்திர மோடி உச்ச இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மோர்னிங் கன்சல்ட் நிறுவனத்தின் இந்தப் பட்டியலில் நரேந்திர மோடி முதல் இடத்தில் இருக்கும் நிலையில், மெக்சிகோ நாட்டின் அண்ட்ரேஸ் மனுவல் லோபஸ் ஒப்ரடோர் 61 வீதம் வாக்குகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். அவரைத் தொடர்ந்து அந்தோனி அல்பானீஸ் (அவுஸ்திரேலியா) 55 வீதம் மற்றும் அலைன் பெர்செட் (சுவிட்சர்லாந்து) 53 வீதம் ஆகியோர் 3 மற்றும் 4 ஆவது இடத்தில் உள்ளனர்.





## அமெரிக்க, பிரிட்டன் தலைவர்களுக்கும் கிடைக்காத சர்வதேச கௌரவம்

லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா (பிரேசில்) 49 வீதம், ஜியோர்ஜியா மெலோனி (இத்தாலி) 49 வீதம், ஜோ பைடன் (அமெரிக்கா) 41 வீதம் ஆகியோர் 5 முதல் 7 இடங்களைப் பிடித்துள்ளனர்.

பெல்ஜியம் நாட்டின் அலெக்சாண்டர் டி குரூ 39 வீதம் வாக்குகளுடன் 8 ஆவது இடத்தில் இருக்கும் நிலையில், ஜஸ்டின் ட்ரூடோ (கனடா) 39 வீதம், பெட்ரோ சான்செஸ் (ஸ்பெயின்) 38 வீதம் ஆகியோர் 9 மற்றும் 10ஆவது இடத்தில் உள்ளனர்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் 34 வீத ஆதரவுடன் 13ஆவது இடத்தில் உள்ளார். அதேபோல ஜப்பான் பிரதமர் 16ஆவது இடத்திலும் தென் கொரிய பிரதமர் 16 ஆவது இடத்திலும் உள்ளனர்.

ஒன்லைன் வாயிலாக கருத்துக் கணிப்பு நடத்தி இந்தப் பட்டியலை அவர்கள் உருவாக்கியுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் இந்தாண்டு ஒரு இடம் சரிந்துள்ளார். மொத்தம் 22 நாடுகளில் இருந்து பட்டியல் வெளியாகியுள்ள நிலையில், செக் குடியரசு பிரதமர் பெட்ர் ஃபியாலா, பிரான்சின் இம்மானுவேல் மக்ரோன் மற்றும் தென் கொரிய அதிபர் யூன் சியோக்யூல் ஆகியோர் கடைசி மூன்று இடங்களைப் பிடித்துள்ளனர்.

இம்முடிவுகளை வைத்துப் பார்க்கும் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் புகழ் சற்றும் குறையாமல் சர்வதேச அரங்கில் அதிகரித்தபடியே செல்வது நிரூபணமாகியுள்ளது.

சீனாவிலும் நரேந்திர மோடியின் புகழ் அதிகம் பரவியுள்ளமை வியப்பாக உள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியை சீன நெட்டிசன்கள் 'தி இம்மோர்டல்' (அழியாத) என்று பயபக்தியுடன் குறிப்பிடுகிறார்கள் என்று 'தி டிப்ளமேட்' பத்திரிகையில் பத்திரிகையாளர் மு சுஷன் எழுதியுள்ளார்.

'சீனாவில் இந்தியா எப்படி பார்க்கப்படுகிறது?' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் கீழ் இந்தியா முக்கிய நாடுகளிடையே சமநிலையை பராமரிக்க முடியும் என்று பெரும்பாலான சீனர்கள் கருதுவதாக மு சுன்ஷன் கூறுகிறார். மு சுன்ஷன் சீன சமூக ஊடகங்களை, குறிப்பாக சினா வெய்போவை பகுப்பாய்வு செய்வதில் பெயர் பெற்றவர்.

எஸ்.சாரங்கன்...

# ஐ. நா உடன்படிக்கைகள் முழுமையாக நடைமுறையானால் மட்டுமே மலையக பெண் சமுதாயம் எழுச்சி பெறும்

## ம.ம.மு உபதலைவர் சதீஷ்குமார் தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு அமைய மனித உரிமைகள் சார்ந்த சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தங்களை அரசுகளும் அரசுசார்பற்ற அமைப்புகளும் முழுமையாக ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தினால் மட்டுமே ஆட்சியில், பொது நிர்வாகம், சமூக, பொருளாதார, கலாசார, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் அனைத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான சம உரிமைகளின் சமத்துவத்தை உறுதிப்படுத்த முடியுமென மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

மலையக மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே இராதாகிருஷ்ணன் தலைமையில் கொட்டகலை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மகளிர்தின கலாசார விழாவில் சிறப்புரையாற்றிய போது முனைவர் சதீஷ்குமார் மேலும் கருத்து தெரிவிக்கையில்

ஒரு நாட்டின் முழுமையான வளர்ச்சிக்கு சமூகங்களின் எழுச்சி மற்றும் உலக பொதுநலன்கள் சார்ந்த சமாதான சமரச முயற்சிகள் உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் இன மத, மொழி, சாதி, கலாசார, அரசியல், பிரதேச பாகுபாடுகளை தவிர்ப்பது கட்டாயமானது. அதேபோன்று ஆண், பெண் பாகுபாடற்ற அனைவருக்கும் சகல சுதந்திரமும் பாதுகாப்பும் திட்டவட்டமாக உறுதிப்படுத்தபடல் வேண்டுமென்பதே சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரதான நோக்கமாகும்.

எமது இலங்கை நாட்டை பொறுத்தவரை மலையகப் பெண்கள் குடும்ப நலன்கள், தாய்மைப்பேற்றின் மகத்துவம் மற்றும் தங்களது பிள்ளைகளை வளர்ப்பதையும் விட முன்னுரிமையாக நாட்டின் மொத்த பொருளாதார வளர்ச்சிக்காக உழைத்து அந்நிய செலவாணியைப் பெற்றுதரக்கூடிய உயரிய உழைக்கும் வர்க்கத்தினராக பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். ஆனாலும் ஏனைய சமூகங்களின் வாழ்வியல் ஆதாரங்களோடு ஒப்பிடுகையில் இன்னும் துரிதமாக எழுச்சிபெற வேண்டியவர்களாகவே உள்ளனர். வாழ்வின் பல்வேறு முக்கிய விடயங்களில் சமூக மாற்றம் தேவையாகிறது எனவே தாமதமின்றி இதற்காக சர்வதேச படிப்பினைகளை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு சரியான கால இலக்குகளை மையப்படுத்திய ஆய்வுகளை மேற்கொண்டு சீர்திருத்த கொள்கைகளை திட்டமிட்டு அமுலாக்க வேண்டும்.

சமூகம் சார்ந்த தலைவர்கள், நிபுணத்துவமிக்கவர்கள் ஏனைய ஆர்வலர்கள் எல்லோருமாக இணைந்து சகல பேதங்களையும் மறந்து ஓரணியில்திரள முன்வர வேண்டும். அப்போதுதான் ஆட்சியாளரினதும் சர்வதேசத்தினதும் கவனத்தையும் இலகுவாக ஈர்க்க முடியும்.

இலங்கை சுதந்திரமடைந்து எழுபத்தைந்து ஆண்டுகளை கடந்துள்ளபோதிலும் தமிழ் மக்கள் மீதான பாகுபாடுகளையும் சிறுபான்மை சமூகங்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பது அத்துமீறல் பாதுகாப்பின்மை போன்ற பல்வேறு நிலைமைகளையும் சீராக அவதானிக்க வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், மலைநாட்டு பகுதிகளிலும் மட்டுமல்லாமல் பல்வேறு பகுதிகளிலும் பெரும்பான்மை சமூகங்கள் மத்தியில் சிதறி வாழும் இந்திய வம்சாவளியினரும் கடந்த பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்ட நிலையில் அதிகமான இழப்புகளையும் சந்தித்துள்ளனர்.

எனவே இனிமேலும் மொழி பிரதேச பாகுபாடுகளை தவிர்த்து நீதி நியாயமான வளர்ச்சி பெற்ற மக்களாக மாற்றம் பெறுவதற்கு அமைப்பு ரீதியாக ஐநா நிறுவனங்கள் ஊடான மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளில் அதிகமாக எமது மக்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். கடந்த வருடம் இலங்கையில் ஏற்பட்ட இளைஞர் எழுச்சி மற்றும் ஆட்சி மாற்றம் என்பன நல்ல உதாரணங்களாகும். எனவே இனியும் தாமதமின்றி நாட்டில் இப்போது ஏற்பட்டு வரும் இணக்கப்பாட்டுடன் அரசியல் சூழ்நிலையில் நாம் சாமர்த்தியமாக காய் நகர்த்த வேண்டும். இதற்காக ஐ. நா நிறுவனங்களை நாட வேண்டும். ஏற்கனவே சமாதான சமூக அபிவிருத்திக்கான பொருளாதார அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் பல்வேறு பிரச்சினைகளை தொடர்பாக தீர்வுகளை எட்டும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள் என. எனவே இணைந்து பணியாற்றுவோம் என்றார்.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இரா ராஜாராம், மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சாவித்திரி ஜோதி, அதிபர்கள் ஆசிரியர்கள் கலைஞர்கள் மாதர் சங்கம் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.








கொழும்பு புதுச்செட்டித்தெரு இலங்கை சீரடி சாயி மத்திய நிலையத்தின் இராஜகோபுர நிர்மாண முதலாவது வருடாந்த மஹோற்சவம் மூன்று நாட்கள் நடைபெற்றது. பங்குனி உத்திர பௌர்ணமி தினமான புதன்கிழமை சாயி நிலையத்தின் தலைவர் எஸ். என். உதயநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிவஸ்ரீ நாகபட்டினம் கார்த்திகேய குருக்களின் கிரிகைகளை தொடர்ந்து மங்கள ஆராத்தியுடன் பஜனை நடைபெறுவதையும் கலந்து கொண்ட வர்களையும் காணலாம்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் "மாசிக ரெங்கும்" இசை நிகழ்ச்சி கடந்த வெள்ளிக்கிழமை (7)காலை கூட்டுத்தாபனத்தின் ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பாடக, பாடகிகளுக்கு வானொலிப் பெட்டிகளை பரிசாக வழங்குவதையும் ஏனைய அதிகாரிகளையும் காணலாம்.



யாழ். சிறுப்பிட்டி தழிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் 250 மாணவர்களுக்கு கழுத்துப் பட்டி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது, யாழ். மாவட்ட தேசோதய தலைவரும் முன்னாள் மாநகரசபை உறுப்பினருமான லயன் கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன், பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக் கிணங்க கழுத்துப்பட்டிகளை வழங்கினார். கனடாவிலுள்ள மிட்லான் மல்டிமிடியா நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பில் இவை வழங்கப்பட்டன. (படம் வேலணை குறூப் நிருபர்)






# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067


## NALANDA GATE

Off Campbell Place, Colombo 10



COC AVAILABLE 50% Sold

Ready For Occupation

Studio - 318 to 503 sq ft
1 BR - 673 sq ft
2 BR - 844 to 1053 sq ft
3 BR - 1400 sq ft

0778 086 728
KHANE



## கொழும்பு 03 இல் காலி வீதிக்கு முகப்பாக வர்த்தக கட்டிடமொன்று வாடகைக்கு அல்லது குத்தகைக்கு

- மொத்தமாக 28,000 ச.அடி, ஒவ்வொரு மாடியும் 5000 ச.அடி.
- ஒவ்வொரு மாடியிலும் ஜி + 5 மாடிகள் 2 குளியலறைகளுடன் (ஆண் மற்றும் பெண்)
- முழுமையாக வளிச்சீராக்கலிடப்பட்டது (Daikin VRV 2)
- 2 மிட்சுபிஷி மின்தூக்கிகள் (9 பயணிகளுக்கானது)
- ஆயத்தநிலையிலுள்ள மின்பிறப்பாக்கி
- தரை கீழ் மாடியில் போதுமானளவு வாகன நிறுத்துமிடம்
- புதிதாக புணர்நிர்மாணிக்கப்பட்டது.

தொடர்பெண் : 0777 235 235

## INVESTMENT OPPORTUNITY
## EXPORT COCONUT INDUSTRY

GOLDEN INVESTMENT OPPORTUNITY IN THRIVING EXPORT COCONUT INDUSTRY LOCATED IN COCONUT TRIANGLE.

Investment required for **further expansion to cater growing export orders.** Share in ownership considered.
**Payback Period is approximately 5 years.**
Located in **Prime location facing main highway,**
Asset value too will be appreciating.
**WELCOME INVESTORS CAPABLE TO INVEST ABOVE 100 MILLION**

E-mail : investoppcoco@gmail.com
Phone - 0322 221 050

Is your Business Struggling? / ව්‍යාපාරය අමාරුවෙන්ද?
Is your Business Making Losses? / ව්‍යාපාරය අලාභද?
Does your Business Need Financial Support? / ව්‍යාපාරය මූල්‍ය පහසුකම් අවශ්‍යද?



Call us for Outright Purchase or Joint Ventures
අප අමතන්න 0722 40 11 04
123, Dudley Senanayake Mawatha, Colombo 08.

## S N TRADING COMPANY (PVT) LTD

071-7 808 043 CALL US
www.sntrading.lk




සියලුම JEEPS සහ DOUBLE CABS RECONDITIONED/ BRAND NEW
GENUINE PARTS

TOYOTA MITSUBISHI NISSAN LAND ROVER

NO. 335, HIGHLEVEL ROAD, NUGEGODA
TEL : 0112 827 994/5
FOLLOW US




## KADUWELA
AT VIHARA MAWATHA

34.8 perch land very close to Katunayake Express way with water, Electricity, Telephone facilities for IMMEDIATE SALE
VERY CLOSE TO SLIIT AND CINEC UNIVERSITIES
Call : 0777 300 688

## ATHURUGIRIYA



11 Million

10 perch Land with water and Electricity, Facing “Nature Park”
Contact - 0754 878 487

## HOUSE FOR SALE WATTALA

Two Storey 16.5 perches 3054 square feet, 7 perches side garden swimming pool, AC throughout the house, 2 vehicles parking available, viewing is highly recommended,
**69 million**
900m to Wattala town



INSPECTION BY APPOINTMENT ONLY
0742 330 345

## Land - FOR SALE IN NUWARA ELIYA

LOCATED IN THE BEAUTIFUL SCENIC MISTY MOUNTAINS NEAR HAGGALA GARDENS
Padinawela, Boragas
24.5 Perches Prime Land Property
LKR 360,000 per perch (Negotiable)
Contact - 0773 507 005 Or 0777 751 788

# வாரமஞ்சரி BUDGET aDZ

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067







## சுற்றுலாத்துறை தொழில்துறைக்காக

இரு **KDH** வேன்கள் நீண்ட கால வாடகை அடிப்படையில் தேவைப்படுகின்றன

பிரசாத் என்பவருடன் பின்வருமாறு தொடர்பு கொள்ளவும்.

**0776 512 050, 0741 907 785**










## வெற்றிடம்

விலங்கு பராமரிப்பு தொடர்பில் அக்ரிகல்ச்சர் டிப்ளோமாதாரி (கோழி பராமரிப்பு) 30 வயதிற்குக் குறைவான திருமணமாகாத இரண்டு இளைஞர்கள் தேவை. யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் வசிப்பவர்களாகவும் மற்றும் சிங்கள மொழி கதைப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**St. Mary's Feeds (Pvt) LTD,**
183/2,Galpotha Road,Bollaththa,Ganemulla
**0778839513**







## வாரமஞ்சரி BUDGET aDZ போட்டோ குறும் விளம்பரம்

### TOYOTA REGISTERED



Toyota KDH TRH 200v 2017 Engine capacity 1990 cc petrol Efi Alto Triptonic transmission Silver colour 12 air bages, Mileage 47790 km Price - Rs. 18,000,000/- Negotiable Contact No.
**0753 944 872**
022269-1

வாரமஞ்சரி
போட்டோ குறும் விளம்பரம்



Amal
077 7 270 443
Asela
077 313 0 150

### TOYOTA REGISTERED



Toyota Carina TI, Diesel, year of manufacture 1997, registered in the year 2000, mileage 157,000 Km, maintenance and emission test reports are available. First registered owner, power steering, DVD, Reverse Camera, Automatic Transmission of oil and engine oil, filters replaced recently, full option, new tyres, shock absorber, alloy wheels, revenue licence upto year 2024 and leasing facilities can be arranged. Price 42 lakhs, price negotiable only after inspection, Bellanwila-
**0779 109 614** 022263

### Mercedes-Benz REGISTERED



Mercedes Benz E200 2010 Company brand new German import, Blue efficiency Original paint Michelin tyres Untouched interior Accident free, 100% Harmon cardon sound system inbuilt,Dimo maintained until 2019 After that maintained by Ravindra,No pending repairs or errors , Mercedes Benz catalog available with pouch, 2 keys available,Contact
**077 - 1084048**
022295

### Mercedes-Benz REGISTERED



Mercedes Benz, 18.5 lakhs. Negotiable. well maintained Very good condition Diesel
**0776741628** xxx-00

### MITSUBISHI REGISTERED



2013 Montero center wheel Diesel in 100% clean + original, condition seen @ Dehiwala, asking price 170k, negotiable.
**0771 918 938** xxx-00

### BMW REGISTERED



BMW 520D year 2012 used triptronic Diesel, Engine Capacity,1995 cc, mileage 251000 km, AC, PS, Cruise control, Beige Leather interior Price - Rs 13,000,000/-Negotiable. Contact
**0753 944 872**
022269-2




### LAND ROVER REGISTERED



Land Rover Range Sport HSE 2018 used SUV/ 4x4, Engine Capacity 2000cc ,country of origin UK,Grey - Wrapped with white colour – leather Electric memory seats- triptronic Diesel Mileage 93000 km Price Rs. 60, 000, 000/-Negotiable
**0753 944 872**
022269-3




### OTHERS REGISTERED



Tata Hitachi 470 H, year of manufacture 2018, 02 excavators used in this country for a short period, available for sale. Contact Krishantha, Galle
**0773 033 624**
022141



2008, Scorpio Mahendra single cab, Diesel, manual, asking price Rs. 18.50/-, seen @ Dehiwala, Call **077 191 8938**
xxx-00






# ஈஸ்டர் சிறப்பிதழ்





## உயிர்ப்பின் சாட்சிகளாவோம்!

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழாவினை ஈஸ்டர் பண்டிகையாக உலகமெங்கும் வாழ்கின்ற கிறிஸ்தவ மக்கள் கொண்டாடுகின்றார்கள்.

உயிர்ப்பு பெருவிழா வெறுமனே ஒரு பண்டிகை மாத்திரமன்று. அது கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களின் நம்பிக்கைப் பெருவிழாவாகும்.

திருத்தூதர் பவுல் கொரிந்து நகர மக்களுக்கு எழுதிய தமது மடலில் 'கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்' (1 கொரி 15:14) என்று குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பின் செய்தியானது தொடக்கத் திரு அவையினரின் அடிப்படைச் செய்தியாகும். அச்செய்தியில்தான் அவர்களது மறைவாழ்வு தங்கியிருந்தது.

திருத்தூதர் பணி நூல் பறைசாற்றுகின்ற திருத்தூதர்களினதும் அவர்களைப் பின் தொடர்ந்த நம்பிக்கையாளர்களினதும் மறைசெய்தியின் மையம் யாதெனில் "வாழ்வுக்கு உயிரான நீங்கள் அவரை கொன்றீர்கள், கடவுள் அவரைச் சாவினின்று உயிர்ப்பித்தார், அதற்கு நாங்கள் சாட்சிகள்"( திருத்தூதர் பணி 2: 22 – 23) என்பதாகும்.

அத்தகைய சாட்சியத்திற்காக அவர்கள் பல்வேறு துன்பங்களையும், சொல்லடிகளையும், கல்லடிகளையும், கசையடிகளையும், சிறைவாழ்வையும், ஏன் சாட்சிய மரணத்தையுமே சந்தித்தார்கள். இயேசுகிறிஸ்துவின் மரணத்தை வென்ற உயிர்ப்பானது திரு அவையின் பிரதானமானதும் மிகவும் முக்கியமானதுமான பெருவிழாவாகும். இவ்விழா மரணத்திற்கான கடவுளின் நிரந்தரப் பதிலாகும்.

கடவுளை விட இவ்வுலகில் எதுவுமே உறுதியானதும் வலிமை வாய்ந்ததும் கிடையாது. தமது உயிர்ப்பினால் இயேசுகிறிஸ்து சாவையும், பாவத்தையும் வெற்றி கொண்டார். இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பினைக் குறித்து புனித ஜோன் கிறிஸ்சோஸ்தம் என்பவர் பின்வருமாறு பதிவு செய்கிறார்: "கடவுளை அன்பு செய்கிற மற்றும் பக்தியுள்ள எல்லா மாந்தரும் ஒளிமயமான இவ்விழாவின் மகிழ்வில் திளைக்கட்டும், ஞானமுள்ள பணியாளர்கள் யாவரும் ஆனந்தத்துடன் கடவுளின் மகிழ்வில் நுழையட்டும். தவக்காலத்தின் பாரங்களை எல்லாம் சுமந்த அனைவருமே தற்போது தங்களுக்கான கைமாறினைப் பெற்றுக்கொள்ளட்டும். முதல் மணித்துளியிலிருந்து கடுமையாக உழைத்தவர்கள் எல்லோரும் தங்களுக்கான உரிய பரிசினைப் பெற்றுக்கொள்ளட்டும், அனைவரும் வாருங்கள், வந்து ஆண்டவரின் மகிழ்வில் இணைந்து கொள்ளுங்கள்." என்று அவர் தெரிவிக்கின்றார்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பில் எமக்கு நினைவிற்கு வருவது அவர் அனுபவித்த கொடூரமான பாடுகளும் அதனால் ஏற்பட்ட சிலுவை மரணமுமேயாகும்.

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு போன்ற அவரது இறுதிக்கட்ட நிகழ்வுகளை நற்செய்தி நூல்கள் யாவுமே பதிவு செய்துள்ளன. அப்பதிவுகளின் அடிப்படையில் யூதர்களின் ஒய்வு நாளுக்கு முந்திய நாளில் இயேசு சிலுவையில் மரணித்தார் என்பது உறுதியாகிறது.

மரணித்த அவரது உடலை அரிமத்தியா ஊர் யோசேப் என்கிறவர் உரோமை ஆளுநர் பிலாத்துவிடம் அனுமதி பெற்று சிலுவையிலிருந்து இறக்கி தமக்கென அவர் கொள்வனவு செய்து வைத்திருந்த கல்லறையில் அடக்கம் செய்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசு வாழ்ந்தபோது இறந்து மூன்றாம் நாளில் உயிர்பெற்றெழுவேன் என்று கூறியிருந்த காரணத்தால் அவரது நம்பிக்கையாளர்கள் அவரது உடலை எங்காவது ஒளித்துவிட்டு, அவர் உயிர்த்து விட்டார் என்று பொய்யான செய்தியினைப் பரப்புவார்கள் என்கிற காரணத்தால் யூதர்கள் பிலாத்துவிடம் அனுமதி பெற்று கல்லறையினை முத்திரையிட்டு மூடி, அதற்கென காவலர்களையும் நியமித்தார்கள் (மத்தேயு 27: 57 – 66).

ஓய்வுநாளின் பின்னர் வாரத்தின் முதல் நாளில் நாடு முழுவதும் நிலநடுக்கம் உண்டாக, கல்லறையை மூடியிருந்த கல் தானாவே விலகிக்கொண்டது.

அன்று அதிகாலையிலேயே கல்லறைக்கு சென்ற பெண்கள் கல்லறையை மூடியிருந்த கல் விலகியிருப்பதையும், அங்கு அடக்கம் பண்ணப்பட்டிருந்த இயேசுவின் உடல் இல்லாதிருப்பதையும் கண்டு அதிர்ச்சிக்குள்ளானர்கள்.

அப்போது அங்கு வானதூதர் அவர்களிடம் "உயிர்த்தவரை இறந்தோரிடையே தேடுவானேன் அவர் சொன்னபடி உயிர்த்து விட்டார்" (மத்தேயு 28: 1 – 10) என்று உயிர்ப்பின் செய்தியினை எடுத்துரைக்கின்றனர்.

அவர்களும் சென்று தாங்கள் கண்டவற்றையும், கேட்டவற்றையும் திருத்தூதர்களுக்கு எடுத்துரைத்தார்கள். அவரது உயிர்ப்பின் பின்னர், இயேசு கிறிஸ்து தமது விண்ணேற்றம் வரையிலான காலப்பகுதியில் தமது உயிர்ப்பின் காட்சிகளால் திருத்தூதர்களையும், நம்பிக்கையாளர்களையும் உறுதிப்படுத்துகின்றார்.

இயேசு கிறிஸ்துவின் வெற்றுக் கல்லறையும், அவரது உயிர்ப்பின் பின்னரான காட்சிகளும் அவரது உயிர்ப்பிற்குச் சாட்சியம் கூறும் அடையாளங்களாக மிளிர்வதனை நற்செய்திகளில் காணலாம்.

நற்செய்திகளில் காணப்படுகிற இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் செய்தியே தொடக்கத் திரு அவையினரின் மறையுரை போதனையாக வரலாற்றில் மிளிர்ந்தது.

திருத்தூதரின் போதனையால் உறுதிபெற்ற இறைமக்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் சாட்சிகளாகத் திகழ்ந்தார்கள். அத்தகைய உயிர்ப்பின் போதனையே கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேல் கத்தோலிக்க, கிறிஸ்தவ திரு மறைகளின் போதனையாக உலகமெங்கும் தொடர்கிறது.

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பினால் திடம் கொள்கின்ற திரு அவையானது தனது உயிர்ப்பின் பணியினை இன்றுவரை மாந்தர் அனைவரின் மத்தியிலும் முன்னெடுத்து வருகின்றமை நோக்கத்தக்கது.

இன்று மனிதரை வாட்டுகின்ற பல்வேறு விதமான அடிமைத்தன கட்டுகளிலிருந்து விடுதலை அடையவேண்டிய தேவை உலக மாந்தர் அனைவருக்கும் உள்ளது.

நவீன அடிமைத்தனங்களாகிய நுகர்வுக் கலாசாரம், சமூக வலைத் தளங்கள் மீதான அதித நாட்டமும் அதனால் ஏற்படுகிற ஏமாற்றமும், இளம் பராயத்தினரிடம் அதிகரித்து வருகின்ற தற்கொலைகள், குடும்ப வாழ்விற்கு எதிரான குற்றங்களும், பாவங்களும், மிதமிஞ்சிய போதைப்பொருள் பாவனை, சூழலை மாசுபடுத்துகின்ற அநீதிச் செயல்கள், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், சிறுவர்களுக்கு ஏதிரான துஷ்பிரயோகங்கள், அதிகார துஷ்பிரயோகங்கள், சாதியக் கொடுமைகள், சமய, இனக் குழுக்களுக்கிடையிலான மோதல்கள், இனவாதச் சிந்தனைகள், சமய அடிப்படைவாதம் என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இத்தகைய அடிமைத்தனங்கள் உள்ளவரை உயிர்ப்பு பெற்ற சமூக வாழ்வினை நோக்குவது எட்டாக்கனியாகும்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு சமூக வாழ்வில் உயிர்ப்புப்பெற வேண்டுமாயின் அது முதலில் தனி மனிதனில் உயிர்ப்புக்காண வேண்டும்.

மனிதன் தன்னில், தன்னை அடிமைப்படுத்தும் காரணிகளுக்கு மரணிக்காதவரை உயிர்ப்பு என்பது சாத்தியமற்றதே.

திருத்தூதர் பவுல் உரோமை நகர மக்களுக்கு எழுதிய மடலில் "கிறிஸ்துவுடன் உயிர்த்தெழு அனைவரும் முதலில் அவருடன் இறக்க வேண்டும்"(காண்க: உரோமையார் 6:5–11) என்பார். அதாவது மனிதர்களை அடிமைப்படுத்துகின்ற பாவங்களுக்கு இறக்க வேண்டும். அவ்வாறு இறந்தால்தான் புது மானிடராய் வாழ்வுக்கு உயிர்க்க முடியும்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா வெறுமனே கொண்டாட்டத்திற்கானது மாத்திரமல்ல மாறாக, ஒவ்வொருவரும் உயிர்ப்பின் சாட்சிகளாய் மாறி அடிமைப்பட்டவர்களை உயிர்ப்பிக்கும் உன்னத உயரிய பெருவிழாவாகும்.

இயேசுகிறிஸ்துவின் அத்தகைய உயிர்ப்பின் சாட்சிகளாய் மாறி நாமும் அவரது விருப்பத்தின் படி வாழ்ந்து அடுத்தவர்களையும் உயிர்ப்பித்து வாழ்வினை அர்த்தமுள்ளதாக்குவோம்.

அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா நல் வாழ்த்துக்கள்! அல்லேலுயா நம் ஆண்டவர் உயிர்த்தார் அல்லேலுயா!!

அருட்பணி அ.அ.நவரெத்தினம் (நவாஜி)
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்)

## இறையன்பை பறைசாற்றும் உயிர்ப்பின் திருநாள்

"திகிலுற வேண்டாம். சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் இங்கே இல்லை."(மாற்கு:16:06)

உலகம் முழுவதும் உரோம ஆளுகையின் ஆட்சியதிகாரங்களுக்கு உட்பட்டிருந்த காலம் பலஸ்தீன தேசத்தில் யூத சமயத் தலைவர்களின் சட்டக் கோட்பாடுகள் ஏழை எளிய மக்களுக்கு சுமையாக இருந்த காலம் அது.

மரியா சூசை என்போரின் மைந்தன் இயேசு எனும் பெயரிடப்பட்டவரும் இறை போதனையை நிகழ்த்தி வந்ததினால் போதகர் என அர்த்தம் கொள்ளும் யூத மொழியில் ரபீ என மக்கள் கூட்டத்தினரால் அழைக்கப்பட்ட தேவ சாயலை ஒத்தவருமான யூத இளைஞன் யூத சட்டங்களை மீறியதாகவும் தேவமைந்தன் என தன்னை அழைத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு ரோம சட்டத்தின்படி உச்ச தண்டனையான சிலுவை மரணத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்த அவரது உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு கல்லறையின் நுழைவாயிலில் பாரிய கல் கொண்டு மூடப்பட்டு முத்திரையிடப்பட்ட போதிலும் அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

3ஆம் நாளில் பரவிய இயேசு எனும் இறைமைந்தன் சிலுவை மரணத்தை ஜெயித்து உயிர்த்த அந்த செய்தி யூத சமயத் தலைவர்களுக்கும் ரோம ஆட்சியாளர்களுக்கும் ஆச்சரியமூட்டும் செய்தியாக அமைந்திருந்தது.

அத்துடன் அதுவே உலக மக்களுக்கான ஆசீர்வாதத்தின் செய்தியாகவும் இறைவன் மனுக்குலத்தின் மீது கொண்ட அளவற்ற அன்பினை வெளிப்படுத்தும் செய்தியாகவும் அமைந்தது.

இவ்விதமாய் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பலஸ்தீன தேசத்தில் நடந்தேறிய கிறிஸ்து இயேசுவின் பிறப்பும் பாடுகளும் மரணமும் உயிர்ப்பும் திருவிவிலியத்தினால் எடுத்து இயம்பப்படும் நிகழ்வு என்பதனைத் தாண்டி உலக சரித்திரத்தினால் உறுதிப்படுத்தப் படுகின்ற அதேவேளை இறைவன் முழு மனித குலத்தின்மீதும் கொண்டிருந்த அளவு கடந்த அன்பினைப் பறைசாற்றும் நிகழ்வுமாகும்.

கிறிஸ்துவின் பிறப்பும் பாடுகளும் மரணமும் உயிர்ப்பும் இறைவனால் திட்டமிடப்பட்டு மனித குலத்தின் விடிவிற்காய் இந்த மண்ணிலே நடந்தேறியிருந்தது.



இறைவனின் சாயலாக உருவாக்கப்பட்டு ஏதேன் எனும் தோட்டத்தில் விடப்பட்ட ஆதி மனிதர்களாகிய ஆதாமும் ஏவாளும் பிசாசினால் வஞ்சிக்கப்பட்ட போது மனித குலம் முழுவதும் இறைவனுக்குத் தூரமாகி பாவ இருளில் மூழ்கியிருந்தது.

இறைவன் தமது சாயலாக உருவாக்கிய மனுக்குலத்தின் மீது கொண்ட அளவு கடந்த அன்பின் காரணமாக மனித குலம் பாவத்திலிருந்து மீட்புப் பெற வேணடும். ஒளியாம் இறைவனை நோக்கித் திரும்ப வேண்டுமென்றும் விரும்பினார்.

மனித பாவ நிவர்த்திக்காக பலிப்பொருட்கள் ஈடாகச் செலுத்தப்பட்டு வந்ததுடன் யூத சமய மரபிலே குற்ற நிவாரண பலியாக ஆட்டுக்கடாக்கள் போன்ற விலங்குகள் சர்வாங்க பலியாகவும் தகன பலியாகவும் செலுத்தப்பட்டு வந்தன. அத்தகைய நிலையில் தனியொருவரின் பாவத்தின் மீட்சி என்பதனைத் தாண்டி சர்வலோக மக்களினதும் பாவத்தின் மீட்புக் கருதி இறைவன் பாவ மீட்புப் பொருளாக பலியிடப்படும் ஆட்டுக்குட்டியாக தன் பிரிய மைந்தனை ஒரே பேறான குமாரன் இயேசு கிறிஸ்துவை மனித குலத்தின் மெசியாவாக உலகிற்கு அளித்திருந்தார்.

திருக்குமாரன் மூலமாக இறைவன் மனுக்குலத்தின் மீது காட்டிய அன்பின் ஆழத்தினை திருவிவிலியம் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றது.

'நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக்காட்டியுள்ளார்.

(உரோமையர் 5:08).

எவ்விதமாய் கிறிஸ்துவின் பாடுகள் மனித குலத்தின் மீதான தந்தையாம் இறைவனின் அளவு கடந்த அன்பிற்கு அடையாளமாக அமைந்துள்ளதோ அதேபோன்று கிறிஸ்து மரணத்தை ஜெயித்து உயிரோடெழுந்தமையானது இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மைக்குச் சான்றாகவும், அதேவேளை மனித குலத்தின் வாழ்வடையும் தன்மைக்குச் சான்றாகவும் அமைகின்றது.

தந்தையாம் இறைவன் மனிதர்களாகிய எம்மீது கொண்ட அன்பினாலே பாவ இருளில் வாழ்ந்த எம்மை கிறிஸ்துவின் உயிர்ப்பின் மூலம் ஒளியாம் இறைவனுடன் ஒப்புரவாகச் செய்ததன் மூலம் இறைவனின் எல்லையற்ற அன்பும் மனிதனுக்குக் கொடுத்த மாபெரும் கிருபையும் வெளிப்பட்டது.

மனித குலத்திற்கு கிறிஸ்து வழியாய் இறைவன் காட்டிய அன்பிற்கு அடையாளமாகவே கிறிஸ்து உயிர்ப்பின் திருநாள் ஆண்டுதோறும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இறைவன் கிறிஸ்துவின் உயிர்ப்பின் வழியாய் பாவத்திலிருந்து விடுதலையளித்து தம் அன்பினை வெளிப்படுத்தியிருக்க நாமும் இப்புவி வாழ்வில் உலகத்தின் பாவங்களுக்கு எம்மை விலக்கி, மற்றவர் குற்றங்களை மன்னித்து, எமக்கு அடுத்திருப்பவர் மீது அன்பு செலுத்தி வாழ அழைக்கப்படுகின்றோம்.

கிறிஸ்து உயிர்ப்பினை மீண்டுமொருமுறை நினைவுகூரும் இக் காலத்திலே இறைவனின் சித்தப்படி தூயோராய் மனித நேயம் மிக்கோராய் வாழ்ந்து இறைவனின் அன்பினையும் கிறிஸ்துவின் தியாகத்தினையும் பொருள் உள்ளதாக மாற்றுவோம்.

கிறிஸ்து உயிர்ப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இறையன்பு அனைத்து உள்ளங்களையும் நிரப்பட்டும்.

குழந்தைவேலு சற்குணானந்தன்
அக்கரைப்பற்று

### உயிர்ப்பின் செய்தி

தச்சனின் மகனாய்ப் பிறந்தார்!
தேவாதி தேவன் இயேசு – உலகில்
தரித்திரக் கோலம் கண்டார்
மன்னாதி மன்னன் இயேசு உலகில்
மானிடக் கஷ்டம் கண்டார்!
கர்த்தாதி கர்த்தர் இயேசு உலகை
காத்திடத் தன்னுயிர் தந்தார்
அன்பு அறிந்த இனிய இயேசு
அனைவருக்காய் மனமுருகினார்!
பண்பு அறிந்த பரமன் இயேசு
பாவம் கண்டு கோபமுற்றார்
நட்பு அறிந்த நண்பராம் இயேசு
நண்பருக்காய் கண்ணீர் விட்டார்!
மாண்பு அறிந்த மன்னர் இயேசு
மனிதருக்காய் உயிரை விட்டார்
மனிதர் படும் பல கவலை
மன வேதனை அனுபவிக்க
நம்மை புனிதர் ஆக்க நமது சாபம்
பாவம் நோய்கள் தீர்க்க
இனிதான இனிய வாழ்வதனை
இமைப் பொழுதில் உதறி விட்டு
தனியாய் வந்து புவியில் வாழ்ந்து
தன்னுயிரைத் தானே ஈந்தார்!
சாபம் தீர்க்க சரித்திரம் பிளக்க
சாதாரண மனிதனாய் வந்தார் இயேசு
நம் பாவம் போக்க பவித்ரம் கொடுக்க
பாடுகள் வதைகள் பட்டார்!
நம் சோகம் நீக்க அமைதி பெருக்க
இரட்சகர் தம் உயிர் துறந்தார்
எம்மை மோட்ச லோகம் சேர்க்க
மீண்டும் உயிரோடு எழுந்தார்

சங்கீதா பிரபு தோமஸ்



# வெகு விமர்சையாக கொண்டாடப்படும் சித்திரைப் புத்தாண்டு

தமிழர் பண்டிகைகளில் வெகு விமர்சையாக கொண்டாடப்படும் பண்டிகையாக சித்திரை புத்தாண்டு காணப்படுகின்றது.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்களும் சித்திரை புத்தாண்டை கொண்டாடுகின்றனர். இனிப்புகள், பட்டாசுகள், விளையாட்டுக்கள் என நண்பர்கள், அயலவர்கள், உறவினர்களுடன் மகிழ்ச்சியாக கொண்டாடப்படுகின்றது.

தமிழ் மாதங்களில் சித்திரை தனிச் சிறப்பானதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் சித்திரை முதலாம் நாள் தமிழர்களின் பஞ்சாங்கத்தின் படி புத்தாண்டாக உலகமெங்குமுள்ள தமிழர்களால் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

சித்திரை புத்தாண்டினுடைய வரலாறு மற்றும் அதனுடைய சிறப்புக்கள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம். சித்திரை புத்தாண்டானது தமிழர்களின் பல தனித்துவ பண்பாடுகளை வெளிப்படுத்தி நிற்பதனை பின்வருமாறு அவதானிக்கலாம்.

**வரலாற்று பின்னணி**

தமிழ் நாட்காட்டியானது பன்னிரண்டு இராசிகளை அடிப்படையாக கொண்டே கணக்கிடப்படுகின்றது. எனவே இராசிகளில் முதல் இராசியான மேசத்தில் சூரியன் சஞ்சரிக்கின்ற முதல் நாளாக சித்திரை புத்தாண்டானது கொண்டாடப்பட்டு வருகின்றது.

சித்திரை மாதம் தமிழர்களுக்கு முதல் மாதமாக வழங்கப்படுகிறது. இதனை சங்க இலக்கியமான நெடுநல்வாடையானது "திண்ணிலை மறுப்பின் ஆடுதலையாக விண்ணுர்வு திரிதலும் வீங்கு செலல் மண்டிலத்து" என்று குறிப்படுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் அகத்தியர் ஆயிரம் புட்ப விதி என்ற நூல்களும் இதற்கு சான்று பகர்வனவாக அமைந்துள்ளது. சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள்

தமிழர்கள் புத்தாண்டிற்கு முதல் நாள் இரவில் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள் வெற்றிலை, பாக்கு, நகைகள், நெல் முதலான மங்கள பொருட்கள் வைத்த தட்டை வழிபாட்டு அறையில் வைத்து அவற்றை அதிகாலையில் காண்பதனை புனிதமாக கருதுகின்றனர்.

புத்தாண்டு அன்று மருத்துநீர் வைத்து அதிகாலையில் நீராடுவர் புத்தாடைகள் அணிந்து ஆலயங்களுக்கு சென்று வழிபடுவார்கள் மற்றும் அன்றைய தினத்தில் பொங்கல் மற்றும் தித்திப்பான சிற்றுண்டிகளை தயாரித்து உறவினரோடு இணைந்து உண்பார்கள் சுபநேரத்தில் கைவிசேடம் வழங்குதல் புத்தாண்டின் சிறப்பம்சமாக உள்ளது.

இத்தினத்தில் இளையவர்கள் மூத்தவர்களிடம் ஆசி பெறுவதும் வழக்கமாக உள்ளது. அத்துடன் இந்த புத்தாண்டு தினத்தில் ஊஞ்சல் கிளித்தட்டு கபடி போன்ற கிராமிய விளையாட்டுக்கள் கோலாகலமாக இடம்பெறுகின்றது.

மற்றும் புதிய முயற்சிகள் மற்றும் தொழில் ஆரம்பித்தல் போன்ற நிகழ்வுகள் இக்காலத்தில் உகந்தவையாக கருதப்படுகின்றது.

**சிறப்புக்கள்**

இந்த சித்திரை புத்தாண்டானது இலங்கையில் மட்டுமன்றி அசாம், மேற்குவங்காளம், கேரளா, தாய்லாந்து, தமிழகம், மலேசியா போன்ற பல வேறான இடங்களிலும் கொண்டாடப்படுவது சிறப்பான விடயமாகும்.

சித்திரை புத்தாண்டானது வாழ்வில் பல புதிய ஆரம்பங்களை தருகின்ற ஒரு மகிழ்ச்சியான பண்டிகையாக தமிழர்களால் கொண்டாடப்படுகின்ற சிறப்புடையதாகும்.

இது தமிழர்களின் வானியல் மற்றும் சாஸ்திரங்களின் பெருமைகளை உலகுக்கு உணர்த்துவதாக அமைகின்றது.

புத்தாண்டு என்பதில் பல தரப்பட்ட கருத்துக்கள் மக்கள் மத்தியிலே நிலவி வந்தாலும் சித்திரை முதலாம் நாள் என்பது அனைவரின் மனதிலும் பதிந்த ஒன்றாகவே காணப்படுகின்றது.

இந்த புத்தாண்டானது அனைவருக்கும் எல்லா வளங்களையும் அள்ளி தருவதாக தமிழர்கள் நம்புகின்றனர். இது புனிதம், மகிழ்ச்சி, அன்பு என்பவற்றை அனைவரிடமும் பகிர்கின்ற ஒரு சிறந்த பண்டிகையாக விளங்குவது சிறப்பம்சமாகும்.



## சோபகிருது வருடப்பிறப்பு

### வாக்கிய பஞ்சாங்கத்தின் படி

**புது வருடம் பிறக்கும் நேரம்:** சித்திரை முதலாம் நாள் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.03க்கு

**விஷு புண்ணிய காலம்:** வெள்ளிக்கிழமை முற்பகல் 10.03 இல் இருந்து பிற்பகல் 06.03 வரை

**மருத்து நீர் வைத்தல்**
பஞ்சாங்கங்களில் குறிப்பிட்ட நேர இடைவெளிக்கு அமைய, சிரசில் கொன்றை இலையும், காலில் புன்னை இலையும் வைத்து ஸ்தானம் செய்க.

**புத்தாடை**
வாக்கிய பஞ்சாங்கத்தின்படி வெள்ளை நிறம் உள்ள பட்டாடை ஆயினும் வெள்ளை கரை அமைந்த புதிய பட்டாடை ஆயினும் அணிய வேண்டும்

**புது வருட ஆபரணம்**
வாக்கிய பஞ்சாங்கத்தின் படி முத்து வைரம் இழைத்த ஆபரணம்

**கைவிசேடம்**
வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 (15.04. 2023) சனிக்கிழமை காலை 07.52 முதல் 09.00 மணி வரை சித்திரை 3 (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 07.49 முதல் 9.48 வரை

**புதுக்கணக்கு**
வாக்கியத்தின்படி சித்திரை 28 (11.05.2023) வியாழக்கிழமை பகல் 10.24 முதல் நண்பகல் 12.27 வரை

### திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி

**வருடப்பிறப்பு:** சித்திரை மாதம் முதலாம் நாள் 14.04. 2 023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02 .59க்கு

**விஷு புண்ணிய காலம்:** வெள்ளிக்கிழமை முற்பகல் 10.59 இல் இருந்து மாலை 06.59 வரை

**மருத்து நீர் தேய்த்தல்**
விஷு புண்ணிய காலத்தில் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்ட நேர இடைவே ளையில் சிரசில் கொன்றை இலையும், காலில் புன்னை இலையும் வைத்து ஸ்தானம் செய்க.

**புத்தாடை**
வெண்ணிற பட்டாடை ஆயினும் அல்லது மஞ்சள் கரை கொண்ட வெண்ணிற ஆடை அணிவது நல்லது.

**புது வருட ஆபரணம்**
திருக் கணித பஞ்சாங்கத்தின் படி வைரம் பதிக்கப் பட்ட ஆபரணம்.

**கைவசேடம்**
திருக்கணித பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 (15.04.2023) சனிக்கிழமை காலை 06.45 முதல் 07.30 வரை. சித்திரை 2 (15.4.2023) காலை 08.00 மணியில் இருந்து 8.55 வரை சித்திரை 3 (16.04.2023) ஞாயிறு காலை 08.00 மணி முதல் 09.30 வரை. சித்திரை 3 (16.04.2023) ஞாயிறு பகல் 12.10 முதல் 1.15 வரை.

**புதுக்கணக்கு**
திருக்கணிதத்தின் படி சித்திரை 13 (26.04.2023) புதன்கிழமை காலை 07.32 முதல் 09.05 வரை சித்திரை 20 (03.05. 2023) புதன் காலை 07.30 முதல் 08.40 வரை சித்திரை 22 (05.05.2023) வெள்ளிக்கிழமை காலை 07.15 முதல் 08. 28 வரை

கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா,
ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம்




---




# இலங்கையைத் தாக்கும் இன்புளுவென்ஸா H3N2 என்னும் வைரஸ் காய்ச்சல்!




இலங்கை மட்டுமல்ல இந்தியாவிலும் இந்த இன்புளுவென்ஸா வைரஸ் காய்ச்சல் தற்போது முழுவீச்சில் பரவி வருகின்றது. இலங்கையில் தற்போது எல்லாப் பாகங்களிலும் இக்காய்ச்சல் பரவி வருகின்றது. தற்பொழுது, இன்புளுவென்ஸா A வகை வைரஸின் H3N2 திரிபடைந்த வைரஸே, தற்போது நமது நாட்டில் அதிக அளவில் பரவி வருகிறது என்று இலங்கை சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

**இன்புளுவென்ஸாக் காய்ச்சலின் அறிகுறிகள் எவை?**

அதிக காய்ச்சல் (101 டிகிரி, ஃபாரனைட்டுக்கு மேல்).

தொண்டை வலி.

உணவு, உமிழ்நீர் விழுங்குவதில் கடினம்.

விடாத வறட்டு இருமல்,

குமட்டல், வாந்திபோன்றவை.

கடுமையான உடல் வலி.

சோர்வு.

தலைவலி.

மூச்செடுப்பதில் சிரமம்.

இவை போன்றவை இந்த வைரஸ் தொற்றின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கின்றன.

இலங்கை மருத்துவ நிறுவனத்தின் ஆய்வுகளின் படி, இந்த தொற்றினால், நோய் எதிர்ப்புச் சக்தி குன்றியோர், குறிப்பாக குழந்தைகள், முதியோர், இணையாக வரும் நோய்கள் இருப்பவர்களுக்கு, சற்று கடுமையாகவே நோயின் தாக்கம், வெளிப்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

**இன்புளுவென்ஸாக் காய்ச்சலின் அபாய அறிகுறிகள் எவை?**

மேலே குறிப்பிடப்பட்ட அறிகுறிகளுடன்,

மூச்சுத் திணறல் காணப்படல்.

சுவாசிப்பதில் சிரமம்.

பரஸிடமோல் வில்லைகளுக்கும் கட்டுப்படாத தீவிர காய்ச்சல்.

மூச்செடுக்கும்போது, நெஞ்சுப் பகுதியில் வலி ஏற்படல்.

நீராகாரத்தையும் சாப்பிட முடியாத அளவுக்கு உடற்சோர்வு காணப்படல்.

எந்நேரமும் படுத்தே இருத்தல்.

தலைசுற்றல்.

வலிப்பு போன்ற அறிகுறிகள், அபாய அறிகுறிகள் என்று அறிந்து உடனே, மேலதிக வைத்திய சிகிச்சையை நாட வேண்டும்.

மீண்டும் மீண்டும், பல்ஸ் ஒக்ஸிஜன் மீட்டரின் துணை கொண்டு, நோயாளியினுடைய ஒட்சிசன் நிரம்பல் அளவுகளை தொடர்ச்சியாகச் சோதித்து, குறித்து வரல் வேண்டும். ஒட்சிசனுடைய நிரம்பல் வீதம், 95 வீதத்திற்கு குறைந்தால் உடனடியாக தாமதிக்காமல் மருத்துவரை அணுகி, தரமான வைத்தியசாலைகளிலே சிகிச்சை பெற வேண்டும். 90 வீதத்திற்குக் கீழ் ஒட்ஸிசனின் அளவு குறைந்தால், ஒட்ஸிசன் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவிலே கண்காணிப்புத் தேவைப்படலாம். இந்த நிலையில், வீட்டிலே செய்கின்ற கை வைத்தியங்களும், சுய மருத்துவமும் ஆபத்தானதாகவே முடியும். நோயாளியினுடைய பொன் போன்ற நேரத்தை கை வைத்தியம் செய்து, வீணடிப்பது மிகவும் தவறு. குழந்தைகள் மற்றும் வயதானோருக்கு, காய்ச்சல், இருமல் ஆரம்பிக்கும் போதே உங்கள் குடும்ப மருத்துவரிடம் ஆலோசனை பெற்று உடனடியாக சிகிச்சை பெறல் வேண்டும்.

உங்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தியும் காய்ச்சலின் செல்நெறியும்

காய்ச்சல் ஆரம்பித்து அடுத்த சில வாரங்களில், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவான வயதானோர் மற்றும் முதியவர்கள், குழந்தைகளை, அவசியம் ஏற்பட்டால் ஒழிய, வெளியில், சனக்கூட்டமான இடங்களுக்கு அழைத்துச் செல்வதை தவிர்ப்பது மிகவும் நல்லது.

அவசியமற்ற தூரப் பயணங்களை கொஞ்சக் காலத்திற்கு தள்ளிப்போடுவது சிறந்தது.



பொது இடங்களிலும், மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும், அனைவரும் முகக்கவசம் அணிவது தொற்றுப் பரவலை தடுக்கும் சிறந்த நடைமுறை. இதை இலங்கை சுகாதார அமைச்சும் வலியுறுத்தி, முகக் கவசப் பாவனையை கட்டாயமாக்கியுள்ளது.

காய்ச்சல் தொற்று ஏற்பட்டு, காய்ச்சலுடன் இருப்பவர்கள் மட்டுமாவது, காய்ச்சல் நன்றாகக் குணமாகும் வரையேனும், வீட்டில் தம்மைத் தாமே தனிமைப்படுத்திக் கொண்டால், தொற்றுப் பரவலை தடுக்க முடியும்.

பிற பாதுகாப்பு நடைமுறைகள் எவை?

உங்கள் கைகளை, நன்றாக சோப்புப் போட்டு அடிக்கடி, இருபது செக்கன்களுக்குக் குறையாமல், கழுவுதல் வேண்டும்.

உங்கள் எச்சிலைப் பொது இடங்களில் துப்பக் கூடாது.

பொது இடங்களுக்குச் செல்லும்போது, முகக் கவசத்தைப் பாவித்தல்.

**இன்புளுவென்ஸாச் காய்ச்சலுக்குரிய சிகிச்சை முறைகள் என்ன?**

இந்த வைரஸுக்கு எதிராக வேலை செய்யும் வைரஸ் கொல்லி மருந்துகள் குறிப்பாக, டமிபுளு எனப்படும் ஒசல்டாமிவிர் தற்போது பாவனையில் உள்ளது. எனினும் வைத்தியருடைய ஆலோசனை இன்றி, தீவிர நோய் ஏற்பட்டிருப்பவர்களுக்குக் கூட இந்த வைரஸ் கொல்லி மருந்துகள் பாவிக்கக் கூடாது.

சாதாரண தொற்று நிலையில் இருப்பவர்களுக்கு, பன்றி காய்ச்சல் எதிர்ப்பு வைரஸ் கொல்லி மருந்து கூட பரிந்துரை செய்யப்படுவதில்லை.

ஒவ்வொரு ஆண்டும் பரிசோதனை முடிவுகளுக்குப் பின்னர், அப்டேட் செய்யப்பட்டு வெளிவரும் ப்ளு வைரஸ்களுக்கு எதிரான தடுப்பூசிகள் பொதுவாக, இந்த வைரஸுக்கு எதிராகவும் செயல்படும்.

நோய் எதிர்ப்பு சக்தி குன்றியோர், குழந்தைகள், முதியவர்கள், நாட்பட்ட இணை நோய்களைக் கொண்டிருப்போர் போன்றவர்கள், இந்த ப்ளு வைரஸிற்குரிய, வைரஸ் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளுவதன் மூலம், தீவிர தொற்று ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

இது வைரஸ் தொற்று என்பதால், சாதாரண பாக்டீரியாக்களைக் கொல்லும், நுண்உயிர் கொல்லி மருந்துகள் பரிந்துரைக்கப்படுவது குறைவு.

காய்ச்சலைக் குறைக்கும் பாரசிட்டமோல் வில்லைகள், உங்கள் குடும்ப மருத்துவரைச் சந்தித்து, அவர் பரிந்துரைக்கும் மருந்துகள், இருமலைக் குறைக்கும் பாணி மருந்துகளை சரியான முறையில் சரியான அளவுகளில் உட்கொள்ள வேண்டும்.

உடல் வெப்பநிலை அதிகமாக உள்ள வேளைகளில், ஓடிக்கொலோன் கலந்த, குளிர்ந்த நீரினால் உடல் முழுவதும் ஒத்தி எடுப்பது நல்லது.

நீர்ச்சத்து நிரம்பிய நீராகாரங்களை அதிகளவில் உட்கொள்ளுதல் வேண்டும்.

ஜீவனித் திரவத்தை தொடர்ச்சியாகப் பருகுதல் வேண்டும்.

போதியளவு ஓய்வு எடுத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட இந்த நடைமுறைகள் யாவும், இந்தத் தொற்றில் இருந்து விரைவாக மீள உதவும்.

இணைநோய்களும் இன்புளுவென்ஸாவும் குழந்தைகள், வயதானவர்கள், முதியோர்கள் மற்றும் இணைநோய்கள் இருப்பவர்களுக்கு தொற்றிற்குரிய அறிகுறிகளில், அபாய அறிகுறிகள், தென்பட்டால் உடனடியாக, தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளியை, மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சையளிக்க வேண்டும். பெரும்பான்மையினருக்கு சாதாரண சீதோஷ்ண நிலைக்கேற்ப சாதாரண காய்ச்சலாகக் கடந்து செல்லும் தொற்றாகக்கூடக் காணப்படலாம். இது குறித்து அதிக கவனம் எடுப்பது, எல்லோருக்குமே நல்லது. ஏனெனில் தாமதித்தால், தவிக்க நேரிடலாம்.






# மச்சானை நெனச்சி மருதாணி போட்டாச்சி

ஏரூர்கவி மாமணி
எம்.ரி.எம். அன்ஸார்

புத்தாண்டும் பொறந்தாச்சி
புதுப் பொழிவும் வந்தாச்சி
காதலைத் தந்த அத்தைமகனே
காத்திருக்கேன் ஒன்னால நானே...

தையுமே வந்தாச்சி
இந்தத் தையலுக்கிங்கே என்னவழி
தாலிகட்ட வாமச்சான் உன்
தாரமாக ஆசைகொண்டேன்...

வெளஞ்ச கதிர் அறுக்கையிலே
குனிஞ்சி நெல் பொறுக்கையிலே
சமஞ்சி நானும் நாளாச்சி
சம்மதமென்று சொல்லு மச்சான்...

ஓடையை நீ கடக்கையிலே
ஒன்னெனவை நான் சுமைக்கையிலே
காதலுமே மகிழ்வுறுதே
காலமுமே நகர்ந்து செல்லுதே...

கனவுக்குள் வந்தே
கவிதைகள் தந்தே
என்னெண்ணங்களை வளர்த்த
அத்தை மகனே
சொத்து சுகமெல்லாம்
என்றுமெனக்கு
நீதானே மச்சானே...

ஆசையெல்லாம்
ஒம்மேல வெச்சே
பாசம் கொண்டே
அழைக்கின்றேனே
என்னைக் கரைசேர்க்க
எப்போ நீ வரப்போறே...

மச்சான நெனச்சி
மருதாணி போட்டாச்சி
தாலி கட்ட நீ வரும் வரை
உன் நிழலாய் நானே
வாழ்ந்திடுவேனே..!



# மங்கை சித்திரையே வருக

கு. சண்முகம், வந்தாறுமூலை

பாவாடை தாவணி அணிந்து வருவாயோ
சித்திரையே நீ பட்டுப் புடவை கட்டி வாராயா
நித்திரை கொண்டிடும்போது நீயும் வந்து மயக்கலாமோ
அங்கம் பளிச்சிட கண்கள் சுழன்றிட வந்திடும் மாயமென்ன

அன்று நீ வந்தபோது நாமும் நிம்மதியுடனிருந்தோம்
இன்று நீ வரும்போது நிம்மதியை இழந்துவிட்டோம்
அளவற்ற செல்வம் அள்ளி வழங்கிட நாமும் மகிழ்ந்தோம்
நாளை புலரும் பொழுதை எண்ணி ஏங்கியே வாழுகின்றோம்

உரலும் உலக்கையும் அம்மியும் குழவியும் இருந்ததன்று
இவையெல்லாம் மறைய கெட்டது நம் ஆரோக்கியம்
உத்தமியே சித்திரையே உனக்கும் இது தெரியும்
நீயும் பழமையைவிட்டு நவீன மயமாகி வாராயோ

சோப கிருதென்று பூண்ட பெயர் எமக்கும் தெரியும்
அறுபது வருடங்களுக்கு முன் பிறந்ததை அறிவோம்
சோபை இழக்கவில்லை வையம் செழிக்கவைத்த
இஞ்சி இடுப்பழகி மங்கை சித்திரையே
வருக!



# வாராயோ சித்திரையே!

குருமண்வெளி ரவீந்திரன்

குயில் கூவும் சித்திரையே
குறைகள் தீர்க்க வாராயோ
ஏற்றத் தாழ்வு இன்றி
எல்லோரும் வாழவேண்டும்
ஏழை பணக்காரன் எனும்
எண்ணம் இங்கு மாறவேண்டும்
எல்லாப் பொருட்களும்
எப்போதும் கிடைக்க வேண்டும்
இலஞ்சம் ஊழலை இங்கு
இல்லாது செய்யவேண்டும்
வேலைவாய்ப்பு பெருகவேண்டும்
வேதனமும் உயரவேண்டும்
பணவீக்கம் குறைவடைந்து
பசி பஞ்சம் தீரவேண்டும்
விளைநிலங்கள் செழிக்க
வேண்டும்
விவசாயம் பெருக வேண்டும்
வீட்டுப் பொருட்கள் எல்லாம்
விலை குறைய கிடைக்கட்டும்
நிம்மதியாய் மக்கள் வாழ
நீ வருவாயோ சித்திரையே!



# புண்ணியம் நிறைந்த ஆண்டாய் புத்தாண்டே அடியெடுத்து வைத்திடு நீ!

சித்திரைச் செல்வியே
சத்திய நாயகியே
செவ்விதழ் விரித்தே
செந்தாமரையாய் நீ மலர்வாய்!
மங்களம் முழங்க
மஞ்சள் குங்குமம் கமழ
மனதினில் நீ நிறைவாய்

மன மகிழ்வு தருவாய்!
பஞ்சம் பசி பட்டினி நீங்க
பாரினில் நல்லாட்சி மலர்ந்திடச் செய்வாய்!
அன்பும் அறமும்
அஹிம்சையும் நாட்டினில் நிலைத்து
இன்பம் ஓங்க
இனிதே அருள் செய்வாய்!

எஸ்.எம்.யூசுப் மாவனல்லை



# உயிரில் கலந்த உறவுகள்

துள்ளித் திரிந்த பள்ளிப் பருவம்
உள்ளம் மறவா அற்புதத் தருணம்
கள்ள மில்லா உறவுகள் மலரும்
வெள்ளமெனவே நினைவுகள் நிறையும்

காலம் கடந்து கோலங்கள் போடும்
ஜாலங்கள் போல காட்சிகள் மாறும்
நேசங்களை பிரிந்து நானிலம் சுற்றும்
பாசங்கள் மட்டுமே நெஞ்சினில் மிஞ்சும்

நாளும் பொழுதும் கடந்தே செல்லும்
நட்பு நாடி காலடி தேடும்
வாழும் நாழிகை வசந்தங்கள் சிந்தும்
தோழமைத் துணைகள் துயரம் துடைக்கும்

கவலை மறந்த கல்லூரி நினைவுகள்
கணமும் மறவாத கண்களின் கனவுகள்
காலைப் பனியாய் மறைந்தே போனாலும்
குறையாத இன்பமாய் மனதுக்குள் இனிக்கும்

தள்ளாடும் வயதினிலே பொல்லூன்றிப் போகையில்
உள்ளூர மனதில் ஊசலாடும் ஞாபகங்கள்
உன்னதமாய் ஒளிரும் இன்பமாய் நிலைக்கும்
உயிரினில் கலந்து உணர்வினில் வாழும்...

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

# மனசுக்குள் உதித்த வார்த்தை

மின்னும் வான்கொடை யூரன் நான்
பொன்னும் பொருளுமில்லை எனக்கிங்கு
கண்ணும் கருத்துமாய் என்னிடம்
எண்ணும் எழுத்தும் மட்டுமே உண்டிங்கு!

வண்ணம் நிறைந்த வார்த்தைகளால்
வான்மறை கற்று ஏற்றவன் நான்
வள்ளுவன் தந்த பொய்யாமொழியும் கற்றேன்
வள்ளல் நபிகளின் போதனையும் ஏற்றேன்!

சொல்லும் செயலுமாய் என்பணி எவரிடமும்
கொல்லும் வார்த்தைகள் என்னிடமில்லை
தெள்ளு தமிழில் பாவியற்றிபாடவந்தேன்
அள்ளித் தந்தேன் மகிழ்வுடனே இங்கு!

வாழும் வாழ்க்கை வளமாக வேண்டும்
தாழும் மனநிலை வேண்டாமே எனக்கு
வாளும் ஈட்டியும் கை தொடேன் என்றும்
தோள் கொடுப்பேன் மனிதம் வாழ!

வாய்மையொன்றே எனக்கு வேதம்
பொய்மை பேச துணியேன் இங்கு
தாய்த்தமிழே உயிரெனக்கு
வாயெடுத்துச் சொல்வேன் தமிழே வாழி!

கவி ஈழத்து நூன்

# வைக்கோல் புலி

படிக்காதவர்களுக்கு
பசி வாட்டுது
படிச்சவனே
ஊதியம் உயர்ந்திட
கோசம் எழுப்புகிறான்

பசி தீர்த்தவர்களின்
படிக்காதவர்கள்
எத்தனை பேர்கள்
அரசியல் மேடையில்
குத்துக் கதைகளையும்
நாடகம் நடித்தவர்களையும் காணோம்

வழமையாக
சும்மாவும்
கடனாவும்
ஏதாவது உதவியவனும்
உதவிட அஞ்சுகிறான்
படிக்காதவனும்
படிக்காதவனுட்ட போக அஞ்சுகிறான்

மூதூர் றிஸ்வின்



# இயற்கையின் புள்ளி

செம்புலரி செங்காற்றில் செவ்வான தூரிகையாய்
செம்மலரின் வாசனையும் செங்கமல தேன்ருசியும்
செங்கதிரோன் ஒளிபரப்பி வடிந்திடும் பொழுதினையும்
செவ்வான கீற்றினிற்க பின்னேர மறைவினிலும்
செழுமனது மெதுவாக பூங்காற்றை நுகருதல்லோ

தி.கிருஷன், வவுனியா

# ஆத்மாவின் அறிவுரை!

மண்ணின் மைந்தா!
மனிதா! நானும்
உன்னை போல்
பெண்ணுக்குள்ளிருந்து
இந்த மண்ணுக்கு
வந்தவன்தான்!
பொன்னாசை
பொருளாசை
மண்ணாசை
கொண்டவன்தான்!
எந்த ஆசை என்றாலும்
மண்ணோடு
மண்ணாய்
போய்விடும்

இன்று இந்த
இறுதிநிலையில்
உணர்கிறேன்!
மண்ணில் நீ
வாழும் போது
மனிதனாக வாழ்!
புனிதத்தை வளர்க்க நீ
புண்ணியம் செய்!
கண்ணியம் காக்க
கருணையுடன் இரு !
மனதை வெல்!
மகிமை கொள்!
இது எந்தன்
ஆன்மிக அறிவுரை!



காத்தான்குடி கலைமதி நபாயிதீன்

# நம்பிக்கையே என்றும் மேலானது

காரியங்கள் செயற்படுத்த முனைகின்ற நேரம்
கடுகளவும் வேண்டாம் முடியுமா என்ற எண்ணம்
நேரிய சிந்தையாய் செயற்பட நினைத்தால்
நிச்சயமாய் வெற்றி கைகூடி நிற்கும்

ஐயமாய் எதையும் தொடங்கிடும் போது
அனைத்துமே குறைவிலே முடிவடைந்து போகும்
மெய்யாய் மனதில் திடம் கூடிவருமேல்
மெருகாய் காரியம் ஆற்றிட முடியும்
நம்பிக்கையே என்றும் மேலான செல்வம்
நம்பிக்கையாலே சகலதும் வெல்வோம்!

பசறையூர் மல்லிகா
பத்மநாதன்

# சூசியம்

சூசியமாம் சூசியம் சுவையான சூசியம்
அத்தை சுட்ட சூசியம்
அன்பாலே சுட்ட சூசியம்
பயறு கலந்து சுட்ட சூசியம்
வயிறு நிறைய ஒரு சூசியம்
தேங்காய் எண்ணெயில் தோய்ந்த சூசியம்
கோதுமை மாவும் கலந்த சூசியம்
வயிற்றில் பசி தந்த சூசியம்
நாவில் ருசி தந்த சூசியம்
தமிழர் உணவு பண்பாட்டில் சூசியம்
தமிழ் பண்டிகைகளில்
தனித்திடம் பிடித்த சூசியம்

வன்னிக்கவி
லக்சன்...



# நிறைவான நிஜங்கள்...

சற்றைக்கென நின்று விடும்
மூச்சுக் காற்றாய்
நித்தமொரு நொடி
நினைவுகளின் ஆழத்தில்
இருந்து மீண்டு

சற்றே திறந்து விடும்
கதவிடுக்கே ஓடி
ஒழியும் சிற்றொளியாய்

சற்றே தொலைவில்
காற்றோடு வரும்
தாளிப்பு மணமாய்
மாய வித்தைகள்
காட்ட எண்ணி

கானல் நீராகி
கழிகின்றாய்

மிச்சம் வைத்த
தேநீர் கோப்பையில்
மொய்த்து நிற்கும்
எறும்பாகி
மறைகிறது
நினைவுகள்

பெரு மூச்சாகி
தணிந்து விடும்
அவை
நிறைவான
நிஜங்கள்...

பர்வின் யூசுப், வெலிமடை.

# 2022 இல் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியிருந்த ஆயுட் காப்புறுதி நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ்



2022 ஆம் நிதியாண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்து, ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் ஆயுளை பாதுகாப்பது, மக்களுக்கு வலுவூட்டுவது மற்றும் மனநிம்மதியை வழங்குவது போன்றவற்றினூடாக, தேசத்தின் புரட்சிகரமான ஆயுட் காப்புறுதி சேவை வழங்குநர் எனும் தனது நிலையை மேலும் உறுதி செய்திருந்தது.

பிரதான பிரிவுகளில் நிறுவனம் சிறந்த வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது, இவற்றில் தேறிய வழங்கிய கட்டுப்பணம் முன்னைய ஆண்டில் பதிவாகியிருந்த ரூ. 15.4 பில்லியனிலிருந்து ரூ. 16.7 பில்லியனாக உயர்ந்திருந்தது. வழமையான புதிய வியாபார கட்டுப்பணங்கள் ரூ. 4.4 பில்லியன் முதல் ரூ. 4.7 பில்லியன் வரை உயர்ந்திருந்தது. வரிக்கு முந்திய இலாபம் ரூ. 2.6 பில்லியனிலிருந்து ரூ. 3.7 பில்லியன் வரை 42% அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. வினைத்திறனான வகையில் சொத்துக்கள் மீளமைப்பு மற்றும் உயர் வட்டி வீதங்கள் போன்றவற்றினூடாக, தேறிய முதலீட்டு வருமானம் 42% அதிகரிப்பை பதிவு செய்து ரூ. 7.5 பில்லியனாக பதிவாகியிருந்தது.

அதுபோன்று, மொத்த தேறிய வருமானம் ரூ. 20.7 பில்லியனிலிருந்து ரூ. 23.3 பில்லியனாக உயர்ந்திருந்தது. மூலதன பொது விகிதமான 194% ஐ பேணியிருந்ததனூடாக நிறுவனம் உறுதியான மூலதன மற்றும் திரள்வு நிலையை பேணியிருந்தது. இந்தப் பெறுமதி ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான 120% உயர்வான தொகையாகும்.

நிறுவனத்தின் சிறந்த வளர்ச்சி தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜூட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "பெரும் பொருளாதார சூழலில் நிலவிய நெருக்கடிகளால், முழு தொழிற்றுறைக்கும் கடந்த ஆண்டு மிகவும் சவால்கள் நிறைந்ததாக அமைந்திருந்தது. எவ்வாறும், தடைகள் காணப்பட்ட போதிலும், அவற்றுக்கு வெற்றிகரமாக நாம் முகங்கொடுத்து, சிறந்த நிதிப் பெறுபேறுகளை எய்தியுள்ளோம்" என்றார்.

SLTMOBITEL 'Hosting Cub' ஊடாக

# அத்தியாவசிய உட்கட்டமைப்பு, பெறுமதிசேர் hosting சேவைகள்

நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு (MSMEs) வளர்ச்சி மற்றும் வினைத்திறனை மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை புரிந்து, தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, தனது Hosting Cub பகிரப்பட்ட Web Hosting சேவையை வழங்கி, அத்தியாவசிய hosting தேவைகளை நிவர்த்தி செய்கின்றது.

MSMEகளுக்கு SLTMOBITEL இனால் hosting வசதிகள் சகாயமான விலை இலகுவான விரிவாக்க வசதியுடனான MSMEs சைபர் பிரசன்னம் மற்றும் இதர பெறுமதி சேர்க்கப்பட்ட சலுகைகள் போன்றன பகிரப்பட்ட Hosting மற்றும் Virtual Private Server (VPS) தீர்வுகள் போன்றன வழங்கப்படுகின்றன.

Hosting க்கிற்கு மிகவும் சிக்கனமான தெரிவாக பகிரப்பட்ட Hosting proposal அமைந்துள்ளது. server பராமரிப்புக்கான ஒட்டுமொத்த செலவு பகிரப்படுவதுடன், சிறிய இணையத்தளங்கள் மற்றும் blogகள் போன்ற அதிகளவு bandwidth அவசியமில்லாத குறைந்த பிரவேச இணையத்தளங்களுக்கு பொருத்தமானதாக அமைந்திருக்கும்.




Share Hosting தீர்வு நான்கு நிலைகளில் வழங்கப்படுகின்றது. Stellar, Stellar Plus, Stellar Pro மற்றும் Stellar Business ஆகியன அவையாகும். 'Stellar' package 1 GB VSAN Disk Space இனால் storage பாவனையை சமப்படுத்துவதுடன், மாதாந்தம் 20 GB Bandwidth, 2 Mbps வேகம், 10 இணையத்தளங்களுக்கான அனுமதி, SSL ஊடாக பாதுகாப்பான இணைப்பு, கோர்ப்பு மாற்றங்களை நிர்வகிப்பதற்கு FTP கணக்குகள், வரையறையற்ற மின்னஞ்சல் கணக்குகள், டேட்டாவை நிர்வகிப்பதற்கு வரையறையற்ற MySQL Database, வரையறையற்ற உப Domainகள், SLT இன் நவீன வசதிகள் படைத்த Data Centre மற்றும் WordPress இல் Hosting செய்வதற்கு ஆதரவு போன்றன வழங்கப்படுகின்றன.

# மாற்றுவழி பிணக்குத் தீர்வை வலுப்படுத்த கொள்கை விளக்கத்தை வெளியிட்ட SEDR




ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி வழங்கும் பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) திட்டமானது, நாட்டில் மாற்றுவழி பிணக்குத் தீர்வு (ADR) பொறிமுறைகளை வலுப்படுத்த 'நியாயமான மாற்றுவழியை வலுப்படுத்தல்' என்ற தலைப்பிலான கொள்கை விளக்கத்தை வெளியிட்டது.

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தில் நடைபெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வில், நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான (இடைக்கால) தலைவர் பியட்ரிஸ் புஸ்ஸி, மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பிரியநாத் பெரேரா, மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் யாப்பா, மற்றும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய பியட்ரிஸ் புஸ்ஸி, "இலங்கையில் மத்தியஸ்தத்தின் முக்கியத்துவம் இரண்டு வகைப்படும், ஏனெனில் இது குடிமக்களுக்கு நீதிக்கான எளிதான மற்றும் சிக்கனமான அணுகலை உறுதிசெய்கிறது, அதே நேரத்தில் இது இலங்கை நீதிமன்ற அமைப்பின் சுமையை குறைக்கும் வாய்ப்பையும் வழங்குகிறது. இலங்கையின் சனசமூக மத்தியஸ்த சபைகளின் மாதிரியை, அதன் செயல்திறன் மற்றும் உள்ளூர் பிணக்குகளை அதிகரிப்பதைத் தடுக்கும் வகையில் சமூகங்களுக்கு வழங்கும் மதிப்பிற்காக, நான் பாராட்ட விரும்புகிறேன்." என்று கூறினார்.

இங்கு கருத்து தெரிவித்த விஜேதாச ராஜபக்ஷ, "பிணக்குகளை வினைத்திறனாக தீர்ப்பதற்கு தேவையான சட்ட, கொள்கை மற்றும் நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதை உறுதிப்படுத்துவது அமைச்சின் முக்கிய பணிகளில் ஒன்றாகும் என்றார்.

# மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட Nescafe, Maggi மீதான மக்கள் அபிமானம்




SLIMKANTAR மக்கள் விருதுகள் 2023 நிகழ்வில், அனைத்து இல்லங்களிலும் அபிமானம் பெற்ற நெஸ்லே மூன்று விருதுகளை வென்றுள்ளது. Nescafe மற்றும் Maggi ஆகியவை, இரண்டாவது ஆண்டாகவும், முறையே ஆண்டின் சிறந்த மக்கள் தெரிவு சூடான பான வகை வர்த்தக நாமமாகவும், ஆண்டின் சிறந்த மக்கள் தெரிவு நொறுக்குத்தீனி வர்த்தகநாமத்தின் கூட்டு வெற்றியாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதே நேரத்தில், Maggi ஆனது ஆண்டின் சிறந்த மக்கள் தெரிவு சமையல் சுவையூட்டிப் பொருள் வர்த்தகநாமத்திற்கான கூட்டு வெற்றியாளராகவும் முடிசூட்டப்பட்டது. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் (Sri Lanka Institute of Marketing SLIM) தொடர்ச்சியாக 17 வது ஆண்டாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட, SLIMKANTAR மக்கள் விருதுகள், இலங்கை மக்களின் இதயங்களில் வீற்றிருக்கின்ற வர்த்தக நாமங்கள் மற்றும் ஆளுமைகளுக்கு வெகுமதி அளிப்பதுடன், நாட்டின் மிகவும் மதிப்புமிக்க விருது நிகழ்வுகளில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

தனித்துவமான நறுமணம் மற்றும் செழுமைமிக்க சுவைக்காக இலங்கை மக்களின் அபிமானத்தை வென்ற, Nescafe ஆனது 100% தூய கோப்பி விதைகளின் நலச்செழுமையுடன் தயாரிக்கப்படுவதுடன், நாள் முழுவதும் நுகர்வோரை உற்சாகப்படுத்தவும், புத்துணர்வூட்டவும் செய்கிறது. சிறந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற Maggi நூடில்ஸ் முதல் தேங்காய் பால் மா மற்றும் சுவையூட்டிப் பொருட்கள் வரையிலான பரந்த அளவிலான தயாரிப்புகளைக் கொண்டு, 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் குடும்பங்கள் மத்தியில் மிகவும் அபிமானம் பெற்றதாக இருந்து வருகிறது. இது நுகர்வோரின் சமையலில் தனித்துவமான வேறுபாட்டுக்கு உதவுகிறது.

# சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சியின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி நியமனம்



சொஃப்ட்லொஜிக் கெப்பிட்டல் பிஎல்சியின் துணை நிறுவனமான சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி, அதன் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக இவோன் புரோஹியரை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. 2023 மார்ச் மாதம் 27ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், பிரதம நிதி அதிகாரியாகவும் (CFO) செயலாற்றியிருந்த புரோஹியர், சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸின் முதல் பெண் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பொறுப்பேற்றுள்ளார்.

15 வருடங்களுக்கு மேலாக வியாபார தந்திரோபாயம், நிதி அறிக்கையிடல், தந்திரோபாய நிதி முகாமைத்துவம், செயன்முறை மேம்படுத்தல்கள், தகவல் கட்டமைப்புகள் மற்றும் விதிமுறை கணக்காய்வுகளை கையாளல் போன்றவற்றில் 15 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள புரோஹியர், நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் வெற்றிகரமான செயற்பாடு ஆகியவற்றுக்கு பெருமளவு அறிவு மற்றும் அனுபவத்தை சேர்த்துள்ளார்.

தமது புதிய பதவியில், சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் மூலோபாய நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வதற்கு பொறுப்பானவராகவும், அணி மறுசீரமைப்பு மற்றும் வாடிக்கையாளர் மற்றும் பங்காளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் டிஜிட்டல் ஆற்றல்களை மேம்படுத்தல் போன்றவற்றுக்கு பொறுப்பானவராக அமைந்திருப்பார். புத்தாக்கமான நிதித் தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்கி, இதுவரை அணுகியிராத கடன் வழங்கல் சந்தைகளில் கவனம் செலுத்த நிறுவனம் ஆரம்பித்துள்ளது. அத்துடன், மீட்சிக்கான முன்னேற்பாடான மற்றும் துரித வழிமுறையையும் பின்பற்றுகின்றது.

# கொமர்ஷல் வங்கி நடத்திய மகளிர் தின நிகழ்வு





நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான விஷேட நிகழ்வொன்றை அண்மையில் கொமர்ஷல் வங்கி நடத்தியது. சுமார் 100க்கும் மேற்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்கள் இதில் கலந்து கொண்டனர். வர்த்தக துறை தலைவர்கள் பலர் தமது அனுபவத்தையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதற்காக இதில் பங்கேற்றனர்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டும், பெண் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு தேவையான ஆதரவை வழங்கும் விடயத்தில் கவனம் செலுத்தும் வகையிலும் இந்நிகழ்வை ஏற்பாடு செய்ததாக வங்கி அறிவித்துள்ளது.

இந்நிகழ்வின் மிக முக்கியமானதோர் அம்சமாக வங்கியின் டிஜிட்டல் சேவைகள் குறித்து பிரத்தியேகமாக விளக்கம் அளிக்கப்பட்டது. இந்தப் பிரத்தியேக அமர்வை வங்கியின் டிஜிட்டல் பிரிவு ஏற்பாடு செய்திருந்தது.

மகளிருக்கான வங்கியின் உற்பத்திகள் மற்றும் சேவைகள், SME பிரிவுக்கான சேவைகள், ஏற்றுமதி துறைக்கான சேவைகள் என பிரத்தியேகமான அமர்வுகளும் இடம்பெற்றன. வங்கியின் கொழும்பு பிராந்திய SME முகாமையாளர்கள், ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) ஊக்குவிப்பு அதிகாரிகள் ஆகியோரும் ஏற்றுமதி தொடர்பான அமர்வை நிபுணி மாரசிங்கவும் நடத்தினர். பெண்கள் மத்தியில் நிதித் துறை மற்றும் டிஜிட்டல் வங்கித்துறை தொடர்பான அறிவை மேம்படுத்தும் வகையிலும் தொழில்துறையில் அவர்கள் தீவிர பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையிலும்; இந்நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தது. கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெண் தொழில்முயற்சியாளர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். பிரதான கம்பனிகளைச் சேர்ந்த வங்கியின் கூட்டாண்மை வாடிக்கையாளர்கள், வங்கியின் கூட்டாண்மை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பிரதிநிதிகள் பலரும் இதில் பங்கேற்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கில்

# 20% சிறு அளவிலான விநியோகஸ்தர் தளத்தை விரிவுபடுத்துகிறது Hayleys



தேங்காய் தொடர்பான மூலப் பொருட்களுக்கான விநியோக தளத்தை விரிவுபடுத்தும் வகையில், இலங்கையின் பெறுமதி கூட்டப்பட்ட தேங்காய் நார்ப் பொருட்களை உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனமும், Hayleys குழுமத்தின் துணை நிறுவனமுமான Eco Solutions, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய செயற்பாடுகளை அமைத்து அதன் விநியோக தளத்தை 20% ஆக விரிவுபடுத்தியுள்ளது.

இப்பகுதியில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுடன் பணிபுரியும் Eco Solutions பாரம்பரிய தேங்காய் முக்கோணத்திற்கு அப்பால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, பலாலி, அம்பாறை மற்றும் பொலன்னறுவை வரை தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது. இந்த நடவடிக்கையானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள உலகளாவிய விநியோகச் சங்கிலிகளுடன் முன்னர் தொடர்பில்லாத விவசாயிகளின் வலையமைப்பை உருவாக்குகிறது, அதே நேரத்தில் பல குடும்பங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறது.

"ஹேலிஸ் குழுமம், 145 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, மதிப்பு கூட்டப்பட்ட தேங்காய் பொருட்களை உற்பத்தி செய்வதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. பாரம்பரிய தென்னை முக்கோணத்தில் சிறு விவசாயிகளுடன் விரிவாகப் பணியாற்றியதால், நாடு முழுவதும் புதிய விவசாயி வலையமைப்புகளை உருவாக்குவதற்கான கருவிகள் மற்றும் அறிவு எங்களிடம் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

"கடந்த சில வருடங்களாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் இதற்குச் சான்றாகும். இதுவரை, இப்பகுதியில் உள்ள 30க்கும் மேற்பட்ட விவசாயிகளுடன் நாங்கள் இணைந்து செயற்பட்டு வருகின்றோம், மேலும் இனி வரும் ஆண்டுகளில் இந்த உறவை மேலும் வலுப்படுத்த நாங்கள் எதிர்நோக்குகிறோம்," என Eco Solutionsஇன் ரஜீவ் குணதிலக்க தெரிவித்தார்.

# நித்யாவின் புத்தாண்டு உறுதி மொழி



காதை பிளக்கும் பட்டாசு ஓசையில் பொழுது விடிந்தது நித்யாவுக்கு.

"என்ன இது... புதுவருடம் என்றால் இதெல்லாம் அவசியம் தானா? " சலித்துக் கொண்டாள்.

காலை கடன்களை முடித்து, தலை குளித்து கடவுளோடு சித்தியையும் வணங்கினாள்.

நண்பர்கள், அயலவர்களுக்கு வாழ்த்துகள் பரிமாறி அலுவலகம் செல்லத் தயாரானாள்.

அதே நேரத்தில் தோழி சுமதி தொலைபேசியில் அழைத்தாள்.

புத்தாண்டு வாழ்த்து பரிமாறலின் பின் "அலுவலகத்தில் இன்று பெரிதாக வேலை இல்லைடி... வெளிய எங்க சரி போகலாமா?" என்றாள் சுமதி "இல்லடி கோயில் போகணும்" என்றாள் நித்யா

"அது சரி நீ தான் குட்டி சாமியார் ஆச்சே" என்று கிண்டலடித்தாள் சுமதி.

"சரி சரி... இப்ப வை. அலுவலகத்தில சந்திப்போம்" தொலைபேசியை துண்டித்தாள் நித்யா.

நித்யா வீதியில் இறங்கவும் அவளது அலுவலக வாகனம் வரவும் சரியாக இருந்தது. வீதியின் இருமருங்கிலும் ஏதோ ஒருவித ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்ன நித்யா, புதுசா பார்க்கிற மாதிரி பார்க்கிறாய்டி?" சுமதி

"இவங்களுக்கு இண்டைக்கும் லீவு இல்லையாடி, அவங்களுக்கென்று சந்தோசம், குடும்பம், வாழ்க்கை எதுவும் இல்லையா? பாவம்ல." வீதியெங்கும் பட்டாசு வெடிகளாக காசை காகித துண்டுகளாக பரப்பி இருந்தவற்றை கூட்டி துப்புரவு செய்துகொண்டிருந்தவர்களை காட்டி கூறினாள்.

"அம்மா ராசாத்தி... இண்டைக்கு நல்ல நாளும் அதுவுமா சண்டை பிடிக்க வேண்டாம்டி... கொஞ்ச நேரம் பேசாமல் வா..." கெஞ்சினாள் சுமதி.

அலுவலக வேலைகளை முடித்துக் கொண்டு நேரத்தோடு வீடு திரும்பினாள்.

அனைவரும் கேளிக்கை கொண்டாட்டங்களில் நாளை வீணடித்துக்கொண்டிருந்தார்கள்.

நித்யாவிற்கு இருப்புக்கொள்ளவில்லை.

ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணியவளுக்கு கண் முன் தோன்றி மறைந்தது கருணை இல்லம்.

சித்தியிடம் அனுமதி பெற்ற பின் தோழிகளுக்கு அழைப்பு விடுத்தாள். யாரும் கருணை இல்லம் செல்ல விரும்பவில்லை. நித்யா யாரையும் வற்புறுத்தவும் விரும்பவில்லை.

தனியாகப் புறப்பட்டாள் முடிந்த அளவுக்கு இனிப்புகளை வாங்கிக்கொண்டாள்.

கருணை இல்ல காவலாளி ஏற்கனவே நித்யாவை அறிந்திருந்ததால் புத்தாண்டு வாழ்த்து சொல்லி வரவேற்றார். "என்ன நித்யா தனியாகவா வந்தாய்.?"

"ஓம் அண்ணா... இங்க வந்தும் நிறைய நாளாகிட்டு அது தான்... சிஸ்டர் இருக்கிறாங்களா அண்ணா "

"ஓமோம்... உள்ளே தான் இருக்காங்க.... " என்றார் காவலாளி.

உள்ளே சென்றதும் இன்முகம் காட்டி வரவேற்றார் சிஸ்டர் தீபிகா.

இவர் சுமார் 15 வருடங்களாக இந்த கருணை இல்லத்தை நடத்தி வருகிறார்.

இறைவன் மனித உருவில் வந்தால் சில நேரம் இவரை போல தான் வருவான் என்று அடிக்கடி நினைத்துக்கொள்வாள் நித்யா. அன்பின் முழு வடிவம் தான் சிஸ்டர் தீபிகா.

"என்ன நித்யா... எப்படி இருக்கிறாய்? வேலைப் பளு அதிகமா? கொஞ்ச நாளாக இந்த பக்கம் ஆளையே காணோம்" சிஸ்டரின் கேள்விக்கு "நல்ல சுகம் சிஸ்டர். கொஞ்ச நாளாக வேலைப் பளு கூடத் தான் சிஸ்டர். மன்னித்து விடுங்க... வருட கடைசி தானே. விடுமுறை கிடைக்கவே இல்லை" என்றாள் பணிவாக.

நித்யாவே தொடர்ந்தாள் "எங்க சிஸ்டர் செல்லங்கள் எல்லாம்.?"

"எல்லோரும் சாப்பிடுறாங்க.... வா போகலாம்" என்று அழைத்துச் சென்றாள்.

மதிய உணவை முடித்துக் கொண்ட சிறுவர்கள் எல்லோரும் பட்டம்பூச்சிகளாக நித்யாவை சுற்றிக் கொண்டனர். புது முகங்களுக்கு பழைய முகங்கள் நித்யாவை அறிமுகம் செய்து வைத்தது.

"இவங்க நித்யா அக்கா... சாக்லேட் தருவாங்க... வணக்கம் சொல்லு" என்று மழலை மொழியில் அதிசயப்பட வைக்கும் அறிமுகங்கள்.

பிஞ்சுகளோடு பஞ்சாகி காற்றிலே பறந்தாள் நித்யா ..

"அக்கா... கண்ணன் உங்களோட கோவமாம்" கீதாவின் குரலில் அதிர்ந்தாள் நித்யா.

"எங்க கீதா கண்ணன் ?" தேடினாள்.

"அதோ அங்க நிக்கிறான்" கீதா காட்டிய திசையை நோக்கினாள்.

அங்கே கலங்கிய கண்களோடு வெறும் 5 வயது மட்டுமே நிரம்பிய கண்ணன்.

அருகில் சென்றவள் ஆறுதலாய் அவன் தலையைத் தடவினாள்.

"என்னாச்சி என் கண்ணனுக்கு...? ஏன் அக்கா கூட கோவம்...? இந்தா சாக்லேட் சாப்பிடு" என்றாள்.

"எனக்கு சாக்லேட் வேணாம்... அம்மா தான் வேணும்" அழுது கொண்டே கண்ணன் கூறியதும் நித்யா அவனை அள்ளி அணைத்துக்கொண்டாள்.

"நிச்சயம் அம்மா வருவாங்க... அழாத செல்லம் அழாதடா..."

குழந்தையோடு குழந்தையாக குமுறி அழுதாள் நித்யா .

எப்படி சொல்வாள் 'உன் அம்மா உயிரோடு இல்லை' என்று இருவரையும் ஆறுதல் படுத்த சிஸ்டரும் வந்தாள்.

"என்ன நித்யா நீயும் சின்ன பிள்ளை போல... " என்று தேற்றினாள்.

"இத பாரும்மா நித்யா... கண்ணனுக்கு ரெண்டு கண்களும் தெரியாதுமா... அதனால யாரும் தத்து எடுக்கவும் முன்வருகிறாங்க இல்லை. அம்மா வேணும்... அம்மா வேணும்... என்று ஒரே அடம் பிடிக்கின்றான். என்னமா பண்ண இது தானே வாழ்க்கை. கொஞ்ச நாள் போனதும் அவனே புரிந்து கொள்வான். நீ சும்மா கவலை படாத. ஆண்டவன் அனைவரையும் ரட்சிப்பான்." சிஸ்டர்

ஆறுதலுக்காக சொன்ன வார்த்தைகள் ஆழமாக பதிந்தது நித்யாவின் மனதில்.

கனத்த மனதுடன் கருணை இல்லம் விட்டு வீடு திரும்பும் போது உறுதியாய் முடிவெடுத்தாள்

**'திருமணத்தின் பின் ஆசைக்காய் ஒன்றை பெத்துக்கொண்டு அன்புக்காக ஏங்கும் இரு குழந்தையை தத்து எடுப்பதென்று'**

பூங்கோதை...

# "ரபான் பைத்தின்" முன்னோடி மர்ஹூம் கலாபூஷணம் ஜமால்டீன் பாவா

("பத்ர் சஹாபாக்கள்" தினமான ரமழான் பதினேழு (இம்மாதம் ஏப்ரல் 9ந் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள) அன்னாரின் 22வது வருட ஞாபகார்த்த தினத்தையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.)

தொழில் நுட்பம் வளர்ச்சியுறாத காலத்தில் புனித ரமழான் மாதத்தில் "சஹர்" நேரத்தில் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கி இருக்கும் எம்மை விழிக்கவைக்கும் ஒரு கருவியாக பாவிக்கப்பட்ட சாதனமே "ரபான்" பைத்தாகும். இக்கலையைப்பேணிப்பதுகாத்து அதற்கு உயிரூட்டி வந்த ஒரு கலைப்பொக்கிசமே மர்ஹூம் கலாபூசணம் ஜமால்டீன் பாவா.

இற்றைக்கு சுமார் இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்பு "பாரினிலே நபி நாதர் இறைதுதராய் வாழ்ந்தனரே பாசமுடன் கலிமாவை இறை அன்பால் ஓதினரே ......" என்று கணீரென்ற வானைப்பிளக்கும் குரலொன்று ரபான் முழக்கத்துடன் "ஸஹர்' நேரத்தில் ஒலித்து, ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிக்கிடக்கும் எம்மை விழிக்க வைக்கும். அக்குரலுக்குசொந்தக்காரன் தான் கிழக்கின் பிரபல 'ரபான்' பைத்தின்' முன்னோடி கலாபூஷணம் ஜமால்டீன் பாவா.

முஸ்லிம்களின் உள்ளத்தில் குறிப்பாக கிழக்கு வாழ் முஸ்லிம்களின் உள்ளத்தில் என்றும் நீங்காத ஓர் இடத்தைப் பெற்றவர் தான் மர்ஹூம் கலாபூஷணம் ஜமால்டீன் பாவா. புனித ரமழான் மாதம் வந்தால் முதலில் நினைவு வருவது பக்கீர் பாவாக்களின் ரபான் பைத்தும் அக்கலைக்கு உயிரூட்டிய ஜமால்டீன் பாவாவுமேயாகும். குப்பி விளக்குகளும் பந்தங்களும் பாவனையிலிருந்த காலகட்டத்தில், ரபான் முழக்கம் 'சஹர்' வேளைகளில் மக்களை நித்திரையிலிருந்து விழித்தெழுவதற்காக நடைமுறையிலிருந்த ஒரு வழிமுறையாகும். இக்கலையை "பாவா" சமூகத்தினர் ஒட்டுமொத்தமாக நிறைவேற்றிவந்தாலும் அக்கலையைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தவர்களுள் முக்கிய பங்கெடுத்தவர்தான் கலாபூஷணம் மர்ஹூம் ஜமால்டீன் பாவா.

அன்னாரின் கணீரென்ற குரலைக்கேட்டதுமே சிறுவர்கள் விழித்துக்கொள்வர். எழுந்ததுமே சிறுவர் படையொன்று அவர் பின்னால் "சஹர் ரபான் பைத்துடன்" தொடர்ந்து செல்வர். சிறுவர்கள் அவர்களுடன் ஒன்றிணைவது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்தது. அவர்கள் அவருடன் சேர்ந்து பாடல்களை இசைப்பதிலும் அவர் மகிழ்ச்சி அடைவார். சிறுவர்களும் இன்பம் கண்டனர்.

அக்கரைப்பற்றில் 1942ம் ஆண்டு மே மாதம் எட்டாந் திகதி பக்கீர் மொஹிடீன் – ரகுமதுல்லாஹ் தம்பதிகளின் மூன்றாவது குழந்தையாகப் பிறந்த ஜமால்டீன் பாவா சிறுவனாக இருக்கும்போதே இஸ்லாமியர்களின் பாரம்பரியக் கலையாக இருந்து



வரும் சீனடி, சிலம்படி, பொல்லடி, பக்கீர்பைத், ரபான் பைத், வெட்டுக்குத்து, வாள்வீச்சு, மாப்பிள்ளை பைத் குரவை, போன்றவைகளை கற்றுக்கொள்வதில் மிகவும் ஆர்வம் காட்டினார்.

மாத்திரமன்றி கற்றுக்கொண்ட அனைத்துக் கலைகளையும் பிறருக்குக் கற்றுக்கொடுப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டிவந்தது அவரது சிறந்த பண்பாகவும் இருந்தது.

இஸ்லாமிய இசைத்துறைக்கு அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது. அவரது அயரா உழைப்பினால் நூற்றுக்கு மேற்பட்ட இஸ்லாமிய ஆன்மிகப்பாடல்களை தனது சொந்தமெட்டில் பாடி இத்துறையை ஓர் உயிரோட்டமுள்ள கலையாக மாற்றினார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாகினி கூட்டுஸ்தாபனம் ஆகியன 1960 – 2000 ஆண்டு கால கட்டங்களில் அன்னாருக்கு தமது இஸ்லாமிய சேவையில் ஓர் இடத்தை வழங்கின. இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனம் மாதத்திற்கு இரு முறை அன்னாரை அழைத்து நூறு மசாலா, செய்துன் கிஸ்ஸா, பெண் புத்திமாலை, நஸியத்து நமீன் மாலை போன்ற ஞானப்பாடல்களையும் ஒலிப்பதிவு செய்து இஸ்லாமிய ரசிகர்கள் மத்தியில வழங்கியமை அன்னாரின் திறமைக்கு கிடைத்த வெகுமதிகளாகும்.

மாத்திரமன்றி இலங்கையில் முஸ்லிம்களின் புனித ஸ்தலங்களாக விளங்கும் பலாங்கொடையில் அமைந்துள்ள ஜெய்லானி, கதிர்காமத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல், அழுப்பொத்தப்பள்ளிவாசல், கல்முனைக் கடற் கரைப்பள்ளி வாசல் கொடி ஏற்றம் போன்ற வருடாந்த வைபவங்களிலும் அவர் தவறாது கலந்துகொள்வார். இத்தகைய ஆளுமையும் திறமையும் கொண்ட மர்ஹூம் ஜமால்டீன் பாவாவை முதன் முதலாக கௌரவித்த பெருமை சேர் ராசிக் பரீத் தலைமையிலான இலங்கை சோனகர் இஸ்லாமிய சங்கத்தையே சாரும். கண்டி மாநகரில் 1988.08.16ஆம் திகதி நடைபெற்ற இந்த கௌரவப்பு வைபத்தில் "ஈழமுரசு" என்ற பட்டம் அன்னாருக்கு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கலாசார அமைச்சு 'கலாபூஷணம்' என்ற தேசிய விருதை வழங்கியது. அக்கரைப்பற்று தேசிய கலைஞர் பேரவையினராலும் 1966ம் ஆண்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதேவேளை இலங்கையிலுள்ள பல்வேறு சமூக சேவை அமைப்புகளும் மர்ஹூம் கலாபூஷணம் ஜமால்டீன் பாவாவை விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தன.

இவ்வாறு மிகவும் உற்சாகமாக செயல்பட்டுகொண்டிருக்கம் வேளை ஒரு புனித ரமழான் மாத நோன்பு பதினேழில் (03.11.2001) அதுவும் பதுர் சஹா பாக்கள் தினத்தில் அவரை அல்லாஹ் அழைத்துக் கொண்டான். அன்னாரின் ஜனாசா நல்லடக்கம் அக்கரைப்பற்று தைக்கா மையவாடியில் சிறப்பாக நடைபெற்றது. அன்னாரை அல்லாஹ் சுபானஹூத்த ஆலா "ஜென்னத்துல் பிர்தௌசி' எனும் சுவனபதியில் சேர்த்துக்கொள்வானாக. ஆமீன்.

(கலாபூஷணம் எம்.ஏ பகுர்தீன்)

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 65



**திரு/திருமதி.செல்வி** ..................................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

**முகவரி** ..................................................

..................................................

..................................................

.............................. ..............................

**திகதி** **கையொப்பம்**

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 65**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 65

**இடமிருந்து வலம்**

1. நிலை அறிந்து செயற்படுவது. அல்லது எதையும் சமாளிக்கும் திறமை
5. அறிவு, புத்தி
7. இராமாயணம் கதையில் வரும் முக்கிய பாத்திரங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
8. கர்ப்பப்பையில் ஆரம்பநிலையில் இருக்கும் உயிர் (திரும்பியுள்ளது)
9. காதல் மயக்கம்
11. ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய பணத்தொகை
13. நெற்றிப் பொட்டு (குழம்பியுள்ளது)
14. காதணி
16. ஒரு விஷ ஜந்து (திரும்பியுள்ளது)
18. மிக நுண்ணிய பொருளை இப்படிச் சொல்வர்
19. அமைதியான இயல்புடையவர்
21. நாற்காலி (திரும்பியுள்ளது)
23. திறமை வாய்ந்தவன், கெட்டிக்காரன் என்பதை இப்படியும் சொல்வர்.
24. சம்மதம் அல்லது உடன்படுவதைத் தெரிவிக்கும் சொல்

**மேலிருந்து கீழ்**

1. இயல்பான செழிப்பு நிலை
2. இதுவும் ஒரு பறவை
3. கூறுபாடு அல்லது விதம்
4. அவமானம் அல்லது இழிவு (குழம்பியுள்ளது)
5. ஓர் உறவுமுறை
6. நாட்காட்டியில் உள்ளது
10. விலை குறைவு. மலிவு (குழம்பியுள்ளது)
12. செல்வத்தையும் குறிக்கும் (தலைகீழ்)
13. திருமணம் குழம்பிவிட்டது
14. இப்போது பேசுபொருளாகவுள்ள போதைப்பொருள்
15. போதைதரும் பானம்
17. தடைப்பட்டிருக்கும் அல்லது முடக்க நிலை
20. இரண்டு
22. தொடக்கம் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 64

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. சமநிலை
5. அவதி
8. பதற்றம்
10. சனி
11. மதம்
12. கவிதை
14. திட்பம்
17. பனை
18. விகிதம்
20. சோளம்
22. வேறு
23. துயரம்
24. புள்
25. பாம்பு

**மேலிருந்து கீழ்**

1. சபதம்
2. மறம்
3. நிம்மதி
4. தலை
6. வனிதை
7. சதி
9. கற்பனை
13. விளம்பரம்
15. ஊனம்
16. கிணறு
18. விவேகி
19. தும்பு
21. சோம்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 64

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 500.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **பிரனூகா பிரசாந்த்** | **யூ.எச் நஜிமுத்தீன்,** | **எம்.எம் ,ஷெரீஷ்** |
| இல 43/1 ஸரேஷன் வீதி | 38, ஜின்னா வீதி, | 76/C/1 அல் ஹம்ரா வீதி, |
| மட்டக்களப்பு | அக்கறைப்பற்று | மருதமுனை |

### பாராட்டு பெறுவோர்

**1. கே.எம்.எம் பாரூக்**
மாத்தளை

**2. வஞ்சுதா பிரேம்குமார்**
பொகவந்தலாவ

**3. ஏ.எல். கலீல்**
இறக்காமம்

**4. ஏ.எல்.பிர்தௌசியா**
இறக்காமம்

**5. எம்.வி.எப் பசீனா**
களுத்துறை

**6. ஐய்னா செய்னப்**
கிண்ணியா

**7. எஸ்.தவநாயகி**
மட்டக்களப்பு

**8. எஸ். கனகரத்தினம்**
திருகோணமலை

**9. எஸ். செல்வராஜா**
பதுளை

**10.மல்லிகாதேவி பத்மநாதன்**
பசறை

வேலைவாய்ப்பு

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

309
## வெற்றிடங்கள்
கணக்கியல்/ நிதி

கொழும்பு 8 இற்கு சுற்றியுள்ள பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதிற்கு குறைவான AAT முழுமையான தகைமையுள்ள 3 வருட அனுபவமுள்ள அல்லது AAT பகுதி தகைமையுள்ள 5 வருட அனுபவமுள்ள பெண் உதவி கணக்காளர் தேவை. QB அறிவும் ஆங்கில புலமையும் கொண்டிருத்தல் வேண்டும். தொடர்பெண் 0772969370 மின்னஞ்சல் careerke @gmail.com 021755

320
## வெற்றிடங்கள்
ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பிலுள்ள உணவகமொன்றிற்கு அனுபவமுள்ள பிரியாணி சமையற்காரரொருவர் மற்றும் உதவியாளர்கள் இலங்கையர் அல்லது இந்தியர் தேவை. சமையற்காரருக்கான சம்பளம் 60, 000/= ரூபா + தங்குமிடம் + உணவு + நன்மைகள். 0767330938 அல்லது 0767730938 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 018302

325
## தொழில்துறை
பொது

0718653781 பாதுகாப்பு வெற்றிடங்கள் பாணந்துறை, கட்டுகுருந்த, மொறட்டுவ, இரத்மலானை, நுவரெலிய, தொட்டலங்க, கட்டுநாயக்க, மட்டக்குளிய, வத்தளை, கொள்ளுப்பிட்டி, புறக்கோட்டை, ஹொரணை, கோனபொல, பண்டாரகம, அவிசாவளை, களுஅக்கல, பத்தரமுல்ல, பாணந்துறை 07045 4 5 0 5 1 மொறட்டுவை 070699 1 6 37 வத்தளை 0 71 8653779 கொழும்பு 071 8 653780 ராஜகிரிய 071 2125238 ஹொரணை 0718 3 79981 தெஹிவளை 070 2 5 13418 அலுவலகம் 071 86 5 3 778, 07 0 4 04089 9, 07 6 8 17105 3, 07 6 0 98912 2 021954




## பொது

431
## நானாவிதப் பொருட்கள்
விற்பனைக்கு

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய மேசை, நாற்காலிகள் ரி பொலி, சிறிய கட்டில், வீட்டிற்கான மின்சார உபகரணங்கள் குரோக்கா ஸ்பீக்கள் FM ரேடியோ. பாடசாலை பைகள் இன்னும் பல பொருட்கள் குறைந்த விலைக்கு, இல. 103, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடையில் விற்பனைக்குண்டு. 0714363232 020992



## காணி/தோட்டம்

616
## வீடு சொத்து
கொழும்பு மாவட்டம்
விற்பனைக்கு

பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, திம்பிரிகஸ்யாய காலி வீதி டுப்ளிகேஷன் வீதியில் காணி, வீடுகள் விற்பனைக்கு உள்ளன. 7 பேர்ச், 18 பேர்ச், 30 பேர்ச். 0777061207 022288

முல்லேரியா மாலிகா கட்டிட பிரதேசத்தில் 6 பேர்ச்சில் 4 அறைகள், அனைத்து வசதிகளுடனான புதிய வீடு விற்பனைக்குண்டு. 0712180375, 0707180375. 021390

தினகரன் வாரமஞ்சரி

## திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377

*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

617
## வீடு சொத்து
கம்பஹா மாவட்டம்
விற்பனைக்கு

பியகம வர்த்தக வலயத்திற்கு அருகாமையில் (3 கி.மீ) தரணாகமயில் அமைந்துள்ள 16 பேர்ச் பெறுமதியான காணி விற்பனைக்கு. தரணாகம சந்தியிலிருந்து டிப்போ சந்தியை இணைக்கும் 10 அடி கார்பட் வீதிக்கு முகப்பாக, கடுவளை கண்டி வீதிக்கு 1.5 கி.மீ. தெளிவான உறுதி. வியாபார இடத்திற்குப் பொருத்தமானது. 0750405200 021671

621
## வீடு சொத்து
கண்டி மாவட்டம்
விற்பனைக்கு

0777282147 20 மில்லியன் முதல் அதற்கு மேல் 2030 வீடுகள் விற்பனைக்கு. அனிவத்த, தொடம்வல, வட்டாரந்தென்ன, மாவில்மட, அம்பிடிய, லேவல்ல, (City Limits) கொஹாகொட, பொல்கொல்ல, குண்டசாலை, ஹாரகம, கெலிஓய, அக்குரண, வத்தேகம, பிலிமத்தலாவ பிரதான பாதைக்கு முகப்பாக வியாபாரஸ்தலம் மற்றும் வெற்றுக் காணித்துண்டுகளும் விற்பனைக்கு. சகல வசதிகளும் உண்டு. 0777438169019304

623
## வீடு சொத்து
நுவரெலியா மாவட்டம்
விற்பனைக்கு

பிரமிக்க வைக்கும் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் அழகை அனுபவிப்பதற்கு விருப்பமான உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக. பெறுமதியான வியாபார மற்றும் வதிவிட 100 காணித் துண்டுகள். ஒரு பேர்ச் ரூபா 245,000/ தொடக்கம் விஷேட கழிவுடன் வட்டியில்லாத இலகுக் கொடுப்பனவு முறை. தொடர்புகொள்ளவும். சிறிபொல லேண்டஸ். 0702484848 022250

ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக 10 பேர்ச் கொண்ட பெறுமதியான 100 காணித் துண்டுகள் மூன்று பேஸ் மின்சாரம் கொண்டது. ஒரு பேர்ச் ரூபா 245, 000/ தொடக்கம். இலகு கொடுப்பனவு முறை மற்றும் விஷேட கழிவொன்று சகிதம் உங்கள் காணியை இன்றே ஒதுக்கிக் கொள்வதற்கு தொடர்புகொள்ளுங்கள். சிறிபெல லேண்ட்ஸ் 0702484848 022251

634
## வீடு சொத்து
மட்டக்களப்பு மாவட்டம்
விற்பனைக்கு

மட்டக்களப்பு நகரின் திருமலை பிரதான வீதியில் வியாபார நோக்கத்திற்கான 101 பேர்ச், 106 பேர்ச்சஸ் இரண்டு காணிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு 0778852009 022346

641
## வீடு சொத்து
கொழும்பு மாவட்டம்
வாடகைக்கு குத்தகைக்கு

மாளிகாவத்த தொடர்மாடி மற்றும் வீடு கொழும்பு 5, டிக்மன்ஸ் வீதிக்கு அருகாமையில் வாடகைக்கு அல்லது விற்பனைக்கு. gama 659@hotmail.co.uk - 0112058775. 021145

## விலைமனுக்களுக்கான அழைப்பு

வ/ப தெஹிவளை - கல்கிஸ்ஸ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரித்தான பின்வரும் காணிகளை விற்பனை செய்வதற்காக 2023-05-31ஆம் திகதி பி.ப. 5.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| காணி | பேர்ச்சஸ் |
|---|---|
| நுகேகொட ஹைலெவல் வீதி | 51.20 |
| கிருலப்பனை | 40.02 |
| வுட்லண்ட் காணி | 11.16 |
| கவ்டான | 06 |
| இரத்மலானை மேற்கு | 7.4 |

ஒரு ஆதனத்திற்கான கேள்விப் படிவக் கட்டணம் 2000.00 ரூபாவாகும். காணியைக் கொள்வனவு செய்யும்போது கொடுப்பனவு முறை பற்றிக் கலந்துரையாடலாம். கேள்விகள் திறக்கப்படும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தலைவர் - வ/ப தெஹிவளை - கல்கிஸ்ஸ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**விசாரணை:**
**076 3186530 / 071 6939908**
**074 1246725**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz Classified
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

**2023-03-19 மற்றும் 2023-03-20ஆம் திகதிகளில் பிரசுரமான விலைமனுக்களுக்கான அழைப்பு விளம்பரத்தின் திருத்தம் பற்றிய அறிவித்தல்**

## இலங்கை துறைமுக அதிகார சபை

**கொழும்புத் துறைமுகத்திலுள்ள கிழக்கு கொள்கலன் முனையத்திற்கு செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் - சிவில் வேலைகள்**

**(ஒப்பந்த இலக்கம் SLPA/CD/ECT/OPER/01)**

2023-03-19 மற்றும் 2023-03-20ஆம் திகதிகளில் பிரசுரமான விளம்பரத்தின் விபரங்களில் பின்வருமாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

- இந்த வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 240 நாட்களாகும்.
- நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2023-04-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்கள் 2023-04-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டதன் பின் அவை உடனடியாகத் திறக்கப்படும்.
- விலைக்கோரல் பிணை முறியானது 2023-09-18ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு 01.**

National Lotteries Board — வியாழக்கிழமை 2023.04.06 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5082 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,714,742.00 — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 9 0 1 2 3 6

ராசியை மனி — சீட்டிழுப்பு இலக்கம் 391 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,856,957.20 — வெற்றி இலக்கங்கள் 21 26 49 61

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1537 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,861,451.20 — வெற்றி இலக்கங்கள் 4 5 9 4 8 1

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1430 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 313,217,070.00 — ஆங்கில எழுத்து A — 02 — வெற்றி இலக்கங்கள் 20 21 39 47 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1112 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,064,325.60 — ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 44 53 65 77

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3324 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,443,196.24 — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 05 08 43 67

UNIVERSITY HOSPITAL
General Sir John Kotelawala Defence University

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை

## ஆர்வ வெளிப்பாட்டை அழைத்தல் (EOL)

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில், பிரத்தியேக சேவைகள், சுகாதார அறிவுறைகள் மற்றும் மருத்துவ ஆய்வுகளை மேம்படுத்துவதற்காக இலங்கையின் தகுதியுள்ள விளம்பர நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தெரிவு செய்யப்படும், விண்ணப்பதாரர், வர்த்தகப் பெயரை (Brand Name) அபிவிருத்தி செய்தல், இலச்சினை (Logo) கோஷம் (Tagline) மேம்படுத்தல் / விளம்பரப்பண்டங்களை திருத்தமாக மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலதிக விபரங்களிற்காக, ஆர்வமுள்ள விளம்பர நிறுவனங்கள் KDU (www.kdu.ac.lk) அல்லது UHKDU இன் இணையம் (www.uhkdu.lk இற்குப் பிரவேசிக்கலாம்.

முத்திரையிடப்பட்ட தபாலுறைகள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி **2023/04/23**

CEYLON PETROLEUM STORAGE TERMINALS LIMITED

## சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டர்மினல் லிமிட்டட்

**2023 ஆம் ஆண்டின் சிங்கள/ தமிழ் புத்தாண்டு விடுமுறைக் கால எல்லையின்போது எரிபொருள் விநியோக செயற்பாடானது பின்வரும் முன்னெடுத்துச் செல்லப்படும்.**

| திகதி | | கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோக இடங்கள் |
|---|---|---|---|
| | | கொலொன்னாவ, முத்துராஜவெல முனையங்கள் பேரளவிலான டிப்போக்களின் எண்ணெய் தாங்கி தொகுதிகள் | கொலொன்னாவ, முத்துராஜவெல முனையங்கள் பேரளவிலான டிப்போக்களின் எண்ணெய் தாங்கி தொகுதிகள் |
| 2023.04.10 (திங்கள்கிழமை) | | 2023.04.11 ஆம் திகதியன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2023.04.11 (செவ்வாய்கிழமை) | | 2023.04.12 ஆம் திகதியன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2023.04.12 (புதன்கிழமை) | சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் லிமிட்டட்டினால் பிரகடனப்படுத்தப்பட்ட விடுமுறையொன்று | 2023.04.13 வியாழக்கிழமையன்று அவசர சேவைகளுக்காக மாத்திரம் விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2023.04.13 (வியாழக்கிழமை) | சிங்கள / தமிழ் புத்தாண்டிற்கு முந்திய தினம் | 2023.04.15 ஆம் திகதியன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல | அவசர சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகங்கள் நடைபெறும். |
| 2023.04.14 (வெள்ளிக்கிழமை) | சிங்கள / தமிழ் புத்தாண்டு தினம் | **மூடப்பட்டிருக்கும்** | **மூடப்பட்டிருக்கும்** |
| 2023.04.15 (சனிக்கிழமை) | | 2023.04.16 ஆம் திகதியன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2023.04.16 (ஞாயிற்றுக்கிழமை) | | 2023.04.17 ஆம் திகதியன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |

| | கொலொன்னாவ எண்ணெய் தாங்கி தொகுதி | | முத்துராஜவெல முனையம் |
|---|---|---|---|
| | **விநியோகத்திற்கான அலுவலகம்** | **போக்குவரத்து அலுவலகம் கட்டளைகள் பிரிவு** | **விநியோகத்திற்கான அலுவலகம்** |
| தொலைபேசி இலக்கம் | 0112572336 0112572158 | 0112531324 0112696542 0112532131 /0115668472 | 0115355546, 0113193924 0113193923 |
| தொலைநகல் | 0112572380 | 0112531325 | 0115355456 |

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

## ஆர்வ வெளிப்பாடுகள்

## தேசிய சமுத்திர விவகாரக் குழுவின் மறுசீரமைப்பு

**அறிமுகம்**

1. கண்டப் படுகை வரம்புகள் குறித்து ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவிடம் இலங்கை சமர்ப்பித்த கண்டப் படுகை தொடர்பான சமர்ப்பணம் சார்ந்த அனைத்து விடயங்களையும் கையாள்வதற்காக 2012.03.28ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக தேசிய சமுத்திர விவகாரக் குழு நிறுவப்பட்டது. தற்போது, தேசிய சமுத்திர விவகாரக் குழு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் வருகின்றது.

**நோக்கம்**

2. தேசிய சமுத்திர விவகாரக் குழுவின் பதவிக்காலம் 2022.12.31ஆந் திகதி நிறைவடைந்துள்ளதுடன், 2023 மார்ச் 07ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக, கண்டப் படுகையின் வெளிப்புற எல்லைகளை அடையாளம் காணும் நோக்கத்திற்காக தேசிய சமுத்திர விவகாரக் குழுவை மறுசீரமைப்பதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**தகைமை**

3. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, மேலே உள்ள பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிறைவு செய்யப்பட வேண்டிய மீதமுள்ள பணிகளில் ஈடுபடுவதற்காக, தேசிய சமுத்திர விவகாரக் குழுவின் உறுப்பினராக இணைந்து கொள்வதற்கான ஆர்வ வெளிப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்காக, கடல் சட்டம், புரிந்துணர்வு அறிக்கை, நடைமுறை விதிகள் மற்றும் கண்டப்படுகையின் வரம்புகள் குறித்த ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் குறித்த ஐ.நா. சாசனம் தொடர்பான அறிவுத் தெளிவுடைய மற்றும் இலவசமாக சேவை செய்வதற்குத் தயாராகவுள்ள சட்ட மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு இத்தால் அழைப்பு விடுக்கின்றது.

**ஆர்வ வெளிப்பாடுகளைச் சமர்ப்பித்தல்**

4. கடல் சட்டம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த நிபுணத்துவத்தை நிரூபிப்பதற்கான சுயவிபரக்கோவை மற்றும் ஏனைய துணை ஆவணங்களுடன் கூடிய ஆர்வ வெளிப்பாடுகள் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ 2023.04.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**கவனத்திற்கு: பணிப்பாளர் - பொது நிர்வாகம்,**
**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,**
**குடியரசுக் கட்டிடம், கொழும்பு 1.**
**மின்னஞ்சல்:** cypher@mfa.gov.lk

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# மூன்று வருடங்களின் பின்னர் களைகட்டும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

## கடன் வாங்கியோ, அல்லது எதையேனும் விற்றோ அல்லது அடகு வைத்தோ பெருநாள் கொண்டாட்டங்களில் ஈடுபடத் தயாராகும் மக்கள்

இலங்கையில் இந்தவருடம் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் களை கட்டும் போலத் தெரிகிறது. கடந்த மூன்று வருடங்களாக கொரோனாத் தாண்டவம் காரணமாகவும் அதன் பின்னர் பொருளாதார வீழ்ச்சி காரணமாகவும் வழமையான காட்சிப்படுத்தல்கள் ஏதுமின்றி எளிமையாக வீடுகளுக்குள் புத்தாண்டு பிறந்தது. ஆனால் இந்தத்தடவை மக்கள் முகக் கவசங்கள் எதுவுமின்றி அதிகளவில் வீதிக்கு இறங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

கொழும்பில் மாத்திரமின்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அதிகளவு மக்கள் நடமாட்டத்தைக் காண முடிகிறது. பெரும்பான்மைச் சமூகத்தைப் பொறுத்தமட்டில் வழமையாகவே அவர்கள் சேமித்து வைத்திருக்கும் பணத்தை புதுவருடக் கொண்டாட்டங்களில் அதிகளவில் செலவழிப்பதைக் காண முடியும்.

இந்தத் தடவை பொருளாதாரப் பிரச்சினைகள் வருமான இழப்புகள் தொழில் இல்லாமை போன்றன காரணமாக நாட்டில் வறுமை நிலை அதிகரித்துள்ள போதிலும் ஒன்றில் கடன் வாங்கியோ அல்லது தம்மிடமுள்ள பணமாக மாற்றக் கூடிய எதையேனும் விற்றோ அல்லது அடகு வைத்தோ பெருநாள் கொண்டாட்டங்களில் ஈடுபடத் தயாராவதாக நாடு பூராகவும் சுற்றித்திரியும் சுற்றுலாப் பயணவசதி வழங்கும் வாகன சாரதியொருவர் குறிப்பிட்டார். மூன்று வருடமாக பெருநாள் இல்லை தானே அதுதான் மக்கள் இந்த முறை வெளியே வருகிறார்கள் என்றார் அவர். பெரும்பான்மை மக்களின் நடத்தைகளை புதிதாக அவதானிக்கும் வெளிநாட்டுப் பயணிகள் இந்த நாட்டிலா பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று ஆச்சரியப்படும் அளவுக்கு அவை காணப்படுகின்றன.



பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட கிரேக்கம், லிபியா போன்ற நாடுகளில் மக்களின் நடத்தை வழமைக்குத் திரும்ப நீண்டகாலம் ஆகியது. இலங்கையின் பெரும்பான்மை மக்கள் வித்தியாசமானவர்கள். சிங்களமொழியில் நெவகிழுனத் பாண்ட் சூன்' என்ற ஒரு வாக்கியப் பிரயோகம் உண்டு. டைட்டானிக்கப்பல் கவிழ்ந்த போது தொடர்ந்த அதிலிருந்த பாண்ட் வாத்தியக் கலைஞர்கள் தொடர்ந்து இசைத்துக்கொண்டிருந்ததாக ஒரு கதை உண்டு. துன்பம் வரும் வேளையிலே சிரிங்க என்று சொல்லி வச்சார் வள்ளுவர். சரிங்க இடுக்கண் வரங்கால் நகுக என்பது தான் அது. பொருளாதார நெருக்கடி ஒரு புறமிருந்தாலும் பெருநாள் கொண்டாட்டங்களில் ஈடுபடவேண்டுமென்ற மக்களின் முனைப்பு ஒரு வகையில் பாராட்டப்பட வேண்டியது தான் ஏனெனில் ஐயோ விழுந்து விட்டோமே என்று விழுந்து கிடந்து கண்ணைக் கசக்காமல் ஆகட்டும் பார்க்கலாம் என்ற அசட்டுத் தைரியமும் ஒரு நாட்டுக்குத் தேவையானது தான். 2004இல் சுனாமி வந்தபோது ஏற்பட்ட அழிவுகளின் மனப்பதிப்பிலிருந்து இலங்கை மக்கள் மிக விரைவில் மீண்டார்கள். அதேபோலவே கோர யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களும் அதிலிருந்து எழுந்து நின்றார்கள். இப்படிப்பட்ட தாக்குப்பிடிக்கும் தன்மை கொண்ட மக்கள் வாழும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து கிடக்கிறது என்றால், அது அந்த மக்களின் தவறினால் ஏற்பட்டிருக்க வாய்ப்பேயில்லை. வியாபாரிகளுக்கு மக்களின் வெளிவருகை புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. சில இடங்களில் இரவு நேரங்களிலும் வியாபார நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. நிலைமை வழமைக்குத் திரும்பிவருகிறது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த விரும்பும் அரசாங்கத்திற்கு மக்களின் கொண்டாட்டம் புதிய உத்வேகத்தைக் கொடுக்கும் என்று நிச்சயமாக நம்பலாம். ஆனால் நாட்டின் பொருளாதாரம் இன்னும் அவசரசிகிச்சைப் பிரிவிலேயே இருக்கிறது என்பதை அண்மையில் மத்தியவங்கி ஆளுநர் நினைவுபடுத்தியிருக்கிறார். எதிர்க்கட்சியோ இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமை நரகத்தின் இடைவேளை என்கிறது. தட்டுப்பாடுகள் குறைந்து விட்டன. மின் வெட்டு இல்லை வரிசைகள் இல்லை பொருள்களின் விலைகளும் படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றன அதைவிட மக்களுக்கு வேறென்ன வேண்டும் என்று கேட்கிறது அரசாங்கம். அரசாங்கத்தின் கொள்கைகள் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தி விட்டன என்று வெற்றிப் பெருமிதத்துடன் பேட்டிகள் வழங்கப்படுகின்றன. அப்படி ஒன்றுமில்லை. பிரச்சினைகள் தற்காலிகமாகக் குறைந்திருக்கிறது. இடைவேளையின் பின்னர் தான், உச்சகட்டக் காட்சியாகிய கிளைமாக்ஸ் வருமென்று எதிர்க்கட்சிகள் காத்துக்கிடக்கின்றன. ஆனால் இது இடைவேளையா இல்லை அரசாங்கத்தின் சாதனையா? என்பதை அனுபவபூர்வமாக அறிந்து கொள்ள நீண்டகாலம் செல்லாது. ஆனால் இப்போது புத்தி ஜீவிகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் சிலர் அரசாங்கத்தின் கொள்கைகளை ஆகா ஓகோ என்று புகழ் பாட ஆரம்பித்திருக்கிறார்கள். இதே துதிபாடிகள் தான் முன்னைய ஆட்சியாளர்களையும் பாடிப்பாடிக் கவிழ்த்தவர்கள். அதிகாரத்திற்காகவும் பதவிகளுக்காகவும் ஆலோசனை எந்தப்பக்கமும் தாவத் தயாரான இத்தகையவர்கள் எந்த ஆட்சி வந்தாலும் அவர்களைக் காக்கா பிடித்த பதவிகளில் இருப்பவர்கள். ஆகவே எதிர்வரும் நாட்களில் வழக்கமான காட்சிகள் தொடர்ச்சியாக அரங்கேறும் என எதிர்பார்க்கலாம். பொருட்களின் விலைகள் தொடர்ந்து குறைவடைந்து வருவதை சந்தைகளுக்குச் செல்லும் போது காணமுடிகிறது. குறிப்பாக மரக்கறிகளின் விலைகள் கணிசமானளவு குறைவடைந்திருக்கின்றன. ஆனால் நல்ல மரக்கறிகளை, விற்கப்படும் சாப்பாட்டுப் பார்சல்களில் இன்னும் காண முடியாதுள்ளது. இறைச்சி, மீன் என்பவற்றின் விலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக சந்தைத் தகவல்களில் கூறப்பட்டாலும் அந்தவிலைகளில் அவற்றை வாங்க முடியாதுள்ளது. எரிவாயுவின் விலை ஆயிரம் ரூபாவினால் குறைவடைந்தள்ளது. கோதுமைமாவின் விலையும் குறைவடைந்துள்ளது. பால்மா மற்றும் சீனி விலைகளும் குறைவடைந்துள்ளன. ஆனால் இவ்விலைக் குறைப்புகளின் நன்மைகள் இன்னமும் பொதுமக்களில் பலரைச் சென்றடையவில்லை.

இது பற்றி அறியும் நோக்கில் கொள்ளுப்பிட்டிச் சந்திக்கு அருகாமையில் உள்ள ஒரு சைவ உணவகத்திற்குச் சென்று அவதானித்தபோது சாதாரணமான ஒரு காலை உணவுக்கு இடியப்பம் பத்து, ஒரு உளுந்துவடை மற்றும் ஒரு பிளேன்டி வாங்கினால் அதற்கு 510 ரூபா ஆகிறது. ஒரு இடியப்பம் முப்பது ரூபா, ஒரு உளுந்து வடை 150 ரூபா, ஒரு பிளேண்டி அறுபது ரூபா. எரிவாயு மற்றும் கோதுமை மா, சீனி போன்றவற்றின் விலைகள் குறைவடைந்துள்ள போதிலும் வர்த்தகர்கள் இன்னமும் விலைகளைக் குறைக்கவில்லை. உணவுப் பார்சல்களும் முன்னைய விலையிலேயே விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடிகிறது. தலைநகரிலேயே இந்த நிலை என்றால் புறநகர் மற்றும் கிராமப்புறங்கள் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. விலைகளைக் கூட்டுவதில் கடுகதியாக வேலை செய்யும் வர்த்தகர்கள் அதனை குறைக்கும் போது ஆமைவேகத்தில் செயற்படுவது அவர்களின் சுயநலன் காரணமாகவே. எனவே விலைகளைக் குறைப்பது மட்டும் போதாது அவ்விலைக் குறைப்புகள் உடனடியாக அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்வதும் அதிகாரிகளின் கடமையாகும். தற்போது பண்டிகைக் காலத்தில் தவித்த முயல் அடிக்கும் வியாபாரிகள் குறித்து அதிக கவனத்துடன் செயற்படவேண்டும். அதன் மூலமே இப்போது ஏற்பட்டுள்ளது நரகத்தின் இடைவேளை இல்லை என்று பொதுமக்களுக்கு நிரூபிக்க முயற்சிக்கலாம்.

---



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# பிரான்ஸ் ஜனாதிபதியின் சீன விஜயம் முன்னிறுத்தும் இராணுவ அரசியல்!

சமகால உலக அரசியலானது பல திசைகளை நோக்கி நகர்கிறது. மேற்குலகம் தனது அதிகாரத்தை பாது காக்கவும் கிழக்குலகத்தின் மீதான தனது ஆதிக்கத்தை தொடரவும் தொடர்ச்சியான தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேற்குலகத்தின் பலமானது ஆசிய ஆபிரிக்க மற்றும் இலத்தீனமெரிக்க நாடுகள் மீதான அரசியல் பொருளாதார இராணுவ ஆதிகத்திலேயே அதிகம் தங்கியுள்ளது. அந்நாடுகளின் தனித்துவமான அரசியல் இருப்பொன்றுக்கான எழுச்சியானது மேற்குலகத்தை குழப்பத்திற்குள் தள்ளியுள்ளது. அதனை தடுப்பதற்கான அனைத்து உத்திகளையும் மேற்குலகம் மேற்கொள்ள முனைகிறது. இக்கட்டுரையும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோனின் சீன விஜயத்தையும் அதன் விளைவுகளையும் தேடுவதாக அமையவுள்ளது.



பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோனது சீன விஜயம் (05.04.2023) குறிப்பிடத்தக்க அரசியல் போக்கினை உணர்த்தியுள்ளது. பிரான்ஸ் ஜனாதிபதி, உக்ரைன் போரை தடுத்து நிறுத்தும் வலிமை சீனாவின் ஜனாதிபதிக்குண்டு எனக் குறிப்பிட்டதுடன் ரஷ்ய, உக்ரைன் போர் ஐரோப்பாவுக்குள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை மெக்ரோனின் சீன விஜயத்துடன் இணைந்து கொண்ட ஐரோப்பிய யூனியனின் தலைமை உறுசுலா வொண் டிர்லியின் பிஜிங் வருகை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிகிறது. சீன ஜனாதிபதி ஜின் பிங் ரஷ்ய – உக்ரைன் போரை தடுக்க 12 அம்சக் கோரிக்கையை முன்வைத்ததோடு அதனை உக்ரைன் நிராகரித்திருந்ததென்பதும் கலவனத்திற்குரியதாகும். ஆனால் பிரான்ஸ் ஜனாதிபதி அணுவாயுதப் போரை தடுக்கவும், சீனா, மொஸ்கோவுக்கு வழங்கும் ஆயுத விநியோகத்தை தடுத்து நிறுத்தவும் முயன்றுள்ளதை அவரது உரையாடலில் கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது. போரை நிறுத்துவதற்கான நகர்வுகளை ஐரோப்பிய யூனியன் தலைமை சீன ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதுடன் உக்ரைன் ஜனாதிபதியுடன் உரையாடுமாறும் விண்ணப்பித்திருந்தார். மேற்குடனான வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவு பற்றிய உரையாடலை மெக்ரோனுடன் சீன ஆட்சியாளர்கள் முதன்மைப்படுத்தியதுடன் பிரான்ஸ் ஜனாதிபதிக்கான கௌரவத்தை முதன்மைப்படுத்தியிருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக அமைந்திருந்தது. பிரான்ஸ் ஜனாதிபதி 50க்கு மேற்பட்ட வர்த்தக பங்காளிகளுடன் செயல்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய வர்த்தக தொடர்பாளர்கள் சீனாவுடன் உடன்பாடுகளை மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது. அதேநேரம் ஐரோப்பிய யூனியன் தலைமை சீனாவின் மனித உர்மை சார்ந்தும் உய்கூர் இஸ்லாமியர் தொடர்பிலும் தாய்வான் விவகாரத்தையும் முதன்மைப்படுத்தியிருந்ததையும் அவதானிக்க முடிகிறது. இதில் மேற்குலகத்தின் தந்திரோபாயம் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவே தெரிகிறது. அதாவது சீனாவை அரவணைத்து கையாளுவது மற்றும் எச்சரித்து கையாளுவதென்ற இரட்டை தந்திரத்தை நகர்த்தியுள்ளனர். அவற்றை சற்று விரிவாக நோக்குவது பொருத்தமானது.

ஒன்று, சீனாவை வர்த்தக ரீதியில் கையாளுவதன் மூலம் ரஷ்ய, சீன நெருக்கத்தை தகர்ப்பது பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. பிரான்ஸின் உள்நாட்டில் பாரிய போராட்டங்கள் ஓய்வூதிய சீர்திருத்தம் தொடர்பில் நிகழ்துவருகிறது. அது வன்முறையாக மாறி வருகிறது. இச்சந்தர்ப்பத்தில் மெக்ரோனது சீன விஜயம் உள்நாட்டு நெருக்கடியை கடந்து முதன்மையானதாக கொள்ளப்படுகிறது. அதனாலேயே அவரது விஜயம் சாத்தியமாகியுள்ளது. அப்படியானால் சீனாவினது முக்கியத்துவம் பிரான்ஸுக்கு மட்டுமானதல்ல என்பதும், அது ஒட்டுமொத்த ஐரோப்பாவுக்குரியதென்பதையும் கடந்து மேற்குக்கானதாகவே தெரிகிறது. மேற்கு அனைத்து வழிகளிலும் அதிக நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக சீனாவின் அணுகுமுறையால் சவூதி அரேபியாவும், ஈரானும் ஏனைய எண்ணெய்வள நாடுகளும் ஒன்றிணைந்துள்ளன. மெக்ரோன் மற்றும் டிர்லியின் பீக்கிங்குக்கு விஜயம் செய்த அதே நாளில் (05.04.2023) சவூதி மற்றும் ஈரானிய தூதுவர்களை சீன அரசாங்கம் சந்தித்துள்ளது. இரு சந்திப்புகளும் ஏதோ ஒரு வகையில் ஒன்றோடொன்று இணைந்துள்ளது. அதாவது சீனா, ரஷ்யா என்பனவற்றின் முன்முயற்சியால் மேற்காசிய எண்ணெய்வள நாடுகள் தமக்கிடையே நிலவிய முரண்பாடுகளை கைவிட்டு ஒன்றாக இணைந்து பயணிக்க ஆரம்பித்துள்ளன. ஒபெக் அமைப்பும் அதன் பிளஸ் அமைப்பும் எண்ணெய் உற்பத்தியை மட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளன. அமெரிக்கா பல தடவை வலியுறுத்தியும் ஒபெக் நாடுகள் தீர்மானம்' எடுத்துள்ளன. அதிலும் சவூதி அரேபியா, ஈராக் போன்ற நாடுகள் முதன்மையான முடிவை ஏற்கனவே அறிவித்திருந்தன. இவை அமெரிக்காவினதும் மேற்குலகத்தினதும் விசுவாசம்மிக்க நாடுகள் என்பது கவனத்திற்குரியதாகும். இதனைவிட பிறிக்ஸ் என அழைக்கப்படும் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் தமக்கிடையேயான வர்த்தகத்தையும் பொருளாதார நடைமுறைகளையும் மேற்கொள்வதற்கான நாணயத்தை உருவாக்கப் போவதாக அறிவித்துடன் ஏற்கனவே ரஷ்ய, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் தமக்கிடையேயான வர்த்தகத்தை தமது நாணயத்தில் (விஸ்ரோவில்) நிகழ்த்த ஆரம்பித்துள்ளன. அது மட்டுமன்றி ஷங்காய் ஒத்துழைப்பு மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக சீன ஜனாதிபதி இந்தியாவுக்கு ஜூலையில் வருகை தரவுள்ளார்.சீன, இந்திய ஒத்துழைப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. இதனை தடுக்கவே சீனா, இமாச்சலப் பிரதேசத்திலுள்ள இந்திய பெயரிலுள்ள இடங்களை பெயர் மாற்றம் செய்வதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அதனை ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் அமெரிக்கா குறிப்பிடுகிறது. 1962 இலிருந்து அதனை இந்தியாவே கண்டுகொள்ளவில்லை எப்பது அமெரிக்காவுக்கு தெரியாததல்ல. இருந்த போதும் முரண்பாட்டை தூண்டுவது அமெரிக்காவுக்கு அவசியமாகிறது. இந்த அணி உடைக்கப்படுவதே பிரதான தேவையாக மேற்குக்கு உள்ளது.

இரண்டு, சீனாவை மனித உரிமை சார்ந்தும் மற்றும் போர் அச்சுறுத்தலை மேற்கொண்டும் நெருக்கடியை உருவாக்குவதாக தெரிகிறது. அதாவது ஐரோப்பிய யூனியனின் தலைமை சீன ஜனாதிபதியுடனான உரையாடலில், உக்ரைன் – ரஷ்யப் போரை ஒரு புறம் முதன்மைப்படுத்தினாலும் மறுபக்கத்தில் உய்கூர் முஸ்லிம்கள் தொடர்பிலான மனித உரிமையை முதன்மைப்படுத்தியிருந்தது. அத்துடன் தாய்வான் விவகாரத்தை பற்றிய உரையாடலையும் வெளிப்படுத்த தவறவில்லை. இப்பகுதி எழுதிக் கொண்டிருக்கும் போதே தாய்வான் ஜனாதிபதி ஷிஜி இங்வென் அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளார். ஏற்கனவே அமெரிக்க காங்கிரஸின் முன்னாள் சபாநாயகர் நான்சி பெலஸ்ன் தாய்வான் விஜயத்தின் பின் சீன, அமெரிக்க உறவு கொதிநிலையில் காணப்படுகிறது. தற்போது அதன் சுதந்திரம் பற்றியும் தைவானின் சுதந்திரம் வரையும் அமெரிக்காவின் ஆயுத விநியோகம் நிகழும் எனவும் அமெரிக்க பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது. இதே நேரம் தாய்வானின் முன்னாள் ஜனாதிபதி மா யுங் ஜீயோவின் சீனப்பயணமும் அரசியல் முக்கியத்துவம் பெற்றதாக மாறியுள்ளது. சீன ஜனாதிபதி மீளவும் தாய்வான் விடயத்தில் எத்தகைய சமரசமும் கிடையாது என அறிவித்துள்ளார். இத்தகைய வெறுப்பூட்டும் தாய்வான், அமெரிக்கத் தலைவர்களது செயல்பாடுகள் ஒட்டுமொத்தமாக தாய்வானைப் பாதிக்கும். தற்போது தாய்வானை மையப்படுத்தி சீனாவின் போர் ஒத்திகை தீவிரமடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இதே நேரம் பிரான்ஸ் ஜனாதிபதி ரஷ்யாவின் நட்புநாடான பெலாரஸில் நிறுத்தப்பட்டுள்ள அணுவாயுதம் பற்றிய இராணுவ அரசியலின் முக்கியத்துவம் பற்றி சீன ஜனாதிபதியுடன் உரையாடியிருந்தார். அணுவாயுதப் போரை தவிர்க்க ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரியிருந்தார். ரஷ்யாவின் அணுவாயுதம் பற்றிய நகர்வுகளை மேற்குலகம் ஓர் இராணுவ அரசியலாக முதன்மைப்படுத்தி பிரசாரம் மேற்கொண்டுவருவதுடன் அதன் மூலம் ரஷ்யாவை சூழவுள்ள நாடுகளை நேட்டோவில் இணைப்பதில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. இப்பிராந்தியத்தை முழுமையாக மேற்குலகத்தின் காலடியில் வீழ்த்துவதே நேட்டோவின் உத்தியாக அமைந்துள்ளது. ரஷ்யா பழைய சோவியத் யூனியனை உருவாக்க திட்டமிட்டுள்ளதாகவும் அதிலிருந்து அயல்நாடுகள் தம்மை பாதுகாக்க வேண்டுமாயின் நேட்டோவில் இணைவது அவசியம் எனவும் குற்றம்சாட்டிவரும் அமெரிக்கா தற்போது ரஷ்யா அணுவாயுதப் போரை அச்சுறுத்தலாக கருத வேண்டும் எனவும் அயல்நாடுகளை அச்சுறுத்தி சாம்ராச்சியத்தை அமைக்க ரஷ்யா திட்டமிடுவதாகவும் பிரசாரம் செய்துவருகிறது. உக்ரைன் மீதான தாக்குதலுக்கு ரஷ்யாவுக்கு வழங்கும் ஆயுத விநியோகத்தை கைவிட வேண்டும் எனவும் மெக்ரோன் தெரிவித்துள்ளமை கவனத்திற்குரியதாகும்.

இரண்டையுமே சீனா சரிவரக் கையாண்டுள்ளதாகவே தெரிகிறது. சீனாவின் வர்த்தக மற்றும் பொருளாதா உத்தியை முன்னிறுத்தி இராணுவ அரசியலை கையாள முடியுமென கணித்து செயல்பட்ட மேற்கினதும் பிரான்ஸ் ஜனாதிபதியினதும் நகர்வு அதிக பயனை மேற்குக்கு ஏற்படுத்தவில்லை என்ற கருத்தே அதிகமாகவுள்ளது. சீனா, உலகளாவிய ரீதியில் பொருளாதாரப் பாய்ச்சலைக் கொண்ட நாடு என்றாலும் தாய்வான், ஹொங்கொங் மற்றும் உய்கூர் முஸ்லிம் விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்பையும் செய்யத் தயாரில்லாத நிலையைக் கொண்டுள்ளது. மறுபக்கத்தில் சீனா, மெக்ரோனுக்கு செங்கம்பள வரவேற்பைக் கொடுத்து வர்த்தக உடன்பாடுகளில் கையெழுத்திட்டுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட பிறிக்ஸ் நாடுகளின் பொது நாணயமே மேற்குக்கு ஆபத்தானதாகும். அதற்கான எதிர்வினையையே பிரான்ஸ் ஜனாதிபதி ஆற்றியுள்ளார். இத்தகைய அரசியல் நகர்வால் நாணய உருவாக்கத்தையும் கிழக்கு நாடுகள் மீதான பொருளாதார முறியடிப்பையும் சாத்தியப்படுத்த முடியவில்லை எனில் சீனா – தாய்வான்போரை அல்லது இந்திய, சீனப் போரை உருவாக்குவதே அமெரிக்காவினதும் மேற்குலகத்தினதும் நோக்கமாகும். ஆனால் மேற்கின் அணியெனக் கருதப்படும் ஜப்பான் ரஷ்யாவுடன் எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது. ஓபெக் நாடுகளது எண்ணெய் உற்பத்தியில் ஏற்படுத்தியுள்ள மட்டுப்பாடு அதிகமான நாடுகளை ரஷ்யா நோக்கி நகர வைக்கும். இவை அனைத்தும் மேற்கின் அணியைப் பலவீனப்படுத்துவதாக அமையும். ரஷ்யாவும் தனது எண்ணெய் உற்பத்தியை குறைத்துள்ளது.

மீண்டும் ஒரு பாரிய போரை நோக்கி உலகம் நகருவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.

## University of Moratuwa
### Department of Languages
### English Language Skills for Employment
### NOW AVAILABLE IN BATTICALOA

**YOU WANT TO LEARN ENGLISH BECAUSE :**

- ✓ You are not confident when you have to give a speech or speak in English
- ✓ You want to perform better at job interviews
- ✓ You want to write better reports, proposals, letters and other official documents
- ✓ You need English skills to progress in your career

→ *But you don't want to do a lot of boring, difficult exercises which won't help you learn what you want !!*

→ *If this describes your situation, this course can really help you !*

➢ We experience today challenges not faced by executives and entrepreneurs in the past. Whether you have your own company, are employed in a state or public institution, are seeking employment, or plan to start your own company in the future, you need, more than ever before, to be able to communicate better with your employers, co-workers and customers.

➢ This course examines communication in the modern workplace through a blend of stimulating activities involving group and individual tasks.

**COURSE CONTENT :**

| | |
|---|---|
| ❑ **SPEECH** | : Presentations, speeches, interviews, negotiations, discussions, brainstorming, meetings |
| ❑ **GRAMMAR** | : Fundamentals of grammar for speech and writing |
| ❑ **WRITING / BUSINESS COMMUNICATION** | : Sentence construction, describing events, processes and opinions, letters, meeting minutes, memos and e-mails, project proposals, informal / formal reports |

■ Duration : 20 weeks ■ Class hours : Saturdays 08.00 - 12.30 p.m.

■ Course Fee : Rs. 30,000/= ■ Commencement : 13th May 2023

**For registration and information :**

**Phone : 065-7284455, 076-1919888,**
**Regional Coordinator (077-9597389) OR**
**Department of Languages, University of Moratuwa.**
**Phone : 011-2640497**
**Email : eltcmoratuwa@gmail.com**

**Registrar**
**University of Moratuwa**
09.04.2023

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இந்திய தூதுவராலயம்
### கொழும்பு, இலங்கை

**Tender No.: Col/Com/228/4/2020-1**

யாழ்ப்பாணத்திலுள்ள ‘‘யாழ்ப்பாண கலாசார நிலையத்தின்’’ (யாகநி) எதிர்கால முகாமைத்துவத்திற்காக நீண்ட கால வர்த்தகரீதியிலான மனிதவலு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக திட்டங்களை வரைவதற்காக உசாத்துணையாளரொருவராக அமர்த்துவதற்காக தகுதியுள்ள தனிநபர்கள்/ நிறுவனங்களிலிருந்து முன்மொழிவுகள் வரவேற்கப்படுகின்றன.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 ஏப்ரல் 11 ஆம் திகதியிலிருந்து www.hcicolombo.gov.in என்ற இந்திய தூதுவராலயத்தின் இணையதளத்திலிருந்து கேள்வி ஆவணத்தை பதிவிறக்கம் செய்யலாம்.

2023 ஏப்ரல் 28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். அனைத்து விதிக்கப்பட்ட ஆவணங்களுடனான முத்திரையிடப்பட்ட விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான இறுதித் தினமானது 2023 மே 02 ஆம் திகதியன்று பி.ப. 3 மணியாகும். 2023 மே 02 ஆம் திகதியன்று பி.ப. 3.30 மணிக்கு விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு 0776683124 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

### புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பக்கோரல்

NVQ தரத்தினூடாக புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.
அது தொடர்பான பத்திரிகை விளம்பரமானது 2023 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி (Sunday observer) சண்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது.
மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தினை பார்வையிடவும்.
www.uovt.ac.lk

உபவேந்தர்
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல்
பல்கலைக்கழகம்,
இல.100, கந்தவல,
இரத்மலானை.

தொலைபேசி : 011-2 630777
2023 ஏப்ரல் 09

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## இலங்கை இராணுவம்
### விலைமனுக்கோரல்

1. ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் இராணுவ டெண்டர் சபை (கொள்முதல்) குழுவின் தலைவரினால் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் (2023.07.01 ஆம் திகதி முதல் 2023.12.31 ஆம் ஆண்டு வரை) இலங்கை இராணுவத்திற்கு தேவையான பின்வரும் பொருட்களை நிலையான விலையில் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | மனு இலக்கம் | விபரம் | அண்ணளவாக ஏலத்தின் மதிப்பீடு |
|---|---|---|---|
| 01 | DES/04/2023/100(325) | TOR STEEL & MILD STEEL | 141 மில்லியன் |
| 02 | DES/04/2023/100(326) | CEMENT | 97 மில்லியன் |
| 03 | DES/04/2023/100(327) | ELECTRICAL CEILING FANS | 23 மில்லியன் |
| 04 | DES/04/2023/100(328) | ELECTRICAL WIRES | 102 மில்லியன் |
| 05 | DES/04/2023/100(329) | ZINC ALUMINIUM ROOFING SHEETS | 12 மில்லியன் |
| 06 | DES/04/2023/100(330) | TIMBER (Imported) | 88 மில்லியன் |
| 07 | DES/04/2023/100(331) | TIMBER (Local) | 05 மில்லியன் |
| 08 | DES/04/2023/100(332) | PLYWOOD SHEETS | 64 மில்லியன் |
| 09 | DES/04/2023/100(333) | GI PIPES | 26 மில்லியன் |
| 10 | DES/04/2023/100(334) | PVC PIPES / PVC FITTINGS | 85 மில்லியன் |
| 11 | DES/04/2023/100(335) | PAINT ITEMS | 191 மில்லியன் |
| 12 | DES/04/2023/100(336) | YARD ITEMS (River Sand) | 74 மில்லியன் |
| 13 | DES/04/2023/100(337) | YARD ITEMS (Metal/ Rubble) | 83 மில்லியன் |
| 14 | DES/04/2023/100(338) | ELECTRICAL ITEMS / SWITCHES | 27 மில்லியன் |
| 15 | DES/04/2023/100(339) | "SANITARY FITTINGS (Commode,Wash Basins) (Cromium Plated Piller Tap, Cromium Plated Bip Tap)" | 50 மில்லியன் |
| 16 | DES/04/2023/100(340) | STEEL ('C' Purlin, Angle Iron,MS Plate) | 75 மில்லியன் |

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விநியோகங்களுக்கான கொள்முதல் ஆவணங்கள் பொறியியல் சேவைகள் பணிப்பாளர் சபை, இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு எனும் முகவரிக்க 2023.04.10 ஆம் திகதி முதல் 2023.04.30 ஆம் திகதி வரை வார நாட்களில் 0900 மணி முதல் 1600 மணி வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் (இராணுவத் தலைமையக கட்டிடத்தின் 07 ஆம் இலக்கத்தில் மூன்றாம் மாடியில் பொறியியல் சேவை பணிப்பாளர் சபையின் கொள்முதல் பிரிவிலிருந்து) மேற்கூறிய அனைத்து மனுக்களும் 2023.05.02 ஆம் திகதி 1100 மணிக்கு இராணுவத் தலைமையகம், இராணுவத் தலைமையக வாகன நிறுத்துமிடம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு என்ற முகவரியில் திறக்கப்படும். அவ் ஆவணங்களைக் கோரும் வழங்குனர்கள், இந்த விடய வழங்கல்களை உறுதி செய்வதற்கான காரணிகள், நிறுவனப் பதிவுச் சான்றிதழின் நகல் மற்றும் கடந்த 06 மாதங்களின் நிறுவன வங்கிக் கணக்கு அறிக்கைகளின் நகல் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் இவ் வழங்கல்கள் சார்பாக சமூகமளிக்கும் வழங்குனர்கள் இராஜாங்க பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட பட்டியலில் பதிவு செய்திருந்தால், அவர்கள் இராஜாங்க பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழின் நகலை சமர்ப்பித்தால் போதுமானது.

3. மேற்கூறிய விலைமனுக்கோரலில் ஆர்வமுள்ள மற்றும் குறிப்பிட்ட தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு டெண்டர் விண்ணப்பத்திற்கும் (10 மில்லியனில் இருந்து 49 மில்லியன் வரை - ரூ.3,500.00, 50 மில்லியனில் இருந்து 99 மில்லியன் வரை - ரூ.12,500.00 மற்றும் 100 மில்லியனில் இருந்து 199 மில்லியன் வரை - ரூ.20,000.00) மீள்செலுத்தப்படாத தொகையினை பணிப்பாளர் (நிதி) அலுவலகத்தில் (இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு) செலுத்தி மனு ஆவணத்தைப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை பொறியியலாளர் சேவைகள் பணிப்பாளர் சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

அ. பொறியியல் சேவை பணிப்பாளர் சபை கொள்முதல் பிரிவு - தொலைபேசி இலக்கம் - 011 2339317

ஆ. உபகரண மாஸ்டர் பொது கிளை கொள்முதல் பிரிவு - தொலைபேசி இலக்கம் - 011 2431301

**இராணுவத் தளபதி,**
**இலங்கை இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு.**

## பெருந்தோட்ட அமைச்சு
## இலங்கைத் தேயிலைச் சபை
### வெற்றிடங்கள்

இலங்கையின் தேயிலை தொழிற்துறையின் உச்ச அமைப்பான இலங்கை தேயிலை வாரியமானது, பின்வரும் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

#### ஆய்வாளர் பதவி தரம் II–JM (1-1)

**வேலையின் விபரம்**

ஆய்வு கூடத்திலுள்ள தேயிலை மாதிரிகளின் அனைத்து பகுப்பாய்வு நடவடிக்கைகளும், சபையினை அந்தந்த ஆய்வகப் பிரிவில் உள்ள முகாமையாளர்கள் / சிரேஷ்ட முகாமையாளர்கள் மேலதிக மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக சிறப்பாக வழங்கப்படுகின்றன.

#### தர முகாமைத்துவ அதிகாரி பதவி தரம் II–JM (1-1) JM

**வேலையின் விபரம்**

ஆய்வகத் தர நடைமுறைகளைப் பராமரித்தல் மற்றும் சிறந்த ஆய்வகப் பயிற்சி (GLP) தொடர்பான பிற செயல்பாடுகள், குழுவின் அந்தந்த ஆய்வகப் பிரிவில் உள்ள முகாமையாளர்கள் / சிரேஷ்ட முகாமையாளர்கள் மேலதிக மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக சிறப்பாக வழங்கப்படுகின்றன.

**ஆய்வாளர் மற்றும் தர முகாமைத்துவ அதிகாரி பதவிகளுக்கான தகுதி மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

(அ). பல்கலைக்கழக மானியகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேதியியல் அல்லது நுண்ணுயிரியலுடன் (பாடங்களில் ஒன்றாக) அறிவியலில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

அரச அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனத்தில் (ISO 17025 அங்கீகாரம் பெற்ற) ஆய்வகத்தில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட தகுதி அனுபவத்தினை கொண்டிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(அ). மேலே புற விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது :** 22 வயதுக்கு குறையாதவாரும் 45 வயதுக்கு மேற்படாதவாரும் இருத்தல் வேண்டும். உயர் வயது எல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பொருந்தாது.

**சம்பள அளவுதிட்டம் :** JM 1-1 - 2016: Rs. [42,600 - 10 x 755 - 18 x 1,135 – 70,580]

பொருந்தக்கூடிய ஆரம்ப சம்பள படி ரூ.42,600/= மேலும் வாழ்வாதார கொடுப்பனவாக ரூ.7800/= மற்றும் சிறப்பு உதவித்தொகை ரூ.5,000/= கொடுப்பனவும் வழங்கப்படும்.

ஆய்வாளர்கள் மற்றும் தர முகாமைத்துவ அதிகாரி பதவிகளுக்கான : **ஆட்சேர்ப்பு நடைமுறை கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் இடம்பெறும்**

விண்ணப்பதாரர்கள் ஆய்வாளர் பதவி மற்றும் தர மேலாண்மை அதிகாரி பதவிக்கு தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**அனுகூலங்கள்**

- சபையினால் தற்போதுள்ள விதிகளின்படி மருத்துவ காப்பீட்டு நன்மைகள் வழங்கப்படும்
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 10% ஊழியர்களின் பங்களிப்புடன் அதிகார சபையினால் 15% பங்களிப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.
- சபையினால் அதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% பங்களிப்பும் வழங்கப்படும்.

**பொது நிபந்தனைகள்**

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- பதவியின் கடமைகளை நன்கு நிறைவேற்றவும், நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றவும் கூடிய உடல் மற்றும் மனரீதியான திடகாத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- நேர்மையான ஒழுக்காற்றுத் தன்மையை கொண்டவராக இருத்தல் வேண்டும்
- மூன்று வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் பதவியின் தேவைபாடு மற்றும் திருப்திகரமான செயல்திறனைப் பொறுத்து ஒரு வருட சோதனை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்கள்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து வெளிவாரி விண்ணப்பதாரர்களும் தொடர்புடைய சம்பள அளவின் ஆரம்ப சம்பள மட்டத்தில் வைக்கப்படுவார்கள்.சம்பந்தப்பட்ட பணியிடங்களுக்கு உள்வாரி விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்கள் தற்போதுள்ள பொது நிர்வாக சுற்றுநிருப விதிகளின்படி தொடர்புடைய சம்பள விகிதத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

**விண்ணப்பங்கள் :**

அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபை / நிறுவனத்தில் நிரந்தர பதவியிலிருக்கும் ஊழியர்கள் தங்கள் விண்ணப்பங்களை பணிபுரியும் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

இல் அலுவலகத்திலிருந்து அல்லது **http : //www.srilankateaboard.lk** இணையதளத்திலிருந்து பெறப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றிதழ் நகல்கள் மற்றும் தகுதி மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன் விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட்டு 2023.04.25 க்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
**இலங்கைத் தேயிலைச் சபை**
இல.574, காலி வீதி,
கொழும்பு 3.

# இலங்கைக்குக் கைகொடுக்கும் இந்தியாவுக்கு நன்றி



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்



பாரிய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து எமது இலங்கை நாடானது ஆறு மாத குறுகிய காலத்தில் சுதாகரித்துக் கொண்டு பொருளாதார பேரழிவிலிருந்து ஓரளவு மீண்டு வந்து கொண்டிருக்கின்றது. அண்டை நாடான இந்தியாவானது இலங்கை நாட்டுக்கு மூத்த சகோதரராக இருந்து பல உதவிகளை செய்துவருகின்றது. இலங்கையர் என்ற ரீதியில் இந்த முயற்சிக்கு நம்முடன் கைகோர்த்து நிற்கின்ற இந்திய மக்களுக்கும், இலங்கை மக்கள் சார்பாக நாம் முதற்கண் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் செலுத்துகின்ற வரிப்பணத்தின் வாயிலாகவும் ஆட்சியில் உள்ள இந்திய அரசாங்கத்திற்கு இலங்கை மக்கள் மீது கொண்டுள்ள கரிசனை காரணமாகவும் இலங்கைக்கு எண்ணிலடங்கா சிறந்த உதவிகள் தகுந்த நேரத்தில் கிடைக்கப்பெற்றுக் கொண்டிருக்கின்றன. சீரழிந்த இலங்கையின் பொருளாதாரத்தினை மீட்டெடுக்க இந்தியாவினால் வழங்கப்பட்ட மொத்த உதவியானது, "ஏனைய உலகநாடுகளால் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த உதவிகளிலும் அதிகம்", என்பது இலங்கையின் வெளிவிவகார அமைச்சரினால் அறிவிக்கப்பட்டது.

ஆறு மாதத்திற்கு முன்பு இலங்கை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு பொருளாதாரம் சீரழிந்து, மக்களின் வாழ்க்கையினை சகஜமாக நடத்த முடியாத பெரும் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டது. வரலாறு காணாத இந்த பொருளாதார நெருக்கடியால் பொது மக்கள் வீதிகளில் இறங்கி போராடி திண்டாடியதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். இவற்றில் முக்கியமாக பெற்றோல், டீசல், எரிவாயு சிலிண்டர் போன்றவற்றின் தட்டுப்பாடுகளும் அவற்றிக்கான விலை அதிகரிப்பும்; உணவு, மருத்துவப் பொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கிடுகிடுவென உயர்ந்தமை, பலமணி நேரம் மின்வெட்டும் இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டமையும் எனக் கூறலாம்.

இந்தியாவானது காலாகாலமாக இலங்கைக்கு பல்வேறு வகையான உதவிகளை (குறிப்பாக மானியங்கள், கடன்கள் மற்றும் பொருளாதார உதவிகளை) வழங்கியுள்ளது. இருப்பினும் தற்போது இலங்கையினால் முகம் கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்தப் பாரிய பொருளாதார வீழ்ச்சியின் போது இந்தியாவிடம் இருந்து தகுந்த நேரத்தில் நமக்கு பல்வகையில் உதவிகள் கிடைக்கப் பெற்றன. இந்த உதவியானது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை குறிப்பாக உட்கட்டமைப்பு, எரிசக்தி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அவற்றில் முக்கியமாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

எரிபொருள் உதவி: இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவும் வகையில் இந்தியா இலங்கைக்கு வழங்கிய 500 மில்லியன் அமெரிக்க டொலர் எண்ணெய்க் கடன்.

உணவு மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக 1 பில்லியன் டொலர் கடன் வசதி.

400 மில்லியன் அமெரிக்க டொலர் பணப் பறிமாற்றல் உள்ளடங்கலாக 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி.

துறைமுகங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி போன்ற முக்கிய துறைகளில் இலங்கையில் மேம்படுத்தப்பட்ட இந்திய முதலீட்டின் மூலம் நடுத்தர முதல் நீண்ட கால திறன் உருவாக்கத்திற்கான முயற்சிகளை இந்திய அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றமை.

பொருளாதார மேம்பாட்டு மற்றும் கொள்கை அமுலாக்க ஆலோசனை வழங்கி வருகின்றமை.

**ஏனைய உதவிகள்**

மனிதாபிமான உதவி: இயற்கை பேரழிவுகள், மோதல்கள் போன்ற நெருக்கடி காலங்களில் மருத்துவம், உணவுப் பொருட்கள் மற்றும் பிற வகையான நிவாரணங்கள்.

இராணுவ உதவி: இராணுவ பயிற்சி மற்றும் உபகரண வடிவில் வழங்கி இலங்கையின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை பேணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கலாசார உதவி: இரு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட புலமைப்பரிசில்கள், பரிமாற்றங்கள் மற்றும் பிற நிகழ்ச்சிகளின் வடிவில் இந்தியா இலங்கைக்கு கலாசார உதவிகளை வழங்கி வருகின்றது.

***பொருளாதார பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவினை பயன்படுத்துதல் (DeDollarize Trade).***

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான பொருளாதார பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவினை பயன்படுத்துவது குறித்து இந்தியாவும், இலங்கையும் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ள நிலையில் இலங்கை வங்கி (Bank of Ceylon), பாரத ஸ்டேட் வங்கி (State Bank of India) மற்றும் இந்தியன் வங்கி (Indian Bank) பிரதிநிதிகள் இதுதொடர்பான தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டுள்ளனர். அவ்வாறு இந்திய ரூபாயினை பயன்படுத்துவதன் மூலம் குறைவான பரிமாற்ற செலவு, விரைவான சேவை, வர்த்தகக் கடன்கள் எளிமையாக பெறுதல் போன்ற பல்வேறு நன்மைகள் இலங்கைக்கு கிடைக்கும். இதன் வாயிலாக இலங்கை எதிர்நோக்குகின்ற அமெரிக்க டொலர் கையிருப்பு பிரச்சினையிலிருந்து விடுபடுவதன் மூலம் இனிவரும் காலத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிக்கின்ற சந்தர்ப்பம் ஏற்படும்.

இந்த உதவிகள் வாயிலாக இலங்கை மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலும், வியாபார நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட பேரழிவிலிருந்து மீண்டெழுந்து வருவதற்கு பேருதவியாக இருகின்றது. குறிப்பாக மக்கள் மற்றும் வியாபாரிகளிடம் காணப்பட்ட ஒரு எதிர்மறை எண்ணங்கள் (Negative Thoughts) இந்த உதவிகளின் மூலமாக மாறிவிட்டது. இதன் காரணமாக நம்மால் சாதிக்க முடியும், வழமை போன்று மீண்டெழுந்து வரமுடியும் என்கின்ற நேர்மறையான எண்ணங்களினையும் மனோ சக்தியையும் (Positive Attitude) கொடுத்துள்ளது.

முழு உலகமும் இலங்கை நாட்டையும் நாட்டு மக்களையும் பரிதாபமாகவும் ஏளனமாகவும் பார்த்துக்கொண்டிருந்த தருணத்தில் இந்தியாவினால் வழங்கப்பட்ட அனைத்து உதவிகளும் அவ்வாறான ஒரு பார்வையினை மாற்றியமைத்தமை மிகவும் முக்கியமான ஒருவிடயமாகும். இந்தியாவின் தகுந்த நேர கைகொடுத்தல் காரணமாக இலங்கை நாட்டிற்கு பாதகமாக விளங்கிய காரணிகள் யாவும் சாதகமாக மாற்றி அமைக்கப்பட்டன. குறிப்பாக ஏனைய கடன் கொடுக்கும் நாடுகளும் வெளிநாட்டு நிதிநிறுவனங்களும் இலங்கையினை சற்று அவதானிக்கத் தொடங்கியுள்ளன. "இந்தியாவினால் உதவி செய்ய முடியுமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் ஏன் தங்களால் இலங்கை நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பேரழிவு காலத்தில் உதவி செய்ய முடியாது?", என அவர்களுடைய மனோபாவத்தை மாற்றி அமைத்தது.

இலங்கை அரசாங்கம் நிச்சயமாக மனதில் ஒன்றை வைத்துக்கொள்ள வேண்டும். அது என்னவென்றால் "உதவி என்பது நாம் தேவையில் இருக்கும் பொழுது கிடைப்பது". ஆகவே பிறநாடுகளும், வெளிநாட்டு நிதிநிறுவனங்களும் எப்பொழுதும் உதவிசெய்யும் என்ற எண்ணத்தில் செயல்படாது, அவ்வாறு பெறப்பட்ட உதவிகளின் வாயிலாக (குறிப்பாக இந்தியாவிடம்) நாம் எவ்வாறு மீண்டும் நம்மை செழுமைப்படுத்தி இனிவரும் காலத்தில் வளமுள்ள ஒரு பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என்கின்ற நோக்கத்துடன் செயல்படுதல் வேண்டும்.

இலங்கை நாட்டு மக்களும், ஆட்சி செய்கின்ற அரசாங்கமும் இதனை நன்குணர்ந்து சிறந்த செயல்திட்டங்களை முன்மொழிந்து, அத்திட்டங்களை செவ்வனே அமுல்படுத்தி, அந்தத் திட்டங்களை முறைப்படி கடைப்பிடிப்பதன் வாயிலாக வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தினை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

அந்த வகையில் பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

தற்போது கிடைக்கின்ற உதவிகளில் அனேகமானவை கடன்களாக அமைந்து காணப்படுகின்றன. ஆகவே என்றோ ஒருநாள் இலங்கை அரசாங்கம் அதனை வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

அவ்வாறு கிடைக்கின்ற உதவிகளின் வாயிலாக மக்களுக்கும், வியாபார நிறுவனங்களுக்கும் உடனடியாக தேவைப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளினை பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

பெற்றுக்கொண்ட உதவிகளின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்ற செயல் திட்டங்களுக்கு எவ்வகையில் பணம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது, அதன் மூலம் மக்களும் வியாபாரிகளும் எவ்வாறான நன்மைகளை பெற்றுக்கொள்ள போகின்றார்கள் போன்றவை உரிய முறையில் இனங்காணப்படுதல் வேண்டும். அவ்வாறு பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து அதற்குரிய காரணங்களை அறிந்து மாற்றுத்திட்டங்களை முன்வைத்தல் வேண்டும். இதன் வாயிலாக மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை மீண்டும் ஏற்படுத்தி கொடுப்பதுடன் நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்தி வியாபார நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டுவரக்கூடிய தன்மை ஏற்படும்.

வியாபார கொடுக்கல் வாங்கல்களினை வழமைக்கு கொண்டுவருவதன் வாயிலாகவே மக்கள் தமது வருமானத்தை ஈட்டிக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். அதன்மூலம் அவர்களுடைய நாளாந்த செயற்பாடுகளை தங்கு தடையின்றி செய்யக் கூடியதாக இருக்கும்.

வியாபார நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துவதன் வாயிலாக அரசாங்கத்தினால் உள்நாட்டு உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். இதன் காரணமாக வேலை வாய்ப்பு மற்றும் அரசாங்கம் திட்டமிட்டபடி வரிவருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

முறைப்படியாக இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதன் வாயிலாக பொருட்கள் மற்றும் சேவைகளின் வளங்களினை (Supply) அதிகரித்து பணவீக்கத்தினை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

அரசாங்கத்தின் செயல் திட்டங்களில் தேவையற்ற ஆடம்பர செலவுகளை குறிப்பிட்ட காலம் வரை தவிர்த்துக் கொள்ளல் மிகவும் முக்கியம்.

ஏற்கனவே பெற்றுக் கொண்ட கடன் மற்றும் அதற்கான வட்டியினை செலுத்துவதற்காக தற்போது நிதி உதவியாக கிடைக்கின்ற பணத்தினை பயன்படுத்துதல் அறவே தவிர்த்தல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற புதிய உதவிகள் மற்றும் கடன்கள் (குறிப்பாக இந்தியாவிலிருந்து கிடைக்கப்பெற்ற புதிய உதவிகள் மற்றும் கடன்கள்) பற்றிய முழு விபரம், அவற்றின் பயன்பாடுகள், அதனால் வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தில் எவ்வகையான சாதக விளைவுகள் ஏற்படும், போன்ற முழு விபரமும் காலத்திற்கு காலம் மக்களுக்கு உரிய முறையில் தெரியப்படுத்தல் வேண்டும்.

திட்டமிட்ட செயல்திட்டங்களினை சீரழிக்கும் முகமாக சட்டத்திற்கு முரணான எந்தவித செயல்பாடுகளும் நடைபெறாத வண்ணம் கண்காணித்தல் அவசியம். குறிப்பாக ஊழல், லஞ்சம் மற்றும் சட்டத்தை மீறுகின்ற ஏனைய செயற்பாடுகளை இனங்கண்டு அவற்றினை கடுமையாக தண்டிக்க கூடியதாக சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். இதன் வாயிலாக சிறந்த முறையில் திட்டங்களை அமுல்படுத்தி, அதிகப்படியான பெறுபேறுகளினை இனி வரும் காலங்களில் இலங்கை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அரசாங்கத்தினால் முன்மொழியப்படுகின்ற புதிய செயற்திட்டங்களின் வாயிலாக பெற்றுக் கொள்ள வேண்டிய இலக்கினை அடையாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில், அந்த திட்டத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற திட்டக்குழுவினை தண்டிக்கக்கூடிய சட்டம் உருவாக்கப்படுதல் வேண்டும். இதன் வாயிலாக புதிய ஒரு முறைமையை (System Change) இலங்கையில் ஏற்படுத்தி நாட்டு மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

முடியுமானவரையில் உள்நாட்டு உற்பத்திகள் மற்றும் சேவைகள் சார்ந்த துறைகளினை ஊக்கப்படுத்தி தன்னிறைவு பொருளாதார முறைமையை நாட்டு மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தல் அவசியமாகின்றது.

இதன்வாயிலாக மக்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளினை உள்ளூரிலேயே பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைத்து, இறக்குமதியில் தங்கியிருக்காது, பாரியளவில் இறக்குமதிக்காக தேவைப்படுகின்ற வெளிநாட்டு செலாவணி வெளிப்பாய்ச்சலை தடுக்க முடியும். இதன் மூலம் நிரந்தரமாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியினை அதிகரிக்க கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

காலத்திற்கேற்ற புதிய கல்வி செயற்திட்டங்களை உள்வாங்குவதுடன், ஆரம்பப்பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரையிலும் நாட்டுப்பற்றினை உருவாக்கி, நாட்டிற்காக மக்கள் அனைவரும் செயல்படுவதன் முக்கியத்துவத்தை உணர்த்துதல் வேண்டும். இதன் வாயிலாக இனிவரும் காலத்தில் ஜப்பான் (Japan) நாடு போன்று சிறந்த பிரஜைகளை உருவாக்கி, வளமான இலங்கையினை உருவாக்க முடியும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்டகால உறவு உள்ளது. இலங்கையின் வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இந்தியா குறிப்பிடத்தக்க பங்களிப்பாளராக காலங்காலமாக இருந்துவருகிறது.

தகுந்த நேரத்தில் இந்தியாவின் உதவிகள் கிடைக்கப்பெற்றதன் காரணமாக இலங்கை அரசாங்கமும் நாட்டு மக்களும் இந்திய மக்களுக்கும் குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கத்திற்கும் நன்றிக்கடன் பட்டவர்களாக இனிவரும் காலத்தில் முழுமையாக செயல்படுதல் மிகவும் முக்கியமானது.

# துருக்கியின் புவிநடுக்க அனர்த்தங்களும் கற்றுக்கொள்ளாத பாடங்களும்





கலாநிதி எஸ். அன்ரனி நோர்பேட்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

**2023** பெப்ரவரி 6ஆம் திகதி உள்ளூர் நேரப்படி அதிகாலை 4 மணி 15 நிமிடமளவில் துருக்கி சிரிய எல்லைப் பகுதியில் காணப்படும் தென் மத்திய துருக்கிப் பகுதியில் 7.8 ரிச்டர் பருமனளவிலான புவிநடுக்கம் ஒன்று ஏற்பட்டது. அந்த நிகழ்வு ஏற்பட்டு 11 நிமிடங்களின் பின்னர் 6.7 ரிச்டர் பருமன் அளவில் பின் அதிர்வு ஒன்று உணரப்பட்டது. மிகப் பெரிய அளவில் ஏற்பட்ட இந்தப் பின் அதிர்வு வடக்கே 95 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் புவிச்சரிதவியல் சங்கத்தின் அவதானிப்புக்கள் மற்றும் பகுப்பாய்வுகளின் படி இந்த நிகழ்வுகள் யாவும் கிழக்கு அனற்றோலியாவில் அமைந்துள்ள ஒரு குறைத் தொகுதிக்கு (Fault system) இடையிலேயே உருவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அளவுத்திட்டப் பருமனில் (Magnitude) உலகின் எப்பகுதியிலும் புவிநடுக்கங்கள் ஏற்படுவது மிகக் குறைவு. பொதுவாக இத்தகைய புவிநடுக்க நிகழ்வுகள் நீளமானதாகக் காணப்படும் தகட்டு எல்லைகளில் உள்ள குறைகளிலேயே எதிர்பார்க்கப்படும் ஓர் அம்சமாக இருக்கின்றது. ஐக்கிய அமெரிக்காவின் புவிச்சரிதவியல் சங்கத்தின் விஞ்ஞானியான 'டேவிட் வால்ட்' என்பவர் குறிப்பிடும் போது, புவிநடுக்கத்தைத் தாக்குப்பிடிக்கக் கூடிய வகையில் இப்பிரதேசத்தின் கட்டட அமைப்புகள் வடிவமைக்கப்படவில்லை எனவும், இந்தப் பருமன் அளவு கொண்ட புவிநடுக்கம் உலகின் எப்பகுதியிலும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் கொண்டவை எனவும் குறிப்பிட்டார். இப்பகுதியிலுள்ள பெரும்பாலான கட்டட அமைப்புக்கள் யாவும் குறிப்பாகப் பாதிக்கப் படக் கூடிய நிலையிலேயே இருந்தன என்னும் விளக்கத்தையும் முன்வைத்தார்.

அண்மைக் காலத்தில் தொடராக ஏற்பட்ட பாரிய புவிநடுக்கங்கள் சார்பளவில் ஆழம் குறைந்தவை. பிரதான அதிர்வு 11 மைல் ஆழத்திலும் 7.5 அளவில் ஏற்பட்ட பின்னதிர்வு 6 மைல் ஆழத்திலும் ஏற்பட்டது. இவை சார்பளவில் மிகக் குறைந்த ஆழத்தைக் கொண்டிருந்ததுடன் அதிர்வின் (Shaking) செறிவு கடுமையாக இருப்பதற்குக் காரணமாகவும் அமைந்திருந்தது. மேன் மையப் பிரதேசத்தில் செறிவான அதிர்வுகளை இப் புவிநடுக்கம் ஏற்படுத்தியது. அதேவேளை ஸ்தான்புல் போன்ற துருக்கியின் ஏனைய பகுதிகளில் உள்ள புதிய கட்டடங்கள் நவீன புவிநடுக்க நியமங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டிருந்ததனால் மற்றைய பழமையான சீமெந்துக் கட்டட அமைப்புக்களே அதிகளவு பாதிக்கப்பட்டன. புவிநடுக்கத்தினால் ஏற்பட்ட சேதங்கள் இடம்பெற்ற பகுதிகள் மற்றும் குடித்தொகைச் செறிவு ஆகியவற்றை அவதானிக்கும் போது அதிர்வின் காரணமாகப் பெரும்பாலும் நிலச்சரிவுகளும் திரவமாக்கல் (Liquerfaction) இடர்களுமே பெருமளவில் ஏற்பட்டிருந்தன.




2023 பெப்ரவரி 6 ஆம் திகதி, உள்ளூர் நேரம் 10.30 மணிக்கு ஏறக்குறைய 30 பின்னதிர்வுகள் (After shocks) 4.5 ரிச்டர் அளவுத்திட்டத்தில் தென் மேற்காக 100 கிலோ மீற்றரில் மத்தியதரைக் கடலுக்கும் வட கிழக்காக 200 கிலோ மீற்றர் அளவில் மலட்டியா (Maladiya) நகருக்கும் இடையில் ஏற்பட்டுள்ளது. இத்தகைய பெரும்பாலான அதிர்வுகள் யாவும் கிழக்கு அனற்றோலியாவின் குறைத் தொகுதியிலேயே இடம்பெற்றது. பின்னதிர்வுகள் தொடர்ச்சியாக இப்பகுதியைச் சுற்றி இடம்பெறும் என முன்னரே எதிர்பார்க்கப்பட்டது.

இங்கு அனற்றோலியா, அரேபியா, மற்றும் ஆபிரிக்கத் தகடுகள் ஒன்றினையொன்று தொட்டு நிற்பதுடன் இடைத்தாக்கங்களைக் கொண்டிருக்கும். மூன்று புவிக்குரிய தகடுகள் செயற்பட்டுக் கொண்டிருப்பதுடன் ஒரு முச்சந்திப் பகுதியாகவும் அமைந்துள்ளது. இந்த முச்சந்திப் பகுதியிலேயே 7.5 ரிச்டர் பருமன் கொண்ட புவிநடுக்கம் இடம்பெற்றது.

கிழக்கு அனற்றோலியா குறை வலயம் துருக்கியினை மேற்குப் பக்கமாக ஏஜியன் கடல் நோக்கித் தள்ளியது. பொதுவாகப் புவிநடுக்கப் படமொன்றில் தனியொரு புள்ளியாக இது குறிக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் முறிவுத் தளங்கள் பல பரிமாணங்களைக் கொண்டிருந்தது. கிடை நழுவுப் புவிநடுக்கம் 7.5 ரிச்டர் பருமன் கொண்டதாகவும் குறை முறிவுகள் (Rupture fault) 120 கிலோ மீற்றர் நீளம், 18 கிலோ மீற்றர் அகலம் கொண்ட பகுதியாகவும் இருந்தது. பெப்ரவரி 6ஆம் திகதி இடம்பெற்ற 7.5 ரிச்டர் பருமன் கொண்ட புவிநடுக்கம் புவியதிர்வு அடிப்படையில் மிகவும் செயற்பாட்டுத் திறன் கொண்டது. இப்பகுதியை உள்ளடக்கிய 250 கிலோ மீற்றர் சுற்று வட்டத்தில் 1970 இன் பின்னர் மூன்று புவிநடுக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றுள் பெரிய புவிநடுக்கம் 6.7 ரிச்டர் பருமன் அளவில் வடகிழக்காக 2020 சனவரி 24இல் நிகழ்ந்தது. இத்தகைய புவிநடுக்கங்கள் யாவும் கிழக்கு அனற்றோலியா குறையைச் சூழ்ந்து (Vicinity) அல்லது அதன் நெடுகிலும் இடம்பெற்றது.

பெப்ரவரி 6 இல் இடம்பெற்ற புவிநடுக்கங்களின் மேன் மையப் பகுதியின் சார்பளவிலான புவியதிர்வு அமைதியாகக் காணப்பட்டிருந்தாலும் துருக்கியின் தென் பகுதியும் வட சிரியாவும் கடந்த காலத்தில் இடம்பெற்ற புவிநடுக்கச் சேதங்களினால் குறிப்பிடத்தக்க அனுபவத்தைப் பெற்றிருந்தன.

சிரியாவில் 'அலிப்போ' (Aleppo) என்னுமிடத்தில் புவிநடுக்கங்களின் துல்லியமான அமைவிடங்களும், பருமனும் மதிப்பிடப்பட்டிருந்தும் வரலாற்று ரீதியாகப் பல தடவைகளில் பாரிய புவிநடுக்கங்களினால் விசேடமாகப் பெரும் அழிவை எதிர்கொண்ட ஒரு பிரதேசமாகும். அலிப்போ 1138 இல் மதிப்பிடப்பட்ட 7.1 ரிச்டர் பருமன் கொண்ட புவிநடுக்கத்தினாலும், 1822 இல் 7.0 ரிச்டர் பருமன் கொண்ட புவிநடுக்கத்தினாலும் தாக்கப்பட்டது. 1822 இன் புவிநடுக்கத்தினால் ஏற்பட்ட இறப்புக்கள் 20000 முதல் 60000 என மதிப்பிடப்பட்டது. 1999இல் இஸ்தான்புல் என்னும் துருக்கிய நகரத்திற்கு அண்மையில் ஏற்பட்ட புவிநடுக்கத்தினால் 17000 பேர் இறந்தனர்.

இந்த நிகழ்வின் பின்னர் மிகக் கடுமையான கட்டட ஒழுங்கு விதிகள் அமுலாக்கப்படுமென அதிகாரிகள் மக்களுக்கு உறுதியளித்தனர். இரண்டு பிரதான புவிச்சரிதவியல் குறைக்கோடுகளில் அமைந்துள்ள நாட்டில் முன்னாயத்தப் பணிகளை மேம்படுத்தும் நோக்குடன் 'புவிநடுக்க வரி' (Earthquake tax) ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது.

ஆனால் பேரனர்த்தத்திற்கான அங்காராவின் செயற்பாடுகள் மெதுவாகவே இருந்தன. எவ்வாறாயினும் எர்டோகனின் நீதி மற்றும் அபிவிருத்திக் கட்சி அதிகாரத்திற்கு வந்தது.

(தொடரும்)

## பொருளாதார நெருக்கடியால்

# அதிகளவில் வேலைக்கு அமர்த்தப்படும் பெருந்தோட்ட சிறார்கள்



எங்கள் வவுனிக்குள கிராமம் மிக அழகானது. எனது நண்பிகளுடன் தினமும் ஆசை ஆசையாய் கல்விகற்க பாடசாலைக்குச் செல்வேன். ஆங்கிலப்பாடம் எனக்கு மிகவும் விருப்பமான பாடம். வகுப்பாசிரியை உன் கனவு என்ன? என கேட்கும் போதெல்லாம் ஓர் ஆசிரியையாக வரவேண்டும் என்றே கூறுவேன். உண்மையில் அதுதான் என் கனவும் இலட்சியமும்கூட. ஆனால், தந்தையின் குடிப்பழக்கத்தாலும் குடும்பத்தின் வறுமையாலும் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு என் கனவுகள் கலைந்துவிட்டன. மீண்டும் பள்ளிக்குப் போவேனா என்ற பேராவலுடன் காத்திருக்கிறேன்" – என்று பத்து வயது சிறுமியான மதியரசி அழுதுகொண்டே கூறினாள்.

### வவுனியா மாவட்டத்தில் தொழிலுக்கு அமர்த்தப்படும் சிறுவர்கள்

வவுனியா மாவட்டம், வட மாகாணத்தில் இரண்டாவது அதிக சனத்தொகையை கொண்ட மாவட்டமாகும். இலங்கை எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி இங்கு வாழும் நலிவடைந்த மக்களையும் பாதித்துள்ளது. இலங்கையில் கிராமப்புற மக்களே அதிகளவாக இந்த நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளனர். அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுகளால் சுயதொழில் நடவடிக்கைகள், விவசாய நடவடிக்கைள் மற்றும் எந்தவொரு தொழிலையும் முன்னெடுக்க முடியாத சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதேபோன்று குடும்ப தலைவர்களின் மதுபாவனை அதிகரிப்பால் பல குடும்பங்கள் சிதைந்து போயுள்ளன.

வவுனிக்குளம் கிராமத்தில் குடும்பத் தலைவரின் மதுபாவனையால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் சொந்த வீட்டு நிலத்தை விட்டு தனது ஐந்து பிள்ளைகளுடன் வெளியேறிய தாய்தான்



வாசுகி. தான் உழைக்கும் அன்றாட பணத்தை தனது கணவனின் மதுபாவனைக்கு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தொடர்ச்சியாக அவளுக்கு ஏற்பட்டதால் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் அவர்களது கல்வியையும் கருத்திற்கொண்டு வாசுகி தாண்டிக்குளத்தில் ஒரு வாடகை வீட்டில் குடியேறினாள்.

"என் கணவனின் குடிப்பழக்கத்தால் கடந்த 23 வருடங்களாக நான் நிம்மதியில்லாத வாழ்க்கையையே வாழ்கிறேன். எனக்கு இரண்டு ஆண் மற்றும் மூன்று பெண் பிள்ளைகள். கணவனைப் பார்த்து மூத்த மகனும், மூன்றாவது மகனும் மதுவுக்கு அடிமையாகி எங்களைவிட்டு பிரிந்து வாழ்கின்றனர். மூத்தவனுக்கு அடுத்தவள் என் மகள் தயாராணி. மகன்மார் மதுவுக்கு அடிமையானதால், 16 வயதுமிக்க மூத்தவனுக்கு அடுத்தவளான மகளை கொழும்புக்கு பணிக்கு அனுப்பினேன். நான்காவது எனது பெண் பிள்ளை மாத்திரமே கல்வி கற்கிறாள். குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியால் கடைசியாக பிறந்த மதியரசியின் ஆசிரியர் கனவையும் கலைத்துவிட்டேன்." – என தன் உள்ளக்குமுறலை வெளிப்படுத்தினாள் வாசுகி.

வவுனியா மாவட்டத்தில் நலிவடைந்த குடும்பங்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி மற்றும் மதுவுக்கு அடிமையாகும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வாசுகியின் குடும்பத்தை போல எத்தனையோ குடும்பகளில் வாழும் பிள்ளைகளின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது. இவர்களின் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் தங்களின் பிள்ளைகளின் கல்வி குறித்து சிந்திக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பிள்ளைகளின் கல்வி மற்றும் வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்ள அரச நிறுவனங்களின் உதவிகளையும், முறையான பொருளாதாரத் திட்டங்களையும் எதிர்பார்க்கின்றனர்.

"இலங்கையில் நகரப்புறங்களில் வாழும் மக்களே ஓரளவு வசதி வாய்ப்புடன் வாழ்கின்றனர். ஆனால், கிராமப்புறங்களில் வாழும் மக்கள் பொருளாதார நெக்கடிகளால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். வவுனியா வடக்கு, தெற்கு கல்வி வலயங்களுக்குட்பட்ட கிராமங்களில் பல சிறுவர்களின் கல்வி இடைநிறுத்தப்பட்டு பண்ணைகளிலும் நகர்ப்புற கடைகளிலும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்" என வவுனியா வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராஜரத்தினம் கூறுகிறார்.

### சிறுவர்கள் தொழிலுக்கு செல்லும் போக்கு கிராமப் புறங்களில் அதிகரிப்பு

வவுனியா வடக்குப் பகுதிக்கு உட்பட்ட கிராமப்புறங்களில் கடந்த இரண்டு வருடங்களில் மாத்திரம் 95 மாணவர்களும் தெற்கு பகுதியில் 298 பேரும் தமது கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளனர். மாணவர்களின் இடைவிலகல் தொடர்ச்சியான அதிகரிப்பையே காட்டுவதால் செட்டிக்குளம் மற்றும் சிங்கள பிரதேசங்களில் மாணவர்களின் இடைவிலகல்கள் குறித்த கண்காணிப்பு ஆய்வுகளை நடத்த மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழ் பகுதிகளைவிட சிங்கள கிராமங்களில் இடைவிலகல் அதிகமாக உள்ளதாக மடுகந்த பாடசாலையின் ஆசிரியர் ரஞ்சன் ரணில் ஹேமசிறி கூறுகிறார்.

"வடக்கு மாகாணத்தில் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படுவதாக எவ்வித முறைப்பாடுகளும் பதிவாகுவதில்லை. ஆனால், நாம் கண்காணிப்பு விஜயங்களை மேற்கொள்ளும்போது செட்டிக்குளம், ஆரியகுளம், பட்டிக்குடியிருப்பு, பெரிய தம்பனை உட்பட பல கிராமங்களில் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது'' என வவுனியா மாவட்ட செயலகத்தின் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் அதிகாரி நந்தசீலன் கூறுகிறார்.

வட மாகாணத்தில் குறிப்பாக முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படுவது குறித்து விரைவான ஆய்வுகளை துறைசார் அரச நிறுவனங்கள் நடத்த வேண்டுமென்பதுடன் பாடசாலை இடைவிலகல்கள் குறித்து கிராமபுற பாடசாலை நிர்வாகங்களும் பெற்றோரும் தீவிர அவதானம் செலுத்த வேண்டும் என்பதும் கள ஆய்வுகளில் தெளிவாகிறது.

நகர்ப்புற பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் மிகவும் அரிதென வவுனியா மத்திய தமிழ் மகா வித்தியாலய அதிபர் யோகேஸ்வரன் தெரிவிக்கிறார்.

ஆனால், கந்தபுரம் வாணி வித்தியாலயத்தில் ஒவ்வொரு வருடமும் 7 முதல் 8 மாணவர்கள் கல்வியை கைவிட்டுவிட்டு பணிக்குச் செல்கின்றனர் என ஆசிரியர் சற்சொரூபன் கூறுகிறார்.

வடக்கு மாகாணத்தில் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படுவது தொடர்பில் ஓரளவான விழிப்புணர்வு பெற்றோரிடையே உள்ள போதிலும் மத்திய மாகாணத்தில் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. மத்திய மாகாணத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஓரிரு ஆண்டுகளில் பொருளாதார நெருக்கடி உச்சம் தொட்டுள்ளதால் கொழும்பு உட்பட நாட்டின் பிறபாகங்களில் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவது கணிமான அளவு அதிகரித்துள்ளது.

### சிறுவர்கள் தொழிலுக்குச் செல்வதில் தாக்கம் செலுத்தும் குடும்ப வறுமை

2020 ஆம் ஆண்டு உலகை உலுக்கிய கொரோனா தொற்றில் ஏற்பட்ட முழு முடக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க முடியாத நிலைக்கு அனைத்து மக்களும் தள்ளப்பட்டுள்ளனர். ஏற்கனவே உழைப்புக்கு ஏற்ற ஊதியமற்ற தொழிலாளர்களுக்கு இதன் தாக்கம் கடும் சுமையாக மாறியது. இதனால் மூன்று, நான்கு பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் ஒன்று அல்லது இரு பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி அவர்களை தொழிலுக்கு அமர்த்துகின்றனர் என நுவரெலியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஹரேந்திரன் குறிப்பிட்டார்.



இலங்கை எதிர்கொண்டுவரும் பொருளாதார நெருக்கடி சூழலால் வைத்தியர்களாகவும், ஆசிரியர்களாகவும் சமூகத்தில் மதிப்புமிக்க ஒரு தொழிலை செய்ய வேண்டுமென்ற கனவுடன் வாழ்ந்த பலரின் எதிர்பார்ப்புகள் கலைந்து வருகின்றன.

கொட்டகலை ட்ரைடன் தோட்டத்தில் இரண்டு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் பிறந்த கலைக்கமல், தந்தையின் மதுப்பழக்கத்தால் தாயை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தால் தனது கனவுகளை தூக்கியெறிந்துவிட்டு கடையில் பணிபுரிகிறார்.

இலங்கை பாரதூரமான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள போதிலும் மதுபாவனை சதவீதம் குறையவில்லை. மாறாக அதிகரிப்பையே காட்டுவதாக உலக நாடுகளில் மதுபாவனைகள் குறித்து ஆய்வுகளை நடத்தும் இணையத்தின் தரவுகள் கூறுகின்றன. 2021ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மதுபாவனை சதவீதம் தொடர்ச்சியான அதிகரிப்பு போக்கையே இணையத்தின் ஆய்வுகள் காட்டுகின்றன. இலங்கையில் இரண்டாவதாக அதிக மதுபாவனையாளர்கள் மத்திய மாகாணத்திலேயே உள்ளனர். இங்கு 660 மதுபானசாலைகள் உள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் 234 மதுபானசாலைகள் உள்ளதுடன் இவை தோட்டங்களை அண்டிய சிறிய நகரங்களிலேயே அமைந்துள்ளன.

குடும்பத் தலைவர்களின் மதுபாவனையால்தான் பெருந்தோட்டப் பகுதிகளில் பல மாணவர்கள் கல்வியை கைவிட்டு ஆடை கடைகளிலும், ஹோட்டல்களிலும், கட்டட நிர்மாண பணிகளிலும் ஈடுபடுவதை ஆய்வுகளில் அவதானிக்க முடிந்துள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவது கணிசமான அளவில் அதிகரித்துள்ளதாக கண்டி சமூக அபிவிருத்தி நிலையம் நடத்திய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது

பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கணிசமாக இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. மத்திய மாகாணத்தின் ஹற்றன் கல்வி வலயத்தில் மாத்திரம் கடந்த 2021ஆம் ஆண்டு 790 மாணவர்கள் இடைவிலகி தொழில்களுக்குச் சென்றுள்ளனர். இது 2022ஆம் ஆண்டில் மேலும் அதிகமாக இருந்திருக்குமென ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட டின்சினன் பாடசாலை அதிபர் பொன் பிரபா கூறியதுடன் தமது பாடசாலையில் கடந்த (2022) ஆண்டு 20 சதவீதமான மாணவர்கள் கல்வியை கைவிட்டு தொழில்களுக்கு சென்றுள்ளனர் என தெரிவித்தார்.

டிக்கோயா நுண்கலை கல்லூரியில் கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2023 மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் 39 பேர் குடும்ப வறுமை காரணமாக கல்வியை இடைநிறுத்திவிட்டு கொழும்பு உட்பட பல்வேறு பகுதிகளுக்கு தொழிலுக்குச் சென்றுள்ளனர் என அதிபர் என்.மூவேந்தன் தெரிவித்தார்.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் 27 மாணவர்கள் கடந்த இரண்டு வருடங்களில் நகர்புற கடைகளில் பணிக்குச் சென்றுள்ளதாக பாடசாலை ஆசிரியர் கேதீஸ்வரன் கூறியதுடன், ஹற்றன் கார்பெக்ஸ் கல்லூரியில் 2021, 2022ஆம் ஆண்டுகளில் 20 மாணவர்கள் வரை பாடசாலையிலிருந்து இடைவிலகி தொழிலுக்குச் சென்றுள்ளதாக அதிபர் பரசுராமன் சங்கர் தெரிவித்தார்.

இளம் வயது திருமணங்கள், குடும்பத்தலைவர்களின் போதைப் பாவனை, கொவிட் தொற்று காரணமாக பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டிருந்தமை, பாடசாலைகளை அண்டி உருவாகியுள்ள போதைப்பொருள் வலைப்பின்னல், அதிகரித்துள்ள பொருளாதார சுமைகள் உள்ளிட்ட காரணங்களால் சாதாரண தரக் கல்வியைகூட கற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு இலங்கையில் வறுமையான மற்றும் நலிவடைந்த குடும்பங்களில் வாழும் சிறுவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எமது தோட்டத்தில் அண்மையில் நடத்திய ஆய்வில், தாய்மார்கள் வெளிநாடு செல்லும் நிலைமை அதிகரித்துள்ளதால் பிள்ளைகள் கவனிப்பாரற்று சிறுவயதிலேயே தொழிலுக்கு அமர்த்தப்படுகின்றனர். இதனால் பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம் என ஹற்றன் செல்வகந்தை தோட்டத்தில் இயங்கும் உள்ளூர் அபிவிருத்திக்கான பாராளுமன்றத்தின் உறுப்பினர் சங்கரன் தெரிவிக்கிறார்.

நுவரெலியா மாவட்டத்தை பொறுத்தமட்டில் குடும்பத் தலைவர்களின் மதுபாவனை, தாய்மார்கள் பிள்ளைகளைப் பிரிந்து வெளிநாடு செல்வது, அதிகரித்துள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி போன்ற காரணிகளாலேயே அதிகமாக சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுகின்றனர் என பரவலான ஆய்வில் அறியமுடிகிறது. நுவரெலியா மாவட்டத்தை ஒத்ததான காரணிகளே பதுளை மாவட்டத்திலும் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதில் தாக்கம் செலுத்துகின்றன.

"குடும்ப வறுமை காரணமாக எனது சகோதரர் 9ஆம் தரத்திலேயே கல்வியை இடைநிறுத்திவிட்டு தொழிலுக்குச் சென்றார். அவர் பணிபுரிந்த இடத்தில் அவரைவிட மூத்த நபர்களுடன் ஏற்பட்ட நட்பால் ஹெரோயின் உட்பட பல்வேறு போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானார். தந்தை இல்லாத எங்கள் குடும்பத்துக்கும் எனது கல்வி நடவடிக்கைகளுக்கும் கைகொடுப்பார் என எதிர்பார்த்திருந்த எங்களை அவர் ஏமாற்றிவிட்டார். வயது போன என் தாயை காப்பாற்ற சாதாரண தரத்துடன் எனது கல்வியை நிறுத்திவிட்டு தோட்டத் தொழிலுக்குச் செல்கிறேன்" என அப்புத்தளை தங்கமலை கிராமத்தில் வசிக்கும் 17 வயது சர்மிளா கவலையுடன் கூறினார்.

### பதுளை மாவட்டத்தில் அதிகரித்துவரும் பாடசாலை இடைவிலகல்கள்

இலங்கையின் மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்துக்கு அடுத்து தமிழர்கள் அதிகமாக வாழ்வது பதுளை மாவட்டத்திலாகும். இந்த மாவட்டத்தில் 208 தமிழ் பாடசாலைகள் உள்ளன. இவற்றில் நகர்புறங்களில் உள்ள ஒருசில பாடசாலைகளைத் தவிர ஏனைய அனைத்துப் பாடசாலைகளிலும் 5 முதல் 10 சதவீதமான மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் இடைவிலகி தொழில்களுக்குச் செல்வதாக மாவட்ட செயலகத்தின் சிறுவர் பாதுகாப்பு பிரிவு கூறுகிறது.

இலங்கையில் கடந்த இரண்டு வருடங்களில் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படும் சதவீதங்கள் வெகுவாக உயர்வடைந்துள்ளன. எமது பாடசாலையில் மாத்திரம் 87 மாணவர்கள் 2022ஆம் ஆண்டு கல்வியை கைவிட்டு தொழில்களுக்குச் சென்றுள்ளனர். இப்படியே நிலைமைகள் சென்றால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் பெருந்தோட்டப் பகுதியில் இருந்து எவரும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாக மாட்டார்கள்" என பண்டாரவளை சௌதம் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் காலிமுத்து யோகேஸ்வரன் கூறுகிறார்.

பண்டாரவளை, பதுளை, பசறை உள்ளிட்ட நகரங்களில் பல கடைகளிலும் ஹோட்டல்களிலும் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுடன் நடத்திய கலந்துரையாடல்களில் பெரும்பாலான மாணவர்கள் 9, 10ஆம் தரங்கள் மற்றும் சாதாரண தரத்துடன் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

### பெருந்தோட்டங்களிலுள்ள சிறுவர்களே அதிகம் தொழிலுக்கு அமர்த்தப்படுகின்றனர்...

பெருந்தோட்டப்பகுதியை மையப்படுத்தி ஆய்வுகளை நடத்தும் மனித அபிவிருத்தி தாபனத்தின் தரவுகளின் படி 242,000இற்கும் அதிகமான குடும்பங்கள் தோட்டப்புறங்களில் வசிக்கின்றன. இதில் 57.8 சதவீதமான மக்கள் இன்னமும் லயன் அறைகளில் வசிக்கின்றனர். "லயன் அறைகளில் வசிக்கும் குடும்பகளில் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். பாடசாலை இடைவிலகல்களும் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதும் லயன் குடியிருப்புகளில்தான் அதிகமாக உள்ளது" என மனித அபிவிருத்தி தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி யோகேஸ்வரி கூறுகிறார்.

"நாட்டில் சிங்களப் பாடசாலைகளில் இடைவிலகல் என்பது மிகவும் குறைவாகும். வெலிமடை கல்வி வலயத்தில் எந்தவொரு சிங்கள மாணவரும் பொருளாதார நெருக்கடியால் கல்வியை இடைநிறுத்திவிட்டு தொழிலுக்குச் செல்லவில்லை" என வெலிமடை வலயக் கல்வி பணிமனையின் கள ஆய்வாளர் மெனிகே ரத்னாயக்க கூறுகிறார். பதுளை மாவட்டத்தில் முஸ்லிம் மாணவர்களின் இடைவிலகல்கள் என்பதும் மிக குறைவென வெலிமடை திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் ஜபார்டீன் மொஹட் முர்சீத் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடத்தில் பசறை பொலிஸ் வலயத்தில் 30 இளைஞர், யுவதிகள் தற்கொலை செய்துக்கொண்டுள்ளதாக பசறை பொலிஸ் ஊடகப்பிரிவு அறிக்கையிட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவயதிலேயே தொழிலுக்குச் சென்று ஏற்பட்ட தீய பழக்கங்கள், இளம் வயது காதல் திருமணங்களால்தான் உயிரிழந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் கள ஆய்வுகள் மற்றும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருடன் நடத்திய அனைத்து சந்திப்புகளிலும் போதைப்பொருள் பாவனை, பொருளாதார சுமையால் தாய், தந்தை வெளிநாடு செல்கின்றமையே சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதில் பிரதான காரணிகளாக அடையாளம் காண முடிந்ததுடன், களுத்துறை மாவட்டத்தில் இந்தக் காரணிகளுடன் மேலும் பல பிரச்சினைகளால் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

மேல்மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் பல பகுதிகளை எல்லையாகக் கொண்ட மாவட்டம்தான் களுத்துறை மாவட்டம். ஏனைய மாவட்டங்களை போன்று பாடசாலை இடைவிலகல்களும் பொருளாதார நெருக்கடிகளால் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படும் நிலைமைகள் இங்கும் அதிகமாக உள்ளது.

"களுத்துறை மத்துகம பகுதியில் நான் வசிக்கிறேன். தற்போது தள்ளு வண்டியில் பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். சாதாரண தரம் வரை கல்வி கற்றுள்ளேன். கடந்த 2021ஆம் ஆண்டு வெளியாகிய சாதாரண தரப் பெறுபேறுகளில் சிறந்த சித்தியை பெற்றிருந்தேன். சிறுவயதிலேயே தந்தை மறைந்திருந்தாலும் எனக்கு மேலதிக கல்வியை பெற்றுக்கொடுக்க எனது தாய் சரினா பேகம் மிகவும் கஷ்டப்பட்டார். ஆனால், உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியை பயில்வது எனது கனவாக இருந்தது. கொழும்பில் சென்றே மேலதிக கல்வியை தொடர வேண்டியுள்ளது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் என்னால் விரும்பிய கல்வியை தொடர முடியாது போயுள்ளது" – என மத்துமக பகுதியில் வசிக்கும் மொஹமட் இலியாஸ் கூறுகிறார்.

**சு.நிஷாந்தன்**

---

# 'சமுத்திரன் எழுத்துக்கள்' அவசியமான அரசியல் சமூக ஆவணம்

**வீரகத்தி தனபாலசிங்கம்**

புலம்பெயர்ந்து உலகின் பல நாடுகளிலும் வாழும் இலங்கை தமிழ்பேசும் சமூகத்தின் மத்தியில் இன்று இருக்கக்கூடிய அறிவுஜீவிகள், சிந்தனையாளர்கள் மற்றும் கல்விமான்கள் மத்தியில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒருவர் பேராசிரியர் என். சண்முகரத்தினம். சுமார் நான்கு தசாப்தங்களாக நோர்வேயில் வாழ்ந்துவரும் அவரின் பல்கலைக்கழக கல்வி, அதன் ஆய்வுத்துறை சார்ந்த பங்களிப்புகளுடன் அரசியல் சமூகம் சார்ந்த எழுத்து மற்றும் சிந்தனைப் பங்களிப்புகளும் மிகவும் முக்கியமானவை.

இளவயதில் இருந்தே இடதுசாரி அரசியலில் ஆர்வத்தை கொண்டிருந்த அவர் 1960 களின் நடுப்பகுதியில் இருந்து சொந்தப் பெயரிலும் சமுத்திரன் எனும் புனைப்பெயரிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அரசியல், சமூக விடயங்கள் மற்றும் கலை இலக்கியம் தொடர்பான சிந்தனையை தூண்டும் பெருவாரியான கட்டுரைகளை எழுதிவந்திருக்கிறார்.

அவரின் கட்டுரைகளின் மத்தியில் இருந்து தெரிந்தெடுத்து 'சமுத்திரன் எழுத்துக்கள்' என்ற தலைப்பில் நான்கு தொகுப்பு நூல்களை லண்டனில் இயங்கும் சமூக இயல் பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. வெளியீட்டு வைபவம் நோர்வேயில் கடந்த மாதம் 25ஆம் திகதி நடைபெற்றது. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள அரசியல், சமூக, கலை இலக்கிய ஆர்வலர்களும் செயற்பாட்டாளர்களும் பல ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் வந்து அந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.



'சமுத்திரன் எழுத்துக்கள் தொகுதி 01 ' 'இலங்கை மீள்சிந்திப்புக்கான சில முன்மொழிவுகள் ' என்ற தலைப்பில் தேசிய இனப்பிரச்சினை, பெருந்தேசியவாதம், இலங்கை இடதுசாரிகள், தமிழ் தேசியவாதம், இந்திய மேலாதிக்கம், தேசியக்கொடி, நிலம், பொருளாதாரம், அபிவிருத்தி, சமூக மேம்பாடு, தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக மக்கள், சிங்களவர்கள், புலம்பெயர் சமூகம் என்ற என்ற விடயதானங்களை அலசும் 13 கட்டுரைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது.

தொகுதி 02 மாக்சியம், முதலாளித்துவம், இயற்கை, ஜனநாயகம், மூலதனம், உலகமயமாக்கம், நவதாராளவாதம், தொழிலாளர் வர்க்கம், ஏகாதிபத்தியம், யுத்தம், சமாதானம், கொவிட் என்ற விடயதானங்களை அலசும் பத்து கட்டுரைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது.

தொகுதி 03 கலை இலக்கியம், சமூகம், அரசியல், உரையாடல், விவாதம், எதிர்வினை, வாசிப்பு, நினைவு அஞ்சலி என்பவற்றை பற்றிய 12 கட்டுரைகளை கொண்டிருக்கிறது.

தொகுதி 04 இலங்கை தேசிய இனப்பிரச்சினை, சிங்கள பெரும் தேசிய இனவாதத்தின் அடிப்படைகளும் மேலாதிக்கமும பற்றி அலசும் நான்கு கட்டுரைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது.

நான்கு தொகுதிகளுக்கும் பதிப்புரையை எழுதியிருக்கும் லண்டனில் வாழும் கலை இலக்கிய மற்றும் சமூக செயற்பாட்டாளரான எம்.பௌசர், " கடந்த காலத்தை கறாராக மீள்மதிப்பிடுவது மட்டுமல்ல இன்றைய காலத்தின் அரசியல் மற்றும் சமூகத் தளங்களை செப்பனிட்டு முன்னோக்கிச் செல்லவேண்டிய தேவையும் அவசியமும் நம் முன் உள்ளது. அதற்கான அடிப்படைகளையும் சமூக நீதிக்கும் சமத்துவத்துக்குமான மனிதத்தின் அடியாளத்தை சமுத்திரன் எழுத்துக்கள் நம் முன் வைக்கின்றன, வலியுறுத்துகின்றன " என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சண்முகரத்தினம் நீண்டகால அரசியல், சமூகச் செயற்பாட்டையும் அறிவார்ந்த பங்களிப்புமிகு நம் கால கட்டத்தின் பல்துறை ஆற்றல்களையும் கொண்ட ஒரு அறிவாளர். இந்த தொகுப்புகளில் உள்ள எழுத்துக்கள் இலங்கையின் கடந்த அறுபது வருடங்களுக்கும் மேற்பட்ட சமூக அரசியல் வரலாற்றின் மிகவும் முக்கியமான பதிவுகளாகும்.

இவை சமுத்திரன் என்கிற ஒரு தனிமனிதரின் கருத்துக்கள், பார்வைகள் என்பதனையும் தாண்டி இலங்கையின் சமூக, அரசியல், பொருளாதார வரலாற்றின் மிக முக்கிய பதிவுகளாக மாறும் விரிந்த அரசியல் பண்பைக் கொண்டவையாகும். இந்த வரலாற்றில் ஈடுபாடும் கற்றலுக்கான தேடல் கொண்டோருக்கும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் இலங்கைவாழ் அனைத்து மக்களினதும் சமத்துவமான இருப்பிலும் வாழ்விலும் அக்கறையும் அரசியல் நோக்கமும் கொண்ட மக்கள் ஜனநாயகப் பிரிவினருக்கும், சமுத்திரன் எழுத்துக்கள் மிக அவசியமான அரசியல், சமூக ஆவணமாகும் என்றும் பௌசர் கூறியிருக்கிறார்.

இந்த தொகுப்பு நூல்களில் உள்ள எழுத்துக்கள், மதிப்பீடுகள், கருத்துக்கள் தான் வரித்துக்கொண்ட அரசியல் கருத்துநிலையை அடிப்படையாகக் கொண்ட பார்வைகள் தான் என்பதை கூறும் சண்முகரத்தினம் நூல்கள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை மற்றும் நிலைபெறு மனித மேம்பாடு ஆகியவற்றை மக்கள் ஜனநாயகத்துக்கான போராட்டத்துடன் இணைக்கும் சவால் பற்றிய திறந்த விவாதங்களுக்கு உதவுமாயின் பெரும் நன்றியுடையவனாக இருப்பேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த தொகுப்புக்கள் எப்போதோ வெளிவந்திருக்கவேண்டியவை என்று கூறியிருக்கும் பதிப்பாசிரியர் பௌசர் காலத்தின் தேவையான இந்த பணியை அர்ப்பணிப்புடன் செய்தமைக்காக மிகுந்த பாராட்டுக்குரியவர்.




# படித்ததும் பகர்வதும் 138



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சோம்பேறிகள் ஜாக்கிரதை!



இலங்கையில் சோம்பேறிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக ஒரு கருத்து கணிப்பு தெரிவிக்கிறது. அந்தவகையில், நாட்டில் வாழும் ஒவ்வொரு 3 நபர்களில் ஒருவர் சோம்பேறியாக உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தனிமனித நலனுக்கும், சமூக நலனுக்கும், நாட்டு நலனுக்கும் கூட பெரும் பாதிப்பான நிலைமையாகும்.

கடந்த ஆண்டு உலக சுகாதார நிறுவனம் (WHO) 74 நாடுகளில் நடத்திய ஆய்வொன்றில் சோம்பேறிகளின் தொகை சர்வதேச ரீதியிலும் வேகமாக அதிகரித்து வருவதாகவும், 81 சதவீத இளம் வயதினரும், 28 சதவீத பெரியவர்களும் குறைந்தபட்ச உடற்பயிற்சியைக் கூட செய்வதில்லை எனவும் தெரிய வந்துள்ளது. இந்த நிலைமைகள் பல ஆபத்தான உடல்நலப் பாதிப்புகள் ஏற்படுவதற்கான காரணங்களாக அமைகின்றன.

இதனால், 2030ம் ஆண்டுக்குள் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய நோய்களால் பாதிக்கப்படுவார்கள் எனவும், இவர்களில் 47 சதவீதம் பேர் உயர் இரத்த அழுத்த நோய்களாலும், 43 சதவீதம் பேர் மன அழுத்த நோய்களாலும் பாதிக்கப்பட்டு மரணத்தை எதிர்கொள்ளும் நிலைமை ஏற்படும் எனவும் இந்த ஆய்வு அறிக்கையில் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா பெருந்தொற்றுக் கால ஊரடங்கு, அதை தொடர்ந்து ஏற்பட்ட வேறு விடயங்களுக்கான ஊரடங்குகள், தொடர்ச்சியாக தொழில் வாய்ப்பின்மை, வீடுகளிலிருந்து வேலை செய்ய வேண்டிய கட்டாய நிலை என்பன சோம்பேறித்தனம் அதிகரிப்பதற்கான காரணங்களாக இருப்பினும் இவற்றை விட கணனி (computer), மடிக்கணனி (Laptop), 'டெப்' (Tab), 'பேட்' (Pad) போன்றவற்றின் பாவனை சோம்பேறிகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு முக்கிய சில காரணங்களாக இருக்கின்றன.

இணையப் பாவனை, வாட்ஸ்எப், யூடியூப், முகநூல் போன்றவற்றின் பாவனை அத்துடன் இவற்றினால் ஆக்கிரமிக்கப்பட்டு அவற்றிலேயே கூடுதலான நேரத்தை செலவிடுவதும் இந்த சோம்பேறித்தனத்தால் பாதிக்கப்படுபவதில் அதிக ஆதிக்கம் செலுத்துகின்றன.

உற்சாகத்தோடு செயற்படுவதையும், உழைப்பதையும் விட்டும் விலகி சோம்பேறியாக ஆவதனால் உடல் உள நல பாதிப்புகள் மட்டுமன்றி பொருளாதார ரீதியிலும் அதிக பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதை மறுக்க முடியாது. ஒரு நபர் குறைந்த்தது தினமும் 21 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தால், சோம்பேறித்தனத்தால் வரும் நோய்களில் 20 முதல் 30 சதவீதம் வரை தடுக்க முடியும் எனவும் உலக சுகாதார அமைப்பு ஆலோசனை வழங்கி உள்ளது.

எனவே, எல்லா வகையிலும் தீங்கினை ஏற்படுத்துகின்ற, எந்தவித நன்மைகளையும் தராத சோம்பேறித்தனத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு உற்சாகத்தோடு செயற்பட, உழைத்து வாழ, உடற்பயிற்சிகளை தவறாது செய்திட ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

சோம்பேறிகளே ஆழ்ந்துணர்ந்து சிந்தியுங்கள்
சோம்பலினால் இழப்புகளே உணர்ந்திடுங்கள்
உழைப்பதால் உயர்வுகள்தாம் புரிந்திடுங்கள்
உழைத்திட்டால் வெற்றிகளால் மகிழ்வீர்கள்

## பிரிந்தார் பெருமை

### திருமதி சரோஜினி அருணாச்சலம்



பிரசித்தி பெற்ற பல சிங்கள நாவல்களை தமிழில் மொழி பெயர்த்த, பிரபல மொழிபெயர்ப்பாளர் திருமதி சரோஜினி அருணாச்சலம் கடந்த 2023.03.17ம் திகதியன்று காலமானார். இவர் 'தங்கத் தாத்தா' என்றழைக்கப்பட்ட நவாலியூர் சோமசுந்தர புலவரின் பேத்தியும், இலங்கை வானொலி தமிழ்ச் சேவையின் பிரபல அறிவிப்பாளர் நவாலியூர் சோ. நடராசனின் மகளுமாவார். கொழும்பு பம்பலப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்தார்.

சிங்கள இலக்கிய உலகின் மூத்த இலக்கியவாதிகள் பலரின் புகழ் பெற்ற சிங்கள நாவல்களை இவர் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். பிரபல பன்னூலாசிரியரான ஜயசேன ஜயக்கொடியின் 'அமா வெஸ்ஸ' என்ற நாவல் 'அமுத மழை' என இவரால் மொழிபெயர்க்கப்பட்டது. இதுவே இவர் இறுதியாக மொழிபெயர்த்த நாவலாகும். புத்தரின் கதையான இந்த நாவல்தான் தன்னால் மிகவும் விரும்பி மொழிபெயர்க்கப்பட்ட நாவல் என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள இலக்கியத்தின் சிறந்த இலக்கியவாதியான குமாரதுங்க முனிதாசவின் "மகுல் கேம" கல்யாண சாப்பாடு, 'ஹத்பன' செத்துப் பிழைத்த சின்னச்சாமி, 'ஹீன் சரே' மெலியால் மிடுக்கு, சிங்கள அரசியல்வாதியும், இலக்கிய கர்த்தாவுமான டி.பி. இலங்கரத்னவின் 'அம்ப யாலுவோ' இணை பிரியா நண்பர்கள், ஆர். ஆர். சமரக்கோனின் 'கே குருல்லோ' – வீட்டுக்குருவிகள்,

பிரபல நாவலாசிரியர் அனுலா விஜயரத்தின மெனிக்கேயின் சாகித்திய பரிசு பெற்ற நாவலான 'வடவா கின்ன' சோமா ஜயக்கொடியின் சிங்கள சரித்திர நாவல் 'சிதூஹத் யசோதரா' சித்தார்த்த யசோதரா, பேராசிரியர் ஸ்ரீ குணவர்தனவின் 'ஹெவனெல்ல' நிழல், சிறுவர் இலக்கியவாதி சிபில் வெத்தசிங்ஹவின் 'வெனியன் கழு வெனியன்' சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு. என்பன இவர் மொழிபெயர்த்த ஏனைய சிங்கள நாவல்களாகும்.

இத்தகைய தனித்துவ ஆளுமை மிக்க சரோஜினி அம்மையாரின் பங்களிப்புகளுக்கு சரியான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றே கூற வேண்டும். இவரை பொறுப்பானவர்கள் சரியாகக் கண்டு கொள்ளவில்லை. அவர் வாழும்போதும், ஏன், இறந்தபோதும் கூட உரிய முறையில், அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்படாமை பெரும் குறையாகத் தோன்றுகிறது.

சரோஜினி அம்மையாரின் இழப்பு சிங்கள, தமிழ் மொழி பெயர்ப்புத்துறைக்கு பேரிழப்பாகும்.

## நூலகத்துக்கு ஒரு நூல்

புது வரவு

### அகல் திரையும் ஒளி விளக்கும்

கவிதாயினி இராணி பௌசியாவின் இரண்டாவது இலக்கியப் பிரசவமாக "அகல் திரையும் ஒளி விளக்கும்" கவிதை நூல் வெளிவந்துள்ளது. 'த' என்ற தனி எழுத்து முதல் 'கற்களாய் சொற்கள்! கண்ணாடியை உடைந்தேன்!' எனும் நீண்ட தலைப்பு வரை அறுபத்தெட்டு தலைப்புகளில் வெவ்வேறு அளவுகளிலான கவிதைகள் இதில் இடம் பிடித்துள்ளன.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெக் எம்.டி.எம். ரிஸ்வி (மஜீதி) இந்நூல் பற்றி குறிப்பிடுகையில், "நிம்மதி அருள்வாய் அல்லாஹ்" எனும் தலைப்புடன் ஆரம்பித்து "இயற்கை இன்பம்" எனும் தலைப்புடன் முடிவுறும் இக் கவிதை நூலானது வேறுபட்ட தலைப்புகள் தாங்கி, தரம்மிகு கருத்துக்களையும், சிந்தனைகளையும் இலக்கிய இரசனையோடு கவி மழையில் நனையும் உணர்வை தருகின்றன. கவி எழுதும் கவி ராணி இவர் என்றால் மிகையாகாது.



தம் சிந்தனைகளை பிறரும் அறிந்து பயன்பெற வேண்டும் என்ற நோக்கிலும் எழுத்துத் துறையில் தன்னாலான பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற அவாவிலும் இவருடைய கவி முயற்சி இடம்பெற்றுள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

"புரட்சியும், எழுச்சியும், மார்க்கப் பற்றும், பெண்ணுரிமையும், அறிவுரையும் என்று மட்டுமில்லாமல் ஒடுக்கப்பட்ட சமூகத்திற்காகவும் இவரின் கவிதைகள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இவரது கருத்துக்கள் நம் சமூகத்திற்கு மிகவும் தேவையான ஒன்றாகும். தடம் மாறிச் செல்லும் வாழ்க்கை விழுதுகளை சீர் செய்யும் மந்திர வரிகளை இவரது கவிதை சுமந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது." என்று புத்தளத்தைச் சேர்ந்த எழுத்தாளர், கவிஞர் ஸாலிஹ் அஸீம், இராணி பௌசியாவின் கவிதைகள் தொடர்பாக கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

நூல்: அகல் திரையும் ஒளி விளக்கும், ஆசிரியர்: இராணி பௌசியா, முதற்பதிப்பு: 2022 டிசம்பர் 31, பக்கங்கள்: 92, விலை: ரூபா. 400/=, வெளியீடு: பௌசி பதிப்பகம்,

## தகவல் களஞ்சியம்

### 'வட்ஸ்அப் 'செயலி தரும் புதிய வசதிகள்.

சமூக ஊடகங்களில், வட்ஸ்அப் (WhatsApp) செயலி மிகப் பிரபலமான செயலியாக உள்ளது. கடந்த ஆண்டின் கணக்கெடுப்பின்படி உலகில் இதனை பாவிப்போரின் எண்ணிக்கை 2.44 பில்லியனாக இருந்தது.

வட்ஸ்அப் அதன் பாவனையாளர்களின் நன்மைக்காக அது தொடர்ந்து பல மேம்படுத்தல்களை மேற்கொண்டு வருகிறது. அந்த நிறுவனம் வரும் மாதங்களில் பல புதிய அம்



சங்களை அறிமுகப்படுத்தவுள்ளது. செய்திகள் அனுப்புவதை மிகவும் கவர்ச்சிகரமானதாக ஆக்குவதற்காக செய்திகளைத் திருத்தல், அரட்டையில் குறிப்பிட்ட செய்தியைப் 'பின்' (Pin) செய்தல் உள்ளிட்ட பல வசதிகளை விரைவில் வழங்கவுள்ளது.

**செய்திகளைத் திருத்துதல்:**

இந்த அம்சம் ஊடாக அனுப்பிய செய்தியில், விரைவில் தவறுகளை எளிதாக திருத்தலாம் அல்லது குறிப்பிட்ட செய்திகளை நீக்காமல் கூடுதல் தகவல்களைச் சேர்க்கலாம். ஒரு செய்தியைத் திருத்தினால், அது அதன் குமிழிக்குள் "திருத்தப்பட்டது" என்ற அடையாளத்துடன் குறிக்கப்படும்.

செய்திகளைப் 'பின்' (Pin) செய்தல்:

அரட்டை சாளரத்தில் செய்திகளை 'பின்' செய்ய வட்ஸ்அப் விரைவில் அனுமதிக்கும். இதனை குழு மற்றும் தனிப்பட்ட அரட்டைகளிலும் பயன்படுத்த முடியும். ஒரு செய்தியை PIN செய்வதன் மூலம் அந்த குறிப்பிட்ட செய்தியை வேகமாக அணுகலாம். அரட்டை குமிழியில் செய்தி பின் செய்யப்பட்டுள்ளதைக் குறிக்கும் சிறிய குறியீடு தோன்றும்.

மறையும் செய்திகளுக்கான விருப்பங்கள்:

மறைந்து போகும் செய்திகளுக்காக ஏற்கனவே உள்ள கால அவகாசத்துக்கு மேலதிகமாக மேலும் பல புதிய கால அளவு தெரிவுகளை வட்ஸ்அப் விரைவில் வெளியிடவுள்ளது.

அதன்படி, 1 மணிநேரம், 3 மணிநேரம், 6 மணிநேரம், 12 மணிநேரம், 2 நாட்கள், 3 நாட்கள், 4 நாட்கள், 5 நாட்கள், 6 நாட்கள், 14 நாட்கள், 21 நாட்கள், 30 நாட்கள், 60 நாட்கள், 180 நாட்கள் மற்றும் 1 ஆண்டு என்றவாறு கால அவகாசத்தை தெரிவுசெய்யலாம். முக்கியமான மற்றும் ரகசியமான செய்திகளுக்கு குறுகிய, கால அளவு பயனுள்ளதாக இருக்கும். அதே சமயம் நீளமானவை, நீண்ட காலத்திற்கு சேமிப்புக்கு இடையூறு ஏற்படாத வகையில் செய்திகளை அழிக்க அனுமதிக்கும்.

குரல் வடிவ செய்தியை ஒருமுறை மாத்திரம் கேட்பதற்கு அனுப்ப முடியுமாகும். இவ்வாறு அனுப்பப்படும் செய்திகளை ஒருமுறை மட்டுமே இயக்க முடியும். மிக முக்கியமான குரல் பதிவை அனுப்பினால் அல்லது தகவல் பெறுகின்றவரை நம்பவில்லை என்றால், இந்த வசதி மிகவும் பயனுள்ள அம்சமாக இருக்கும்.

இதுபோன்ற இன்னும் பல வசதிகளையும் வட்ஸ்அப் அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுள்ளது.

## கவிக் 'கடி'கள்

**சிகரட்**
**சிகரட்டை உறிஞ்ச**
**உறிஞ்ச**
**அதன் நீளம்**
**குறைகிறது**
**மனிதா உன் ஆயுளின்**
**ஆழம் குறைகிறது.**
**எம். வஸீர்,**
**வாழைத்தோட்டம்.**

**தேர்தல்!**
**அறியாதவர்களை**
**அரியாசனம்**
**ஏற்றுகின்றனர்**
**அறியா சனம்**
**'சிந்தனைப் பிரியன்'**
**முசம்மில்**

**க(அ)ஞ்சா!**
**அஞ்சா நெஞ்சங்**
**கொண்ட**
**தலைவனுக்கு**
**கஞ்சா நெஞ்சம்**
வெலிமடை
ஜஹாங்கீர்

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207




திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் கே. பத்மானந்தன் 38

# திருவள்ளுவத்தில் முரண்பாடுகளைக் களைதல்

முரண்பாடுகளைக் களையும் முயற்சியின் ஓர் அங்கமாக முகாமையாளர் முரண்படும் சாரார்களுடன் தனித்தனியாகப்பேசி முரண்பாடுகள் ஏன் ஏற்பட்டது? எதற்காக ஏற்பட்டது? அதற்கான காரணங்கள் என்ன என்று அறிய வேண்டியது அவசியமாக இருக்கின்றது. இவ்வாறு கலந்துரையாடும்போது அவர்கள் தங்கள் தரப்பு ஞாயங்களை முன்வைப்பார்கள். அவை சரியாகவும் இருக்கலாம் அல்லது பிழையாகவும் இருக்கலாம். ஆனால் அவர்களால் சொல்லப்படும் காரணங்கள் ஏற்கத்தக்கவையா இல்லையா என்று அலசி ஆராயவேண்டிய பொறுப்பு முகாமையாளருக்கு இருக்கின்றது. அப்போதுதான் அவரினால் முரண்பாடுகளை எல்லோரும் ஏற்கக் கூடிய முறையில் தீர்த்து வைக்க முடியும். இவ்வாறு முரண்பாடுகளைக் களைய முற்படும்போது அந்த முரண்பாடுகளுக்கான காரண காரியங்களை முகாமையாளர் முறையாகக் கேட்டு ஆய்ந்து அறிய வேண்டும் என்ற கருத்தினை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியில் சிறப்பாகக் கூறுகின்றார்.

" எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்423)

அதாவது எந்த ஒரு செய்தியைப் பற்றியும் யார் ஒருவர் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்ப்பொருளை ஆராய்ந்து கண்டுகொள்வதுதான் அறிவு. "யார், யார் வாய்க் கேட்பினும்" என்று கூறுவதன் மூலம் சொல்லுபவரின் தகுதி தராதரம் பதவிநிலை பற்றி ஆராயாமல் அல்லது அவற்றினை ஏற்காமல் அவரினால் கூறப்படும் செய்தி பற்றியே முடிவு கொள்ள வேண்டும் என்ற கருத்தினை திருவள்ளுவர் உணர்த்துகின்றார். எனவே முரண்பாடு களைதல் தொடர்பான கலந்துரையாடலுக்குப் போகின்ற முகாமையாளர் முரண்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடும் போது அவர்களின்தனிப்பட்டபதவி தகுதிகளைக் கருத்தில் கொள்ளாது அவர்களால் சொல்லப்படும் கருத்துக்களினையே கவனத்தில் எடுக்க வேண்டும் என்ற செய்தியினை திருவள்ளுவர் கூறுகின்றார்.

எனவே கருத்துக் கூறுபவர் எவராக இருந்தாலும் நிறுவனத்தில் எந்த நிலையில் இருந்தாலும் அவர் மீது கொண்ட பற்றின் காரணமாகவோ இல்லாவிட்டால் மதிப்பின் காரணமாகவோ இல்லாவிட்டால் அவர் புகழ் பெற்றவர், செல்வாக்கு கொண்டவர், உயர்நிலையில் இருகின்றார் என்பதற்காகவோ அல்லது அவர் நெருங்கிய நண்பர் என்பதற்காவோ அவர் கூறுவன எல்லாம் சரி என்று எடுப்பதை முகாமையாளர் தவிர்க்க வேண்டும். அதேபோன்று ஒருவர் நிறுவனத்தில் தாழ்ந்த பதவி நிலையில் இருக்கிறார் அல்லது அவரிடம் கல்வித்தகுதிகள் இல்லை செல்வாக்கு இல்லை புகழ் இல்லை அல்லது அவர் நிறுவனத்தில் பிரச்சினைக்கு உரியவர் அல்லது நண்பராக இல்லை என்பதற்காக அவரின் கருத்துக்களை முகாமையாளர் தட்டிக் கழிக்கக் கூடாது என்பது திருவள்ளுவரின் அறிவுரையாகும். எனவே முகாமையாளர் எந்த நிலையிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் தான் கேட்கும் கருத்துக்களில் காரணங்களில் சிறந்தது எது, நல்லது எது, என்று நுணுகி ஆய்ந்து அறிகின்ற மெய் அறிவாகிய பகுத்தறிவை பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் முரண்பாடுகள் நேர்மையான முறையில் நிறுவனத்திற்கும் ஊழியர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் தீர்க்



கப்படமுடியும் என்பது திருவள்ளுவரின் எண்ணமாகும். இதே கருத்துக்களை கீழ் வரும் ஈரடியிலும் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு " (குறள்355)

அதாவது எந்தப் பொருள் என்றாலும் அது எவ்வாறு தோன்றினாலும் அத் தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல் அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய் அறிவாகும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது முரண்பாடு களைதலில் ஈடுபடும் முகாமையாளர் இங்கு இரண்டு விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். ஒன்று சம்பந்தப்பட்ட தரப்பினரின் தோற்றங்களை கருத்தில் கொள்ளக்கூடாது. சிலர் படாடோபமாக உடை அணிந்து பெரிய கனவான்கள் போன்று தோன்றுவார்கள் அல்லது ஆன்மீகவாதிகள் போன்று தோன்றுவார்கள் என்பதனால் அவர்கள் சொல்வது சரியாக இருக்கும் என்று முடிவினை எடுக்கக் கூடாது. அதே போன்று சிலர் பட்டிக்காட்டான் போல தோற்றத்தில் ஏழையாக எளியவனாக தோன்றக் கூடும் என்பதனால் அவர்கள் கூறுவது தவறு என்று முடிவு எடுக்கக் கூடாது. எனவே முகாமையாளர் அவர்களின் தோற்றத்தினை வைத்துக்கொண்டு அவர்களால் சொல்லப்படும் கருத்துக்கள் தொடர்பாக முடிவினை எடுக்காது தீர ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

இரண்டாவது அவர்களினால் சாட்சியமாக ஏதாவது பொருட்கள் முன்வைக்கப்படுமானால் அந்தப் பொருட்களின் தோற்றத்தினை வைத்து ஒரு முடிவிற்கு வராமல் அந்தப் பொருட்கள் தொடர்பாக தீர ஆரய்ந்து முடிவிற்கு வரவேண்டும். உதாரணமாக அவர்களினால் ஏதாவது புகைப்படம் அல்லது ஒலி, ஒளி நாடாக்கள் முரண்பாட்டிற்கு காரணமான சாட்சியாக அல்லது ஆதாரமாக முன்வைக்கப் படுமாயின் அவற்றின் உண்மைத் தன்மை பற்றி நன்கு ஆராய்ந்த பின்பே முகாமையாளர் அது தொடர்பான முடிவிற்கு வரவேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

நிறுவனம் ஒன்றில் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் எப்போதும் உயர்ந்தவர்கள் அல்ல அதுபோலத் தாழ்ந்த பதவிகளில் இருப்பவர்கள் எப்போதும் தாழ்ந்தவர்களும் அல்ல என்ற உண்மையினை முகாமையாளர் விளங்கிக்கொண்டாலே அவரினால் முரண்பாடு களையும் செயன்முறையினை நிறுவனத்தில் முறையாக மேற்கொள்ள முடியும். எனவே முரண்பாடு களையும் செயற்பாட்டில் ஈடுபடும் முகாமையாளர் பதவி நிலைகளை வைத்துக்கொண்டு முடிவுகளை மேற்கொள்ளக்கூடாது என்ற கருத்தினை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியில் விளக்குகின்றார்.

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்" (குறள் 973)

அதாவது மேலான இடத்தில் இருந்தாலும் மேன்மைக் குணம் இல்லாதவர் மேன்மக்கள் ஆகார் அதேபோன்று கீழ்நிலையில் இருந்தாலும் கீழ்மைக் குணம் இல்லாதவர்கள் கீழ்மக்கள் எனக்கருதப்படார் என்கிறார் திருவள்ளுவர்.

எனவே நிறுவனத்தில் பதவியில் மேல்நிலையில் இருக்கும் ஒருவர் மேன்மையான பண்புகள் கொண்டிராவிடில் அவரை மேலானவர் என்று மதிக்கமுடியாது. அதே போன்று அதற்கு நேர்மாறாகக் பதவியில் கீழ்நிலையில் உள்ள ஒருவர் நற்பண்புகளுடன் தீய செயல்களை எண்ணாமல் வாழ்வாரானால் அவர் மதிப்பிற்குரியவராகக் கருதப்பட வேண்டும் என்று திருவள்ளுவர் கூறும் கருத்துக்களை முரண்பாடுகளை களைய முற்படும் முகாமையாளர் விளங்கிக் கொள்ள வேண்டும். முரண்பாடுகளைக் களைவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தந்திரோபாயமாக ஏற்றுக் கொள்ளல் அல்லது உள்வாங்கல் (Accommodation) பயன்படுகிறது. அதாவது முரண்பாட்டிற்கு மையமாகக் கருதப்படும் பிரச்சினையை விட முரண்பாட்டில் ஈடுபடும் ஒரு தரப்பினர் உடனான உறவு நிறுவனத்திற்கு முக்கியம் எனக் கருதும் போது முரண்பாட்டினை மேலும் வளர்க்காது அந்தத் தரப்பினரின் வாதங்களை அல்லது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது உள்வாங்குதல் பொதுவாக பல இடங்களிலும் கையாளப்படுகின்றது. அதாவது விட்டுக்கொடுத்து முரண்படும் தரப்பினருக்கு நன்மை செய்தவதாகும். இதனை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார்.

" இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் " (குறள்314)

அதாவது எமக்குத் தீங்கு செய்கின்ற ஒருவரை தண்டிக்கும் முறை என்னவென்றால் தீமை செய்தவர் வெட்கப்படும் அளவுக்கு நன்மையைச் செய்வதுடன் அவர் செய்த தீமையையும் நாம் செய்த நன்மையையும் மறந்து விடுதலாகும். பிறர் செய்த தீமையை நினைப்பதால் பகைமை உணர்வும் முரண்பாடும் வளரும். அதேபோன்று நாம் செய்த நன்மையை நினைப்பதால் தன் முனைப்பும் துளிர்க்கும் என்பதானால் அந்த இரண்டையும் மறந்து விடும்படி திருவள்ளுவர் கூறுகின்றார். உண்மையில் உளவியல் அடிப்படையில் ஒருவரைத் திருத்த வேண்டுமாக இருந்தால் உடன்பாட்டு முறையிலே அணுகுதல் வேண்டும். பழிவாங்கும் உணர்வில் முரண்பட்டு நின்ற ஒருவனை "ஒறுத்தல்" "நாண" என்ற சொற்களின் வழியாக பழிவாங்குதலுக்கு உடன்பட்டு நிற்பார் போலக் காட்டி அவன் வெகுளித்தனத்தை கோபத்தைத் தணிய வைத்துப் பின் நன்னயம் செய்து ஆற்றுப்படுத்தும் போது முரண்பாடு தணியும் என்பது திருவள்ளுவரின் நிலைப்பாடாகும்.

திருவள்ளுவரின் இந்த தந்திரோபயத்தினை முகாமையாளர்கள் தங்களது நிறுவனத்தில் பயன்படுத்துவதன் மூலம் பெரும்பாலான முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 58

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | 12 | 13 | | |
| | 14 | 15 | | 16 | 17 |
| 18 | 19 | | 20 | 21 | 22 |
| | 23 | 24 | 25 | | 26 |

பெயர் ..............................................
வகுப்பு ..............................................
தொலைபேசி இல ..............................................
பாடசாலை பெயர் ..............................................
வதிவிட முகவரி ..............................................
..............................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) மிக மோசமான பேரழிவுகளை விளைவிக்கும் இயற்கை அனர்த்தம். முன்கூட்டியே அனுமானிக்க முடியாத இயற்கை அனர்த்தம். சமீபத்தில் துருக்கி, சிரியா போன்ற நாடுகளில் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்ட அனர்த்தம்.
(6) நாம் குடியிருக்கின்ற இல்லத்தை இப்பெயரிலும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(10) இனிப்புச்சுவை கொண்ட தித்திக்கும் உணவுப்பண்டம்.
(14) வினாவொன்றுக்குப் பதிலளிக்கும் போது 'இல்லை' என்று மறுப்புச் சொல்வது போல, அவ்வினாவுக்கு உடன்பாடான பதிலளிக்கும் போது பயன்படுத்தப்படுகின்ற சொல்.
(17) அபாயம் என்ற பொருள் தருகின்ற சொல். நாம் எக்காரியத்தில் ஈடுபடுகின்ற போதிலும், இதனை எதிர்கொண்டு மிகவும் அவதானமாக செயற்படுவது அவசியம். இல்லையேல் விபத்தில் அகப்பட நேரிடலாம்.
(21) உலகிலேயே மிகவேகமாக ஓடக்கூடிய மிருகம் இது. இலங்கைக் காடுகளிலும் வாழ்கின்றது. வேட்டையாடி இரை பிடிக்கும் இம்மிருகம் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தது. (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(1) வீடுகளில் செல்லப்பிராணியாக வளர்க்கப்படுகின்ற மிருகங்களில் இதுவுமொன்று. இம்மிருகத்தைக் கண்டால் எலிக்கு நடுக்கம் உண்டாகி விடும்.
(2) நன்னீர்நிலைகளில் வளருகின்ற தாவரம். செந்நிறமும், வெண்ணிறமுமாக அழகிய பூக்கள் பூக்கும் இத்தாவரம் இலக்கியங்களில் அதிகம் இடம்பிடித்துக் கொண்டுள்ளது.
(4) இந்த நூலில் இருந்து விலையுயர்ந்த துணிகள் நெய்யப்படுகின்றன. பூச்சிவகையொன்றின் குடம்பிகளின் கவசத்தில் இருந்து பெறப்படுகின்ற இவ்வகை நூலில் இருந்து நெய்யப்படுகின்ற சேலைகள் மிகவும் விலையுயர்ந்தவையாகும்.
(9) மனிதனுடன் மிகவும் நெருங்கி அந்நியோன்யமாக வாழும் இயல்பு கொண்ட இம்மிருகம் வீட்டைக் காவல் காக்கின்றது.
(14) இரவில் இரை தேடும் பறவை இது. இரவில் எங்காவது மரங்களில் அமர்ந்து கொண்டு ஒலி எழுப்பிக் கொண்டேயிருக்கும். இதன் கண்களும் ஒலியும் அச்சம் தருவன.
(17) கிராமத்துக்கு வளமும் செழிப்பும் தருகின்ற நன்னீர்நிலை இது. கிராமங்களை ஊடறுத்துச் சென்று கடலுடன் சங்கமமாகின்றது.
(18) உணவு உட்கொண்டு விட்டால் தணிந்து விடும்.
(20) ஒலிகளை உணருகின்ற புலனங்கம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 57

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. மாமா 03. பார் 05. மோதிரம்
09. படை 12. குழந்தை 21. புகை

**மேலிருந்து கீழ்**

02. மாம்பழம் 03. பாதி 04. மோர்
09. குடை 11. இலங்கை 15. கதை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 56

### பாராட்டு பெறுவோர்

**1. அத்வான்**
தி/ கிண்ணியா மத்திய ம.வித்தியாலயம்,
நகர சபை வீதி, கிண்ணியா.

**2. எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தரம் 07, அலிப் சர்வதேச பாடசாலை, தர்கா நகர்.
இல. 41B, 'ஸைனப் விலா' முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை

**3. கு. துவாரகன்**
தரம் 06, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சர்வோதய வீதி, பெரியநீலாவணை.

**4. எம்.எம்.எம். அஜ்மல்**
தரம் 06, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**5. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி

**6. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய

**8. எம்.எம்.எம். அஜ்மல்**
தரம் 06, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 58
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**பழைமை எனப்படுவது யாதெனின் யாதும் கிழமை
யைக் கீழ்ந்திடா நட்பு**

**தெளிவுரை :**
பழைமை என்று சொல்லப்படுவது எது என்று வினாவினால் அது பழகியவர் உரிமைப் பற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்.

# இவ்வார மழலை



S. Jennie
சரவணன், வெரோனிகா
நோர்வே

# தீர்வுக்கு வழி தேடுங்கள்

ஒரு ஊரில் ஒரு கோடீஸ்வரன் இருந்தான். அவனுக்குக் கடுமையான தலைவலி ஏற்பட்டது. பல ஊர்களிலிருந்து மிகப் பெரிய வைத்தியர்கள் வந்து பார்த்தும் மருந்துகள் சாப்பிட்டும் அந்தத் தலைவலி குணமாகவில்லை. ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு சன்னியாசி வந்தார்.

அவர் பணக்காரனை வந்து பார்த்தார். அவருக்கு ஏற்பட்ட தலைவலிக்கு கண்ணில் இருக்கும் ஒரு நோயே காரணம் என்று கூறினார். அந்தக் கண்ணை குணப்படுத்த ஒரே ஒரு வழி தான் உண்டு. நீங்கள் பச்சை நிறத்தைத் தவிர வேறெதையும் பார்க்கக் கூடாது என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.



பணக்காரன் முதலில் தன் வீட்டில் இருக்கும் எல்லாவற்றையும் பச்சையாக மாற்றினான். தலைவலி குணமாகி விட்டது. சன்னியாசி கூறியது சரி தான். உடம்பு சரியாகவே வீட்டை விட்டு வெளியே போகத் தொடங்கினான். வெளியே போனால், இயற்கை எல்லா வண்ணங்களையும் அள்ளித் தெளித்திருந்தது.

ஆனால், அவற்றைத் தான் அவன் பார்க்கக் கூடாதே! நிறையப் பச்சைப் பெயிண்டையும் பிரஷ்ஷையும் கொடுத்து சில ஆட்களை நியமித்தான். அவன் போகும் வழியில் இருக்கும் ஆடு, மாடு, மனிதர், குடிசை, வண்டி, மேசை, நாற்காலி எல்லாவற்றுக்கும் பச்சை நிறத்தை அடிப்பது அவர்களுடைய வேலை. அவர்களும் முதலாளி சொன்னபடியே செய்து வந்தார்கள்.

சில மாதம் கழித்து மீண்டும் சன்னியாசி அதே ஊருக்கு வந்தார். வேலையாட்கள் அவரைத் தடுத்து நிறுத்தி, அவர் மீதும் பச்சை வண்ணம் அடிக்கப் போனார்கள். சன்னியாசிக்கு ஆச்சரியமாகிவிட்டது. 'தங்கள் முதலாளியின் கட்டளை இது' என்று கூறினார்கள். சன்னியாசி அதற்கு, 'என்னை உங்கள் முதலாளியிடம் அழைத்துப் போங்கள்' என்றார். பணக்காரனுக்குத் தன் நோயைக் குணப்படுத்திய சன்னியாசியை மீண்டும் வந்ததைக் கண்டு ஒரே மகிழ்ச்சி. வணங்கி அவரை உபசரித்தான். 'இந்த ஊரில் எல்லாவற்றுக்கும் ஏன் பச்சைப் பெயிண்ட் அடிக்கிறீர்கள்?' என்று சன்னியாசி கேட்டார். "ஐயா, நீங்கள் சொன்னபடி தான் நான் செய்கிறேன்" என்றான். நான் என்ன சொன்னேன்? என்றார் சன்னியாசி.

பச்சை நிறத்தைத் தவிர வேறெதையும் நான் பார்க்கக் கூடாது என்று கூறினீர்களே ஐயா! என்றான். மகனே, நீ இலட்ச இலட்சமாகப் பணத்தைச் செலவழித்திருக்க வேண்டாம். ஒரு நூறு ரூபாய் கொடுத்து பச்சைக் கண்ணாடி வாங்கியிருந்தால், உன்னைச் சுற்றியிருக்கும் பொருட்களெல்லாம் பிழைத்திருக்கும். உன் பணமும் வீணாகி இருக்காது. உன்னால் இந்த உலகம் முழுவதும் பச்சைப் பெயிண்ட் அடிக்க முடியுமா? என்று கேட்டார் சன்னியாசி.

நம்மில் பலரும் இந்தக் கதையில் வரும் பணக்காரனைப் போலத்தான் இருக்கிறோம். நம்மைத் திருத்தி அமைத்துக் கொள்வதற்கு பதிலாக, உலகத்தை எப்படியாகவது மாற்றியமைத்து விடுவது என்று மிகவும் முயற்சிக்கிறோம். அது சாத்தியமில்லை. மிகுந்த காலமும் உழைப்பும் விரயமான பிறகு தான் 'திருந்த வேண்டியது நாம் தான் என்பதை உணர்கிறோம்.

## உலகை உலுக்கிய புகைப்படம்



உலகில் நடக்கும் அனைத்து போர்களிலும் அதிகமாக பாதிக்கப்படுது குழந்தைகளே. அது அவர்களின் வளர்ச்சியில் பெரிய தாக்கத்தை உருவாக்குகிறது. போர்களால் தன் குழந்தை பருவ காலத்தை இழந்தவர்கள் ஏராளம். கொசாவோ எல்லையில் முள்வேலி கம்பிகள் வழியாக அகதியாக மாறிய குடும்பத்தினரிடமிருந்து 2 வயது குழந்தையை தன் தாத்தா பாட்டியிடம் கையளிக்கும் காட்சி பலரை வருத்தத்தில் ஆழ்த்தியது.

## அழியாப்புகழ் கொண்ட நூல்கள்

இன்று இருக்கும் பழைமையான நூல்களில் யூத இனத்தில் உள்ள தொன்மையான நூல் "தோரா" (கி.மு 2000 ஆண்டுகள்) ஒன்று மட்டுமே உள்ளது. ஆனால், நம் தமிழ் மொழியில் மட்டுமே கி.மு. 1000 ஆண்டுகள் திருக்குறல் கி.மு. 2000 ஆண்டுகள் தொல்காப்பியம் கி.மு 3000 ஆண்டுகள் திருமந்திரம் கி.மு 5000 ஆண்டுகள் பரிபாடல் கி.மு. 7000 ஆண்டுகள் அகத்தியம் என்று அழியாப்புகழ் கொண்ட தொன்மையான நூல்கள் உள்ளன.



பாத்திமா அஹ்னா அஹமட்
தரம் 05, துந்துவை அஹதிய்யா பாடசாலை.

## பெரிது

தன் மானம் பெரிது
தாளாண்மை பெரிது
திருந்தி நடப்பது பெரிது
தீமை தவிர்ப்பது பெரிது
துணிந்து நடப்பது பெரிது
தூய்மை காப்பது பெரிது
தெளிவு பெறுவது பெரிது
தேசத்தை மதிப்பது பெரிது
தைரியம் சாலப் பெரிது
தொண்டாற்றுவது பெரிது
தோழமை கொள்வது பெரிது
தெளவல் பேணுதல் பெரிது

**தெளவல்: இளம் பருவம்,**
**தாளாண்மை: ஊக்கம், முயற்சி**

**சாரணா சையூம்...**

## அறிந்து கொள்வோம்

- இத்தாலி நாட்டின் புளோரன்ஸ் நகரத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் கலிலியோவின் நடுவிரலைக் காட்சி பொருளாக வைத்துள்ளனர்.
- ரெப் பாடகர் Tupac இறந்த பிறகு, அவரது சாம்பலை அவரது இசைக் குழுவினர் கஞ்சாவில் கலந்து புகைத்துள்ளனர்.
- கிரீஸ் நாட்டில் வீடியோ கேம்ஸ் விளையாட தடை.
- மலேசியாவில் மஞ்சள் ஆடை அணிவது சட்டப்படி குற்றம்.
- 1850ஆம் ஆண்டு வரை இடது, வலது சப்பாத்துக்கள் கிடையாது. இரண்டுமே ஒரே மாதியானவை.



அஹமட் அஹான்
தரம் 01, துந்துவை அஹதிய்யா பாடசாலை.




## வாரம் ஒரு பெரியார்

# உலகின் தலைசிறந்த அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்

ஸ்டீவன் வில்லியம் ஹாக்கிங் ஆங்கிலேய கோட்பாட்டு அறிவியலாளரும், அண்டவியலாளரும், நூலாசிரியரும் ஆவார். இவர் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் கோட்பாட்டு அண்டவியல் மையத்தின் இயக்குநராகப் பணியாற்றினார்.

ஹாக்கிங் 1942 ஜனவரி 8 ஆம் திகதி இங்கிலாந்து, ஒக்ஸ்போட் நகரில் பிராங்கு (1905–1986), இஸபெல் ஹாக்கிங் (1915–2013) ஆகியோருக்கு, கலீலியோ கலிலியின் 300வது நினைவு நாளில் பிறந்தார். ஹாக்கிங்கின் தாயார் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்.

இவர் உரோசர் பென்ரோசுடன் இணைந்து பொதுச் சார்புக் கோட்பாட்டில் புவியீர்ப்பு அருநிலைத் தேற்றங்களை நிறுவியமை, ஹாக்கிங் கதிரியக்கம் என அழைக்கப்படும் கருந்துளைகளின் கதிர்வீச்சு உமிழ்தலை எதிர்வுகூறியமை போன்ற அறிவியல் ஆய்வுகளுக்காகப் பெரிதும் அறியப்படுகிறார்.

இவரே முதன் முதலில் அண்டவியலுக்கான கோட்பாட்டை உருவாக்கி, பொதுச் சார்புக் கோட்பாடு, குவாண்டம் இயங்கியல் ஆகியவற்றின் மூலம் விளங்கப்படுத்தினார். குவாண்டம் இயங்கியலின் பல உலகங்களுக்கான விளக்கத்திற்குத் தீவிர ஆதரவாளராக விளங்கினார்.



1979 முதல் 2009 வரை கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் கணிதவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் தான் உருவாக்கிய கோட்பாடுகளைப் பற்றியும், அண்டவியல் தொடர்பிலும் பிரபலமான அறிவியல் கட்டுரைகளை எழுதிப் புகழ் பெற்றார்.

இவரது காலத்தில் ஒரு வரலாற்றுச் சுருக்கம் என்ற புகழ்பெற்ற கட்டுரைத் தொடர் இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் சண்டே டைம்ஸ் இதழில் 237 வாரங்களாக வெளிவந்து சாதனை புரிந்தது. சாதாரண மக்களும் வாசித்துப் பயனடையும் வகையில் இலகுவான மொழியில், அறிவியற் சமன்பாடுகளைத் தவிர்த்து எழுதப்பட்ட இவரது அறிவியல் நூல்கள் பலரையும் கவர்ந்தன.

21 வயதிலேயே, முதலாவது திருமணத்துக்கு முன்னர் தசையூட்டமற்ற பக்க மரபு நோய் என அழைக்கப்படும் நரம்பணு நோயால் தாக்குண்டார்.

இக் குணப்படுத்த முடியாத நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, படிப்படியாகக் கை, கால் முதலிய உடலியக்கங்களும் பாதிக்கப்பட்டு, பேச்சையும் இழந்த நிலையில், கணினி ஊடாக பேச்சுத் தொகுப்பு மூலம் மற்றவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் கட்டாயத்துக்குள்ளான இவர், இயற்பியல் ஆராய்ச்சிகளிலும், எழுத்துத் துறையிலும், பொதுவாழ்விலும் மிகவும் ஈடுபாடு உள்ளவராகவே இருந்தார். இவர் 2018 மார்ச் 14ஆம் திகதி தனது 76வது அகவையில் காலமானார்.

அமெரிக்காவில் உள்ள அனென்பெர்க் அறக்கட்டளை இயற்பியல் கணிதத்தை மாணவர்களுக்கு எளிய நடையில் புதிய கோணத்தில் வடிவமைப்பவர்களுக்கு 6 மில்லியன் டொலர் பரிசு என 1986இல் அறிவித்தது. இந்தச் சவாலை ஏற்று, இயற்பியல் அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் அரை மணி நேரத்திற்கு ஒரு காட்சி விளக்கம் வீதம் 26 மணி நேரம் ஓடக் கூடிய 'காலம் ஒரு வரலாற்றுச் சுருக்கம்' என்ற பாடத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்துப் பரிசு பெற்றார். இந்தச் சிறந்த படைப்பு உலகத் தமிழ் மொழி அறக்கட்டளையால் 2000 ஆண்டு ஒரு கோடி ரூபாய் செலவில் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது.

# விளையாட்டு

## இலங்கைக்கு மீண்டுமொரு தொடர் தோல்வி





நியூசிலாந்துடனான மூன்றாவது மற்றும் கடைசி டி20 போட்டியிலும் 4 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்த இலங்கை அணி டி20 தொடரையும் 1–2 என இழந்தது.

குயீன்ஸ்டவுனில் நேற்று (08) நடந்த பரபரப்பான போட்டியில் இலங்கை அணி கடைசி ஓவர் வரை போராடியபோதும் நியூசிலாந்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் போனது.

183 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய நியூசிலாந்து அணி கடைசி ஓவருக்கு 10 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டது. லஹிரு குமார வீசிய கடைசி ஓவரின் முதல் பந்துக்கே மார்க் சப்மன் சிக்ஸர் விளாசியபோது நியூசிலாந்தின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது.

என்றாலும் அடுத்த மூன்று பந்துகளில் மூன்று விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டபோது ஆட்டம் இலங்கை பக்கம் திசை திரும்பியது. என்றாலும் கடைசி மூன்று பந்துகளுக்கும் மூன்று ஓட்டங்களையே பெற வேண்டி ஏற்பட்டபோது நியூசிலாந்து ஒரு பந்தை மிச்சம் வைத்து இலகுவாக இலக்கை எட்ட முடிந்தது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணிக்கு ஆரம்ப வீரர் குசல் மெண்டிஸ் கைகொடுத்தார். 48 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 6 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் 73 ஓட்டங்களை விளாசினார்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அணிக்குத் திரும்பி இருக்கும் குசல் பெரேரா தொடர்ந்து சோபித்து வருகிறார். இந்தப் போட்டியிலும் அவர் 21 பந்துகளில் 33 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் இலங்கை அணி 20 ஓவர்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்று எதிரணிக்கு சவாலான வெற்றி இலக்கொன்றை நிர்ணயிக்க முடிந்தது.

எனினும் பதிலெடுத்தாடிய நியூசிலாந்து அணியின் ஆரம்ப வீரர் டிம் செய்பர்ட் இலங்கையின் எதிர்பார்ப்பை முழுமையாகச் சிதறடித்தார். 48 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 20 பௌண்டரிகள் 3 சிக்ஸர்களுடன் 88 ஓட்டங்களை பெற்றதன் மூலம் நியூசிலாந்து அணியின் வெற்றி இலகுவானது.

இதன்போது அணித்தலைவர் டொம் லதமுடன் சேர்ந்து செய்பர்ட் 2 ஆவது விக்கெட்டுக்கு 83 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். லதம் 23 பந்துகளில் 31 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கை பந்துவீச்சாளர்களால் எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுக்க முடியாமல் போனது. குறிப்பாக முன்னணி சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க தனது நான்கு ஓவர்களுக்கும் 41 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டை கூட வீழ்த்தவில்லை.

இதன்படி இலங்கை அணியின் நியூசிலாந்து சுற்றுப்பயணம் பெரும் ஏமாற்றத்துடன் முடிவுக்கு வந்துள்ளது. ஒட்டுமொத்தத் தொடரிலும் இலங்கை அணியால் ஒரே ஒரு டி20 போட்டியிலேயே வெல்ல முடிந்திருக்கிறது.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் எதிர்பார்ப்புடன் டெஸ்ட் தொடரில் ஆடிய இலங்கை அணி அந்தத் தொடரை 0–2 என இழந்தது. பின்னர் ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு நேரடித் தகுதிபெற தீர்க்கமாக இருந்த மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரையும் 0–2 என முழுமையாக இழந்தது.

ஒப்பீட்டளவில் இலங்கை டி20 அணி நன்றாக ஆடியபோதும் அது தொடர் வெற்றி ஒன்றை பெறுவதற்கு போதுமாக இல்லை. முதல் டி20 போட்டியில் சுப்பர் ஓவர் வரை போராடி வெற்றியீட்டிய இலங்கை இரண்டாவது போட்டியில் மோசமான தோல்வியை சந்தித்தது.

நியூசிலாந்து ஆடுகளங்களை சரிவர கையாளாத இலங்கை அணி அதற்கு ஏற்ப பிடிகொடுத்து ஆடவும் தவறியது. இதனால் எந்த வீரரும் குறிப்பிடும்படியான ஆட்டத்தை வெளியிடவில்லை. குறிப்பாக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் கேன் வில்லியம்சன் உட்பட நியூசிலாந்து வீரர்கள் பலரும் பங்கேற்காது ஐ.பி.எல் தொடரில் ஆடச் சென்ற நிலையில் அந்த பலவீனத்தையும் தனக்கு சாதகமாக்கிக் கொள்ள இலங்கை தவறியது.

இலங்கை ஒருநாள் அணியில் பல சீர்திருத்தங்கள் செய்ய வேண்டி இருப்பது இந்தத் தொடரில் உறுதியாகி இருக்கிறது. துடுப்பாட்ட வரிசையாகட்டும் பந்துவீச்சாகட்டும் எந்த வகையிலும் எதிரணிக்கு சவாலாக இருக்கவில்லை.

இந்த சூழலில் வரும் ஜூன், ஜூலை மாதங்களில் சிம்பாப்வேயில் நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் இலங்கை அணி ஆட வேண்டி ஏற்பட்டுள்ளது. அதற்கு பொருத்தமான அணியை தேர்வு செய்யும் பெரும் சவால் எதிரே உள்ளது. இல்லாவிட்டால் வரலாற்றில் முதல் முறையாக ஒருநாள் உலகக் கிண்ணத்தில் ஆடும் வாய்ப்பே பறிபோய்விடும்.

எனவே, நியூசிலாந்து சுற்றுப்பயணம் என்பது இலங்கை அணிக்கு சிக்கல்களை அதிகரித்திருக்கிறது. என்றாலும் தவறுகளை சரிசெய்வதற்கான வாய்ப்பாக இதனை பயன்படுத்திக் கொண்டாலே எதிர்காலம் சாதகமாக இருக்கும்.

## 'விசாரணை அறிக்கை' திருப்பம் தருமா?



இலங்கை கால்பந்து சம்மேளனத்தில் ஊழல் விவகாரம் என்பது ஆரம்பம், முடிவு தெரியாத ஒரு பெரும் குழப்பம். அவ்வப்போது ஆளுக்கு ஆள் குற்றச்சாட்டுகளை சுமத்துவதும், அதற்கு பதில் அளிப்பதுமே அண்மைய வரலாறாக மாறிவிட்டது.

என்றாலும் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்த விசாரணைக் குழு ஒரு மாதத்திற்குள் வெளியிட்டிருக்கும் அறிக்கை தற்போது அம்பலமாகி இருக்கிறது. சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை. துருவிப்பார்த்தால் இலங்கை கால்பந்து விளையாட்டையே அழிவுக்கு இட்டுச் சென்றிருக்கிறார்கள்.

உயர் நீதிமன்ற நீதியரசர் குசலா சரோஜினி வீரவர்தன தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழுவே விசாரணையை விரைவாக நடத்தியது. கடைசியில் 249 பக்கங்கள் கொண்ட அறிக்கை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் அடங்கிய 1100 பக்கங்களுக்கு மேற்பட்ட இடைக்கால அறிக்கையும் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. பக்கங்களை பார்க்கும்போது பிரச்சினையும் பெரிதாக இருக்கும்போல்.

கடந்த பத்து ஆண்டுகளில் இடம்பெற்றதாகக் கூறும் ஊழல் விவகாரங்களே இந்த அறிக்கையில் அலசப்பட்டிருக்கிறது. இதன் கால அளவை குறிப்பிடுவதென்றால் 2012 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை. அதாவது இந்தக் காலப் பகுதியில் இடம்பெற்ற ஊழல் 30க்கும் அதிகம் என்கிறார் அமைச்சர்.

"இந்த அறிக்கையின்படி இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் விசாரணை மேற்கொள்ளப்பட்ட காலத்தில் இடம்பெற்ற 30க்கும் அதிகமான ஊழல்கள் மற்றும் மோசடிகள் பற்றி கூறப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒருவருக்கும் அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் இடம் விடமாட்டேன்.

பிஃபாவிடமிருந்து இலங்கைக்கு இந்தக் காலப்பகுதியில் 10 மில்லியன் டொலருக்கு மேல் (சுமார் 320 கோடி ரூபா) கிடைத்திருக்கிறது. ஆனால் நாட்டின் விளையாட்டுக்கும், வீரர்களுக்கும் அதில் செலவிடப்பட்டிருப்பது நூற்றுக்கு இரண்டு வீதம் அளவான பணம் மாத்திரம் தான்.

இதைப் பற்றி தேடும்போது சிலர் என்னை அமைச்சர் பதவியில் இருந்து துரத்த முயல்கிறார்கள். என்னை துரத்த முயன்றாலும் அவ்வாறு துரத்தப்படும் நாள் வரையாவது நான் இந்த ஊழல் எதிர்ப்பு செயற்பாடுகளை கைவிடப்போவதில்லை" என்கிறார் ரொஷான் ரணசிங்க.



இலங்கை கால்பந்தில் ஊழல் நிகழ்வதாக காலாகாலமாக கூறப்பட்டு வந்தபோதும் அது பற்றி விசாரணை அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பது அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஓர் அங்கீகாரத்தை பெற்றுக்கொடுப்பதாக அமைகிறது. சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் சாதாரணப்பட்டதல்ல. கால்பந்து சம்மேளனத்தில் கிடைத்த பணத்தில் இரண்டு வீதத்தை மாத்திரமே செலவிட்டதாகக் கூறுவது நிச்சயமாக சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இந்தக் குற்றச்சாட்டுகளில் முக்கியமானது 2013 ஆம் ஆண்டு மலேசிய சுற்றுப்பயணம் ஒன்றுக்கு 100 மில்லியன் ரூபா செலவிட்டிருப்பதாகக் கூறப்பட்டிருப்பதாகும். 250 ரூபாவுக்கு வாங்க முடியுமான கேக் துண்டுக்கு 3000, 4000 ரூபா செலவிட்டிருப்பதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அறிக்கை முழுவதும் இப்படி ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. என்றாலும் இவைகளை குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டவை என்று குறிப்பிட முடியாது.

குறிப்பாக இந்த 100 மில்லியன் ரூபா கதை பெரும் பரபரப்பை ஏற்படுத்த அப்போது இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவராக இருந்த ரஞ்சித் ரொட்ரிகோ பதிலளித்திருக்கிறார்.



2013 இல் கணக்காய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட செலவின்படி 2013 நவம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 3 ஆம் திகதி வரை மலேசியாவில் இடம்பெற்ற ஆசிய கால்பந்து சம்மேளன நிர்வாகக் குழு கூட்டத்திற்காக இந்நாட்டின் லீக் பிரதிநிதிகள் 45 பேரும் கால்பந்து சம்மேளன நிறைவேற்று அதிகாரிகள் சிலரும் பங்கேற்றனர். இவர்களை அனுப்புவதற்கு பதினாறு இலட்சம் ரூபா வரையான (1604992) தொகையே செலவாகி இருக்கிறது என்கிறார் ரொட்ரிகோ.

இதில் 100 மில்லியன் கணக்கு எங்கிருந்து வந்தது என்பது புதிராக உள்ளது. இதில் எந்தக் கணக்கு சரி என்பதை கண்டறிய ஒரு விசாரணை அறிக்கை தேவைப்படும்போல்.

அடிப்படையில் இந்த விசாரணை அறிக்கை வந்திருக்கும் காலம் முக்கியமானது. சர்வதேச கால்பந்து சம்மேளம் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு தடை விதித்திருக்கிறது. கால்பந்து நிர்வாகத்தில் மூன்றாம் தரப்பின் தலையீடு இருப்பதாகக் கூறிய பிஃபா இந்த தடையை விதித்தது.

ஆனால் முன்னாள் கால்பந்து நிர்வாகம் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தை தவறாக வழி நடத்தியே இலங்கைக்கு இந்தத் தடையை பெற்றுக்கொடுத்திருப்பதாக விளையாட்டுத் துறை அமைச்சர் குற்றம்சாட்டுகிறார்.

எனவே, இந்த ஊழல் அறிக்கையை சர்வதேச கால்பந்து சம்மேளனத்திற்கு வழங்கப்போவதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, இந்த அறிக்கையை பார்த்தால் இலங்கை கால்பந்தில் நிலைமை என்றவென்று பிஃபாவுக்குத் தெரிந்துவிடும் என்பது அவரது நம்பிக்கை.

எப்படி இருந்தபோதும் பிஃபாவின் தடை என்பது அறிக்கைகளுக்கு அப்பால் இலங்கை கால்பந்தை மோசமாகப் பாதித்திருக்கிறது என்பது தெட்டத் தெளிவானது.

கடந்த ஜனவரி 21 ஆம் திகதி பிஃபா விதித்த தடையை அடுத்து இலங்கை கால்பந்து விளையாட்டு ஆகட்டும் அதன் நிர்வாகச் செயற்பாடு ஆகட்டும் அனைத்துமே ஸ்தம்பித்துவிட்டது.

ஜனவரி 14 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல் மூலம் நியமிக்கப்பட்ட இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் நிர்வாக சபை செயலற்றுப் போனது. அதன் தலைவர் தவிர பிரதித் தலைவர்கள் இருவர் மற்றும் பிரதிச் செயலாளர் ஒருவர் மாத்திரமே அதில் எஞ்சினர். மற்றையவர்கள் ராஜினாமா கடிதங்களை கொடுக்க பெரும் சிக்கலாகிப் போனது.

வேறு வழியில்லாதபோது விளையாட்டுத் துறை அமைச்சர் இலங்கை கால்பந்து சம்மேளனத்தையே இடைநிறுத்தினார். விளையாட்டுச் சட்டத்தின் மூலம் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் கீழ் இந்த நடவடிக்கையை கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி அவர் எடுத்தார்.

இதனால் கால்பந்து சம்மேளனத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்புக்கு வந்திருக்கிறார்.

இந்த நகர்வுகள் நிலைமையை மேலும் சிக்கலாக்குவதாகவே உள்ளது. விசாரணை அறிக்கையாகட்டும், கால்பந்து நிர்வாகத்துக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பமாகட்டும், தற்போது கால்பந்து நிர்வாகத்தையே இடைநிறுத்தியதாகட்டும் அனைத்தும் நிலைமையை மேலும் குழப்புவதாகவே இருக்கிறது.

இப்போதைக்கு இலங்கை கால்பந்துக்கு தேவை பிஃபாவின் தடையை உடனடியாக நீக்குவதற்கான ஆரோக்கியமான நகர்வுகள். அதற்கு இலங்கை கால்பந்து நிர்வாகம் சுயாதீனமாக இயங்குவதை உலகுக்கு நிரூபிக்க வேண்டும்.

மறுபக்கம் ஊழலை ஒழிப்பதற்கான நகர்வுகள் அவசியம் என்றபோதும் அது சர்வதேச கால்பந்து சம்மேளனத்துடன் ஒன்றிப்போன செயலாக இருப்பதே நல்லது.

**எஸ்.பிர்தெளஸ்...**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 ஏப்ரல் 9 ஞாயிற்றுக்கிழமை
வாசகர்களுக்கு
தமிழ்–சிங்கள
புத்தாண்டு வாழ்த்துகள்



# வதை முகாம் கைதியின் கதை




கனொன் மருத்துவரிடம் போக எப்போதுமே தயக்கம் காட்டுவார். உறவினர் கேட்டால் களைப்பாக இருக்கிறது என்று பொய்யாக ஒரு காரணத்தை வைத்திருப்பார். இந்தக் கதையை 64 ஆண்டுகளாகச் சொல்லிவந்தார்.

ஆனால் 2009 நவம்பரில் அவருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. இம்முறை மருத்துவரைத் தவிர்க்க முடியாமல் போனது. இஸ்ரேலின் டெல் அவிவுக்கு அருகில் இருக்கும் பெடா டிக்வா மருத்துவமனைக்கே அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

மருத்துவமனைக்கு சென்ற விரைவிலேயே கனொனுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. நல்லவேளை மருத்துவர்கள் இருந்ததால் அவரது உயிர் காப்பாற்றப்பட்டது. அவருக்கு வெற்றிகரமாக சத்திர சிசிச்சை செய்யப்பட்டது. அப்போதுதான் அவருக்கு மருத்துவர்கள் மீது உண்மையில் நம்பிக்கை பிறந்தது.

“நான் இரண்டாவது முறையாக மரணத்தை ஏமாற்றிவிட்டேன். ஆனால் கடந்த தடவை போலன்றி இம்முறை எனக்கு மருத்துவர்கள் உதவினர்” என்று கனொன் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் கனொனுக்கு மருத்துவர்கள் பற்றி இருந்தது மிகப் பயங்கரமான அனுபவம். அதனாலேயே அவர் மருத்துவர்களை பார்க்கப் பயந்தார்.

வடக்கு கிரேக்கத்தில் உள்ள ஆர்டா சிறு நகரில் வளர்ந்தவர் யிட்சக் கனொன். 1944 மார்ச் 25ஆம் திகதி அவரது ஊரை நாஜிப் படை சுற்றி வளைத்தது. யூதரான 20 வயது கனொன் மற்றும் ஊர் மக்கள் போலந்தில் இருந்து ஒஸ்விட்ஸ் வதை முகாமுக்கு அனுப்பப்பட்டார்கள்.

போகும் வழியிலேயே கனொனின் தந்தை இறந்துவிட்டார். முகாமுக்கு சென்றபோது அனைவரும் தேர்வு ஒன்றுக்கு முகம்கொடுத்தார்கள். முகாமில் இருக்கும் மருத்துவர்களே அந்தத் தேர்வை செய்வார்கள்.

தேர்வில் உடல் பலம் பெற்றவர்கள் தொழிலாளர்களாக அனுப்பப்படுவார்கள். உடல் தகுதி அற்றவர்கள் பெரும்பாலும் குளியலறைக்கு அனுப்பப்படுவார்கள். உண்மையில் அது விஷ வாயுக் கூடம்.

வந்தவர்களில் கிட்டத்தட்ட எழுபத்தி ஐந்து வீதமான கைதிகள் சில மணி நேரத்திற்குள்ளேயே விஷ வாயு செலுத்தப்பட்டார்கள். அதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள், பெண்கள் மற்றும் வயதானவர்கள். அவர்கள் கர்ப்பமுற்றவர்களாக இருந்தாலும் சரியே.

இங்கு மூன்றாவது ஒரு வேலைக்காகவும் அந்த நாஜி மருத்துவர்கள் ஆட்களைத் தெரிவுசெய்தார்கள்.



அது மருத்துவ சோதனைக்கு பயன்படுத்தும் நோக்கிலாகும். அதாவது விலங்குகளுக்கு பதில் மனிதர்களை நேரடியாகப் பயன்படுத்துவதுதான் நோக்கம்.

கனொனின் தாய் மற்றும் ஐந்து சகோதரர்கள் விஷ வாயு கூடத்திற்கு அனுப்பப்பட்டார்கள். கனொன் மனித சோதனைக்கு தேர்வு செய்யப்பட்டார். அவரது இடது முன் கையில் 182558 என்ற இலக்கம் பச்சை குத்தப்பட்டது. அதுதான் அவரது அடையாளம்.

அங்கு அவர் நாஜிக்களின் பிரபல மருத்துவர் ஜோசெப் மெங்கலேவை சந்தித்தார். இந்த மருத்துவர் பயங்கரமானவர். இவருக்கு “மரண தேவதை” என்று பெயருண்டு. இரட்டை குழந்தைகள் தொடர்பான பரிசோதனைகள் மூலம் தூய்மையான ஆரிய இனத்தை உருவாக்க முயன்றவர் என பிரபலம் பெற்றவர். இவர்தான் யாரை விஷ வாயு அறைக்கு அனுப்புவது என்று தீர்மானிப்பார்.

மருத்துவ பரிசோதனைக்கு தெரிவான கனொன் அப்போதுதான் அந்தப் பயங்கர அனுபவத்தை சந்தித்தார். மேசை ஒன்றில் படுக்க வைத்து கட்டபட்டு அவரின் சிறுநீரகம் ஒன்று அகற்றப்பட்டது. அப்போது கனொனுக்கு மயக்க மருந்தோ அல்லது வலி தெரியாமல் இருப்பதற்கு கொடுக்கப்படும் மருந்தோ வழங்கப்படவில்லை.

முழுமையாக உணர்ச்சியுடன் இருக்கும்போது அவருக்கு தெரியத் தெரியவே அவரது சிறுநீரகம் அகற்றப்பட்டது. அந்த வலி மற்றும் வேதனையை அவர் வாழ்நாள் முழுவதும் உணர்ந்தார். தனது உடலில் இருந்து அகற்றப்பட்ட சிறுநீரகத்தை நேரடியாகப் பார்த்தார்.

“அவனது கையில் சிறுநீரகம் துடிப்பதைப் பார்த்து பைத்தியக்காரன் போல அழுதேன்” என்று அந்த அனுபவத்தை விபரிக்கிறார் கனொன்.

சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அவர் தையல் செய்யும் அறைக்கு நடந்து சென்றார். இரத்தம் தொய்ந்த உடல் கழுவப்பட்டது. அத்தோடு கனொன் மீதான மருத்துவ பரிசோதனை முடியவில்லை. சத்திர சிகிச்சையில் இருந்து உயிர் தப்பிய அவர் கடுங் குளிரான நீரில் குளியல் தொட்டியில் இரவு முழுவதும் வைக்கப்பட்டார். அவரது நுரையீரல் செயற்பாட்டை அவதானிக்கவே இவ்வாறு செய்யப்பட்டது.

ஒஸ்விட்ஸ் மருத்துவமனையில் ஏழு மாதங்களை கழித்த கனொன், தொடர்ந்து மருத்துவ சோதனைக்கு தகுதி இல்லாதவராக அறிவிக்கப்பட்டார். எனவே அவர் விஷ வாயு கூடத்திற்கு அனுப்பப்பட்டார்.

அந்த விஷ வாயு கூடத்தில் ஒரு நேரத்தில் 200 பேருக்கே இடம் இருந்தது. ஆனால் கனொன் 201 அவது ஆளாக அனுப்பப்பட்டது அவரது அதிர்ஷ்டம்.

1944 நவம்பர் 2 ஆம் திகதி இந்தக் கூட்டுப் படுகொலையை நாஜிக்கள் நிறுத்தினார்கள். சோவியட் படை முன்னேறி வருவதைப் பார்த்த நாஜிக்கள் 1945 ஜனவரியில் அந்த விஷ வாயு கூடத்தை தகர்த்துவிட்டு தப்பி ஓட ஆரம்பித்தார்கள். 1945 ஜனவரி 27 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட 7,000 கைதிகளில் ஒருவராக யிட்சக் கனொனும் இருந்தார்.

மருத்துவ பயங்கரங்களைச் செய்த மருத்துவர் ஜோசெப் மெங்கலே தண்டனை இன்றி தப்பிச் சென்றார். அவர் தென் அமெரிக்காவுக்கு தப்பி ஓடினார். 1979 இல் நீச்சலில் ஈடுபட்டிருந்தபோது பக்கவாதம் தாக்கி உயிரிழந்தார்.

கனொன் மற்றும் அவரது இரு சகோதரர்கள் இஸ்ரேலுக்கு குடிபெயர்ந்தார்கள். கனொனுக்கு மருத்துவர்கள் மீதான பயம் போக அடுத்த ஆறு தசாப்தங்கள் வரை காத்திருக்க வேண்டி இருந்தது.







தமிழ்ப் பிரியன்


ஸ்ரீ அமிர்தன்
ஸ்ரீ காந் - சரண்யா
நாவலப்பிட்டி


தியானா ஹிதைஷி
விஜித்த இலங்கன் திலக்க
லசந்தினி எலகஷான்டர்
கொட்டகலை

# செல்ஃபி உலா


Balan


வேலோடுமலையில் புதனன்று களைகட்டிய தீர்த்தோற்சவத்தின் போது ராஜன்... வி.ரி.சகாதேவராஜா காரைதீவு குறூப் நிருபர்


Cool deva


Lorance Selvanayagam


Anandarajah Abi


yadhusha Ravithiyagarajah


ajay UAE







# புதுச் சுவை படைத்த வலம்புரி கவிதா வட்டத்தின் 86 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 86 ஆவது கவியரங்கு கடந்த நோன்மதி தினத்தன்று கொழும்பு 13, சங்கமித்த மாவத்தை, ரோயல் அகடெமியில் இடம்பெற்றது.

ரோயல் அகடெமி பணிப்பாளர் ஏ. எம். சந்திரசேகர் சிறப்பதிதியாக கலந்து கொண்டார்.

அவர் தனதுரையில் "உங்கள் கவியரங்க நிகழ்வின் கவிதைகளைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். எத்தனை எத்தனை ஆற்றலுள்ள வரிகள். தமிழ் மொழியின் சிறப்பையும் அவை பேசின. மாணவர்களோடு பழகி வரும் நாம் மாணவர்களிடையே மொழியறிவு குன்றியுள்ளதை அவதானிக்கிறோம்.

கணிதம் போன்ற பாடங்களைக் கற்பதற்கும் மொழியறிவு மிகவும் அவசியமாகும். இது போன்ற கவியரங்குகள் மாணவர்களுக்கு தமிழ் மொழியின் மேல் ஆர்வத்தை ஏற்படுத்தும். மாணவர்களையும் உங்கள் கவியரங்குகளில் பார்வையாளர்களாக இணைத்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கிறேன்" என்றார். வகவத்தலைவர் என் நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்திய நிகழ்வுக்கு சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி முன்னிலை வகித்தார். வரவேற்புரையை செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வழங்க, நன்றியுரையை பொருளாளர் ஈழ கணேஷ் வழங்கினார். அண்மையில் எம்மை விட்டும் மறைந்த ஆசுகவி அன்புடன் அவர்களும் பிரபல மொழிபெயர்ப்பாளர் சரோஜினி அருணாச்சலம் அவர்களும் நினைவு கூரப்பட்டனர்.

வலம்புரி கவிதா வட்டத்திற்கு இரண்டு ஒலிப்பெருக்கிகளை கவிஞர்கள் ராஜா நித்திலன் சிந்தனைப் பிரியன் முஸம்மில் ஆகியோர் அன்பளிப்புச் செய்தனர்.

86 ஆவது கவியரங்கம் கவிஞர் கலாபூஷணம் வதிரி சி. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. கவிஞர்கள் வாழைத்தோட்டம் எம். வஸீர், வை. சுசீலா, மலாய்கவி டிவாங்ஸோ, வாசுகி பி. வாசு, வெளிமடை ஜஹாங்கீர், பி. தங்கவேலு ஆசிரியர், மஸீதா அன்சார், ராஜா நித்திலன், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், தேஜஸ்வினி பிரணவன், ரவூப் ஹஸீர், சி. அழகேஸ்வரன், சிந்தனைப்பிரியன் முஸம்மில், கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ், தாமரைச் செல்வி, கிண்ணியா அமீர் அலி, சுபாஷினி பிரணவன், பிறைக்கவி முஸம்மில், எஸ். தனபாலன், ஈழத்துநூன் எம். ஏ. எம். நிலாம் ஆகியோர் கவிதை பாடினர்.

தமிழ்த் தென்றல் அலி அக்பர், மணவை அசோகன், யாழ் அஸீம், அன்பழகன், கே. சிவா பிரதீபன் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.



# நீண்ட இடைவெளிக்குப்பின் மீண்டும் ஒரு ஜாதகப் பொருத்தம்













இலங்கையில் நீண்ட இடைவெளிக்குப்பின் தமிழ் மேடை நாடகமொன்று மேடையேறியுள்ளது. இந்த நாடகம் கடந்த 31ஆம் திகதி பிற்பகல் 3.30, மாலை 6.30 மணிக்கு கொழும்பு மருதானை டவர் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

இயக்குனரும் இசையமைப்பாளருமான டொக்டர் ஷெல்டன் மிதுன்குலசூரியவின் இதே நாடகம் சிங்கள மொழியில் 29, 30ஆம் திகதிகளில் இதே மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

ஜாதகப் பொருத்தம் என்ற இந்த நாடகத்தில் ஆர். ராஜசேகரன், ஹெலன்குமாரி, சாந்தி பானுஷா, மல்லிகா கீர்த்தி, சுதாகர், ஆர். கணேஸ், ஆர். சசிகுமார், பொன். பத்மநாதன், எஸ். சரவணா, சுதாகர், வீரபுஷ்பநாதன், ஐ ஜே ஜேசுதாசன், கே. ஈஸ்வரலிங்கம் ஆகியோர் நடித்தனர்.


சோமு: அந்தப் புதுப்படம் ஆறு மணி நேரம் ஓடுதா .. .. ஏன் ? ராமு : அதுவா .. .. டைரக்டர் ஒவ்வொரு நடிகரா போய் கதை சொன்னது, தயாரிப் பாளரைப் பிடிச்சது, அப்புறம் ஸ்டோரி டிஸ்கஷன் எல்லாத்தையும் காட்ட றாங்களாம் .. ..
ராம் : நீ சினிமா டைரக்டராவதற்கு முன்னே, ஊர்லே ரைஸ் மில் வெச்சு இருந்தது பத்திரிகைக்காரங்களுக்குத் தெரிஞ்சிடுச்சு போலிருக்கு சோதி: இப்ப என்ன ஆச்சு ... ? ராமு : எப்பவுமே அரைச்சமாவையே அரைச்சுண்டு இருக்கார்னு விமர்ச னம் எழுதுறாங்களே
ராஜா: என்னங்க .. உங்க படத்துல ஸீனுக்கு ஸீன் அடிதடியா இருக்கே ? ராமச்சந்திரன் : பின்னே என்னங்க .. .. பத்தாயிரம் அடில எடுத்த படம்னு நாங்கதான் தெளிவா சொல்லிட்டோமே
ரவி: யோசனையே இல்லாம மெகா சீரியல் மாதிரி படம் எடுத்துட்டோம் ராமன்: அப்புறம்.. என்ன பண்ணுனீங்க..? ரவி: பேசாம, நாலு இண்டர்வெல் விடறதா முடிவு பண்ணிட்டோம்..
காதலி : ஒண்ணு நாம கல் யாணம் பண்ணிக்கணும்.. இல்லே தற்கொலை பண்ணிக்கணும்.. என்ன கோபால் சொல்றீங்க.. ? காதலன் : எப்படியும் நான் தப்பிக்கவே வழி இல்லையா கீதா..?
தோழி 1 : உன் வீட்டுக்காரர் காலையில கோலமெல்லாம் போடு றாராமே? தோழி 2 : உனக்கு அத யார் சொன்னா? தோழி 1 : என் வீட்டுக்காரர்தான், காலையில கோலம் போடும்போது பார்த்தாராம்.
மனைவி : ஏங்க மருந்து போத்தலைத் தட விக்கிட்டு இருக்கீங்க..? கணவன் : டாக்டர்தான் சொன்னார்.. கைவலிச்சா இதைத் தடவுங் கன்னு...!
மனைவி: நடிகருக்கும் மருத்துவருக்கும் என்ன ஒற்றுமை? கணவன்: தெரியலையேடா? மனைவி: இரண்டு பேருமே ஏதோ ஒரு தியேட்டர்ல யாரையாவது போட்டு அறுத்துகிட்டு இருப்பாங்க.
அம்மா : "அந்த சோனியா பொண் ணுக்கு உன்ன விட ஒரு வயசு அதிகம்டா" சர்தார் : " ஓ,... நான் அடுத்த வருசம் தானே கல்யாணம் செஞ்சுக்க போறேன்...நீ கவல படாத"
மனைவி: உண்மைக்கு எதிர்ப்பதம் என் னன்னு கேட்டா, பதில் சொல்லாம முழிக் கிறீங்களே.... ஏன் ? கணவன்: நீதானே பொய் சொல்லக் கூடாதுன்ன...
ஏஜமானி : இருபத்தநாலு மணி நேர நியூஸ் சானல் வரப்போகுதாம் .. .. வேலைக்காரன் : அதுக்காக என்னை வேலையை விட்டு நீக்கிவிடா தீங்கம்மா

# இலக்கியற் செயற்பாட்டாளர்களில் ஒருவராக திகழும் கவிஞர் மருதநிலா நியாஸ்

இலக்கிய மேம்பாட்டுக்காகவும் மானுட எழுச்சிக்காகவும் கவிதைகள் எழுதி வரும் இளங் கவிஞர் மருதநிலா நியாஸ் சமூகச் சிந்தனையும் கண்டிப்பு இல்லாத கருணை உள்ளமும் மனிதநேயமிக்க மென்மையுள்ளமும் சமூகம் அடையத்தக்க வகையில் எந்தவிதமான பிரதியுபகாரங்களையும் எதிர்பாராமல் மாசற்ற மனதோடு சமூகத்திற்காக சிந்தித்து எழுதுபவனே சிறந்த எழுத்தாளனாக முடியும் என வரலாறு சொல்கிறது. அந்த வகையில் சாய்ந்தமருதைச் சேர்ந்த அபூபக்கர் முஹம்மது நியாஸ் எனும் இயற்பெயருடைய மருதநிலா நியாஸ் என்பவர் கவிதைகள், கட்டுரைகள், ஆய்வுகள், விமர்சனம் என்பவற்றிக்கப்பால் இவர் தற்கால இலங்கை தென்கிழக்கு ஆய்வுமையத்தின் தலைவராக இருந்து இலக்கியற் செயற்பாட்டாளர்களில் ஒருவராக தனது காலை ஊன்றிப் பதித்து வருகிறார். இவர் தினசரிப் பத்திரிகைகள். இலக்கிய சஞ்சிகைகள் போன்றவற்றில் தனது இலக்கிய ஆக்கங்களை எழுதி வருபவர். வானொலி, தொலைக்காட்சிகளிலும் அதிகளவிலான கவியரங்கு மேடைகளிலும் பங்கேற்று தன் பெயரை பதிவு செய்தவர்.; இவர் தினகரன் செந்தூரம் பகுதிக்கு வழங்கிய செவ்வி.

**உங்கள் இலக்கிய ஆரம்பம் குறித்துக் கூறுவீர்களா?**

1990 களில் எழுத்துத்துறைக்குள் "இந்தநாள் நல்ல நாள்" எனும் கவிதையூடாக இலக்கியத்துறைக்குள் நுழைந்தேன். அந்த முதலாவது கவிதையே எனக்கு முதற்பரிசையும் பெற்றுக்கொடுத்தது. எனது முதலாவது நூலான "வேர்கள் அற்ற மனிதர்கள்" எனும் கவிதைத் தொகுதி 2009 ஆம் ஆண்டு புரவலர் புத்தகப் பூங்காவின் 17 ஆவது வெளியீடாக வெளிவந்தது. இக்கவிதை தொகுதியில் சமூகம் சார்ந்த கவிதைகளே அதிகமாகக் காணப்படுவதுடன் சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளை மனக்கண்முன்னே கொண்டுவரும் கவிதைகளாக அவை அமையப்பெற்றிருக்கின்றன. எனது இரண்டாவது நூலான 'வெப்புசாரம்' எனும் கவிதைத் தொகுதி இலங்கை தென்கிழக்கு ஆய்வமையத்தின் பன்னிரண்டாவது வெளியீடாக மிக விரைவில் வெளிவரவிருக்கிறது. எனது இக் கவிதைகள் சமூகத்தில் காணப்படுகின்ற துயரங்களை அரசியல் சித்து விளையாட்டுக்களை படம்பிடித்துக் காட்டுபவைகளாக இருக்கின்றன. இந்த வகையில் நோக்கும் போது எனது "கரைவலையோடு கரையும் வாழ்வு" கவிதைகள் மிக முக்கியமானது.

இன்றைய மீன்காசு அந்திக்குத்தான் கிடைக்கும் நாளைக்கு சோறாக்க அரிசி வாங்க காசிருக்கும் ஆனால் கறியாக்க கடல் மீன்தராது கறிச்சட்டி கௌட்டு கஞ்சுதான் காய்ச்ச வேண்டும். சோறும் கறியும் சகவாசம் கொண்டு எங்கள் வீட்டில் சுகவாசம் கொள்வது கரடி காணும் பிறையாகத்தான் காலமெல்லாம் கடக்கிறது. கரைவலை மீன்கறி ருசிபோல துளிகூட குடியில்லா எங்கள் வாழ்வு துளிர்க்க கிழக்கு வெளுத்து மீன்மடிவெடித்து பஞ்சம் தீரவேண்டும். நான் வெகு விரைவில் வெளியிட உள்ள கவிதைத் தொகுதியில் இக்கவி வரிகள் உள்ளன.





**இலக்கியச் செயற்பாடுகள் குறித்துக் கூறுவீர்களா?**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒவ்வொரு பிரதேச செயலக மட்டத்திலும் உருவாக்கப்பட்ட கலாசார அதிகார சபைகளில் சாய்ந்தமருது பிரதேச கலாசார அதிகார சபையின் செயலாளராக இருந்து பல்வேறு இலக்கிய நிகழ்வுகள், விழாக்கள் பாராட்டுவிழாக்கள், போட்டி நிகழ்ச்சிகளையும் நடாத்தியிருப்பதோடு. அம்பாறை மாவட்ட கலாசார அதிகார சபையில் நிருவாக சபையின் உறுப்பினராகவும் இருந்து பல்வேறு இலக்கியப்பணியினை செய்துள்ளேன். இலங்கை தென்கிழக்கு ஆய்வுமையத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டுவரை இருபத்தியொரு வருடங்கள் உப செயலாளராக கடமையாற்றி இலக்கியச் செயற்பாட்டிற்கு பெரும் பங்காற்றியதோடு தற்போது இவ்வமையத்தின் தலைவராகவும் இருந்து செயற்பட்டுவருகிறேன். இந்த வகையில் எனது இலக்கியச் செயற்பாட்டின்மூலம் தமிழ்மொழி வளர்ச்சிக்காய் அர்பணிப்புடனும் விடாமுயற்சியுடனும் பங்காற்றி வருகிறேன் என்பது குறிப்பிடத்தக்கது.

**நீங்கள் விசேடமாக கவியரங்க மேடைகளில் அதிகளவு பங்கேற்று வருகின்றீர்கள் அது குறித்து?**

தேசிய ரீதியிலும் பிரதேச ரீதியிலும் கவியரங்க மேடைகளில் கலந்துகொண்டிருப்பதோடு வானொலி, தொலைக்காட்சி, மற்றும் நவீன தொழினுட்பம் ஊடாகவும் பல்வேறு கவியரங்குகளில் பங்கு பற்றி வருகின்றேன் என்று குறிப்பிடலாம். இவர் 2021 ஆம் ஆண்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய சுதந்திர தினக் கவியரங்கில் பங்கேற்றதோடு அத்திணைக்களம் வெளியிட்ட கவியரங்க கவிதைத் தொகுப்பிலும் எனது கவிதை இடம்பெற்றிருக்கிறது.

**உங்களது அடைவுகள் பற்றி** ?

பல்வேறு இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி சான்றிதழ்கள் பெற்றிருப்பதோடு பின்வரும் விருதுகளையும் பெற்றிருக்கிறேன். 2016 இல் இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் இலக்கியப் பணியை கௌரவித்து வழங்கப்பட்ட கௌரவ விருது. 2010 இல் அகில இன நல்லுறவு ஒன்றியம்; கௌரவித்து வழங்கிய சாமசிறி தேசமான்ய விருது. 2017 இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய கலைஞர் சுவதம் விருது என பல குறிப்பிடலாம்.

**நீங்கள் அட்டாளைச் சேனை கல்வியல் கல்லூரியின் சிரேட்ட விரிவுரையாளர் என்ற வகையில் உங்களது கல்வித் தகைமை குறித்து?**

மருதநிலா நியாஸ் அட்டாளைச் சேனை தேசிய கல்விக் கல்லூரியில் சிரேட்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றேன். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான நான் அதே பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான பட்டப்பின் டிப்ளோமாப் பட்டம் பெற்றுள்ளதுடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்று இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஆசிரிய கல்வியியலில் முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளேன். மேலும் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாப் பட்டத்தினையும் பெற்று கல்வி தொடர்பான ஆய்வு ஒன்றிற்காக ஜப்பான் நாட்டுக்குப் புலமைப்பரிசில் பெற்றுச் சென்று எனது ஆய்வினையும் சமர்ப்பித்துள்ளதுடன் கல்விப்புலத்திலும் சிறந்த பங்களிப்பினை வழங்கி வருகின்றேன். சிறந்த ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயற்பாட்டிலும் எனது திறமையினைக் காட்டிவருகிறேன் எனலாம்.

நேர்காணல்
இக்பால் அலி



# தையல் மீது மையல் கொண்ட தையல்

## பொறியியலாளராகும் வாய்ப்பை விட்டு விட்டு வாழ்க்கையில் தையல் கலையில் வெற்றி பெற்றவர் ஹிராஞ்சலி

தனது திருமண உடையினை தனக்கு பிடித்தமான விதத்தில் தனக்கே உரித்தான டிசைனில் தானே உருவாக்கி அதனை அழகு பார்ப்பது தனக்கு கிடைத்த பாக்கியம் என்றே கூற வேண்டும். அது ஒரு அதிர்ஷ்டம் என்றால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

பொறியியலாளர் ஆகும் வாய்ப்பை கை விட்டு விட்டு தையல் கலை மூலம் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் ஹிராஞ்சலி. தனது திருமண உடையினைத் தனக்கு பிடித்தமான விதத்தில் தனக்கே உரித்தான டிசைனில் தானே உருவாக்கி அதனை அழகு பார்ப்பது தனக்குக் கிடைத்த பாக்கியம் என்றே கூற வேண்டும் என அவர் கூறியுள்ளார். அது ஒரு அதிர்ஷ்டம் என்றால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவ்வாறான பெண் ஒருவரை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் எமக்கு அண்மையில் கிடைத்தது.

திருமண உடைகளை அலங்கரித்து தைப்பதில் கைதேர்ந்த பத்மநாதன் ஹிராஞ்சலி உடனான நேர்காணல் பின்வருமாறு.

**ஹிராஞ்சலி உங்களுடைய வதிவிடம் எது?**

ஹட்டன் நகரில் தும்புருகிரிய வீதியில் தான் எனது தாய் தந்தையரின் வீடு உள்ளது. அங்குதான் பிறந்து வளர்ந்தேன். இந்த வருடம் பெப்ரவரி மாதம் எனக்கு திருமணமாகி, எனது கணவரான கிருஷாந்ராஜ் அவரது கொட்டகலையில் உள்ள வீட்டில் வாழ்ந்து வருகிறேன். ஆனால், எனது தையல் நிலையம் எனது தாய்வீடான ஹட்டனில் உள்ள வீட்டில் மேல் மாடியில் தான் உள்ளது. காலை எனது கணவர் அலுவலகத்திற்கு செல்லும் போது அழைத்து சென்று மீண்டும் திரும்பி வரும் போது என்னை அழைத்து வருவார்.

**ஹிராஞ்சலி நீங்கள் எவ்வாறான ஆடை வர்த்தகத்தில் ஈடுபடுகிறீர்கள்?**

நான் தற்போது திருமண ஆடைகள் மற்றும் உற்சவ ஆடைகளை தயார் செய்து விற்பனை செய்யும் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறேன்.

**நீங்கள் சகல விதமான திருமண ஆடைகளையும் தைக்கிறீர்களா?**

ஆம். மேல்நாட்டு, கீழ் நாட்டு, இந்து, |மேலைத்தேய, முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து கலாசாரத்திற்கும் உரிய ஆடைகளையும் மற்றும் சாரிகளுக்கு பொருத்தமான டிசைனும் செய்து வருகிறேன்.



**நீங்கள் இந்த வியாபாரத்தினை தொடங்கி எவ்வளவு காலம் ஆகின்றது?**

2015 ஆண்டு தான் முதலில் ஆரம்பித்தேன். ஆனால் சரியான முறையில் கேள்விகளை (ஓடர்களை) 2016 முதல் செய்து வருகிறேன்.

**சிறு வயது முதல் எமக்கு யாராக ஆக வேண்டும் என்று எண்ணம் இருக்கும். உங்களுடைய எதிர்ப்பார்ப்பு இவ்வாறான துறையில் ஒரு தொழில்முனைவோராவதா?**

அதைப்பற்றி எனக்கு சரியாக சொல்ல முடியாது. ஆனால், எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது தரம் ஐந்து முதல் எனக்கு உடைகள் தைப்பதில் ஆர்வம் இருந்தது. அதனால் நான் தைப்பதற்கு பழகிக்கொண்டேன். பாடசாலையில் தையல் கலை ஒரு பாடமாக கற்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. அதில் அதிகமான தையல் கலை பற்றி விருப்பம் ஏற்பட்டது.

ஆனால், உயர்தரம் செல்லும் போது தையல் கலை விடுபட்டது. ஏனென்றால் நான் உயர்தரத்தில் கணித பிரிவையே தெரிவு செய்தேன். இதில் கணிதத்துறையில் பொறியியலாளராவதற்கு எத்தனையோ வாய்ப்பு இருந்தது. ஆனால் அதற்கு விருப்பம் இருக்கவில்லை. எனக்கு தேவையாக இருந்தது நான் சிறிய வயது முதல் ஆசைப்பட்ட தையல் துறையில் எனது வாழ்க்கையினை ஆரம்பிக்க வேண்டும் என்று.

**உங்களது இவ்வாறான ஆசைக்கு வீட்டில் உதவினார்களா?**

உண்மையில் எனக்கு விருப்பமானதை தெரிவு செய்து கொள்ள வீட்டில் எவரும் தடையாக இருக்கவில்லை. இந்த காலப்பகுதியில் எனது அண்ணன் ஒருவரும் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தார். ஆனால் அவர் கூட நான் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

**ஹிராஞ்சலி... அதன் பின் தையல் கலையினை கற்க முற்பட்டீர்களா?**

ஆம், நான் ஹட்டன் சிங்கர் தையல் எகடமிக்கு (Singer Fashion Academy) சென்று விஞ்ஞான பூர்வமாக தையல் கலை கற்கை தொடர்பான டிப்ளோமாவினை பெற்றுக்கொண்டேன். அந்த டிப்ளோமா பாடநெறிக்கு பொறுப்பாக நயனா நாணயக்கார ஆசிரியராக இருந்தார்.

**தையல் கலையில் பல்வேறு துறைகள் உள்ளன, நீங்கள் தெரிவு செய்திருப்பது திருமண ஆடை தயாரித்தல் மற்றும் உற்சவ ஆடைகள் தயாரித்தல், இதில் ஏதும் விசேட தன்மை உள்ளதா?**

இது மிக பரந்த பாடப்பரப்பு என்பதனால் எவரும் இதனை தெரிவு செய்ய முன்வருவதில்லை. ஆனால், பல்வேறு விதமான டிசைன்களில் பல்வேறு கலாசாரங்களைப் பின்பற்றி மிகவும் சுதந்திரமாக உருவாக்க முடியும் என்பதனை நான் காண்கிறேன். ஒரு டிசைனில் ஒரு ஆடை மாத்திரம் தயாரிப்பதில் சுவாரஸ்யம் உள்ளது. இதைப் பற்றி சொல்லப்போனால் நான் பாடநெறியினை பின்பற்றும் போதே திருமண ஆடை உருவாக்குவதில் அதிக ஆர்வம் காட்டினேன். அத்தோடு பாடநெறியின் முடிவில் நடைபெற்ற டிசைன் கண்காட்சியில் பல்வேறு டிசைன்களில் ஆடைகளை தயாரிப்பதற்கான அனுபவங்களை பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் போது எங்கள் ஆசிரியை நயனா நாணயக்கார பெற்றுக்கொடுத்த அறிவு மற்றும் ஊக்கப்படுத்தல் மிக விசேடமானது. அது மாத்திரமன்றி எனக்கு சிங்கள மொழியினை பேசுவதற்கு முடிந்தது என்றால் அது அவரின் முயற்சியால் தான் அதற்காக அவருக்கு எனது மனப்பூர்வமான நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

**நீங்கள் பாடநெறி நிறைவு செய்த உடன் வியாபாரத்தை தொடங்கினீர்களா?**

ஆம். ஆனால் முதலில் இதற்காக ஒரு புதிய தையல் இயந்திரத்தினை கொள்வனவு செய்து கொள்வதற்கு வசதிகள் இருக்கவில்லை. வீட்டில் இருந்த தையல் இயந்திரத்தினை கொண்டு தான் வியாபாரத்தினை தொடங்கினேன். ஆனால் சிறிது காலம் போகும் போது எனக்கு தெரிந்தது சாதாரண தையல் இயந்திரத்தினால் வர்த்தக நடவடிக்கையினை விருத்தி செய்ய முடியாது என்று வர்த்தக நடவடிக்கையின் போது தையல் நேர்த்தியாகவும் உறுதியாகவும் இருப்பது மிகவும் அத்தியாவசியமானது. அதனால் மிக விரைவாக இன்டஸரியல் தையல் இயந்திரம் ஒன்று வாங்க வேண்டும் என்பதனை உணர்ந்து கொண்டேன். தையல் இயந்திரம் தையல் கலையில் இதயம். அதனால் எனது தேவைக்கு பொருத்தமான மெசின் zoje தையல் மெசின் என்பதனை பாடநெறி பின்பற்றும் போதே தெரிந்து கொண்டேன். அதன் பின் 06 மாத காலப் பகுதியில் தவணை முறையில் செலுத்தி நிறைவு செய்து கொள்ளும் வகையில் zoje அதிவேக தையல் மெசினை கொள்வனவு செய்து கொண்டேன். எனது வர்த்தகத்தினை விருத்தி செய்து கொள்வதற்கு எனது திறமை மற்றுமன்றி zoje அதிவேக தையல் மெசின் எனக்கு ஒத்துழைத்தமையானது வார்த்தைகளால் சொல்ல முடியாது. இதற்கு சிறந்த உதாரணமாக ஆறுமாத தவணைக்கட்டணத்தில் பெற்றுக்கொண்ட இந்த நவீன தையல் மெசினை இரண்டு மாதத்திலேயே முழுக் கட்டணத்தினையும் செலுத்தி நிறைவு செய்ய முடிந்தது. நான் முன்பு கூறியது போல் zoje அதிவேக தையல் மெசின் காரணமாக நேர்த்தியாகவும் உறுதியாகவும் தையல் காணப்பட்டமையினால் நிறைய கேள்விகள் (ஓடர்கள்) கிடைத்தன.

**ஹிராஞ்சலி உங்கள் வியாபாரத்தினை மேலும் விருத்தி செய்திருப்பீர்களே?**

ஆம். அதிகமாக கேள்விகள்(ஓடர்கள்) கிடைக்கப்பெற்றதனை தொடர்ந்து எனக்கு இன்னுமொரு ஐந்து நூல் கொண்ட zoje overlock தையல் மெசின் ஒன்றும் அதனை தொடர்ந்து zoje அதிவேக தையல் மெசின் ஒன்றையும் விலைக்கு வாங்கினேன்.

**உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களும் இந்த தையல் வியாபாரத்தில் சம்பந்தபட்டனரா?**

எனது தந்தையும் வர்த்தகர் தான் ஆனால் அவருக்கு இருப்பது கட்டட நிர்மாண பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம். எனக்கு இரண்டு அண்ணன்மார்கள் அதில் ஒருவர் வங்கியில் கடமை புரிகிறார். மற்றவர் பொறியியலாளர், எனது கணவரும் இந்த வர்த்தகத்திற்கு தொடர்பு படவில்லை. அவர் ஒரு மென்பொருள் பொறியியலாளர், இந்த துறையினை நானே முயற்சி செய்து விருத்தி செய்து கொண்டேன். ஆனால் இதற்கு அனைவரினது ஒத்துழைப்பும், ஆசிர்வாதமும் எனக்கு கிடைத்தது.

**உங்கள் தையல் வர்த்தகத்திற்கு தற்போது ஆறு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது. நீங்கள் கடந்து வந்த பயணத்தில் திருப்தி அடைகிறீர்களா?**

உண்மையில் ஆம். இழைமம் பெசன் புடிக் (ilaimam fashion boutique) என்று தொடங்கிய எனது வியாபாரத்தில் எனக்கு கீழ் மேலும் இருவர் பணிபுரிகின்றனர். எதிர்காலத்தில் இந்த வர்த்தகத்தினை மேலும் விரிவு செய்து மேலதிக தையல் பிரிவு ஒன்றினையும் ஆரம்பிக்க எதிர்ப்பார்த்துள்ளேன். அதற்காக மேலும் zoje அதிவேக தையல் மெசின் கொள்வனவு செய்ய வேண்டும். அதன் மூலம் இன்னும் பலருக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்க முடியும் அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை தரும் ஒன்றாகும். இக் குறுகிய காலத்தில் நீண்ட பயணம் வந்துள்ளேன். இதற்கு zoje மெசின் உறுதுணையாக இருந்தது.





கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

## சினி பஜார் கேள்வி பதில்





ஆர்.கே.மது.
முகத்துவாரம்.
கொழும்பு.

கேள்வி:– எம்.ஜி.ஆர். தயாரித்த 'அடிமைப்பெண்' படத்தில் கே.ஆர்.விஜயாவும் சரோஜாதேவியும் நடித்தார்–களாமே... ஆனால் ஜெயல–லிதா நடித்த 'அடிமைப்பெண்' படம்தானே திரைக்கு வந்தது... இடையில் என்ன நடந்ததென்று தெரியுமா சார்?

பதில்;–ஆரம்பத்தில் கே.ஆர். விஜயாவையும் சரோஜா தேவி–யையும் தான் எம்.ஜி.ஆர். நடிக்க வைத்திருந்தார்..அப்போது எம்.ஜி.ஆர்.தான் படத்தை இயக்கி இருந்தார். படம் முக்கால் வாசிக்கு–மேல்முடிவடைத்து விட்டது. க்ளை–மாக்ஸ் காட்சிகள் மட்டுமே எடுக்க வேண்டியிருந்தது. இந்த சந்தர்ப்–பத்தில்தான் நடிகை ஜெயலலிதா இடையில் புகுந்து பிரச்சினைப் படுத்தினார்.

அவர் என்ன செய்தார் தெரியுமா?

தான் தான் கதாநாயகியாக நடிப்–பேன் என்றார். அப்படி நடிக்க வாய்ப்பு கொடுக்க வில்லையென்றால் தான் தற்கொலை செய்து கொள்ளப்போ–வதாக எம்.ஜி.ஆரையே மிரட்டினார்.

ஆடிப்போனார் எம்.ஜி.ஆர்.

ஜெயலலிதாவிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனாலும் அவர் விடாப்பிடியாகவே இருந்தார்.

அன்றைய சூழ்நிலையில் எம்.ஜி.ஆருக்கும் வேறு வழியே தெரிய வில்லை. அதனால் , கே.ஆர். விஜயாவையும் சரோஜா தேவி–யையும் நீங்கி விட்டு ஜெய–லிதாவை நாய–கியாக வைத்து மீண்டும் படப்பி–டிப்பை ஆரம்பித்–தார். இரண்டாவது கதா பாத்திரத்திலும் தானே நடிப்பதாகவும்பி–டிவாதம் பிடித்தார்.

வெறு வழியின்றி அதற்கும் சம்–மதித்தார்.

இந்த முறை படத்தை எம்.ஜி.ஆர். இயக்கவில்லை.பதிலாக சங்க–ரைப்போட்டார். அப்படி உருவான 'அடிமைப் பெண்' படத்தைத்தான் நாம் பார்த்தோம்.

ஜெயலலிதா இரட்டை வேடத்தில் நடித்த 'அடிமைப் பெண்' படம்பயங்கர ஹிட்டானது.



எம்.மாகிரட்.
எலபடகம

கேள்வி:–ராமராஜன், கனகா ஜோடியாக நடித்து , பல வருடங்க–ளுக்கு முன்பு வெளியாகி வெற்–றிகரமாக ஓடிய 'கரகாட்டக்காரன்' படத்தின் இரண்டாம் பாகம் தயா–ராகப் போகிறதாமே....யாரெல்லாம் நடிகிறார்கள் ...கங்கை அமரனே இயக்குகிறாரா..தகவல் தாருங்க–ளேன்?

பதில்:–1989ஆம் ஆண்டு அதாவது 34 வருடங்களுக்கு முன்பு, ராமராஜன், கவுண்டமணி, செந்தில்,–கோவை சரளா, கனகா ஆகியோ–ரின் நடிப்பில் வெளியாகி பர பரப்பை ஏற்படுத்திய படம்தான் 'கரகாட்டக்–காரன்'கங்கை அமரன் இயக்கி இருந்தார். கவுண்டமணி–செந்தி–லின் வாழைப்பழ கமெடி இன்றும் நினைவில் நிற்கிறது.

இன்னும் சொல்–வதாக இருந்தால் ,80–90 உச்சத்–தில் இருந்த ரஜினி கம–லுக்கு கே அச்சத்–தைஏற்ப–டுத்திய பட–மாகவும் இது அமைந்தி–ருந்தது.

இந்தபடத்தின் இரண்டாம் பாகம்–தான் இப்போது தயாராகப் போகிறது. ராமராஜனுக்கு பதிலாக மிர்சி சிவா நடிக்கிறார்.இளைய–ராஜாவுக்கு பதிலாக அவர்மகன் யுவன்சங்கர்ராஜா இசை அமைக்–கிறார்

கங்கை அமரனின் மகன் வெங்கட் பிரபு இயக்குகிறார்.

இது சம்பந்தமான அதிகாரப் பூர்–வமான அறிவிப்பு விரைவில் வரு–மென்று எதிர் பார்க்கப்படுகிறது.

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# 10 வருடங்கள் கழித்து மீண்டும் ஆர்வம்



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் லியோ படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் விஜய், 10 வருடங்கள் கழித்து மீண்டும் சோசியல் மீடியாவில் ஆர்வம் காட்டியிருக்கிறார்.

கோலிவுட்டின் மாஸ் நடிகராக ரவுண்டு கட்டிக் கொண்டிருக்கும் தளபதி விஜய்யின் ஒவ்வொரு படங்களையும் அவருடைய ரசிகர்கள் திரையரங்குகளில் திருவிழா போல் கொண்டாடுவார்கள். தற்போது விஜய் வாரிசு படத்தை தொடர்ந்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் லியோ படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இந்த படத்தின் ஷூட்டிங் தற்போது காஷ்மீரில் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் இவர் கடந்த 2013ம் ஆண்டு ட்விட்டரில் இணைந்த நிலையில், இதுவரை அவரை 4.4 மில்லியன் ரசிகர்கள் ஃபாலோ செய்கின்றனர். அது மட்டுமல்ல ட்விட்டர் ஹாஸ்டேக் ட்ரெண்டிங்கில் தொடர்ந்து இந்திய அளவில் நடிகர் விஜய் முன்னிலை வகித்து வருவதும், அவரை குறித்து தேடுபவர்களும் அதிகம் என ஏற்கனவே சோசியல் மீடியாவில் சாதனை புரிந்துள்ளார்.

இந்நிலையில் நடிகர் விஜய் இன்ஸ்டாகிராமிலும் அதிகாரப்பூர்வமாக தனது கணக்கை துவங்கி உள்ளார். இவர் துவங்கிய சில நிமிடத்திலேயே 4 லட்சத்திற்கும் அதிகமான ஃபாலோயர்கள் குவிந்துள்ளனர். மேலும் விஜய் முதல் முதலாக தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் காஷ்மீரில் லியோ படப்பிடிப்பில் கொட்டுகிற பனிமலை பேக்ரவுண்டில் இருக்கும் புகைப்படத்தை பதிவிட்டுள்ளார். இதில் விஜய் செம க்யூட்டாக இருப்பதால், அவருடைய ரசிகர்கள் மெய்மறந்து பார்க்கின்றனர்.

அதுமட்டுமல்ல இந்த புகைப்படத்திற்கு இயக்குனர் லோகேஷ் கனகராஜ் லைக் போட்டுள்ளார். மேலும் விஜய்யின் தீவிர ரசிகையான கீர்த்தி சுரேஷ் இன்ஸ்ட்ரா பக்கத்தில் விஜய் கணக்கு துவங்கிய அடுத்த நிமிடமே செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படி திரை பிரபலங்கள் பலரும் விஜய்யின் இன்ஸ்டாகிராம் பக்கத்தை ஃபாலோ செய்து வருகின்றனர். இதுவரை விஜய்யின் ட்விட்டர் பக்கத்தின் மூலம் தான் அவருடைய படங்களின் ட்ரைலர், டைட்டில் போன்றவை வெளியாகும்.

அதேபோல் இனிமேல் இன்ஸ்டாகிராம் பக்கத்திலும் அவரைக் குறித்த அப்டேட் வெளியாகும். ஒரு வேளை லியோ படத்தின் ப்ரமோஷனுக்காகவே, பத்து வருடங்கள் கழித்து இன்ஸ்ட்ரா கணக்கை விஜய் துவங்கி இருக்கிறாரோ! என்று திரை பிரபலங்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# ஹனிரோஸ் வருத்தம்





குண்டாக இருப்பதால் தன்னை வலைத்தளங்களில் உருவ கேலி செய்வதாக ஹனிரோஸ் வருத்தம் தெரிவித்து உள்ளார். தமிழில் முதல் கனவே, சிங்கம் புலி, காந்தர்வன் உள்ளிட்ட படங்களில் நடித்தவர் ஹனிரோஸ். மலையாளத்தில் முன்னணி நடிகையாக இருக்கிறார். தெலுங்கிலும் நடித்துள்ளார். வீரசிம்மா ரெட்டி படத்தில் பாலகிருஷ்ணாவுடன் நடித்து இருந்தார். இந்த நிலையில் குண்டாக இருப்பதால் தன்னை வலைத்தளங்களில் உருவ கேலி செய்வதாக ஹனிரோஸ் வருத்தம் தெரிவித்து உள்ளார். இதுகுறித்து ஹனிரோஸ் அளித்துள்ள பேட்டியில், "சினிமாவில் கதாபாத்திரத்திற்கு ஏற்றபடி எனது ஆடைகள் இருக்கும். எனக்கு பிடித்த மாதிரி காட்சி அளிக்க நான் விரும்புவேன். எதுமாதிரியான உடைகள் அணிய வேண்டும், எப்படி காட்சி அளிக்க வேண்டும் என்பது நடிகர், நடிகைகளின் விருப்பம். கதாநாயகிகள் கொஞ்சம் எடை கூடி குண்டானால் உடனே வலைத்தளத்தில் கேலி செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். நானும் இதை எதிர்கொண்டு உள்ளேன். இஷ்டம்போல் சமூக வலைத்தளங்களில் எதிர்மறையாக மோசமாக பேசி மனதை நோகடிக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது மிகவும் கஷ்டமாக இருக்கிறது'' என்றார்.

# மலையாள நடிகர்கள் திறமையானவர்கள்

சமந்தா





நடிகை சமந்தா நடித்துள்ள 'சாகுந்தலம்' படம் தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாள மொழிகளில் திரைக்கு வர உள்ளது. துஷ்யந்தன், சகுந்தலையின் புராண கதையை மையமாக வைத்து இந்த படம் தயாராகி உள்ளது. சமந்தா சகுந்தலையாக நடித்து இருக்கிறார். சாகுந்தலம் படவிழா நிகழ்ச்சி கொச்சியில் நடந்தது. இதில் சமந்தா கலந்து கொண்டார். விழாவில் அவர் பேசும் போது, "எனது தாய் ஆலப்புழாவை சேர்ந்தவர். அவர் எனக்கு மலையாளம் கற்றுத்தரவில்லை என்ற வருத்தம் இருந்தது. மலையாளத்தில் எனக்கு பிடித்த நடிகர்களுடன் நடிக்க வாய்ப்புகள் கிடைத்தால் மலையாளம் கற்றுக்கொண்டு எனது சொந்த குரலில் டப்பிங் பேசுவேன் என்று உறுதி அளிக்கிறேன். தமிழ், தெலுங்கு நடிகர்களோடு மலையாள நடிகர்கள் எனக்கு பெரிய உத்வேகம் அளிக்கின்றனர். மலையாள படங்களை பார்த்து எனது நடிப்பை மேம்படுத்திக்கொள்கிறேன். மலையாளத்தில் உள்ள அனைத்து நடிகர்களுமே திறமையான மிகச்சிறந்த நடிகர்கள். சூப்பர் டீலக்ஸ் படத்தில் பகத் பாசிலுடன் நடித்தபோது அவரது நடிப்பு என்னை வியப்பில் ஆழ்த்தியது'' என்றார்.

# விருதுகள் பல வென்ற பொன்னியின் செல்வன்



பொன்னியின் செல்வன் திரைப்படம் விருதுகள் பல பெற்றுள்ளன. இப்படத்தில் விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, சரத்குமார், பார்த்திபன், பிரகாஷ்ராஜ், ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, ஐஸ்வர்ய லட்சுமி, ஷோபிதா துலிபாலா, ஜெயராம், பிரபு உள்ளிட்ட பல முன்னணி நடிகர்கள் நடித்துள்ளனர். இப்படத்தின் முதல் பாகம் கடந்த ஆண்டு வெளியாகி விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் இப்படத்தின் இரண்டாம் பாகம் 28ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதற்கான புரமோஷன்கள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. படத்தின் போஸ்டர்கள், பாடல்கள் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றன. இதனை தொடர்ந்து பொன்னியின் செல்வன் 2 படத்தில் ட்ரெயிலர் சமீபத்தில் வெளியானது. சில்க் ஸ்மிதா போல் போஸ் கொடுத்த கீர்த்தி சுரேஷ்... தீயாய் பரவும் போட்டோ!

பொன்னியின் செல்வன் 2 படத்தின் ட்ரெயிலரும் முதல் பாகத்தை போன்றே விருவிறுப்பாக உள்ளது. வியூஸ்களையும் குவித்து வருகிறது. இந்நிலையில் பொன்னியின் செல்வன் படம் பல விருதுகளை குவித்துள்ளதாக மணிரத்னத்தின் மெட்ராஸ் டாக்கிஸ் தெரிவித்துள்ளது. அதன்படி 2023 ஆண்டுக்கான ஜேஎஃப்டபல்யூ விருதுகளில் பொன்னியின் செல்வன் திரைப்படத்திற்காக சிறந்த நடிகைக்கான விருதை நடிகை த்ரிஷா பெற்றுள்ளார்.

# நயன்தாராவின் குழந்தைகள் பெயர்கள்





நடிகை நயன்தாரா விக்னேஷ் சிவன் தம்பதியின், ட்வின்ஸ் மகன்களின் பெயர் என்ன என்பது குறித்த தகவலை நயன்தாரா விருது விழாவில் அறிவித்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன் இருவரும் கடந்த வருடம் வாடகை தாய் மூலம் இரட்டை ஆண் குழந்தைகள் பெற்றனர். திருமணமாகி சில மாதங்களிலேயே குழந்தை பெற்றது பெரிய சர்ச்சை ஆனது. ஆனால் எங்களுக்கு 5 வருடத்திற்கு முன்பே பதிவு திருமணம் நடைபெற்றுவிட்டது என அவர்கள் விளக்கம் அளித்தனர். குழந்தைகளுக்கு உயிர் மற்றும் உலகம் என பெயரிட்டு இருப்பதாக விக்னேஷ் சிவன் ஏற்கனவே கூறி இருந்தார்.

இந்நிலையில் சமீபத்தில் ஒரு விருது விழாவில் கலந்துகொண்ட நயன்தாரா தனது மகன்களின் முழு பெயரை அறிவித்து இருக்கிறார். உயிர் ருத்ரோனில் N சிவன், உலக் தெய்வேக் N சிவன் என தன் இரண்டு மகன்களின் பெயர்களையும் அவர் அறிவித்து இருக்கிறார்.

# 'மிஷன் சாப்டர் 1'



இயக்குனர் ஏ.எல்.விஜய் தற்போது அருண் விஜய் நடிக்கும் 'அச்சம் என்பது இல்லையே' என்ற படத்தை இயக்கி வந்தார். சமீபத்தில் இந்த படத்தின் டைட்டில் 'மிஷன் சாப்டர் 1: ஃபியர்லஸ் ஜார்னி' என்று மாற்றப்பட்டது. இந்த படத்தின் கதாநாயகியாக எமி ஜாக்சன் நடித்துள்ளார். ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். சமீபத்தில் இந்த படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்தது. தற்போது போஸ்ட் புரொடக்சன் பணிகள் நடைபெற்று வருகிறது. எம். ராஜசேகர் மற்றும் எஸ்.சுவாதி தயாரித்துள்ள இந்த படத்தை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் லைகா நிறுவனம் வெளியிடவுள்ளது. இந்த படத்தின் டீசர் தற்போது வெளியாகி உள்ளது. இந்த டீசர் இணையத்தில் வைரலாகி வருகிறது.



இந்த நவீன காலத்தில் புருவத்தை அழகு படுத்தும் பழக்கத்தை பெண்கள் கொண்டுள்ளனர். அந்த வகையில் புருவத்தில் உள்ள முடி அடர்த்தியாக வளர அழகு கலை நிபுணர்கள் பரிந்துரைக்கும் சில விஷயங்களை குறித்து இந்த தொகுப்பில் பார்க்கலாம்.

# புருவம் அடர்த்தியாக வளர



**ஐப்ரோ ப்ரஷ்**

ஐப்ரோ ப்ரஷ் பயன்படுத்தி புருவத்தை அடிக்கடி புருவத்தை சரி செய்ய வேண்டும். மேலும் முகத்தை கழுவும்போது புருவப் பகுதியில் உள்ள வியர்வைகள், அழுக்குகளை சுத்தமாக கழுவுவதும் அவசியம் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

**ஐப்ரோ பென்சில்**

இயற்கையாகவே புருவத்தை அடர்த்தியாக காட்ட தி சுகர் அர்ச் அறைவல் புரோடிபைனர் (*Sugar Arch Arrival Brow definer*) பயன்படுத்தலாம். மேலும் புருவங்கள் நன்கு அடர்த்தியாக வளர மைக்ரோ நியூட்ரியண்ட்ஸ் என்னும் நுண்சத்துக்கள் நிறைந்த உணவினை அதிகம் சாப்பிடலாம்.

**கற்றாழை**

புருவத்தை திரெடிங் செய்வதற்க்கு முன்பு மிதமான வெந்நீரில் குளித்துவிட்டு திரெடிங் செய்தால், அதிக வலி தராமல் இருக்கும். மேலும் த்ரெட்டிங் முடிந்ததும் கற்றாழை ஜெல் கொண்டு புருவப் பகுதியின் மீது மசாஜ் செய்து வருவது சிறந்தது என அழகுக்கலை நிபுணர்கள் கூறுகின்றனர்.

**விளக்கெண்ணெய்**

புருவத்தில் முடி அடர்த்தியாகவும், மிருதுவாகவும் இருப்பதற்கு தினமும் இரவு தூங்க செல்லும் முன் விளக்கெண்ணெய் ஒரு துளி எடுத்து இரண்டு நிமிடம் மசாஜ் செய்து படுத்தாலே முடி அடர்த்தியாக மிருதுவாக இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

# பெண்களின் ஆரோக்கியம்



குடும்பத்தின் ஆணிவேராக இருக்கும் பெண்கள், தங்கள் ஆரோக்கியத்தின் நிலை என்னவென்று தெரியாமல், அன்றாடம் ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கின்றனர். எனவே 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள், வருடத்தில் ஒரு முறையாவது முழு உடல் பரிசோதனை செய்துகொள்வது நல்லது. இந்த ஆண்டில் இருந்து தொடங்கி, இனி ஒவ்வொரு வருடமும் இதைக் கடைப்பிடித்து வரலாம்.

40 வயதுக்குப் பிறகு பெண்களுக்கு ரத்த சோகை, கல்சியம் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் வர ஆரம்பிக்கும். அதனால் தினசரி உணவில் கீரை வகைகள், முழு தானியங்கள், சிறுதானியங்கள், பேரீட்சை, உலர் திராட்சை ஆகியவற்றை சேர்த்து வரலாம்.

பெண்கள் தங்கள் வயது மற்றும் உயரத்துக்கேற்ப உடல் எடையை பராமரிப்பது முக்கியமானது. திருமணம் ஆன பெண்கள் பலரும் புத்தாண்டில் உடல் எடை பராமரிப்பு குறித்த தீர்மானத்தை எடுப்பதும், அதைத் தொடர்ந்து கடைப்பிடிக்காமல் கைவிடுவதும் அதிகம் என ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. வீட்டில் இருந்து தனியாகப் பயிற்சிகள் செய்வதை விட, ஜிம், யோகா மையங்கள் போன்றவற்றுக்குச் சென்று குழுவாக செயல்படலாம். இதனால் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திக்கொண்டே பயிற்சி செய்யும் வாய்ப்பு கிடைக்கும்.

தற்போது அனைத்து வயது பெண்களும் ஸ்மார்ட்போன் உபயோகித்து வருகின்றனர். கல்வி, வேலை, தொழில் போன்ற காரணங்களால் கணினி பயன்படுத்துவதும் அதிகரித்துள்ளது. இதனால் கண்கள் பாதிக்கப்படக்கூடும். எனவே அனைத்து பெண்களும் ஆண்டுக்கு ஒருமுறை தவறாமல் கண் பரிசோதனை செய்துக்கொள்ள வேண்டும். இல்லத்தரசிகள் சந்திக்கும் ஒரு முக்கியமான பிரச்சினை மன அழுத்தம். ஹார்வார்டு பல்கலைக்கழகத்தின் உளவியல் துறை பேராசிரியர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் படி, தங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை அன்றாடம் எழுதும் பழக்கம் கொண்டவர்களால், தங்களது உணர்வின் வேகத்தை சீரான நிலையில் பராமரிக்க முடியும் என்று தெரியவந்துள்ளது.

அதாவது, உணர்வுகளை எழுத்து வடிவத்தில் வெளிப்படுத்தும் பழக்கம், பிரச்சினைகளுக்குரிய தீர்வை புதிய தளங்களில் தேடும் முயற்சியாகக் கருதப்படுகிறது. அதனால் ஒருவரது செயல்திறன் அதிகரிக்கும். அவ்வாறு எழுதுவதன் மூலம் ஏற்படும் மாற்றத்தால் மூளையின் செயல்பாடு, செல்களின் நோய் எதிர்ப்பு திறன் ஆகியவை அதிகரித்து மனஅழுத்தம் குறையும். எனவே டைரியில் தினமும் மனதில் தோன்றிய கருத்துக்களை எழுதும் தீர்மானத்தை இந்த ஆண்டு முதல் தொடங்கலாம்.

# பெண்களை பளிச்சிட வைக்கும் குணங்கள்

பெண்கள் ஆண்களைவிட நிறைய விஷயங்களில் சிறப்பு வாய்ந்தவர்கள். அந்த வகையில் பெண்களை பளிச்சிட வைக்கும் குணங்களைப் பார்க்கலாம்.

எந்த விஷயத்தையும் பெண்கள் எளிமையாகக் கற்றுக் கொள்வார்கள். கற்றல் திறன் எல்லோருக்கும் பொதுவானதுதான் என்றாலும், ஆண்களுக்குப் பொறுமை குணம் குறைவு. ஆகையால் தான், வகுப்புகளில் பெரும்பான்மை பெண்களே முதலிடம் பிடிக்கிறார்கள். 2 சுகாதார விஷயத்தில் பெண்கள் எப்போதும் பல படிகள் மேலே என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஒரு வீட்டையோ, அலுவலகத்தின் குறிப்பிட்ட ஓர் இடத்தையோ பார்க்கும்போதே அந்த இடத்தில் இருப்பவர் ஆணா, பெண்ணா என்று சொல்லிவிடலாம். பெண்கள், தன்னைச் சுற்றியுள்ள எல்லாமே சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவார்கள்.

சுகாதார விஷயத்தில் பெண்கள் எப்போதும் பல படிகள் மேலே என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஒரு வீட்டையோ, அலுவலகத்தின் குறிப்பிட்ட ஓர் இடத்தையோ பார்க்கும்போதே அந்த இடத்தில் இருப்பவர் ஆணா, பெண்ணா என்று சொல்லிவிடலாம். பெண்கள், தன்னைச் சுற்றியுள்ள எல்லாமே சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவார்கள்.

இண்டெர்வியூ என்றாலே எல்லாருக்கும் ஒரு பயம் வரும். பெண்களுக்கும் அந்த பயம் உண்டுதான். ஆனால், அதை வெளிக்காட்டாமல் கூலாக கையாள்வதில் வல்லவர்கள். அதனால்தான், செல்லும் இடங்களில் எல்லாம் வெற்றி பெறுகிறார்கள். அது மட்டுமா? அவர்கள் எந்த விஷயத்திலும் முன்தயாரிப்புடன் செல்வார்கள்.

ரொம்ப மெச்சூர்டாக செயல்படுவதும் பெண்கள்தான். அவர்கள் தன்மானத்தைக் காத்துக்கொள்வதில் பெரும் பங்காற்றுவார்கள். எந்த ஒரு விஷயத்திலும் பெண்கள் தெளிவான உறுதிகொண்டவர்களாக தோற்றம் அளிப்பார்கள். ஆனால், ஆண்கள் கொஞ்சம் குழப்பவாதிகள். ஓர் செயலில் ஈடுபடுவதற்கு முன்னரே யோசித்து, அதற்கு தகுந்தபடி செயல்படுவதே பெண்களின் வெற்றிகளுக்குக் காரணமாக இருக்கிறது.


















கருணை இல்லம் சமூகநல அமைப்பினரின் மற்றொரு மைல் கல்லான செயற்றிட்டம் கண்டி பன்வில அலகொல்ல என்ற பிரதேசத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் அப்பிரதேசத்தில் மல்லிகை முன்பள்ளி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சீருடை, பாடசாலை பைகள், உணவுப்பொதி, தண்ணீர் போத்தல் போன்றன வழங்கி வைக் கப்பட்டன.

இந்நிகழ்வானது கருணை இல்லம் அமைப்பின் நிறுவன ரும் தலைவராகிய செல்வக்குமார் மற்றும் அமைப்பின் உறுப் பினர் விமலேஸ்வரியின் பங்களிப்புடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் அமைப்பின் உபதலைவர், ஆலோசகர், நுவரெலியா மாவட்ட இணைப்பாளர், தலை வரின் மனைவி, உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், இளைஞர், யுவதிகள் என ஏராளமானவர்கள் கலந்து சிறப்பித்தனர்.








கடந்த வருடம் போல் இவ்வருடமும் சர்வதேச நாடக தினத்தை முன்னிட்டு கண்ணகி கலாலயம் ஏற்பாடு செய்த நாடக அரங்கியல் பயிற்சி அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. இப்பயிற்சிகளை வழங்கிய ஆசான் கள் இலங்கையில் பல நடன கலைஞர்களையும் நடிகர்களையும் திறன்பட உருவாக்கியவர்கள். இயக்குனர் Shane Aaryan பயிற்சிகளை வழங்கினார். இவருடன் சகோதர மொழி இயக்குனர் Neranjan Chandradithya பயிற்சிகளை வழங்கினார். தமிழ்மணி மானா மக்கீன், கொழும்பு நகர சபை உறுப்பினர் கலைஞர் தேசபந்து ஜோசப் பெர்னாண்டோ, புதிய அலை கலை வட்டத்தின் தலைவர் Shanmu Sanmu ஆகியோரும் இதற்கு பங்களிப்பு செய்தனர்.

(படங்கள்: எம் நசார்)

## நிறம் தீட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்



## வழிகாட்டுங்கள்



புள்ளிகளை இணைத்து அழகான வாத்தின் உருவத்தை முழுமைப் படுத்துங்கள்...



## 5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# இலங்கை தேசிய அணியில் பந்துவீச்சாளராக இணைவதே எனது கனவு

## மென்பந்து போட்டிகளில் சிறப்பாக பந்துவீசி அசத்தும் மொஹமட் அகீல்






எமது நாட்டு இளைஞர்கள் ஏனைய விளை–யாட்டுகளை விட கிரிக்கெட் விளையாட்டில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்–றனர். இதில் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் என்ற வித்தி–யாசமின்றி பலரும் ஈடுபட்டு வருகின்றனர். நாடு முழு–வதும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வரும் அதேவேளை மென்–பந்து கிரிக்கெட் விளை–யாட்டில் பெரிதும் திறமை செலுத்தி வருகின்ற குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்–டிய, ஹொரம்பாவ, நிவ் டவுன் பிரதேசத்தில் வசிக்கும் 22 வயதுடைய மொஹமட் அகீல் என்பவரை "நான் ரொம்ப பிஸி" பகுதிக்காக சந்தித்–தேன்.

கேள்வி: மென் பந்து கிரிக்கெட் விளையாட்டில் தற்போது திறமையான பந்து வீச்சாளராக புகழ்பூத்து வருகின்றீர்கள். உங்கள் திறமைக்கான காரணம் என்ன ?

பதில்: நான் பாடசாலைக்கு செல்லும் காலத்திலிருந்தே மென்பந்து கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் செலுத்தி வருகின்றேன்.

எனது நண்பர்களுடன் சேர்ந்து எனது வீட்டுக்கு அருகிலுள்ள மைதானங்களில் மாலை வேளையில் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தேன். அப்போதிலிருந்தே நான் ஒரு சிறந்த பந்துவீச்சாளராக வர வேண்டும் என்ற ஆவல் இருந்தது .

கேள்வி: உங்களுடைய குடும்பத்தில் ஏனையோர் கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் செலுத்தி வருகின்றனரா?

பதில்: இல்லை. நான் மாத்திரமே ஆர்வம் காட்டி வருகின்றேன் .

கேள்வி: மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் நீங்கள் கலந்து கொண்டு வருகிறீர்கள். அவ்வாறான போட்டிகளில் சிறந்த பந்துவீச்சாளருக்கான பரிசுகளும் உங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளனவா ?

பதில்: எனது வீட்டுக்கு அருகிலுள்ள ஹொரம்பாவ, மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் பல்வேறு மென்பந்து கிரிக்கெட் கழகங்களினால் பெருநாள் தினங்கள் மற்றும் விஷேட விடுமுறை தினங்களில் சுற்றுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றன. அவ்வாறான போட்டிகளில் எமது பிரதேசத்திலுள்ள கழகமொன்றின் சார்பாக நான் பந்து வீச்சாளராக கலந்து கொள்வேன். அவ்வாறு ஆரம்பித்த என பயணம் நாடு முழுவதும் வியாபித்துள்ளது. பல போட்டிகளில் நான் சிறந்த பந்துவீச்சாளருக்கான பரிசுகளையும் வென்றுள்ளேன்.

கேள்வி: கல்வியில் ஆர்வம் காட்டவில்லையா?

பதில்: நான் கெகுணுகொல்ல தேசிய பாடசாலையில் தரம் 11 வரை கல்வி கற்றேன். அதில் பெறுபேறுகளை பெற்றுக் கொண்ட பின்னர் வெல்பொதுவெவ, முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வர்த்தகப் பிரிவில் உயர் கல்வியைக் கற்றுள்ளேன். தொழில் எதுவும் செய்யவில்லை.

கேள்வி: உங்களுடைய குடும்ப பொருளாதார நிலை எப்படி உள்ளது?

பதில்: எனது தந்தை ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர். மேலும், எனது நானா ஒரு வர்த்தகர். இதனால் எனது கிரிக்கெட் விளையாட்டுக்கு எந்த விதமான பொருளாதார தடைகளும் இல்லை.

கேள்வி: நீங்கள் எவ்வாறு தேசிய மென்பந்து கிரிக்கெட் அணியில் இணைந்து கொண்டீர்கள்?

பதில்: இலங்கை தேசிய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் பூரண அனுசரணையுடன் மாவட்ட மட்டத்திலான சிறந்த பந்து வீச்சாளர்களை தெரிவு செய்வதற்கான தெரிவுகள் கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்றன. அதிலேயே நான் சிறந்த பந்துவீச்சாளராக தெரிவு செய்யப்பட்டேன்.



குருநாகல் மலியதேவ கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற தெரிவிற்கு அப்போதைய தேசிய சிறந்த பந்துவீச்சாளர் லசித் மாலிங்க தலைமை தாங்கினார். அவரின் தெரிவின் பேரிலேயே நான் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டேன் .

கேள்வி: மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உங்களைப் போன்ற இளம் வீரர்களுக்கு எங்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன?

பதில்: 19 வயதுக்கு கீழான இளைஞர்களே மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். எங்களை கொழும்பு, சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் முகாமிட்டனர்.

நாங்கள் அங்கு தங்கி இருந்து கொண்டு காலையிலும் மாலையிலும் கொழும்பு நகரத்திலுள்ள சிறந்த விளையாட்டு மைதானங்களுக்கு பயிற்சிகளுக்காக சென்றோம்.

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியில் இணைந்து கொள்வதற்கான பயிற்சிகளே எமக்கு வழங்கப்பட்டன. நான் மிகவும் ஆர்வத்துடன் அனைத்து பயிற்சிகளிலும் கலந்துகொண்டேன் . பயிற்சிகளில் ஈடுபடும் போது தேசிய மட்டத்தில் பங்குபற்றும் வீரர்களுடனும் பயிற்சி பெறும் வாய்ப்புக்களும் எமக்கு கிடைத்தன . இவை எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன.

கேள்வி: தேசிய மட்ட பயிற்சிகளின் பின்னர் உங்களுடைய மென்பந்து பந்துவீச்சு எவ்வாறு இருந்தது?

பதில்: குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம் இல்லாமல் இலங்கை முழுவதும் நான் சிறந்த மென்பந்து வீச்சாளர் என்ற புகழ் கிடைத்தது.

இதனால் பல விளையாட்டு கழகங்க போட்டிகளில் கலந்து கொள்ளும் போது என்னை அழைத்து செல்வார்கள். நான் அவற்றில் கலந்து கொண்டு சிறந்த பந்துவீச்சாளருக்கான பரிசுகளையும் விருதுகளையும் வென்றுள்ளேன் .

கேள்வி: மென்பந்து கிரிக்கெட் கழகமொன்றில் நிரந்தரமாக விளையாடும் ஆர்வம் உங்களுக்கு இல்லையா?

பதில்: நான் தேசிய கிரிக்கெட் அணியின் சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவராக வர வேண்டும் என்பதே எனது கனவாகும் . அதற்கான பயிற்சிக் களமாக மென்பந்து கிரிக்கெட் பந்து வீச்சில் ஈடுபட்டு வருகின்றேன். ஆனாலும் தற்போது வென்னப்புவ, பிரதேசத்திலுள்ள "வீனஸ்" மென்பந்து கிரிக்கெட் அணியில் நிரந்தர வீரராக இணைந்து கொண்டு விளையாடிக் கொண்டு வருகின்றேன்.

கேள்வி: சம்பளம் எதாவது வழங்கப்படுகிறதா?

பதில்: மாதாந்தக் கொடுப்பனவொன்றை அணி நிர்வாகம் கடந்த ஒரு வருட காலமாக எனக்கு வழங்கி வருகின்றது. வென்னப்புவ, பிரதேசத்திலுள்ள மைதானங்களிலேயே நாம் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இன, மத, மொழி பேதங்களின்றி நாம் அனைவரும் மிகவும் ஒற்றுமையாக பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம் .

நான் விளையாடும் "வீனஸ்" கழகம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற போட்டிகளில் கலந்து கொண்டு சாம்பியன் கிண்ணங்களை வென்றுள்ளது. எமது கழகத்தில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த சிறந்த இளம் வீரர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.



**மொஹமட் ருஸ்மான்**
(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# சிங்கார நினைவு 6

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தேசிய சேவை
நேரம் 9.30
மெல்லிசைப்பாடல்கள் கேட்கலாம.;
முதலில் முல்லைச்சகோதரிகள் பாடியது.

ஏழாம் இலக்கக் கலையகத்திலிருந்து எனது குரல் ஒலிக்கிறது. றெகோர்டிலிருந்து பாடலை ஒலிக்க விடுகிறேன்.

முல்லைச்சகோதரிகள் என் பக்கத்து ஊர்.முள்ளியவளை. நான் அவர்களைக் கண்டதில்லை, கேட்டிருக்கிறேன். பாடலைக்கேட்கச்செய்திருக்கிறேன் ஒலிபரப்பாளராக.

முல்லைத்தீவின் கலை, இலக்கிய பன்முக ஆளுமைகளில் குறிப்பிடும்படியானவர்கள் முல்லைச்சகோதரிகள் இரட்டையர். இனிய குரலெடுத்து அவர்கள் பாடிய இனிய கீதம் இன்றும் கலையகத்திலிருந்து ஒலிக்கிறது.

முல்லைச்சகோதரிகளின் குரல் மெல்லிசைக்கீதமாக வானலைகளில் என்றும் தவழ்கிறது. 'தென்றல் வந்து வீசாதோ தேனிலவு பூக்காதோ அன்றலர்ந்த புதுமலர்கள் அழகு மனம் சேர்க்காதோ.....''கே.கிருஷ்ணபிள்ளையின் வரிகளில் ஆர்.முத்துசாமியின் இசைவடிவம் முல்லைச்சகோதரிகளின் குரலில் ஒலிக்கிறது.

இந்தப் பாடல் ஒலிபரப்பு கலையகத்தில் ஒலிக்கும்போது முல்லை மண்ணின் கலை, இசை பெறுமானங்களை நான் யோசித்துப்பார்ப்பதுண்டு. வில்லிசையில் கலைமகள் குழுவினர் பிரகாசித்தார்கள். என் சிறிய வயதில் கலைமகளின் வில்லோசை என் காதுகளில் கேட்டிருக்கிறது. கதையின் சாரம் என் இதயத்தில் ஒலித்திருக்கிறது. அதேபோல் முல்லைச் சகோதரிகளின் மெல்லிசையை கேட்;கும்போது உணர்வுறுகிறேன். முல்லைச் சகோதரிகளின் இன்னொரு பாடல் மெல்லிசையாய் உள்ளது. 'ஆடச்சொன்னாரடி அடி எழுந்தே அவன் அழுத சங்கீதம் இசைத்தாரடி சூடச்சொன்னாரடி சுகந்த மலர்...'' இந்தவரிகள் பி.முத்துக்குமாரசாமியினுடையவை. ஆர். முத்துசாமியே இசை தருகிறார்.

முல்லைச்சகோதரிகளின் இந்த இரண்டு பாடல்களும் கலையகத்தில் பதிவாகியுள்ளன. முல்லைக் குரல்கள் குறித்த வேறுதகவல்கள் தேடலுக்குரியன. ஈழத்து மெல்லிசைப்பாடலுக்கு முல்லை மண் தந்த வேர்க்குரல்கள் இந்த இரட்டையர். மண்ணுக்குப் பெருமை. மனசுக்கு இனிமை.



# வரலாற்றாளுமை – யாழ்.றஹீம்



எம்.எஸ்.ஏ.றஹீம் என்ற பெயருக்கு ஈழத்து இலக்கியப் புலத்திலும்,வரலாறு எழுதுகை துறையிலும், கல்வி மேம்பாட்டிலும் அழியா இடமுண்டு.

யாழ். சோனகத்தெருவைச் சேர்ந்த றஹீம் 1941இல் பிறந்தவர். மஸ்ற உத்தீன் ஆரம்ப பாடசாலையிலும் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா கல்லூரியிலும் பயின்றவர். 1960இல் ஆசிரியப் பணிக்குள் கால் பதித்த அவர் அரைநூற்றாண்டுக்கு மேலாக இயங்கியவர்.

தேசிய கல்வி நிறுவகத்துள் செயற்றிட்ட அதிகாரியாக நுழைந்த றஹீம் சேர்,முதுகலை ஆளுமையோடு பிரதம செயற்றிட்ட அதிகாரியுமானார்.தமிழ்மொழியும் இலக்கியமும் பாடநூலாக்கத்தில் இவரது பனுவலாக்க ஆளுமையையும் மொழிசார் புலமையையும் உணரலாம்.பதிப்பாசிரியராக கல்வி வெளியீட்டுப்புலத்தில் நின்றிலங்கியவர் றஹீம் சேர்.

வரலாறு எழுதுகையில் தனது வரலாற்றுணர்வை மையப்படுத்திய றஹீம் சேர் 1969இல்'யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும்'' நூலை எழுதினார்.இதுவே யாழ். முஸ்லிம்கள் குறித்த முதல் வரலாற்று நூலாகிறது.வரலாற்றெழுத்தில் நாட்டம் கொண்ட இவர் இதன் இரண்டாம் பதிப்பை தொண்ணூறின் வடக்கு முஸ்லிம் வெளியேற்றத்தின் பின் அடையாளமாக விரித்து 2008 இல் மீள் வெளியீடாகத்தந்து வரலாற்றுத் தடத்தை ஏற்படுத்தினார். எழுத்தின் ஆளுமைக்காக'கலாபூஷணம்' விருது பெற்ற றஹீம் சேர் சிறப்பாக வடக்கு முஸ்லிம் புலத்திலும் பொதுவாக ஈழத்தில் கல்விப்புலத்திலும் அழியா அடையாளங்களைப்பதித்தவர். சிறிது காலம் நோயுற்றிருந்த அன்னார் 23.03.2023 அன்று தனது 81வது வயதில் இறையடி எய்தினார். எல்லாம் வல்ல இறைவன் அன்னாரைப் பொருந்திக்கொள்வானாக.

# ஔவன் கவிதை

பிரவாகித்தல்
உள்ளொளி பரவியொரு
நதியெடுப்பு
பிரவாகத்தில்
துடித்ததென் இதயம்
ஆயிரங்காலத்துத்துயர்
வெம்மை மீது
துளிர்க்கும் பெருங்கனவு
சுமந்து பறக்கிறது

சிற்றருவி
சிறு குருவியாகி
சங்கமிக்கும்
நதியின் பிரதி
எனக்குள் வளர்கிறது
பிரவாகத்தின் உள்ளொளி
படர்தலில் வாழ்தலின் நிறம்
வெண்மையுறுகிறது
நீ நதியாக



# நோன்புக் கலண்டர்



'நோன்பு என்டா பள்ளிக்கூடம் லீவு'' இப்பிடித்தான் தெரியுமெனக்கு.நோன்பு காலத்தில படிப்பு ஒண்டும் இல்ல. புஸ்தக அலுமாரிய பூட்டி வச்சிடணும். ஒரு மாசம் பள்ளிக்கூடப்பக்கம் போகவே தேவையில்ல.

பன்னிரண்டு வயசுலயும் இதுதான் நிலம. உசனுக்கெண்டா நோன்பு காலம் கொண்டாட்டம் மாதிரித்தான். காலம எழும்புனா ஒரு செடூல் இருக்கும். வயசு ஏற ஏற செடூல் மாறும். பன்னிரண்டு வயசு ஏழாம் வகுப்பு படிச்சன். சம வயசு, சமனில்லாத வயசு கூட்டாளிமார் கூட.

நோன்பு கலண்டர்.

1) காலம எட்டு மணியப்போல வீட்ட இருந்து போனா,போனா என்ன போய்த்தான் ஆகணும்.இல்லாட்டி செத்தை வெளிக்குள்ளால நுழஞ்சு வந்திடுவாங்கள் சிம்சார்,அலிக்கான்,சகீர்,மஹ்றூப்பு, சிவத்தாட ஆசிக்கு ......

2) புளியடிச்சந்தி மணலுக்க பேணி விளையாட்டு.கொஞ்சம் பெட்டயளும் வந்திடுவாள்கள்.

3) புளியடி நிழலுக்க பாண்டி விளையாட்டு,எங்கடி புளியடி எவடம் எவடம்.

4) இடயில தொழுக ளுஹர்.

5) ஊரொழுங்கையச்சுத்தி மரதன் ஓட்டம்.

6) இடயில ஓதப்பள்ளி.வேர்க்க விறுவிறுக்க வேர்வ நாத்தத்தோட. மம்மதப்பாட அதட்டல்; ஆனக்குரல் சத்தம் முழிஞ்ச பார்வைளூ பாடங் குடுக்காட்டி மூத்திரம் போற வேல.

7) வொலிபோல் விளையாட்டு.பிளாஸ்டிக் போல்,மீன் வல நெற்று,டேஸ் அடி.... வயசு மாற மாற செடூல் மாத்தம்.

பதினஞ்சு, பதினாறு வயசுல நோம்பு சமூக நோம்பு.

**நோம்புக் கலண்டர்**

1) சுபுஹூ தொழுத கையோட கூட்டாளி மாரோட ரஸீன்,மாஹிர்,ஜிப்ரி,இமாம், மஹ்றூப், ரியாஸ்,முஸம்மில்,ரமீம், ரிஸ்னி பெரிய பட்டியல் தான். சேர்ந்து ஒரு கதையளப்பு.சிலநேரம் ஊர்சுத்தல். கொஞ்சம் ஸ்கூல் கத.

2) படிப்பும் கொஞ்சம் நடக்கும்.

3) ஊர்வேல. தெரிஞ்ச,தெரியாத வீடுகளுக்கு வேலியடைக்கிற,வீடு மேயுற.

4) றோட்டுத்திருத்திற.

5) ராவுல ஊருல ஆரும் குடிச்சுட்டு வந்தா ஒளிச்சு நிட்டு கல்லெறியுற.

6) பின்னேரத்துல ஜின்னா க்ளப்புள வொலிபோல் அடிக்கிற.

7) களைச்சுப்போய் நீராவியிலயோ கணபதியானிலோ அல்லது கேணியிலோ கிடந்து ஊறுறது.

உசனெண்டா நல்ல பெடியன்தான் எண்டு ஊரே சொல்லும்.நோம்பு காலத்துக்கதைகள்.அவனுக்கு அதிகம்தான்.

வயசு ஏற ஏற கதயும் வளர்ந்தது.

பிறகு நோம்புக்கலண்டர் மாறிற்று.

1) ஸஹருக்கு எழும்பினா சுபஹோட பள்ளியில ரெஸ்ரியிலயும் செகறறற்றி.

2) பிறகு ஊர்ல கஸ்டப்பட்ட ஆக்களுக்கு உதவி தேடிக் குடுக்கிற.

3)ஸ்கூலிலயும் ஓபிஏ செகறற்றிதான். பிரிண்ஸிபலோட சேர்ந்து ஸ்கூல் பிளன் போடுறது.

4)லீவுகால வகுப்பு.உசனெண்டா நல்லாப் படிப்பிப்பான். இவனிட்ட படிச்ச புள்ளயள் எல்லாம் பாஸாம்.

பிறகுஇன்னொரு கதையுமிருக்கு. அகதி முகாமுல ஸஹர் செய்து, நோம்பு பிடிச்ச கதை. உசனென்டா இங்கயும் முகாம்களில் கஞ்சிகாச்சிக் குடுக்கிற காரியத்துல கூட்டாளி மாரோட சேந்தான்.

இடப்பெயர்வு வாழ்க்கை இவனுக்குள்ளயும் ஆறாத பலதழும்புகளைக் கிளர்திற்று. நோன்புக் கலண்டரிலும் வடு.

1) இவன் கவிதைகளா எழுதினான் 'அதானின் குரல் அகதியாகிப்போன எங்கள ஊர்ப்பள்ளிகளில் மீண்டும் பிலாலின் குரலிசைக்க வேண்டும்'' என பிரார்த்தித்தான்.

2) 'றேசன் அட்டையை பிள்ளையின் பெருநாள் புத்தாடையாய் மாற்றிவிட்டுபசியைப் புசிக்கிறாளொரு உம்மா''என்றெல்லாம் உசன் எழுதினான்.

முகாமுக்குளிருந்து இவன் நோன்புநினைவுகள் ஊருக்குள் நுழைந்தன.இளங்கால்களால் நடந்த தடயங்கள் மேல் நினைவுகளின் அடிகளை ஒவ்வொரு நோன்பிலும் பதிகிறான் உசனென்ற நோம்புக்கலண்டர்காரன்.

## மணவையின் மருத்துவக் குறிப்பு

# புற்றுநோய்

100 க்கு மேற்பட்ட நோய்களைக் கொண்ட தொகுதியின் பொதுப் பெயரே புற்றுநோயாகும். வெவ்வேறு வகை புற்றுநோய்கள் காணப்பட்டாலும் அனைத்து புற்று நோய்களும் அசாதாரணமான கலங்கள் கட்டுப்பாட்டை மீறி வளர்ச்சியடைவதாலேயே ஆரம்பிக்கிறது. சிகிச்சையளிக்கப்படாத புற்று தீவிரமான சுகயீனத்தையும் மரணத்தையும் ஏற்படுத்தலாம். உடலானது ட்ரில்லியன் எண்ணிக்கையிலான உயிருள்ள கலங்களால் ஆக்கப்பட்டுள்ளது. சாதாரண கலங்கள் வளர்ச்சியடையும், பிரிகையடைந்து புதிய கலங்களை உருவாக்கும், அத்துடன் விதிக்கப்பட்ட முறையின் கீழ் இறக்கும். ஒருவரது வாழ்வின் ஆரம்ப வருடங்களில் சாதாரண கலங்கள் வேகமாக பிரிகையடைந்து அவர் வளர்வதற்கு அனுமதியளிக்கும். அவர் வயது வந்த ஒருவரானதும் நலிவடைந்த அல்லது இறக்கும் கலங்களை பிரதீயீடு செய்வதற்கு அல்லது காயங்களை சீரமைப்பதற்கு மாத்திரமே அதிகளவு கலங்கள் பிரிகையடையும்.

புற்றுநோய் எவ்வாறு ஆரம்பிக்கிறது?

உடலின் ஒரு பாகத்தில் கட்டுப்பாட்டை மீறி கலங்கள் வளர்ச்சியடையும் போதே புற்றுநோய் ஆரம்பிக்கிறது. புற்றுநோய் கலங்களின் வளர்ச்சி சாதாரண கலங்களின் வளர்ச்சியில் இருந்து வேறுபட்டது. இறப்பதற்கு பதிலாக, புற்றுநோய் கலங்கள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து மேலும் புதிய, அசாதாரணமான கலங்களை உருவாக்குகின்றன. புற்றுநோய் கலங்களால் ஏனைய இழையங்களாக வளர்ச்சியடைய முடியும் என்பதோடு, சாதாரண கலங்களால் அவ்வாறு வளர முடியாது. கட்டுப்பாட்டை மீறி வளர்ச்சியடைதல் மற்றும் ஏனைய இழையங்களாக உருமாற்றம் பெறல் என்பனவே ஒரு சாதாரண கலத்தை புற்றுநோய் கலமாக மாற்றுகின்றன.

DNA இல் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகவே கலங்கள் புற்றுநோய் கலங்களாக மாறுகின்றன. DNA ஒவ்வொரு கலத்திலும் இருப்பதோடு அதுவே கலத்தின் அனைத்து தொழிற்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்றது. சாதாரண கலமொன்றில், DNA பாதிப்படையும்போது கலம் அதனை நிவர்த்தி செய்யும் அல்லது இறக்கும். புற்றுநோய் கலங்களில், பாதிக்கப்பட்ட DNA சரி செய்யப்படாது, ஆனால் கலம் உரிய முறையில் இறக்காது. பதிலாக, உடலுக்கு தேவையில்லாத புதிய கலங்களை உருவாக்கத் தொடங்கும். இப் புதிய கலங்கள் அனைத்துமே முதலாவது கலத்தை ஒத்த பழுதடைந்த DNA இனை கொண்டிருக்கும்.

ஒருவர் அசாதாரணமான அல்லது பழுதடைந்த DNA இனை மரபுவழியாகக் கொண்டிருக்கலாம். (அவரது பெற்றோரில் இருந்து கடத்தப்பட்டிருக்கலாம்), ஆனால் அதிகமான DNA பழுதுகள், சாதாரணமான கலம் இனப்பெருக்கம் செய்யும் போது அல்லது சூழல் காரணிகளில் ஏற்படும் தவறுகளாலேயே ஏற்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பொதுவான செயல்களான சிகரட் புகைத்தல் அல்லது சூரிய ஒளி போன்றவற்றாலும் DNA பாதிப்புகள் ஏற்படலாம். எவ்வாறாயினும் ஒருவரது புற்றுநோய்க்கு ஏதுவான சரியான காரணியை அறிவது கடினமானது. புற்றுநோய் குணமாக்கப்படக்கூடிய ஒன்றா? புற்றுநோயை அதன் ஆரம்பக் கட்டத்திலேயே இனங்கண்டு சிகிச்சையளிக்கப்பட்டால் அநேகமான வகை புற்றுநோய்களை குணமாக்கும் சாத்தியமுண்டு. ஆரம்பத்திலேயே இனங்காணப்படும் போது அவை சிறியவையாக காணப்படுவதனால் அவற்றை அறுவை சிகிச்சை ஒன்றினால் இலகுவாக நீக்குவதற்கு அல்லது கெமோதெரபி அல்லது கதிரியக்க சிகிச்சையின் மூலம் சுருக்குவதற்கு முடியுமாக இருக்கும். எனினும், தீவிரமான புற்றுநோய்களும் சிகிச்சை வழங்கப்பட்டு குணமாக்கப்பட்டுள்ளன.



தமிழகத்தில் மருத்துவ சிகிச்சைகளை பெற விரும்புவோருக்கு இலவசமாக வழி காட்டி உதவிகளைப் பெற்றுக்கொள்ள

மணவை அசோகன்
(0778978792)

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் -6

ஆறுமுக நாடார், சத்தியபாமாவிடம் “நான் உங்களிடம் கூறியபடி அந்த மருந்தை நாளை காலை 7 மணிக்கு ஒரு மெல்லிய துணியில் வடிகட்டி முடிந்த வரை அரை லீற்றருக்கு குறையாமல் கொடுக்கிறேன். ராமச்சந்திரன் மருந்தை அருந்திய பின்னர் கண்டிப்பாக ஒரு மணிநேரத்திற்கு எதுவும் சாப்பிடக் கூடாது. நடக்கலாம், ஓடலாம், பசி எடுத்தால் நல்ல உணவுகளைக் கொடுங்கள்” என்று கூறி விட்டுச் சென்று விட்டார்.



ஆறுமுக நாடார் தனது கள்ளு இறக்கும் தோப்புக்குச் சென்று ஒரு நபரை அழைத்து “மருந்துத் தேவைக்கு கவனமாக தினமும் காலை 7 மணிக்கு ஒரு பனை மரத்துக் கள்ளை ஒரு சிறிய மண் குடுவையில் ஊற்றி சத்தியபாமாவின் வீட்டுக்குச் சென்று கொடுக்க வேண்டும்” என்று கட்டளையிட்டார்.

அதன்படி காலை 7 மணிக்கு ஒரு மண் குடுவையுடன் சதியபாமாவிடம் “ஆறுமுக நாடார் ஐயா இதை தங்களிடம் கொடுக்கச் சொல்லி என்னை அனுப்பி இருக்கிறார். இதேபோல் தினமும் காலை 7 மணிக்கு கொண்டு வருவேன்” என்று சொல்லிவிட்டு சென்று விட்டார்.

சத்தியபாமா, மண் குடுவையில் உள்ள பனங்கள்ளை சுத்தமான வேறு ஒரு பாத்திரத்தில் துணிகட்டி, வடிகட்டி வைத்துக் கொண்டு, காலையில் உடற்பயிற்சி செய்து கொண்டிருக்கும் எம்.ஜி.ஆரை அழைத்து “வைத்தியர்



கொடுத்தனுப்பிய மருந்து தயார். உடனடியாக வந்து குடித்து விடு” என கூறினார். மருந்து என்றதும் எம்.ஜி.ஆரின் முகபாவம் மாறியது. வேண்டா வெறுப்போடு மருந்தைக் குடித்தார். சற்று நேரத்தில் எம்.ஜி.ஆர் அம்மாவை நோக்கி “இதென்ன மருந்து? இனிப்பாக இருக்கிறதே!” என கேட்டார்.

அதற்கு அம்மா எம்.ஜி.ஆரை நோக்கி “நீ குடிப்பது மருந்து. அது இனிப்பா அல்லது கசப்பா என்றெல்லாம் கேட்கக் கூடாது. கொடுத்ததை குடித்து விட வேண்டும். இதேபோல் வைத்தியர் கூறும் வரை ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்கு குடிக்க வேண்டும்” எனக் கூறினார். எம்.ஜி.ஆர். தாய் சொல்லைத் தட்டாமல் பயபக்தியோடு நடந்து கொள்ளுபவர். எனவே, எம்.ஜி.ஆர் “சரி அம்மா” என ஏற்றுக் கொண்டார்.

ஒருநாள் எம்.ஜி.ஆர். காலையில் உடற்பயிற்சி செய்யாமல் வீட்டு வாசலில் நின்று கொண்டு மருந்து கொண்டுவரும் நபரை எதிர்பார்த்துக் காத்திருந்தார். மருந்து கொண்டு வரும் நபர் பனை மரத்துக் கள்ளு நிரம்பிய ஒரு சிறிய மண் குடுவையுடன் வந்தார். மருந்து கொண்டுவரும் நபரிடம் எம்.ஜி.ஆர். “அம்மா உள்ளே வேலை செய்து கொண்டிருக்கிறார். இதை என்னிடம் கொடுங்கள். கொடுத்து விடுகிறேன்” என்று கேட்டு வாங்கிக் கொண்டார். எம்.ஜி.ஆர். அந்த மண் குடுவையை பிரித்துப் பார்த்தார். அந்தக் குடுவையில் உள்ள கள்ளில் குளவிகள் செத்து மிதப்பதைப் பார்த்தார்.

எம்.ஜி.ஆர். இது என்னவாக இருக்கும் என யோசித்துக் கொண்டிருக்கும்போது அம்மா வீட்டினுள் இருந்து கள்ளுக் குடுவை இன்னும் வரவில்லையே என வெளியே வந்து பார்த்தார். எம்.ஜி.ஆர். கையில் கள்ளுக் குடுவை இருப்பதைக் கண்டு திகைத்தவாறு அதை பிடுங்கினார். எம்.ஜி.ஆர். அம்மாவை பார்த்து “இது என்ன? இதிலே பூச்சி புழுவும் பொங்கும் நுரையுமாக இருக்கிறதே” என்று சற்று கோபத்துடன் கேட்டார். அம்மா, எம்.ஜி.ஆரை நோக்கி “ராமச்சந்திரா இது உனக்குத் தேவை இல்லாத கேள்வி. நான் இதை சுத்தம் செய்து கொண்டு வருகிறேன். நீ குடித்து விட வேண்டும்” என்று சொன்னதும் எம்.ஜி.ஆர். குடித்து விட்டார். இருந்தாலும், “மருந்து பொதுவாக கசக்கும். இது குடிப்பதற்கு சுவையாக இருக்கிறது. இது என்ன மருந்து என கண்டுபிடிக்க வேண்டும்” என்ற எண்ணத்தோடு எம்.ஜி.ஆர். அந்தக் கள்ளுக் குடுவையை கொண்டு வரும் நபரிடம் “ஐயா, இந்த மருந்து குடிப்பதற்கு நல்ல சுவையாக இருக்கிறது. தற்போது எனது உடம்பு நல்ல தெம்பாக இருக்கிறது. இது என்ன மருந்து? எங்கிருந்து எடுத்து வருகிறீர்கள்?” என அந்த நபரிடம் அன்பாகக் கேட்டார்.

எம்.ஜி.ஆர். கேட்ட கேள்விக்கு பதிலளிக்குமுகமாக அந்நபர் பனங்கள்ளுடைய விபரத்தையும் மகிமையையும் சொல்லி விட்டார். இதை அறிந்த எம்.ஜி.ஆர். மதிய போசனம் சாப்பிடும்போது “அம்மா... நீ எனக்குத் தரும் மருந்துக்கு என்ன பெயர்?” என வினவினார். “சொன்னால்தான் மருந்தைக் குடிப்பேன்” எனவும் அடம்பிடித்தார். “ராமச்சந்திரா... இந்த மருந்தின் பெயர் பனங்கள்ளு. வைத்திய முறைப்படி இதை உனக்கு கொடுக்க ஏற்பாடு செய்தவர் வைத்தியர் ஆறுமுக நாடார்” என அம்மா விளக்கினார்.

நாடகக் கம்பனியில் வேலை செய்கின்ற வாத்தியார்கள் மற்றும் பெரிய ஆட்கள் கள்ளுக் குடிப்பதைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதை எம்.ஜி.ஆர். சில நேரங்களில் கேட்டிருக்கிறார். அந்தக் கள்ளுதானே இது என்ற முடிவுடன் “அம்மா... நீங்க இதை மருந்து என்று நினைக்கிறீங்க... இது மருந்து அல்ல... போதைவஸ்து.

இதனை சிறிது சிறிதாக குடிப்பவர்கள் நாளடைவில் பெரிய குடிகாரர்களாகி விடுவார்கள். இப்படிப்பட்ட மருந்தை எனக்குக் கொடுத்து என்னை ஒரு குடிகாரனாக்கி விடாதீங்க...நாளையிலிருந்து இதைக் குடிக்க மாட்டேன்” என சற்றுக் கடுமையாக கூறினார். உடனே அம்மா, எம்.ஜி.ஆரை நோக்கி “ராமச்சந்திரா... எந்தப் பொருளை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது எமது மனநிலையைப் பொறுத்தது. நீ சொல்வதைப் போலஇதுமற்றவர்களுக்குபோதைவஸ்தாகஇருக்கலாம். ஆனால் இது உனக்கு மருந்து. எனவே நீ இதை மருந்தாக நினைத்து 30 நாட்களுக்கு குடித்தாக வேண்டும். குடிவகைகளையோ, போதைப் பொருட்களையோ குடிப்பவர்களை எனது வீட்டுக்குள் கூட நுழைய அனுமதிக்க மாட்டேன். இதனை மிகவும் கண்டிப்பாக சொல்கிறேன். இது உனக்கும்தான்” என்று சொன்னவுடனே இதைக் கேட்ட எம்.ஜி.ஆர். அம்மாவின் அறிவுரைகளைக் கேட்டு மௌனமாக இருந்து விட்டார்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# நுவரெலியாவில் வசந்த கால நிகழ்வுகள் ஆரம்பம்















நுவரெலியாவில் வருடாந்தம் நடத்தப்படும் வசந்த கால நிகழ்வுகள் நுவரெலியா நகரை மையமாக கொண்டு பிரமாண்டமான முறையில் 1ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமானது. மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன மற்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தலைமையில் ஆரம்பமான நுவரெலியா வசந்த விழா இம்மாதம் 30 ஆம் திகதி வரை ஒரு மாத காலம் நடைபெறவுள்ளது. நுவரெலியா கிறகரி வாவி கரையோரத்தில் நுவரெலியா நகரிலுள்ள 17 பிரதான பாடசாலைகளின் மாணவர்கள், இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகியோரின் அணிவகுப்பு, பொலிஸ் பேண்ட் வாத்திய அணிவகுப்பு, கலை, கலாச்சார அம்சங்களுடன் இந்நிகழ்வுகள் இனிதே ஆரம்பமானது. வசந்த கால கொண்டாட்டங்கள் நடைபெறும் மாதம் முழுவதும், கார் பந்தயம், மோட்டார் சைக்கிள் பந்தயம், குதிரை பந்தயம், படகு பந்தயம் மற்றும் விளையாட்டு போட்டிகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் பல நிகழ்ச்சிகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நுவரெலியா மாநகரசபையின் ஏற்பாட்டில் நுவரெலியா மாநகர ஆணையாளரும் மேலதிக மாவட்ட செயலாளருமான சுஜீவா போதிமான்னவின் ஆலோசனைக்கமைய நுவரெலியா வசந்த விழா நடாத்தப்பட்டு வருகின்றது. இதன் ஆரம்ப நிகழ்வில் நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் மேயர் சந்தன லால் கருணாரத்ன மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.